



நாசருடன் ஒரு சந்திப்பு
பரிசு பெற்ற சிறுகதை

சோலைக்கிளி
சேரன்
அ. முத்துலிங்கம்
வெங்கட் சாமிநாதன்


# காலம்

இதழ்: 22 ஓகஸ்ட் 2004



# N.K.S



**N.K.S** Drapery & Blinds Fabric LTD
210 Silver Star Blvd, Unit #825
Scarbrough, Ontario
**Tel/Fax: 416 - 321 6420**

TeL 2 : 905 - 944 0218 e-mail: nadarajaj1@look.com web: www.nksdarapery.com




சிறப்புப் பகுதி

## சிரித்திரன் : சுந்தர்

செங்கை ஆழியான் 34
சேரன் 41
கோகிலம் சிவஞான சுந்தரம் 45
ராதேயன் 50
அகளங்கன் 54

## மண்டபம் அகதிகள் முகாம் 3



சந்திப்பு

### ஆஸ்கார் ஓர் அளவுகோல் அல்ல

நாசர் 7



### சிலிய ஜனாதிபதி அலந்தே

மணிவேலுப் பிள்ளை 24



R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



முதல் பரிசு பெற்ற சிறுகதை

### இலைகள்

சொக்கன் 14





### ஃபரனைட் 9/11

மதி கந்தசாமி 70



### வானத்தைப் பிளந்த கதை

செழியன் 66

மூலச் செல் சிகிச்சை
சுந்தர வடிவேல் 20

கவிதைகள்
சோலைக்கிளி 32
திருமாவளவன் 33

நீங்கள் மாக்சிய விரோதியாமே?
கார்கோடன் 58

தொடங்கும் ஒரு உரையாடல்
வெங்கட் சாமிநாதன் 60

நான் பாடகன் ஆனது
அ. முத்துலிங்கம் 74

கண்ணாடி சொல்லும் கதைகள்
மதுரபாரதி 77

கனடிய தமிழ் இளையோர் பிரச்சினைகள்
எஸ். பத்மநாதன் 82

உலகத் தமிழ் சிறுகதைப் போட்டி முடிவுகள் 13

காலம்

22

ஆகஸ்ட் 2004

ஆசிரியர்

**செல்வம்**

ஆலோசனை

**என்.கே. மகாலிங்கம்**
**செழியன்**

முன் அட்டை வடிவமைப்பு

**கிருஸ்ணராஜா**

இதழ் வடிவமைப்பு
தயாரிப்பு

**செல்வி**

Uyirmmai
Image & Impression
uyirmmai@yahoo.co.in

*Printed at*

Bhawana Printers
Chennai - 79
**PHONE : 2520 8976, 5587 6466**

**KALAM**

16, HAMPSTEAD COURT
MARKAM, ONT L3R 3S7
CANADA
kalam@tamilbook.com

இந்திய விலை : ரூ. 25

## ஆசிரியர் கருத்து

ஈழத்தமிழரிடம் ஒரு தெனாலிராமனோ ஒரு அந்த்ரேயோ இல்லாத குறையை சவாரித்தம்பர் மூலம் நிரப்பியது சுந்தரின் கைவண்ணம். யாழ்ப்பாணச் சமூகத்தின் நிறைகுறைகளை குறியீடுகள் மூலம் சுந்தர் தன் கார்ட்டுன் மூலம் வெளிப்படுத்தினார். கார்ட்டுனிஸ்டாக 'தினகரன்' பத்திரிகையில் ஆரம்பித்து பின்னர் 'சிரித்திரன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர் எம் அன்புக்குரிய சிவஞானசுந்தரம். சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடரன், மெயில் வாகனம் போன்ற பாத்திரங்கள் அன்றைய யாழ்ப்பாணத்தில் நடமாடிய மனிதர்களின் கேலிச் சித்திரம் (cartoon). இன்று அவர் இருந்திருந்தால் இன்றிருக்கும் ஈழத்தை எப்படிச் சித்தரித்திருப்பார்? உங்கள் கற்பனைக்கே அதை விடுகின்றோம். மனிதனை நேசித்த, சித்தரித்த அவரை நினைவுகூர்ந்து 'காலம்' இவ்விதழை அவருக்கான சிறப்பிதழாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றது.

கனேடிய தமிழ் இலக்கியத் தோட்டமும் காலம் சஞ்சிகையும் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டிக்கு 157 கதைகள் வந்திருந்தன. அதில் பரிசு பெற்ற முதல் மூவருக்கும் பணப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசுச் சிறுகதை இவ்விதழில் பிரசுரமாகின்றது. பரிசுபெற்ற ஏனைய சிறுகதைகளும் அடுத்துத் தெரிவு செய்யப்பட்ட தரமான நல்ல கதைகள் இனிவரும் இதழ்களில் பிரசுரமாகும். போட்டி என்றவுடன் ஏற்கெனவே பெயர் பெற்றுவிட்டவர்கள் பங்குபற்றாமல் விடுவது ஒரு குறையே. காரணம் அவர்களுக்கே வெளிச்சம். 'இளம்' எழுத்தாளர்கள்தான் போட்டியில் பங்கு பற்றலாம் என்று நாம் போட்டி விதிகளில் எங்கும் குறிப்பிடவில்லையே!

**செல்வம் அருளானந்தம்**

### ஓவியர் கருணாவும் 'காலம்' சஞ்சிகையும்

ஓவியர் கருணாவுக்கும் 'காலம்' சஞ்சிகைக்குமான உறவு மிக நீண்டது. ஓவியர் மார்க்கின் மாணவரான கருணா கனடாவில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரைகலை நிபுணர். 'காலம்' சஞ்சிகை மட்டும் அல்லாது 'வாழும் தமிழ்' புத்தகக் கண்காட்சி, மற்றும் இலக்கியச் சந்திப்பு ஆகட்டும் கருணாவின் மனம் உவர்ந்த பங்களிப்பு எப்போதும் நமக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

'காலம்' சஞ்சிகை வெளியிட்ட ஓவியர் மார்க்கின் சிறப்பிதழ் கருணா இல்லாமல் வந்திருக்கவே முடியாது. கருணாவின் ஓவியம் மற்றும் அவருடைய வடிவமைப்பில் 'காலம்' 19 இதழ் வெளிவந்துள்ளது. ஆனால் கருணாவின் பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை. காலதாமதமாகிப் போனாலும் இதற்காக மன்னிப்புக் கேட்பதில் தவறு ஒன்றும் இல்லைதானே.

ஆசிரியர்

மண்டபம் அகதிகள் முகாம்

# பேச்சு வார்த்தைக்காகப் பிரார்த்திக்கிறோம்



வெறிச்சோடின மாதிரிக் கிடக்கிறது தமிழகத்தின் ஒரு நுனியில் இருக்கிற மண்டபத்தை ஒட்டிய கடற்கரை. அனலோடு உப்பும் சேர்ந்த காற்று முகத்தை முட்டுகிறது. சற்று தூரத்தில் தொழில்நுட்பத்திற்குப் பெயர்பெற்ற பாம்பன் பாலம். சுற்றிலும் பச்சை மினுங்காத பாலை மாதிரி விரிந்துகிடக்கிறது உதிரியான மணல். இந்தச் சூழலுக்கிடையில் சந்தடிகள் அதிகமில்லாத ரயில்வே ஸ்டேஷனை அடுத்த தெரு. அதன் இன்னொரு முனையில் அகதிகள் முகாம்.

ராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு கோடியில் இருக்கும் தனுஷ்கோடிக் கரைப்பகுதியில்தான் பெரும்பாலான அகதிகள் இலங்கையிலிருந்து வந்திறங்குகிறார்கள். இலங்கைக் கடற்கரையிலிருந்து 32 கி.மீ தூரத்தைக் காற்றின் அலைக்கழிப்பிற்கிடையிலும், இலங்கை கடலோரக் காவல்படையின் கண்காணிப்பிற்கிடையிலும் பயத்துடனும் பீதியுடனும் இவர்கள் கடக்க வேண்டியிருக்கிறது. இந்தியக் கடற்கரை கண்களுக்குத் தெரிந்ததும்தான் உயிரைப் பிடித்துக்கொண்டு படகுகளில் வரும் இலங்கைத் தமிழர்களுக்கு நிம்மதி வருகிறது. கடற்கரையில் இறங்கியதும் காலில் ஒட்டுகிற மணலுடன் இவர்களை ஒட்டுகிற இன்னொரு விஷயம் அகதி என்கிற அடைமொழி. இந்திய அரசு வழங்கும் சலுகைகளுக்கு அந்த அடைமொழி தேவைப்படுகிறதென்றாலும், அது அவர்களின் மீது ஒரு பாரமாகத்தான் அழுத்திக்கொண்டேயிருக்கிறது.



எண்பதுகளுக்கு முன்பு இருந்த நிலைமையே வேறு. அப்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கப்பல் போக்குவரத்து இருந்ததால் பலர் பிரச்சினையில்லாமல் குறைவான செலவில் வந்துபோக முடிந்தது. இலங்கையின் ஒரு கரையிலிருந்து படகில் தமிழகக் கடற்கரைக்கு வந்து சினிமா பார்த்துவிட்டு சாவகாசமாகத் திரும்பிப் போகுமளவுக்குச் சுதந்திரமிருந்தது. 1973வாக்கிலேயே தமிழ் ஈழம் என்ற கோரிக்கை வலுவடைந்து 1976இல் அது முழு வடிவம் பெற்று, இலங்கையில் சிறு சிறு பிரச்சினைகள் தலைதூக்கிய போதும் 80வரை கடற்கரைப் பகுதியில் சுதந்திரமான நடமாட்டத்திற்குப் பிரச்சினைகளில்லை. 1983 கலவரம் தான் இலங்கையிலிருந்த தமிழர்களிடையே எதிர்காலம் குறித்த பய உணர்வை உருவாக்கியது. உயிரைத் தக்க வைக்கும் பயத்தில் மற்ற நாடுகளுக்கு அகதிகளாயப் புலம்பெயர வைத்தது. அப்போது அவர்கள் தஞ்சமடைவதற்கு நம்பிக்கை கொடுத்த மண்ணாய் இந்தியா, குறிப்பாகத் தமிழகம் இருந்தது.

பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்து தமிழக மண்ணில் இறங்கிய போது தமிழகத்திலுள்ள கட்சிகள், பொதுமக்கள், அரசு என்று பல தரப்பிலும் வரவேற்பு. அவர்கள் மட்டுமல்லாமல், வெவ்வேறு விடுதலை இயக்கங்களும் தாராள உரிமைகளுடன் நடமாட முடிந்தது. ஆனால் அதெல்லாம் இந்திய அமைதிப் படை இலங்கையில் போய் இறங்கும் வரைதான். சுமுகமாக இருந்த சூழ்நிலையில் அதற்குப் பிறகு பல மாற்றங்கள். இதன் தொடர்ச்சியாக, 1991இல் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பிறகு, அதுவரை அவர்கள் மீதிருந்த பார்வை மாறியது. கடல் ஈரத்துடன் தமிழகத்தில் வந்திறங்கியதும் இவர்கள் இயக்கங்கள் சார்ந்த விசாரணைக்குட்படுத்தப்படுகிறார்கள். மொழி, இன உணர்வுகளால் உருவான கலவரத்தால் பாதிக்கப்பட்டு, சக மொழி பேசுகிற நாட்டில் அடைக்கலம் தேடி வந்த இவர்கள் ஒருவித புறக்கணிப்புக்குள்ளாகினர். இந்த நிலையிலும் இலங்கையிலிருந்து படகுகளில் வரத்தான் செய்கிறார்கள். சமீப காலத்தில் இப்படி வந்தவர்கள் ஆறாயிரம் பேர்.


சமீபத்தில் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அதிலிருந்து பிரிந்த கருணா குழுவினருக்குமிடையில் உண்டான மோதலினால்கூடச் சிலர் வந்திருந்தார்கள். எண்பதுகளை ஒட்டி ஆயிரக்கணக்கானவர்கள் வந்து தங்கிக் கலகலப்பாக இருந்த, ராமநாதபுரம் மாவட்டத்தின் உப்புக் காற்று வீசும் கடலோரத்தில் உள்ள மண்டபம் முகாம் சப்தமின்றிக் கிடக்கிறது. இவ்வளவுக்கும் தமிழகத்திலுள்ள அகதிகள் முகாம்களிலேயே இதுதான் பெரியது. இங்கும் தமிழகத்திலுள்ள மற்ற முகாம்களிலும் இப்போது இருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 65 ஆயிரம் பேர். இது தவிர, பதிவு பெறாமல் தங்கியிருப்பவர்கள் மட்டும் ஒரு லட்சம் பேர்.

கடற்கரையில் இறங்கியதும் காலில் ஒட்டுகிற மணலுடன் இவர்களை ஒட்டுகிற இன்னொரு விஷயம் அகதி என்கிற அடைமொழி. இந்திய அரசு வழங்கும் சலுகைகளுக்கு அந்த அடைமொழி தேவைப்படுகிற தென்றாலும், அது அவர்களின் மீது ஒரு பாரமாகத்தான் அழுத்திக்கொண்டேயிருக்கிறது.

பழமையின் சாயல் படிந்த மண்டபம் முகாமில் மொத்தம் 247 குடியிருப்புகள். இவற்றில் 700 பேர் இருப்பதாகச் சொல்கிறது அரசுத் தரப்பு. தங்கியுள்ள அகதிகளில் பலர் அதை மறுக்கிறார்கள். பத்திரிகையாளர் என்றாலே ரொம்பவும் கெடுபிடிகள். உள்ளே அனுமதிக்கவே நிறைய அலைக்கழிப்புகள். தங்கியுள்ள அகதிகள் தரப்பிலும் வெளிப்படையாகப் பேச மிகுந்த தயக்கம் காட்டுகிறார்கள். காரணம் நாம் போனதற்குச் சில நாட்களுக்கு முன்பு தமிழகத்தைச் சேர்ந்த நாளிதழ் ஒன்றிற்கு முகாமிலுள்ள சில பிரச்சினைகளைப் பற்றி இங்குள்ளவர்கள் பேசியுள்ளனர். உடனே பேட்டி கொடுத்தவர்களை அழைத்துப்போய் மிரட்டியெடுத்துவிட்டது க்யூபிராஞ்ச் போலீஸ். "முகாமைப் பத்தி எதுவும் பேசினா ஏதாவது கேஸைப் போட்டு உள்ளே தள்ளிடுவாங்க.." தயங்கிய குரலில் பேசினார்கள் நாம் சந்தித்துப் பேசிய அகதிகளில் பலர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சமீபத்திய நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்குள் இங்கு வந்தவர்கள். மன்னார், கிளிநொச்சி பகுதியிலிருந்து இங்கு வந்தவர்களே அதிகம். இவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு கிலோ ஒன்றுக்கு 58 பைசா விதம் மாதந்தோறும் 20 கிலோ

அரிசி கொடுக்கப்படுகிறது. தவிர உதவித் தொகையாக ஒரு குடும்பத்தில் ஆணுக்கு 15 நாட்களுக்கு ரூ. 100ம், பெண்ணுக்கு ரூ. 75ம் வழங்கப்படுகின்றன. ஆனால் முகாமில் உள்ள நியாய விலைக் கடைகளில் பொருட்களை வழங்குவதில் முறைகேடுகள் நடப்பதாகப் பலரும் சொல்கிறார்கள். இதனால் நிதிப் பற்றாக்குறையால் பலர் வெளியே வேலைக்குப் போகிறார்கள். பெண்களும் சிறுசிறு வேலைகளுக்குப் போகிறார்கள். சிறுவர்கள்கூட கூலிவேலை பார்க்கிறார்கள். பொருளாதார நிலை தாழ்ந்திருப்பதால் வேறு வழியில்லை என்கிறார்கள். இலங்கை அகதிகளுக்கு முன்பு மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீடு அமலில் இருந்தது. சமீபத்தில் அந்த இடஒதுக்கீடும் தமிழக அரசால் ரத்து செய்யப்பட்டிருப்பது குறித்த வருத்தம் இவர்களுக்கு இருக்கிறது. ஆனால் தமிழக அரசின் உத்தரவுக்கு நீதிமன்றம் தடைவிதித்திருப்பதால் மறுபடியும் இட ஒதுக்கீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.



இந்த முகாமில் உள்ளவர்கள் தமிழகத்தில் உள்ள இதர முகாம்களிலுள்ள தங்கள் உறவினர்களைச் சந்திக்க விரும்பினால் அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன்கூட்டியே மனுக்கொடுத்து காத்திருக்க வேண்டும். அதிகபட்சமாகப் பத்து நாட்கள் விடுமுறை தரப்படுகிறது. மனுவில் குறிப்பிட்டுள்ள காலவரையறைக்குள் அவர்கள் முகாமுக்குத் திரும்பிவிட வேண்டும். ஏதாவது அவசரக காரியங்களுக்கு தாசில்தாரிடம் விடுமுறைக்கான கடிதங்களை வாங்கிச் செல்கிறார்கள்.

முகாம்களுக்குள்ளேயே திருமணத்திற்குப் பெண் அல்லது வரன்களைத் தேடுவது நடக்கிறது. அங்கு இல்லாவிட்டால் தமிழகத்திலுள்ள மற்ற முகாம்களுக்குப் போய்த் தேடுகிறார்கள். திருமணம் பெரும்பாலும் மிக எளிமையாகவே நடக்கிறது. தமிழகத்தில் எந்த முகாமில் திருமணம் நடந்தாலும் இராமேஸ்வரத்திலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து பதிந்து கொள்கிறார்கள். முகாம் வளாகத்திற்குள்ளேயே இரண்டு ஆரம்பப் பள்ளிகள். ஒரு இந்துக் கோவிலும் ஒரு கிறித்துவத் தேவாலயமும் இருக்கின்றன. இலங்கையில் இருக்கும்போது தவிர்க்க முடியாதபடி இருக்கும் சாதிபேதங்கள் வேறு நாட்டிற்கு அகதியாய் வந்திறங்கியதும் கழன்றுவிடுகின்றன. திருமண உறவிலும் இந்த மாற்றங்கள் தெரிகின்றன. மிகச்சிலரே தமிழகத்தில் உள்ள தமிழ்க் குடும்பங்களுடன் திருமண உறவு கொண்டிருக்கிறார்கள். இவர்களில் இந்துக்கள் தமிழகம் வந்ததும் வெவ்வேறு முருகன் கோவில்களுக்குப் போகிறார்கள். கிறித்துவர்கள் நாகப்பட்டினம் அருகிலுள்ள வேளாங்கண்ணி மாதாகோவிலுக்குப் போவதில் ஆர்வமாயிருக்கிறார்கள்.

முகாமுக்கு முன்னால் பல சரக்கு, காய்கறி, மருந்துக் கடை என்று முப்பதுக்கும் மேற்பட்ட கடைகள் அகதிகளை நம்பிய நிலையில் இருக்கின்றன. தீபாவளி, கிறிஸ்துமஸ் போன்ற விழாக் காலங்களில் மட்டும் பக்கத்திலுள்ள ராமநாதபுரம் போய் துணிமணிகள் வாங்கி வருகிறார்கள். இந்தியாவுக்குப் பல சிக்கல்களுக்கிடையில் வந்து சேர்ந்ததும் பலரைக் கவர்ந்திழுக்கிற விஷயம்– சினிமா. சினிமா பார்க்கப் போவது என்பது நிகழ்காலத்தின் பல அழுக்குகளைத் தற்காலிகமாக மறந்து அவர்களை ஒருவிதப் பரவசத்தில் ஆழ்த்துகிறது. சினிமாவிற்கு சமீபத்தில் அறிமுகமானவர்களின் பெயர்கள் கூட இவர்களுக்குப் பரிச்சயமாகியிருக்கின்றன. என்னதான் பொருளாதாரக் கஷ்டங்கள் இருந்தாலும், இங்கு வந்துசேர்ந்ததும் எப்படியாவது ஒரு டி.வி வாங்கி கேபிள் இணைப்பும் பெற்றுவிடுகிறார்கள். தமிழகத்திற்கு வந்து மற்ற மனிதர்களிடம் காணக்கிடைக்காத ஒரிடத்தை நிரப்புகின்றன அந்தத் தொலைக்காட்சிப் பிம்பங்கள்.

இந்த மாதிரியான நிலைதான் அரசியலிலும். திராவிடக் கட்சிகளின்மீது அனுதாபம் இருந்தாலும் அ.தி.மு.க மீது பலருக்கு ஈடுபாடில்லை. அந்தக் கட்சி தங்களைத் தரம் தாழ்த்தி வருவதான உணர்வு அவர்களிடம் இருக்கிறது. தி.மு.க. மீது சிலருக்கு அனுதாபம் இருக்கிறது.

என்னதான் பொருளாதாரக் கஷ்டங்கள் இருந்தாலும், இங்கு வந்துசேர்ந்ததும் எப்படியாவது ஒரு டி.வி வாங்கி கேபிள் இணைப்பும் பெற்றுவிடுகிறார்கள். தமிழகத்திற்கு வந்து மற்ற மனிதர்களிடம் காணக்கிடைக்காத ஓரிடத்தை நிரப்புகின்றன அந்தத் தொலைக்காட்சிப் பிம்பங்கள்.



ம.தி.மு.க. மீதான ஒட்டுதல் பலரிடமும் இருக்கிறது. ஈழப்பிரச்சினைக்குக் குரல் கொடுத்ததற்காக வைகோ உட்பட அக்கட்சியினர் சிலர் ஒரு வருடத்திற்கும் மேலாகச் சிறையில் இருந்தது அவர்களின் ஈடுபாட்டை அதிகரித்திருக்கிறது. சமீபத்தில் நடந்த இந்தியத் தேர்தலில் பி.ஜே.பி. கூட்டணி அரசு போய், காங்கிரஸ் கூட்டணி அரசு பொறுப்பேற்றிருப்பதை வரவேற்கிற மனநிலையும் சிலரிடம் இருக்கிறது.

இலங்கையில் உள்ள அரசியல் சூழ்நிலை பற்றிய செய்திகளை வானொலி வழியாகக் கேட்கும்போது நெகிழ்ச்சியுடன் கேட்கிறார்கள். ஏதாவது சாதகமான மாற்றம் தங்கள் சொந்த மண்ணில் நிகழாதா என்கிற எண்ணம் பலரிடம் இருக்கிறது. நார்வே நாட்டின் தலையீட்டின் பேரில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தை துவங்கியபோது பலர் வரவேற்றிருக்கிறார்கள். இலங்கை பிரதமராக இருந்த ரனில் விக்ரமசிங்கே பேச்சுவார்த்தை துவங்க முனைப்புடன் செயல்பட்டதைப் பற்றிய பாராட்டுணர்வு பலரிடம் இருக்கிறது. சந்திரிகா மீண்டும் பொறுப்பேற்ற பிறகு பேச்சுவார்த்தையில் விழுந்த தொய்வு இவர்களைச் சோர்வடைய வைத்திருக்கிறது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் புனரமைப்பு வேலைகள் நடப்பதைப் பலரும் வரவேற்கிறார்கள். கருணாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவான மோதல்களைச் சற்றும் விரும்பாத மனநிலை பலருக்கும் இருக்கிறது.

"இது தமிழர்களைத்தான் மேலும் பிளவுப்படுத்தும். இந்தப் பிளவு சந்திரிகா போன்று பேச்சுவார்த்தையைச் சீர்குலைக்க நினைக்கிறவர்களுக்குத் தூண்டுதலாகிவிடும்." என்கிறார்கள்.

திரும்பத் திரும்ப இவ்வளவு மோசமான சூழ்நிலைகளுக்கிடையிலும் பேச்சுவார்த்தை தொடர்வதற்கான முயற்சிகள் நடப்பது இவர்களை ஆறுதல் படுத்தியிருக்கிறது.

"என்ன சலுகைகள் கிடைத்தாலும், எவ்வளவு நாட்களுக்கு அகதிகளாய்ச் சொந்த நாட்டை விட்டு வந்து இங்கு தங்கியிருக்க முடியும்? வன்முறை மீது ஆரம்பத்தில் எங்களில் பலருக்கு ஈடுபாடு இருந்தது உண்மைதான். ஆனால் படிப்படியாக அது குறைந்துவிட்டது. எப்போது எங்கள் நாட்டிற்குப் போவோம் என்கிற ஏக்கம் வயதானவர்களுக்கு வந்துவிட்டது. இந்த ஏக்கத்தைப் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க முடியும். ஆனால் பேச்சுவார்த்தை எப்போது முடிந்து நாங்கள் எப்போது போவது?" என்று சொல்லும்போது சிலரின் குரலில் நடுக்கம் தெரிகிறது. இலங்கையிலேயே வெவ்வேறு முகாம்களில் ஆதரவற்றுத் தங்கியிருந்த சுமார் 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் வீடுகளுக்குத் திரும்பியிருப்பது இவர்களை ஆறுதல்படுத்தியிருக்கிறது. தங்களது சேதமடைந்த வீடுகளை எப்படிச் சரிசெய்துகொள்ள முடியும் என்கிற வருத்தமும், வழியில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கிற அபாயத்தையும் சொல்கிறார்கள்.

> இலங்கையில் உள்ள அரசியல் சூழ்நிலை பற்றிய செய்திகளை வானொலி வழியாகக் கேட்கும்போது நெகிழ்ச்சியுடன் கேட்கிறார்கள். ஏதாவது சாதகமான மாற்றம் தங்கள் சொந்த மண்ணில் நிகழாதா என்கிற எண்ணம் பலரிடம் இருக்கிறது.

இலங்கையில் சற்று நிலைமை மாறினாலும் கிளம்பத் தயாரான மனநிலை பொதுவாகத் தென்பட்டாலும் இவர்களுக்கு மனோரீதியாக உள்ள சிக்கல் — வந்த இடத்தில் சுலபமாக ஒன்ற முடியாத சிக்கல். எங்கு நடமாடினாலும் அகதி என்ற அடைமொழியுடன் அலையநேர்வது ஒருவித மனச்சலிப்பை உண்டாக்கியிருக்கிறது. இவர்கள் திடமாக நம்புகிற ஒரே விஷயம் — இலங்கையில் நடக்கும் பேச்சுவார்த்தை. அமைதிக்கான பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று மண்டபம் முகாமில் இருக்கும் கோவிலிலும் தேவாலயத்திலும் வாரந்தோறும் பிரார்த்தனை செய்கிறார்கள். அந்த மனமுருகிய வேண்டுதல்களில் தெரிகிறது சொந்த நாட்டின் மீது இவர்கள் வைத்திருக்கிற கடல் கடந்த பிரியம்.

கடல் அலைகளைத் தாண்டி இருக்கிற தங்கள் நாட்டிலிருந்து வெளியேறிய நிலையில் சற்றுத் தொலைவிலிருந்து இவர்களால் செய்ய முடிந்தது பிரார்த்தனை மட்டும்தான்.

— அகிலா நியூஸ்

அறிவு, ஆற்றல், அனுபவம், ஆர்வம் அனைத்தும் நிறைந்திருக்கும் அரிய கலைஞர்களில் ஒருவர் நாசர். தமிழ்த் திரையுலகின் புகழ்பெற்ற நடிகர் – பாராட்டுப் பெற்ற இயக்குநர். 'கல்யாண அகதிகள்' படத்தில் தொடங்கி பி.சி. ஸ்ரீராமின் 'வானம் வசப்படும்' படம் வரையில் 200க்கும் அதிகமான படங்களில் நடித்திருப்பவர். தமிழோடு தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி என்று பலமொழிப் படங்களிலும் நடித்திருக்கிறார். கடந்த 18 ஆண்டுகளில் தமிழ்த் திரையுலகின் அனைத்து நடிகர்களுடனும் அனைத்து இயக்குநர்களுடனும் பணியாற்றியிருப்பவர்.


'வில்லன்' பாத்திரத்திற்கு மட்டுமின்றி, நகைச்சுவை, குணச்சித்திர பாத்திரங்களுக்கும் ஒரு புதிய மிடுக்கைக் கொடுத்து வருபவர். மாறுபட்ட படங்களைத் தமிழில் தரமுடியும் என்பதை அவதாரம், தேவதை, மாயன், பாப்கார்ன் போன்ற படங்களை இயக்கி, தயாரித்துக் காட்டியவர்.

தென்னிந்திய திரைப்படக் கல்லூரியிலும், தமிழ்நாடு திரைப்படம், தொலைக்காட்சிக் கல்லூரியிலும் நடிப்புத் துறையில் முழுமையான பயிற்சி பெற்றிருக்கும் நாசர், திரைப்படம் பற்றி கல்லூரிகளில் சொல்லித்தருவதோடு, பயிற்சிப் பட்டறைகளையும் நடத்தி வருகிறார்.

நாடக அனுபவத்தோடும் பயிற்சியோடும் திரைப்படத்துக்கு வந்த இந்தக் கலைஞர் தற்போது தமிழரின் பாரம்பரிய நாடகக் கலைக்குப் புத்துயிர் கொடுப்பதில் பெருமுயற்சி செய்து வருகிறார். 'அடவு' என்று தமிழ்க் கலைஞர்களுக்காக ஒரு மையம் அமைத்து அதன் மூலம் பல்வேறு பணிகளைச் செய்துவருகிறார்.

'அடவு' அமைப்பு அண்மையில் சிங்கப்பூரில் நடத்திய நடிப்புப் பயிற்சிப் பட்டறை, நடிப்புக்கலை பற்றிய ஒரு பெரும் விழிப்புணர்வை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

எந்தத் தொழிலுக்கும் பயிற்சியும் கல்வியும் அவசியம் என்பதை அழுத்தமாக வலியுறுத்தும் நாசர், அதன் தொடர்பில் அவரது பார்வைகளையும் செயல்பாடுகளையும் விளக்கினார்...




# ஆஸ்கார் ஓர் அளவுகோல் அல்ல

சந்திப்பு : லதா

## நா ச ர்



**தமிழ்த் திரையுலகில் நடிகர்கள், இயக்குநர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என்று எல்லாத் துறையிலும் உலகத் தரமிக்க கலைஞர்கள் இருக்கிறார்கள். எனினும் 'லகான்' போல் ஆஸ்கார் அளவில் பேசப்படும் படங்களை ஏன் நம்மால் எடுக்க முடியவில்லை?**

ஆஸ்கார் என்பது போலித்தனமான விஷயம். அது ஒரு அளவு கோலே அல்ல. அமெரிக்கப் படங்களுக்கான ஒரு உச்சக்கட்டப் பரிசு. வேற்று மொழிக்காக அதில் ஒரு பரிசு இருக்கிறது அவ்வளவுதான். நான் எனது நிறுவனத்தை ஹாலிவுட்டில் பதிவு செய்து அங்கே படம் எடுத்தால் அது ஹாலிவுட் படமாகிவிடும். ஆனால் அது என்னுடைய குறியீடே அல்ல. தமிழ்ப் படத்திற்கென்று தமிழக அரசு, இந்திய அரசின் பரிசு இருக்கிறது. அதற்காக நாம் ஏன் இயக்குவதில்லை? ஏன் ஆஸ்காருக்காக நேரடியாக இயங்க வேண்டும்? விருது படம் என்றாலே அது ஓர் அவலச் சொல்லாகத்தானே இருக்கிறது தமிழ்நாட்டில்? அப்போது அந்த விருது என்பது என்ன?

ஆஸ்கார் வாங்க வேண்டும் என்பது தமிழ்ப் படத்தின் குறிக்கோளாக இருக்கக்கூடாது. உலகத் தரத்துக்குத் தமிழ்ப்படம் செல்லவில்லை என்று சொன்னால், தமிழ்நாடு எல்லைக்குள்ளேயே ஓட வேண்டும் என்ற எண்ணத்தோடு எடுப்பதுதான். மற்றபடி உலகத்தரமான படத்தைத் தமிழ்க்கலைஞர்களால் எடுக்க முடியும்.

ரசிகர்கள் யாரும் இந்தப் படத்தைப் போடாதீர்கள் என்று கதவடைப்பு நடத்துவதில்லை. இப்படிப்பட்ட படம்தான் வேண்டும் என்று போராட்டம் நடத்துவதும் இல்லை. கொடுப்பதை ரசிகர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

**இந்தியாவுக்கு வெளியே இந்தியத் திரைப்படம் என்றால் அது ஹிந்திப் படமாகத்தானே இருக்கிறது? திரைப்பட விழாப் படங்கள் என்றால் பெரும்பாலும் பெங்காலி, மலையாளப்படங்கள்தான். இந்தியப் படம் என்றால் தமிழ்ப்படம் என்ற நிலை ஏன் இல்லை?**

அதற்கு விடை நானும் தேடிக்கொண்டு இருக்கிறேன். ஒட்டு மொத்தமாக இன்னும் சற்று மேம்பட்டிருக்கலாம் என்று வருத்தம் எனக்கு இருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை கல்வி ரீதியான அணுகுமுறை திரைப் படத் துறையைக் கையாள்பவர்களுக்கு மிக்க அவசியம் என்று நினைக்கிறேன். யார் வேண்டுமென்றாலும் படம் எடுத்துவிடலாம் என்ற மாயை இன்னும் இருக்கிறது. இரண்டு படத்துக்குத் துணை இயக்குநராகப் பணியாற்றினால் இயக்குநர் ஆகிவிடலாம், சின்னச் சின்ன வேஷங்களில் நடித்தால் பெரிய நடிகர் ஆகிவிடலாம் என்று இன்றும் நினைக்கிறார்கள்.

அப்படி இல்லாமல், சினிமா என்பது முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் என்று நினைத்தாலே, ஒரு விழிப்புணர்வோடு திரைத்துறைக்கு வருவார்கள். அது ஒன்றுதான் சினிமாவை மாற்றும் என்று நினைக்கிறேன்.

**தமிழ்ப் படங்களில் தமிழ் தெரிந்தவர்கள், குறிப்பாக நடிகைகள் வராததற்கு என்ன காரணம்? பாரதி வேடத்தில் நடிக்க ஒரு தமிழ் தெரிந்த ஒரு நடிகர் நமக்குக் கிடைக்கவில்லையா?**

வேறு மொழிக் கலைஞர்கள் தமிழுக்கு வருவதும், தமிழ்க் கலைஞர்கள் வேறு மொழியில் நடிப்பதும் ஒரு மொழி, கலாசார பரிமாற்றத்தை ஏற்படுத்துகிறது. பாரதி படத்தில் நடித்ததால் ஷிண்டே இப்போது பாரதியைப் போல ஒரு கவிஞர் இல்லை என்று பேசுகிறார். பாரதியின் புகழைத் தன் மாநிலத்தில் பரப்புகிறார். அது ஒரு லாபம். இத்தனை லட்சம் தமிழர்கள் இருக்கும்போது, பாரதியாக வேஷம் போட நமக்கு ஒரு தமிழர் கிடைக்கவில்லை என்பதும் ஒரு வருத்தமான விஷயம்தான். அதற்கு அந்த இயக்குநரைத்தான் கேட்க வேண்டும்.

ஆனால் தமிழ்ப்படத்தில் தமிழ் பேசத் தெரிந்தவர்கள் நடிக்காதது குறித்து எவரும் பெரிய அளவில் பேசுவதில்லை, எழுதுவதில்லையே. சினிமா கெட்டுப் போச்சு, கெட்டுப் போச்சு என்று சொன்னால், அதற்கு எல்லா தகவல் சாதனங்களும்தான் காரணம். பொறுப்பு எல்லாத் தரப்பினருக்கும் உண்டு.

**சினிமாவில் உங்கள் அனுபவம்?**

இந்தத் தொழிலே ஒரு நிறைவானதுதான். யாருக்கும் கிடைக்காத அங்கீகாரம் அத்தனை பேருக்கு மத்தியில் நல்ல நடிகன் என்று தக்க வைத்துக்கொள்வது பெரிய விஷயம். எல்லா இயக்குநர்களாலும் கையாளப்பட்டவன் என்ற பெருமை கலந்த மகிழ்ச்சி எனக்கு எப்போதும் உண்டு.

சினிமாவில் செலவழிக்கும் ஒவ்வொரு நொடியும் எனக்கு சந்தோஷமான விஷயம். இதில் மறக்க முடியாத படம் என்றால், 'தேவர் மகன்' ரொம்ப முக்கியமான படம். சிவாஜி, கமல் என்று தலைசிறந்த நடிகர்கள் இருவருடனும் நடித்த படம். இரண்டு பேருக்கும் மத்தியில் நின்றும், நடித்தும் என் பெயரைத் தக்கவைத்துக்கொள்ள முடிந்தது.

**நீங்கள் தயாரித்து, இயக்கிய படங்கள் பொருளாதாரரீதியில் வெற்றியடையாதது பற்றி?**

'தேவதை' பொருளாதார வெற்றியைத் தராதபோது வருத்தம் ஏற்பட்டது. ஆனால் அதை ஏற்றுக் கொள்ளப் பழகிக்கொண்டேன். அதற்காக ரசிகர்களைக் குறை சொல்ல மாட்டேன். நல்ல படங்களை ரசிக்க அவர்களுக்கு யார் கற்றுத் தருவார்கள்?

அடுத்து வேறொரு பெரும் நடிகர், இயக்குநர் வைத்துப் படம் தயாரிக்கலாம். பேச்சுவார்த்தை நடக்கிறது. நான் இயக்குவதாக இல்லை. படம் எப்படி இருக்கும் என்பதை சம்பந்தப்பட்ட கதாநாயகரும் இயக்குநரும்தான் சொல்ல வேண்டும். தரமான பொழுது போக்குப் படமாகத்தான் இருக்கும்.

**எதிர்பார்க்கக்கூடிய நீங்கள் நடிக்கும் அடுத்த படம்?**

பல படங்களில் நடிக்கிறேன். ராஜீவ்அஞ்சில் இயக்கத்தில் ஹாலிவுட் நிறுவனம் ஒன்று மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் எடுக்கிறது. ஆங்கிலப் பதிப்பில் நான் நடிக்கிறேன். மாதவன் கதாநாயகன். இணை நாயகன் போன்றது என்னுடைய பாத்திரம்.

## ஒரு வெள்ளி கட்டணம் வசூலித்தாலும் தொழில் முறை கலைஞர்தான்

"நடிகருக்குப் பயிற்சி தேவையில்லை. நடிப்பு பிறவியிலேயே வருவது, இயக்குநர் கற்றுக்கொடுப்பது என்று சினிமாவில் நடிக்க வருபவர்களுக்கு பொதுவாகவே ஒரு கருத்து இருக்கிறது. இது தவறான கருத்து. கடந்த காலகட்டத்தில் நடிக்க வந்தவர்கள் எல்லாருமே நாடகத் துறையில் இருந்து வந்தவர்கள். சிவாஜி, எம்.ஜி.ஆர். என்று அன்றைய காலகட்ட கலைஞர்களுக்கு நாடகம் ஒரு நல்ல பயிற்சிப் பட்டறையாக இருந்தது. இப்போது நாடகமே இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் பயிற்சி பெறாமல் நடிக்க வருபவர்கள், வந்த உடனேயே காணாமல் போய்விடுகிறார்கள்.

"நடிகர்களுக்கு முறையான பயிற்சி வேண்டும். நான் நடிகனானதே அந்தப் பயிற்சியினால்தான். தொடர்ந்து நான் பயிற்சி பெற்று வருவதால்தான் இத்தனை ஆண்டுகள் என்னால் நிலைத்து நிற்க முடிகிறது.



சொந்த ஊரான செங்கல் பட்டில் 'அமெச்சூர்' நாடகங்களில் நடித்த அனுபவம் உண்டு. நான் தொழில்முறை நடிகனானது 1972இல். எல்லாரும் மருத்துவராக வேண்டும், பொறியியலாளர் ஆக வேண்டும் என்று முடிவு செய்யும் வயதில்தான் நான் நடிகனாவது என்று முடிவு செய்தேன். அந்த நேரத்தில் ஒரு வேலை தேவைப்பட்டது. அதற்காக இந்த வேலையைத் தேர்வு செய்தேன். இதுதான் என் தொழில் என்று முடிவு செய்தபின் அதில் என் திறமையை வளர்த்துக்கொள்ள கல்விப் பயிற்சிகளைப் பெற்றேன். இன்னமும் ஆண்டுதோறும் நான் பல்வேறு பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்கிறேன். என்னைவிட சின்னப் பசங்களிடம்தான் கற்றுக்கொள்கிறேன்.

"கற்றுக்கொள்வது என்பது ஒரு நிலையில் நின்றுவிட முடியாது. மேம்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். காலகட்டத்திற்கு ஏற்ப நடிகர்களைக் கையாளும் தன்மை, முறை மாறிக்கொண்டே வருகிறது. இயக்குநர் கதை எடுக்கும் விதம், படமெடுக்கும் விதம் மாறிக் கொண்டே வருகிறது. அதே தொழிலில் இருக்கும்போது நாம் நம்மை மாற்றிக்கொள்வோம் என்றாலும் விஞ்ஞான ரீதியாக, கல்விரீதியாக நம் மனதையும் அணுகுமுறையையும் மேம்படுத்திக்கொள்வது மிக அவசியம்.

"நாம் முழு நேரக் கலைஞர்கள் அல்ல என்பது பலர் சொல்லும் சாக்குப்போக்கு. நாம் நடத்தும் நிகழ்ச்சிக்கு ஒரு வெள்ளி கட்டணம் வசூலித்தாலும் நாம் தொழில் முறைக் கலைஞர்கள்தான். கட்டணம் செலுத்தி நிகழ்ச்சியைப் பார்க்க வருபவர்கள் தரமானதைத்தான் எதிர்பார்ப்பார்கள். நல்ல காப்பி வேண்டும் என்று காசு கொடுத்து வாங்குகிறோம். காப்பி நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். அதை யார், எப்படி போடுகிறார்கள் என்பது முக்கியமல்ல. ஒன்றைச் செய்தால் அதை முழுமையாக, முறையாகச் செய்ய வேண்டும்."

**கலைஞர் நாசர்**



அடுத்த இலக்கு, திட்டம் பற்றிக் கேட்டபோது, அப்படியெல்லாம் எதுவும் இல்லை என்றார் நாசர். "சூழ்நிலைக்கேற்ப திட்டங்களை வகுத்து அதில் முழுமூச்சாக ஈடுபட்டு வெற்றி காண்பது என் இலக்கு" என்றார். கைவசம் வைத்துள்ள படங்களை நடித்து முடிக்க வேண்டும் என்றவரிடம், மற்றவர் படங்களில் நடிக்கும்போது, 'இயக்குநர் நாசர்' தலையிடுவாரா என்று கேட்டபோது, அதற்கு நான் அனுமதிப்பதில்லை என்றார். ஒரு இயக்குநராக நான் எதை எதிர்பார்க்கிறேனோ, அதையே நடிகராக நான் கொடுப்பேன். சின்ன வேடமாக இருந்தாலும் அதை முழுமையாகச் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளவன் நான்.

நடிப்புப் பயிற்சி, பட்டறைகள் பற்றி இரண்டு நூல்களை எழுதிக்கொண்டிருக்கிறார் நாசர். ஆகஸ்ட் மாத வாக்கில் நூல் வெளிவரும்.

## நடிப்புப் பட்டறையில் இசை, நடனம், தற்காப்புக் கலைப் பயிற்சிகள்

நாசர் நடத்திய நாடகப் பயிற்சிப் பட்டறையில் இசை, நடனம், களரிச் சண்டை போன்றவையும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இசை அறிவு, நடனப் பயிற்சி, உடலில் ஒவ்வோர் அங்கங்களையும் சரியாகப் பயன்படுத்தத் தெரிதல், மன ஒழுங்கு என்று பல்வேறு விஷயங்கள் நடிப்புக் கலைக்குத் தேவை. இவை எவ்வாறு நடிப்புக்குப் பயன்படுகிறது என்பதை விளக்க இந்தப் பயிற்சிகள் பட்டறையில் பங்கேற்றவர்களுக்கு அளிக்கப்பட்டன.

நடனத்துக்கும் நடிப்புக்கும் என்ன அடிப்படை என்பதைக் காட்டுவதற்காக இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு, அனுபவம் மிக்க நடனக் கலைஞர் பிரியா அருணை அழைத்திருந்தனர். "நடனத்தில் அபிநயம் மிகைப் படுத்தப்பட்டிருக்கும். ஆனால் நடிப்பில் அபிநயம் மிக அடக்கமாக இருக்க வேண்டும். குறிப்பாக சினிமா நடிப்பில் உணர்ச்சிகளை அடக்கி வெளிப்படுத்த வேண்டும்" என்று சொன்னார் பிரியா.

சிங்கப்பூரில் அனுபவமிக்க மற்றொரு கலைஞரான திருமதி மோகனா ஹரேந்திரன் பட்டறையில் பங்கேற்றவர்களுக்கு இசைப் பயிற்சி அளித்தார். நடிப்பில் குரலின் பயன்பாடு மிக முக்கியமானது. குரலைப் பயன்படுத்துவதற்கு இசைப் பயிற்சி உதவுகிறது.

களரிச்சண்டை கலைஞர் திரு. நமச்சிவாயம் களரிச் சண்டை தற்காப்புக் கலையின் அடிப்படைகளைச் சொல்லிக் கொடுத்தார்.

"நடிப்புக்கும் இந்தத் தற்காப்புக் கலைக்கும் ஓர் ஒற்றுமை உள்ளது. இரண்டுக்கும் மன ஒழுங்கு தேவை. மனதை முழுமையாக ஒருநிலைப்படுத்தினால்தான் களரிச்சண்டை பயிற்சிகளைச் செய்ய முடியும். அதே போல்தான் நடிப்பும். நடிக்கும்போது எண்ணங்களைச் சிதறவிடாமல், மனதை ஒருமைப்படுத்துவது மிக முக்கியம்" என்றார் நாசர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையை நடத்த நாசருடன் அவரது மனைவி திருமதி கமீலா நாசர் மற்றும் நாசரின் அடவு அமைப்பைச் சேர்ந்த திரு. சுப்பையா, திரு. அனீஸ் இருவரும் வந்திருந்தனர். இருவரும் நடிப்புத் துறையில் முதுநிலைப் பட்டக் கல்வியைப் பயின்றவர்கள்.

"நடிகர் நாசரின் பயிற்சிப் பட்டறையில் உட்கார்ந்து இருப்பதே, ஒரு நிகழ்கலையைப் பார்ப்பது போன்றது. அவர் பேசும்போது உணர்ச்சிகள் மாறி மாறி வெளிப்படுகின்றன. அங்க அசைவுகள் வார்த்தைகள் சொல்லாத செய்திகளைச் சொல்கின்றன" என்றார் மேடை நாடக நடிகரும் குறும்படத் தயாரிப்பாளருமான திரு. ராஜகோபால்.

நடிப்பு பற்றிய பல தவறான எண்ணங்கள் அனைத்தையும் இந்தப் பட்டறை உடைத்தெறிந்து விட்டது. மாயைகளைக் களைந்து, ஒவ்வொரு நடிகரும் திறமையை வளர்த்துக் கொண்டே இருப்பது அவசியம்.

திறமையைக் கூர்படுத்த நேரம், காலம், வெளி போன்றவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்" என்பதை நாசர் நன்கு உணர்த்தினார். "சாதாரண மனிதராக வாழ்க்கையில் நாம் அனுபவித்ததை நடிப்பில் கொண்டுவர வேண்டும். அதை அப்படிச் செய்வது என்பதை இந்தப் பயிற்சி சொல்லிக் கொடுத்தது.

உணர்ச்சிபூர்வமாக இருப்பதுதான் நடிப்பு என்று பலர் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். புத்திசாலித்தனமான நடிகராக இருப்பதுதான் முக்கியம். உணர்வுகள், உணர்ச்சிகளோடு நல்ல நடிப்புக்குத் திறமையும் அறிவும் வேண்டும். தன்னம்பிக்கை முக்கியமாக வேண்டும்.

அந்தத் தன்னம்பிக்கையை இந்தப் பட்டறை வளர்த்தது. நடிப்பு உணர்வுபூர்வமானது. நிறைய விஷயங்கள் பாதிக்கும். அதிகமான ஊக்குவிப்பும் பாராட்டும் தேவைப் படும். இதில் தன்னம்பிக்கையோடு செயல்படுவது எப்படி என்பதை நாசர் சொல்லிக்கொடுத்தார்.

நடிகர்களுக்குச் சூழ்நிலை மிகவும் முக்கியமானது. சூழ்நிலையைப் பயன்படுத்த வேண்டும். அதற்கு இந்தப் பட்டறையே ஓர் உதாரணம். இந்தப் பட்டறையில் 21 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் நான்கு பேர்தான் தொழில் முறைக் கலைஞர்கள். நிபுணத்துவக் கலை ஞர்களுக்குப் பயிற்சிக் கொடுப்பதற்காகத்தான் நாசர் தன்னைத் தயார் படுத்திக்கொண்டு வந்திருந்தார். ஆனால் அவர் எதிர்பார்த்ததுபோல் தொழில் முறைக் கலைஞர்கள் பட்டறையில் பங்கு கொள்ளவில்லை. உடன் வந்திருந்தவர்களுக்கு ஏற்ப நாசர் தனது பயிற்சிகளை மாற்றிக் கொண்டார். இதுதான் நிபுணத்துவக் கலைஞரின் சிறப்பு. நல்ல பயிற்சியாளர், பங்கேற்பவர்களை உணர்ந்து செயல்படுவார். உறுப்பினர்கள் பல நிலைகளில் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு, அவரவர் நிலைக்கேற்ப அவர் பயிற்சி அளித்தது குறிப்பிடத்தக்க விஷயம்.

**உணர்ச்சிபூர்வமாக இருப்பது தான் நடிப்பு என்று பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். புத்திசாலித்தனமான நடிகராக இருப்பதுதான் முக்கியம். உணர்வுகள், உணர்ச்சிகளோடு நல்ல நடிப்புக்குத் திறமையும் அறிவும் வேண்டும். தன்னம்பிக்கை முக்கியமாக வேண்டும்.**

தன் மேடை அனுபவத்தை எப்படி சினிமாவுக்கு மாற்றினார் என்பதை விளக்கி, நாடக நடிகர்கள் எப்படி தங்களைத் திரைக்கு மாற்றிக்கொள்வது என்பதைப் பற்றிச் சொன்னார். மாறுபட்ட நடிப்புகள் பற்றி பட்டறையில் விளக்கப்பட்டன. மேடை நாடகத்துக்கு உணர்வுகளைச் சற்று மிகைப் படுத்தி வெளிப்படுத்த வேண்டும். உணர்வுகளைத் தனக்குள்ளே கட்டுப்படுத்தி, ஒரு கட்டுப்பாட்டுக்குள் வெளிப்படுத்துவது சினிமா என்பதை நாசர் அழகாக எடுத்துச் சொன்னார்.

ஒவ்வொரு நாளும் பயிற்சி வேண்டும் என்பதை நாசர் வலியுறுத்துகிறார். ஒரு வேடத்தில் நடிக்கிறோம் என்றால் அந்த வேடத்துக்குரிய உணர்வுகளுக்கு மட்டும் தயார்படுத்தினால் போதாது. தலை முதல் கால்வரை நடிகர் தன்னைத் தயார்படுத்த வேண்டும். அதற்கு நடனம், இசை, உடற்பயிற்சி, மனப்பயிற்சி என்று பல்வேறு பயிற்சிகள் தேவைப்படுகின்றன. நடிப்பு பற்றி மாறுபட்ட தத்துவங்கள், கோட்பாடுகள், பாணிகள் உள்ளன. அனைத்தையும் கற்றுக்கொண்டு அதில் தனக்கேற்றதைத் தேர்வு செய்துகொள்ள வேண்டும் என்கிறார் நாசர்.

சிறிய பாத்திரமாக இருந்தாலும் அதை மிகுந்த அக்கறையோடு செய்ய வேண்டும்.

நாசர் குறிப்பிட்ட மற்றொரு முக்கிய விஷயம், தொடர்பு, இணைந்து வேலை செய்வது. உடன் நடிப்பவர்கள் மீது நம்பிக்கை மிக முக்கியமானது. அப்போதுதான் முழுமையாகவும் திறமையாகவும் செயல்படுவதோடு, வெற்றியும் பெற முடியும். கற்றுக்கொண்ட பின் எல்லாவற்றையும் எறிந்துவிட்டு, தனக்கேற்ற முறையில் அறிவாற்றலைப் பயன்படுத்தி ஒருவர் செயல்பட வேண்டும் என்பதை நாசரின் பட்டறை தெளிவுபடுத்தியது.

### அடவு

தமிழ் இலக்கியம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள் என பல துறைக் கலைகளில் அனுபவமும் ஈடுபாடும் மிக்க நாசர், அழிந்துவரும் தமிழரின் பாரம்பரிய கலைகள், பண்பாடு, வரலாற்றை மீட்டெடுத்து அவற்றை மீண்டும் தழைத்தோங்கச் செய்யும் நோக்கில் 'அடவு' என்ற அமைப்பை நிறுவிப் பல பணிகளைச் செய்துவருகிறார்.

அடவின் ஓர் செயல்பாடுதான், பொருளாதார லாப நோக்கம் இன்றி நாசர் நடத்திய இந்தப் பட்டறை. "வறுமை யோடு தொடர்புடையதாகப் பார்க்கப்படும் தமிழரின் பெருங்கலையான தெருக்கூத்தில் ஒரு பிரம் மாண்டம் ஒளிந்துள்ளது. அதை வெளிப்படுத்தும் வகையில், இதுவரை செய்யாத அளவுக்குப் பெரிய அளவில் தெருக்கூத்தை அரங்கேற்ற வேண்டும்" என்பது நாசரின் அடுத்த பெருங்கனவு.

### அடவின் முயற்சிகள்

#### கட்டியம்-பண்பாட்டுப் பயிற்சிக்களம்

தமிழ்ப் பண்பாட்டை அடையாளம் காட்டும் நாட்டுப்புறக் கலைகளை வளர்த்தெடுக்கும் பணியைக் கட்டியம் செய்யும். நாட்டுப்புறக் கலைகள் பற்றிய பயிற்சி, நாட்டுப் புறவியல் புலம் பற்றிய கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், விரிவுரைகள், சான்றிதழ் பயிற்சிகள் போன்றவற்றை நாட்டுப்புற ஆய்வாளர்களைக் கொண்டு கட்டியம் நடத்தும்.

#### அரிதாரம் – தமிழ் ஆடுகள்

நாட்டுப்புற மக்களின் பிறப்பு தொடங்கி இறப்பு

வரை அனைத்து வாழ்வியல் நிகழ்வுகளிலும் முன் நிற்கும் நாட்டுப்புறக் கலைகளை வெகுசனப் பண்பாட்டுத்தளத்தின் ஊடாக வளர்த்தெடுப்பதை 'அரிதாரம்' செய்யும். நாட்டுப்புறக் கலைகளை வெளிக்கொணரும்.

### பல்லாங்குழி – குழந்தைகளின் புனைவுகள்



கதை சொல்லும் பண்பாடு, நாட்டுப்புறக் கலைகள், நாடகங்கள் மற்றும் விளையாட்டுகள் மூலம் பிள்ளைப் பருவத்தை மீட்டெடுக் கும் முயற்சியை 'பல்லாங்குழி' செய்யும்.

### ஆராய்ச்சி – தமிழியல் பதிவுகள்

தமிழியல் ஆய்வுகளை 'ஆராய்ச்சி' முன்னெடுக்கும். ஆய்வில் திரட்டப்படும் தகவல்களை, ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுப்பதோடு, வீடியோ, புகைப்படப் பதிவுகளாகவும் ஆவணப் படுத்தும் முயற்சியை 'ஆராய்ச்சி' செய்யும்.

### புத்தகம் – தமிழ் அரிச்சுவடி

சமகாலத் தமிழ்ச் சூழல் குறித்த செய்தி நூல்களைப் புத்தகம் வெளியிடும்.

### திரை

திரைப்படம் தொடர்பான கூட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள், திரைப்பட இயக்கங்கள் ஆகியவற்றை 'திரை' நடத்தும்.

### அசைவு – தமிழ் நாடகக் களம்

வீதி நாடகங்கள், நாட்டுப்புறக் கலை வடிவங்களை உள்வாங்கிக் கொண்ட நவீன நாடகங்கள் மற்றும் பல்விதமான மக்கள் கலை வடிவங்களை 'அசைவு' நிகழ்த்தும். இது தொடர்பான பயிற்சிப் பட்டறைகள், விரிவுரைகள், இயக்கங்கள் போன்றவற்றையும் அசைவு மேற்கொள்ளும்.

தொடர்புக்கு
nasser@vsnl.com


**உயிர்மை பதிப்பகம்**

**சுஜாதாவின் நூல்கள்** ரூ.

| | |
|---|---|
| தேர்ந்தெடுத்த சிறுகதைகள் | 225 |
| ஸ்ரீரங்கத்துக் கதைகள் | 175 |
| புறநானூறு ஓர் எளிய அறிமுகம் | 225 |
| விஞ்ஞானச் சிறுகதைகள் | 225 |
| பதவிக்காக (நாவல்) | 200 |
| எழுத்தும் வாழ்க்கையும் (கட்டுரைகள்) | 85 |
| சுஜாதா பதில்கள் | 90 |
| திரைக்கதை எழுதுவது எப்படி ? | 60 |
| யவனிகா (நாவல்) | 75 |
| எப்போதும் பெண் (நாவல்) | 90 |
| நிலா நிழல் (நாவல்) | 75 |

**பிற நூல்கள்**

| | |
|---|---|
| நெடுங்குருதி (நாவல்) எஸ். ராமகிருஷ்ணன் | 250 |
| பால்ய நதி (சிறுகதைகள்) எஸ். ராமகிருஷ்ணன் | 60 |
| பெயரற்ற யாத்ரீகன் (ஜென் கவிதைகள்) தமிழில்: யுவன் சந்திரசேகர் | 110 |
| ஏற்கனவே (சிறுகதைகள்) யுவன் சந்திரசேகர் | 100 |
| என் பெயர் ராமசேஷன் (நாவல்) ஆதவன் | 100 |
| இரவின் ரகசியப் பொழுது (கவிதைகள்) கோகுலக்கண்ணன் | 50 |
| பார்வைகளும் பதிவுகளும் (கட்டுரைகள்) வாஸந்தி | 110 |
| என் தாத்தாவுக்கொரு குதிரை இருந்தது (நாடகம்) செழியன் | 50 |
| காத்திருந்த வேளையில் (கட்டுரைகள்) மனுஷ்ய புத்திரன் | 65 |
| எப்போதும் வாழும் கோடை (கட்டுரைகள்) மனுஷ்ய புத்திரன் | 50 |
| என் படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள் (கவிதைகள்) மனுஷ்ய புத்திரன் | 50 |

தபால் மூலம் பெற நூல் விலையுடன் ரூ.10 சேர்த்து அனுப்பவும். M.O. மற்றும் வரைவோலையாக அனுப்புவோர் **Uyirmmai Pathippagam** என்ற பெயரில் அனுப்புக. வெளியூர் காசோலை அனுப்புவோர் ரூ.15 சேர்த்து அனுப்புக. வி.பி.பி உண்டு, செலவு தனி.

**அயலில் இருக்கும் நண்பர்கள் தேவையான நூல்களை மின்னஞ்சல் மூலம் தெரிவித்தால் அஞ்சல் செலவு மற்றும் பணம் அனுப்ப வேண்டிய முறைபற்றி தெரிவிக்கிறோம்.**

**Uyirmmai**

11/29 Subramaniam Street
Abiramapuram, Chennai - 600 018
India

Tele/fax: 91-44-24993448
Mobile: 9840271561

e-mail: uyirmmai@yahoo.co.in

# உலகத் தமிழ் சிறுகதைப் போட்டி முடிவுகள்

## கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும் காலம் இலக்கிய இதழும் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியின் முடிவுகள்



முதலாவது பரிசு

**இலைகள்**

என். சொக்கன்

பங்களூர், இந்தியா

பரிசுத் தொகை இந்திய ரூபாய் 10,000/-
கனடா இலக்கியத் தோட்டத்தினால்
வழங்கப்படுகின்றது



இரண்டாவது பரிசு

**பேட்டை**

புகழ்

சென்னை, இந்தியா

பரிசுத் தொகை இந்திய ரூபாய் 6,666/-
கனடாவில் இயங்கி
வருகிற ஞானம் ஸ்ருடியோவினால்
வழங்கப்படுகின்றது



மூன்றாவது பரிசு

**ரோத்தான்**

பழனிசாமி சுப்பிரமணியன்

சிங்கப்பூர்

பரிசுத் தொகை C$ 100/-
ரொறன்ரோவில் இருந்து வெளிவரும்
வாராந்த பத்திரிகையான 'சுதந்திரன்'
வழங்குகின்றது

### பாராட்டுப் பெற்று பிரசுரத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட சிறுகதைகள்

**ஆனாலும் இது கதையல்ல**
ஆதவன் தீட்சண்யா
தமிழ்நாடு, இந்தியா

**காதோலை, கருமணியும், சில டேலியாப் பூக்களும்**
கோவை சங்கமித்ரா
தமிழ்நாடு, இந்தியா

**எண்ணுவதெல்லாம்**
பவித்ரா ஸ்ரீனிவாசன்
தமிழ்நாடு, இந்தியா

**செயற்கை மனிதன்**
கந்தகப்பூக்கள் ஸ்ரீபதி
தமிழ்நாடு, இந்தியா

**இருந்து தொலையட்டும் இந்தக் கல்யாணங்களும்**
மாலதி
தமிழ்நாடு, இந்தியா

**விளிம்பு**
பாலுசத்யா
தமிழ்நாடு, இந்தியா

**ஒளிச் சிதறல் வழியே நகரும் ரயில்**
க.சி. சிவகுமார்
தமிழ்நாடு, இந்தியா

எழுத்தாளர்களுக்கு 'காலம்' தனது பாராட்டுக்களையும்
வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றது.

# இலைகள்

சொக்கன்



பச்சைப் பசேலென்ற செழித்து வளர்ந்த கொடிகளுக்குள் மறைந்துவிட்ட கணவனைப் பெரும் பீதியோடு பார்த்துக்கொண்டிருந்தாள் அவள்.

அலுவலகத்திலிருந்து திரும்பி வரும்போதே அவன் உடலில் அங்குமிங்கும் சிறிய பச்சை இலைகள் தென்பட்டன. நாள் முழுக்க உடலைச் சுற்றி வளர்ந்த கொடிகளின் மிச்சங்களா அவை. அல்லது புதிய கொடியொன்று வளர்வதற்கான அடையாளமா என்று அவள் வழக்கம்போல் குழம்பிக் கொண்டிருக்கும்போது அவன் அவள் தந்த காப்பியைக் குடித்துவிட்டு அவனது வாசிக்கும் அறைக்குள் சென்று அமர்ந்துகொண்டான். அன்றைய செய்தித்தாளை முதல் பக்கத்திலிருந்து விரிவான அலசல் செய்தபோதும்கூட அவன் சாதாரணமாகவே இருந்தான். அங்கங்கே முளைத்திருந்த இலைகளும் உதிர்ந்து விழுந்துவிடுவன வாய்த் தென்பட்டன. பேப்பரை மடித்து ஓரமாயிருந்த ஸ்டூலின்மேல் வைத்துவிட்டு, அவன் தன் கணினியை முடுக்கிவிட்டுக்கொண்டு அமர்ந்த பிறகு இன்னும் அதிக இலைகள் ஒவ்வொன்றாய்த் தோன்ற ஆரம்பித்து, சற்று நேரத்துக்குள் அவனை ஒரு பச்சைப் பொதியலென முழுக்க மூடிமறைத்து விட்டன.

அவள் கையிலிருந்த முறத்தைச் சமையலறை மேடைமேல் வைத்துவிட்டு கூடத்திற்கு வந்தாள். டிவியில் தொலைத்துவிட்ட எதையோ தேடுவதைப்போல சேனல்களை மும்முரமாய் மாற்றினபடி ஓரக்கண்ணால் அவனைக் கவனித்தாள். அடர்ந்து வளர்ந்த ஒரு மூங்கில் காட்டைப்போல அவன் அசைவின்றி அமர்ந்திருக்க, அவனது கால்கள், கைகள், தொட்டுக்கொண்டிருந்த கணினி என்று எல்லாம் பச்சைப்பசேல் இலைகளால் மூடப்பட்டிருந்தது. சிறிதும் இடைவெளியின்றி கொசகொசவென்று சுருள்சுருளாய் இலைத்த பெரும் கொடியாய்த் தோன்றினான் அவன். கிளைகள் தெரியவில்லை. பூ, காய், கனி ஏதுமில்லை. இலைகள். இலைகள். எங்கு பார்த்தாலும் பெரிய பெரியதான இலைகள் மட்டுமே.

மொய்த்துக்கொண்டிருந்த இலைகளுக்கு நடுவே அவளுக்கு அவன் தெரியாததுபோலவே அவனுக்கும் அவளைத் தெரியப்போவதில்லை என்றாலும்,

பக்கத்தில் சென்று பார்க்க அவளுக்குத் தயக்கமாயிருந்தது. சில சமயங்களில் அவள் பயத்தோடு அந்த அறை வாசலில் சென்று நிற்கும்போது அவன் ஏதோ உள்ளுணர்வில் அவளைத் தெரிந்துகொண்டு இலைகளுக்கு நடுவிலிருந்து தன் முகத்தை மட்டும் வெளியே நீட்டி, 'என்ன விஷயம்?' என்று மிரட்டல் தொனியில் வினவுவான். ஆதிகாலத்துத் தாவர மனிதன் போன்ற அந்தக் கோலத்தில் அவனைப் பார்க்கப் பயந்துகொண்டு அவள் இப்போதெல்லாம் அப்படி நிற்பதில்லை. ஆனாலும் அவன் இலைகளால் மூடப்பட்டு மறைந்து போகிறபோதெல்லாம் எப்போது திரும்பி வருவான், ஒருவேளை வராமலே அப்படியே மறைந்துவிடுவானோ என்றெல்லாம் உள்ளுக்குள் கலவரம் பிடுங்கித் தின்ன, சமையலறையினுள் வேலையே ஓடாது அவளுக்கு. அரிசி புடைப்பதுபோலவோ, ஆனந்த விகடன் வாசிப்பதுபோலவோ ஹாலில் அமர்ந்தபடி அவனை உன்னித்துக்கொண்டிருப்பாள். இதோ, இந்த விநாடியில் இலைகளைக் கிழித்துக்கொண்டு அவன் எழுந்து வரப் போகிறான் என்று அவள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோதும், அவன் சில மணி நேரங்களாவது அந்த மோனத் தவத்தில் ஆழ்ந்திராது வெளிவருவதில்லை.

பெரும்பாலும் அவன் அப்படி எழுந்துவருகிறபோது சாப்பாட்டு நேரமாகியிருக்கும். நேராய் உணவு மேஜையில் வந்தமர்வான். தட்டில் பரிமாறப்படுவது எதுவானாலும் மறுபேச்சில்லாமல் சாப்பிடுவான். உணவுப் பண்டங்களை நன்கு மென்று உண்பது அவனது பழக்கம். ஆகவே அவன் சாப்பிட்டு முடிக்க இருபத்தைந்து நிமிடங்களாவது ஆகும். அப்போது அவள் அவனது எதிர்நாற்காலியில் அமர்ந்தபடி அவனது முகத்தையும் கைகளையும் ஆவலோடு உற்றுப் பார்ப்பாள். அங்கே இன்னும் சிற்சில இலைகள் மீதமிருக்குமானால், சாப்பிட்ட பிறகும் அவனுக்கு வேலை இருக்கிறது என்று அர்த்தம். அவனுக்குப்பின் அவள் சாப்பிட்டு முடித்து, பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்திவிட்டு படுக்கையறையினுள் நுழையும்போது பக்கத்து அறையில் அவன் மீண்டும் பச்சைக் குவியலாய் அமர்ந்திருப்பான். அவள் சில நிமிடங்களுக்குப் படுக்கையில் புரண்டு படுத்த பின்னும் தூக்கம் வராமல், நிலையில்லாத மனதோடு ஹாலில் அமர்ந்துகொண்டு ஏதேனும் ஒரு புத்தகத்தைப் பாதிக் கண்களுக்குப் புரட்டினபடி அவனுக்காகக் காத்திருப்பாள்.

அவன் தூங்க வரும்போது பெரும்பாலும் மணி பத்தரை அல்லது பதினொன்றைத் தொட்டிருக்கும். ஓட்டப் பந்தயத்தில் ஓடிக் களைத்ததுபோன்ற முகபாவத்தோடுதான் படுக்கையை அணுகுவான் அவன். கண்களின்மேல் இரண்டு பெரிய இலைகள் இன்னமும் மீதமிருக்க, படுத்த பத்தாவது நிமிடத்தில் தூங்கிப்போய்விடுவான். அதன் பிறகும் இரவு விளக்கின் மிதமான நீல வண்ணத்தில் அவள் அவனையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டு விழித்திருப்பாள். அவனது கண்களை மூடியிருக்கும் இரு இலைகளும் மெதுவாகச் சுருங்கி மறைந்தபின்தான் தூங்குவதற்கான நிம்மதி அவளுக்கு சாத்தியப்படும். இனம் தெரியாத ஒரு வியாதியிலிருந்து கணவனைக் காப்பாற்றிவிட்ட நிறைவும் களைப்பும் அவளை ஒரே நேரத்தில் தாக்க, கனவுகளின்றி நிம்மதியாய்த் தூங்கிப் போவாள் அவள்.

**ஆதிகாலத்துத் தாவர மனிதன் போன்ற அந்தக் கோலத்தில் அவனைப் பார்க்கப் பயந்துகொண்டு அவன் இப்போதெல்லாம் அப்படி நிற்பதில்லை.**

மறுநாள் காலை எழும்போது அவன் நம் மெல்லோரையும்போல் சாதாரணமானவனாகவே தெரிவான். அலட்சியமாய் செய்தித்தாள் புரட்டுவான். பால் காய்ச்சிக்கொண்டிருக்கிற மனைவியை முதுகுப்புறமாய் அணுகி, அணைத்து, கழுத்தில் முத்தம் தந்து கூச வைப்பான். ஒரு கையில் காஃபியும் மறுகையில் ரிமோட்டுமாய் காலை நேர வர்த்தகச் செய்திகளையும் அவனுக்கு ஆர்வமிருக்கிற நிறுவனங்களின் பங்கு மார்க்கெட் நிலவரத்தையும் ஆவலோடு பார்ப்பான். குளித்து, சாப்பிட்டுவிட்டு, கையில் மடிக்கணினியோடு அலுவலகம் புறப்படும்போது அவளுக்கு விடைபெறு முத்தம் தரவும் தவறுவதில்லை – நேற்று இரவு பார்த்தவன் தானா இவன் என்று அவள் வியந்து முடிப்பதற்குள் அவன் காரில் ஏறி அமர்ந்து எஃப். எம். ரேடியோவைத் தட்டிவிட அந்த வாகனம் அவர்களது வாசல் கேட்டைத் தாண்டுவதற்குள் அவனது கழுத்தில் சிறிதாய் முளைவிடுகிற பசிய இலைகள் அவள் கண்ணில் பட்டுவிடும். கேன்சர் செல்களின் வேகத்தில் அந்த இலைகள் பரபரப்பாய் நிறைந்து பரவ, தெருமுனைக்குள் அவன் பசுங்கொடியொன்றினுள் மூழ்கிவிடுவதைக் கண்ணீரோடு பார்ப்பாள் அவள். எந்த விபத்துமின்றி அவன் அலுவலகம் சென்று சேர வேண்டுமே என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்ளாமல் அவள் காலை உணவு உண்டதில்லை.

சற்றும் எதிர்பார்த்திராத இந்தப் பிரச்சினையை அவள் ஓரிரு மாதங்களுக்குப் பொறுமையோடு நன்றாகவே சமாளித்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். அதன்பின்னும் பொறுக்கமுடியாமல் ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியத்தில் அவனிடம் இதைப்பற்றிப் பேசினாள்.

அவள் சொல்வதையெல்லாம் பொறுமையோடு கேட்டவன், 'என்ன பைத்தியக்கா

ரத்தனமா பேசறே?' என்றான் முதல் எதிர் வினையாய். 'இலைகளாவது, கொடியாவது, ரிடிகுலஸ். சுத்த பேத்தலா இருக்கு' என்று மேலும் சொன்னவன், 'பேய் பிசாசு கதையெல்லாம் நிறைய படிப்பியோ நீ?' என்றான் அவளிடம்.

அவனது கோபத்தைக் கண்டு அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. 'இல்லைங்க. நான் நிஜமாதான் சொல்றேன்' என்று விசும்பலினூடே சொன்னவள், 'இதை யார்கிட்டயும் சொல்ல முடியாம, என்ன பண்றதுன்னும் தெரியாம ஒவ்வொரு நாளும் நான் எத்தனை அவஸ்தைப்படறேன்னு உங்களுக்கு என்ன தெரியும்?'

சில விநாடிகளுக்கு இருவரும் பேசாமலிருக்க, அவன் கழுத்தைத் தேய்த்தபடி யோசித்து 'இப்ப என்னதான் பண்ணலாம்ங்கறே?' என்றான் கடைசியாய்.

அவள் தயங்கித் தயங்கி, 'ஒரு டாக்டரைப் பார்க்கலாங்க' என்றாள்.

அவன் சோஃபாவிலிருந்து அத்தனை வேகமாய் எழுந்திருப்பான் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனது சிவந்த கண்களைப் பார்த்தபடி அவளும் நடுக்கத்தோடு எழுந்து நின்றாள். அவன் அவளை ஆத்திரத்தோடு பார்த்து, 'எனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்குன்னு சொல்றியா?' என்றான் கண்களை உருட்டி.

அவள் ஏதோ சொல்ல முயன்றதையும் அவனது ஆங்காரம் அனுமதிக்கவில்லை. 'உனக்குத்தான் பைத்தியம் பிடிச்சிருக்கு. மனுஷனைச்சுத்தி செடி முளைக்குது. தானா மறைஞ்சுபோகுதுன்னு ஏதேதோ சொல்றே. நல்ல சுயநினைவோடு இருக்கிற யாராவது இப்படியெல்லாம் பேசுவாங்களா?' அவனது அதட்டல்தொனி தாளாமல் அவள் நிஜமாகவே அழ ஆரம்பித்துவிட்டாள்.

அவளது அழுகையைக் கண்டதும் அவனுக்குள் ஏதோ நெகிழ்ந்திருக்க வேண்டும். சில நிமிடங்களுக்குப் பேசாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தவன், கையிலிருந்த சிகரெட்டை சாம்பல் கிண்ணத்தில் தேய்த்து அழித்துவிட்டு அவளது இரண்டு தோள்களையும் அழுத்தமாய் பற்றிக்கொண்டான். 'ஏய், என்னைக் கொஞ்சம் நிமிர்ந்து பாரு.'

**அறையில் இன்னொருத்தி இருக்கிறாள் என்பதை அறவே மறந்துவிட்ட முகபாவம். மடிக்கணினியின் கறுப்பான முதுகுப்புறத்தில் இன்னும் ஏராளமான இலைகள் புழுக்கள்போல் நெளிநெளிந்துகொண்டிருந்ததை அவளால் தெளிவாய்ப் பார்க்க முடிந்தது.**

அவள் இன்னும் குறையாத கண்ணீரோடு அவனை ஒருமுறை பார்த்துவிட்டு சட்டென்று தலை குனிந்துகொண்டாள். அவன் அவளது தாடையைத் தொட்டு நிமிர்த்தினான், 'நீ இந்த வீட்ல சந்தோஷமா இருக்கியா இல்லையா?' என்றான் நேரடியாய். 'உண்மை எதுவானாலும் அதைத் தயங்காம சொல்லு. நான் உன்னை நல்லா வெச்சுகிட்டிருக்கேனா இல்லையா?'

அவள் ஆமோதிப்பாய்த் தலையாட்டினாள். தொடர்ந்து, 'நான் அதில எந்த குறையும் சொல்லலைங்க' என்று அவள் ஏதோ சொல்லவர அவன் முகத்தில் பரவிய சிரிப்பு அதைப் பாதியில் நிறுத்தி வைத்தது. உணர்ச்சி மேலீட்டில் 'தேங்க் காட்' என்று மேலே பார்த்துச் சொன்னவன், 'அது போதும் எனக்கு' என்றான் மீண்டும் சிரித்து. அவள் மேலும் பேசுவதற்குள் சரசரவென்று உள்ளறைக்குள் மறைந்துவிட்டான் அவன்.

அவள் சோஃபாவில் தளர்ந்து விழுந்தாள். தன்னுடைய தரப்பிலான நியாயத்தையோ, குற்றச்சாட்டையோ முழுக்கக் கேட்காமல், அதைப் புரிந்துகொள்வதற்கான சிறு முனைப்பும் காட்டாமல் அவன் அலட்சியமாய்ப் போய்விட்டது அவளுக்குப் பெரும் வேதனையாய் இருந்தது. அதைக்காட்டிலும் பெரிய பயம், மீண்டும் இந்தப் பச்சை இலைகளின் பிரச்சினையை அவளே தனியாய்ச் சமாளித்தாக வேண்டும் எப்படி?

நடுக்கத்தோடு அவள் உள்ளறையை எட்டிப் பார்த்தபோது அவன் புதியதொரு பச்சைப் புதிரினிடையே அமர்ந்திருந்தான். அவளது காலடிச் சப்தத்தில் கலைந்து திரும்பி, சில இலைகளைக் கிழித்துக்கொண்டு திடுமென்று வெளியே எட்டிப் பார்த்தவன், 'என்ன டியர், இப்பவும் என்னைச் சுத்தி இலைங்க முளைச்சிருக்கா? உன் கண்ணுக்குத் தெரியுதா?' என்று கேலியாய்ச் சிரித்தான். அவனது அமானுஷ்யமான பார்வை அவளுக்குள் பெரிய பூகம்பத்தை உண்டுபண்ண அவள் சப்தமின்றி ஓலமிட்டபடி படுக்கைக்குச் சென்று போர்வையைப் போர்த்திக் கொண்டாள். அதன் பின் வெகுநேரத்துக்கு அவளது அழுகை அடங்கவில்லை.

அடுத்த மாத இறுதியில் அவர்கள் மும்பைக்கு விமானத்தில் சென்று அருகிலிருந்த ஒரு மலைப் பிரதேசத்திற்கு உல்லாசப் பயணமாய்ப் போனார்

கள். அவள் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் மறந்து சிரித்திருந்த நாட்கள் அவை. புத்தம்புதிதாய்த் திருமணமானவர்களைப் போல அந்தச் சிறிய நகரத்தின் மூலை முடுக்குகளெங்கும் கைகோர்த்து சுற்றித் திரிந்தார்கள் அவர்கள், தெருவோரக் கடைகளில் எலுமிச்சை மணக்கிற பாவ்பாஜியும் முந்திரிப் பருப்பு பர்பிகளும் வாங்கித் தின்று, மான்களுக்கு இலை தழை ஊட்டினபடி புகைப்படமெடுத்துக்கொண்டு, செயற்கை ஏரியில் பெடல் மிதி படகுச் சவாரி செய்து, ஒரு பழையகாலத்து அரண்மனையுள் ஓடிப்பிடித்து விளையாடி, தூசும் மாசும் இல்லாத காற்றில் கமழ்கிற தேயிலை மணத்தை நுரையீரலின் அடிவரைக்கும் சுவாசித்தபடி பேசிக் களைத்தார்கள்.

இரண்டாம்நாள் இரவு ரிசார்ட் அறைக்குத் திரும்பிய பின்னர் இரவு உணவுக்கு வேண்டியவற்றை ஆர்டர் கொடுத்துவிட்டு அவள் குளிக்கப் போனாள். பதினைந்து நிமிடங்களுக்குப் பின்னும் இதமான வெந்நீர்க் குளியலிலிருந்து விலக மனமில்லாமல் அவள் வெளியே வந்தபோது அவன் படுக்கையில் உட்கார்ந்த நிலையில் கண்மூடியிருந்தான். அவன் எதிர்பாராத கணத்தில் ஒரு முத்தம் தர உத்தேசித்து அவள் முன்நகர்ந்தபோது அவனது செல்லிடத் தொலைபேசி சிணுங்கலாய் ஒலித்தது.

அவன் சட்டென கண்களைத் திறந்து உட்கார்ந்த நிலையில் சற்றே சிரமத்துடன் கைகளை நீட்டி அதை எடுத்துக்கொண்டதும் அவள் தலையைத் துவட்டின துண்டின் இயக்கத்தைப் பாதியில் நிறுத்திப் பின்னே நகர்ந்துகொண்டாள். ‘ஹலோ, தினேஷ் ஹவ் ஆர் யூ?’ ஏற்கெனவே எதிர்பார்த்ததுபோன்ற விசாரிப்புடன் அவன் பேச ஆரம்பிக்க, அப்போதுதான் அந்த செல்ஃபோனின் பின்பக்கம் ஒட்டியிருந்த சிறிய பச்சை இலையைக் கவனித்தாள் அவள்.

தினேஷ் அவனது அலுவலக மேலதிகாரி, பகல், இரவு எந்நேரமானாலும் இருவரும் பேச ஆரம்பித்தால் சீக்கிரத்தில் பேச்சை நிறுத்துகிற வழக்கமே இல்லை என்பதால் அவள் சலிப்புடன் சூட்கேஸைத் திறந்து ஒரு சுரிதார் தேர்ந்தெடுத்துக்கொண்டு நிமிர்ந்தபோது அவன் தனது மடிக்கணினியைத் திறந்தபடி, ‘கொஞ்சம் பொறு தினேஷ். என் லேப்–டாப் இப்பதான் பூட் ஆகுது’ என்று சிரித்தான். அறையில் இன்னொருத்தி இருக்கிறாள் என்பதை அறவே மறந்துவிட்ட முகபாவம். மடிக்கணினியின் கறுப்பான முதுகுப்புறத்தில் இன்னும் ஏராளமான இலைகள் புழுக்கள் போல் நெளிநெளிந்துகொண்டிருந்ததை அவளால் தெளிவாய்ப் பார்க்க முடிந்தது.



அவள் முழுக்க உடுத்திக்கொண்டு நிலைக்கண்ணாடிக்கு நகர்ந்தபோது அதில் பிரதிபலித்திருந்த அவனது உருவம், அவளுக்கு நன்கு பழகிவிட்ட பச்சை இலைகளால் முழுவதுமாய்ப் போர்த்தப்பட்டிருந்தது.

**ஊ**ருக்குத் திரும்பின மறுதினம் இரவு. அவன் தனது வழக்கமான இலைத்த கோலத்தில் தியானித்திருக்க அவள் அவனது அம்மா – தன் மாமியாருக்குத் – தொலைபேசி, தன்னுடைய சிரமத்தைப் பகிர்ந்துகொள்ள எண்ணினாள். அவரிடமாவது தனக்கான ஆறுதல் கிடைக்கும் என்று அவள் எதிர்பார்த்திருக்க, பேச ஆரம்பித்த சில விநாடிகளுக்குள் அந்த நினைப்பில் ஒரு கூடை மண் விழுந்தது. அவள் சொல்வதையெல்லாம் ஏற்கெனவே அறிந்திருந்த

வர்போல் அவர் அலட்சியமாய்ப் பேசினார். 'அது ஒண்ணும் பெரிய விஷயமில்லைம்மா. சும்மா வரும், போகும். அவ்ளோ தான். அவனை ஒண்ணும் பண்ணிடாது. விஷத் தாவரமில்லை அது.'

அவள் அதிர்ச்சியும் திகைப்புமாய் பேச்சு மறந்து நின்றிருக்க, அவர் தொடர்ந்து சொன்னார், 'ரொம்ப நாளாவே அவனுக்கு இந்தப் பிரச்சினை உண்டும்மா. முன்னாடியெல்லாம் சின்னச் சின்ன இலையா கழுத்திலயும் காதிலயும் கண்ணிலயும் முளைக்கும். இப்போ அவனை முழுக்க மூடிடுதுன்னா சொல்றே?'

'ஆ..ஆமாம் அத்தே.' அவள் சுதாரித்துக்கொண்டு சொல்ல, அவர் பெரிதாய் உச்சுக் கொட்டினார். 'என்னம்மா இது? கல்யாணமானா இதெல்லாம் சரியாப் போயிடும்ன்னு எல்லாரும் சொன்னாங்களே'– இதற்கு என்ன பதில் சொல்வது?

அவர் ஃபோனை வைக்குமுன், 'இதைப் பத்தி ஒண்ணும் பெரிசா கவலைப்படாதேம்மா. நீ அவனை நல்லா கவனிச்சுக்கோ. அதுதான் முக்கியம். இதெல்லாம் தானா சரியாயிடும். உடனடியா இல்லைன்னாலும், கொஞ்ச நாள்ல மெல்லமெல்ல அவன் அதிலிருந்து வெளிய வந்துடுவான். எல்லாம் உன் கையிலதான் இருக்கு.' அவள்மேல் குற்றம் சாட்டுவதுபோல் அவர் பேசினது அவளுக்குப் பிடிக்கவில்லை. எரிச்சலோடு ரிசீவரை லொட்டென்று அறைந்து சாத்தினாள். அந்த சத்தத்திற்கும் நிமிராமல் மோனத்தவம் கொண்டிருந்தது பச்சைக் கொடி அல்லது புதர்.

**அன்று அவன் அலுவலகத்திலிருந்து சீக்கிரமே** திரும்பியிருந்தான். அமெரிக்காவிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வரும் என்று அவளிடம் பேருக்குச் சொல்லிவிட்டு டெலிஃபோனையும் தூக்கிக்கொண்டு அவனது வழக்கமான அறைக்குப் போயிருந்தான். வெகுநேரத்துக்குப் பின்னும் அந்த அழைப்பு வந்ததாகத் தெரியவில்லை.



ராத்திரிக்கு எலுமிச்சை மற்றும் தேங்காய்ச் சேவை செய்வதாய் முடிவெடுத்திருந்தவள், ஏனோ மனம் அதில் ஈடுபடாமல் சேவை நாழியின் முன்பே வெகுநேரம் யோசனையோடு அமர்ந்திருந்தாள். அதன் கரிய, சிறு துளைகளில் அவளது நினைவுகள் புகுந்து, வெளியேறி அதேவேகத்தில் மறு துளையில் நுழைந்து சிக்கலாகிக்கொண்டிருக்க ஏதும் முடிவு செய்ய முடியாதபடி நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

எட்டு மணியளவில் அவள் எழுந்து அவனது அறைக்குள் நுழைந்தாள். தயக்கமில்லாத நடையில் தீர்மானமான வேகம்.

'நான் வேலைக்குப் போகலாம்ன்னு யோசிக்கிறேன்.' அவளது குரலைக் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தான் அவன். அந்த வேகத்தில் அவனது கழுத்துப் பகுதியில் முளைத்திருந்த சில இலைகள் திணறிக் கீழே சரிய அவன் தனது சுழல் நாற்காலியில் ஒரு முறை நாடகத்தனமாய்ச் சுற்றி மீண்டும் பழைய இடத்துக்கு வந்தபோது இன்னும் பல இலைகள் உதிர்ந்து விழுந்தன.

'என்னது?' அவன் புரியாததுபோல் விசாரித்தான்.

'நான் வேலைக்குப் போகணும்.' பொறுமையான குரலில் அவள் வலியுறுத்திச் சொன்னதும் வேடிக்கையான சிரிப்பொன்று அவனிடமிருந்து உடனடியாய்

வெளிப்பட்டது. அதை மறைத்துக் கொண்டு 'எதுக்கு?' என்றான் குழப்ப முகபாவத்தில்.

அவள் ஒருமுறை மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டாள். ஒரு நாளைக்கு சமையல் மற்றும் இதர வேலைகளைச் செய்ததுபோக மீதமிருக்கும் நேரத்தைத் தன்னால் கொல்ல முடியவில்லை என்றும், படித்த படிப்பு வீணாகிப்போவது கவலையாய் இருக்கிறது என்றும் சொன்னாள். 'நீங்க வீட்ல இருக்கும்போதும் சரி, இல்லாத போதும் சரி, என்னைக் கவனிக்கறதே இல்லை' என்று பின்னர் யோசித்தாள். அதே நேரத்தில் தழையாடைபோல் அவனைப் போர்த்தியிருந்த இலைகளை அர்த்தத்துடன் பார்த்தபோது அதில் தவறில்லை என்றும் தோன்றியது. அவனது கண்களைச் சுற்றிலும் பொத்திப் பாதுகாத்திருந்த-இலைகள் குதிரைச் சேணம்போல் தோன்றின அவளுக்கு. ஆவேசமாய் அவன் மேல் பாய்ந்த அந்த இலைகள் அனைத்தையும் பிய்த்தெறிகிற ஆங்காரம் உள்ளே ஊழிக்கூத்தாய் எழுந்தாடியது.

அவன் இன்னும் யோசனையில் இருந்தான். அவளது குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லியாக வேண்டுமா என்று சிந்திக்கிற தற்காப்பு மனோபாவம் அவனிடத்தில் தென்பட்டது. கடைசியில் அது வேண்டாம் என்று முடிவு செய்தவன்போல். 'நீ வேலைக்குப் போறது அவசியம்ன்னு எனக்குத் தோணலை' என்றான்.

'எனக்குத் தோணுது' என்றாள் அவள் பட்டென்று. குரலில் அசாத்திய உறுதி.

'வெல்.' அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். 'அப்புறம் உன் இஷ்டம்' என்றவன், அப்போதுதான் நினைத்துக்கொண்டாற்போல், 'என்ன வேலைக்குப் போவே?' என்றான். 'வேலைக்குப் போய்க்கிட்டு, வீட்டு விவகாரங்களையும் கவனிக்க உன்னால முடியுமா?' என்று கேட்டவன் முகத்தைத் தீவிரமாக்கிக்கொண்டு, 'நான் உனக்கு அந்த ரெட்டைக் கஷ்டத்தைக் கொடுக்க விரும்பலை' என்றான்.

அவள் கொஞ்சம் யோசித்தாள். பின்னர் அவனது எல்லாக் கேள்விகளுக்கும் ஒருங்கே பதில் சொன்னாள். 'நம்ம கல்யாணத்துக்கு முன்னாலேயே

**அவனது கண்களைச் சுற்றிலும் பொத்திப் பாதுகாத்திருந்த இலைகள் குதிரைச் சேணம்போல் தோன்றின அவளுக்கு. ஆவேசமாய் அவன்மேல் பாய்ந்த அந்த இலைகள் அனைத்தையும் பிய்த்தெறிகிற ஆங்காரம் உள்ளே ஊழிக்கூத்தாய் எழுந்தாடியது.**

நான் வேலைக்குப் போய்க்கிட்டிருந்தேன். அது உங்களுக்குத் தெரியும்ன்னு நினைக்கிறேன், அதே மாதிரி ஒரு டீச்சர் வேலையைத்தான் தேடணும். நான் தேடிக்கிறேன். எனக்கு நம்பிக்கை இருக்கு.' கொஞ்சம் யோசித்தவள், 'நாள்ல பெரும்பகுதி கவனிப்பில்லாம சும்மா உட்கார்ந்திருக்கிறதுதான் ரெட்டை வேலை பண்றதைவிட கஷ்டமான விஷயம்' என்றாள்.


அவன் அவளை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு தலையைத் திருப்பிக்கொண்டான். 'ஓக்கே' என்றவன் தொடர்ந்து, 'நீ சொன்னமாதிரி ஒரு வேலையைத் தேடி முயற்சி பண்ணு. நானும் தெரிஞ்சவங்க கிட்ட சொல்றேன்.' அதற்குமேல் ஏதும் பேசுவதற்கில்லை என்பதுபோல் கணினியின் பக்கம் நகர்ந்துகொண்டான். அவள் தீர்க்கமான பார்வையுடன் அவனை வெறித்துவிட்டு அலட்சியமாய் வெளியேறி நடந்தாள்.

சமையலறையை நெருங்கும்போதுதான் அவன் மேலிருந்து விழுந்த இரண்டு இலைகள் தனது காலில் நன்கு ஒட்டிக்கொண்டிருப்பதைக் கவனித்தாள் அவள். தாளமுடியாத அருவருப்போடு அவசரமாய்க் குனிந்து அவற்றைப் பிடுங்கி எறிய முற்பட்டபோது அவை அவளது கையில் பிடிவாதமாய் ஒட்டிக்கொண்டன. மறு கையால் அந்த இலைகளைப் பிடுங்க முயன்றதில் இரண்டு இலைகளும் இன்னொரு கைக்குப் போய்விட்டன.

அவள் செய்வதறியாத திகைப்புடன் நிமிர்ந்தபோது அறை வாசலில் அவளது கணவன் நின்றிருந்தான். கண்களில் அளவற்றுப் பொங்கும் திகிலுடன் அவனது பார்வை அவள் கையில் அழுத்தமாய் ஊன்றியிருந்த பச்சை இலைகளின்மேல் விழுந்திருந்தது.

**ஓவியங்கள் : கோங்கிளி**

கட்டுரை




# மூலச்செல் சிகிச்சை

**சுந்தர வடிவேல்**

சில வருடங்களுக்கு முன் ஒரு நாள் பேருந்துல என் நண்பனோட போய்க்கிட்டிருந்தப்போ மருந்தைப் பற்றிய திருமூலரின் பாட்டொன்றைச் சொன்னான் :

மறுப்பது உடல்நோய் மருந்தெனச் சாலும்
மறுப்பது உளநோய் மருந்தெனச் சாலும்
மறுப்பது இனிநோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே.

எத்தனை ஆழமான எளிய விளக்கம்! பிணி, மூப்பு, சாக்காடு மனுசனோட வாழ்க்கையில தவிர்க்க முடியாதது அப்படிங்கற நம்ம நினைப்பு ஒரு நிமிடம் தகர்ந்து போகுது. நோய்ப்படாம வாழ்ந்துகிட்டே இருக்க முடியும்னு தோணுது இல்லையா? இதுக்குத்தான் எததனை வழிகளைக் கண்டுபிடிக்கிறாங்க! ஒரு பக்கம் வழியைக் கண்டுபிடிச்சா இன்னொரு பக்கம் அதோட எதிர்விளைவுகளைக் காட்டுறாங்க. இப்படியாக நோயற்ற வாழ்வுங்கற ஒரு விருப்பத்தை நோக்கி மருத்துவ ஆராய்ச்சிகள் நகர்ந்துகிட்டு இருக்கு. சமீப காலமா மருத்துவ உலகத்தைத் துருதுருவென்று வச்சிருக்க ஒரு மருத்துவ முறை மூலச் செல் சிகிச்சை (stem cell therapy.) Stem அப்படின்னா தண்டுன்னுதான் பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படும். ஆனா அதுக்கு orginate, arise அப்படிங்கற அர்த்தங்களும் உண்டு. நம்ம கதையில வர்ற செல்கள் உடம்பின் மற்ற உறுப்புகளின் செல்களுக்கு மூலமாக (origin) இருப்பதால் அதை மூலச் செல்கள் என்கிறேன். மத்தபடி இதுக்கும் "மூல வியாதி" (piles)க்கும் சம்பந்தமில்லைங்க! இந்தக் கட்டுரையில, மூலச் செல்னா என்ன, அது எங்கே இருக்கு, அதை வச்சு எப்படி மருத்துவம் செய்றாங்க, இப்போ எந்தெந்த வியாதியைக் குணப்படுத்த முடியும், இன்னும் கொஞ்ச நாளையில என்னென்ன வியாதிகளுக்குத் தீர்வுக்கான சாத்தியம் இருக்கு, உலக நாடுகளோட கருத்து என்ன அப்படிங்கறதைப் பத்தியெல்லாம் நான் தெரிஞ்சுக்கிட்டதை உங்ககிட்ட சொல்றேன். குறை நிறைகளை என்னோடு பகிர்ந்துக்கிட்டீங்கன்னா நல்லாயிருக்கும்.

**மூலச் செல் அப்படின்னா என்ன?**

விந்து ஒண்ணு அண்டத்துக்குள்ள போகுது. கருமுட்டை (zygote) உருவாகுது. அது ரெண்டாகி, நாலாகி, ஒரு மூணு நாலு தடவைகள் இரட்டிப்படையுது. அப்போ அந்த செல்களைச் சுத்தி ஒரு உறையும் இருக்கும். இந்த நிலைக்குப் பெயர் செல் குலைப் பை (blastocyst). அதாவது ஒரு கொத்து அல்லது குலையைப் போல் செல்கள் அந்தப் பைக்குள் இருக்கும். இந்த செல்களுக்கு எத்திறச் செல்கள் (totipotent) அப்படின்னு பேரு. ஏன்னா இந்தச் செல்களிலேருந்து உடம்புல இருக்க எந்த செல்லை வேண்டுமானாலும் தருவிக்கலாம். அப்படித்தானே நம்ம உடம்பு வருது? ஒன்னைப் புரிஞ்சுக்கணும். இந்த நிலையில இருக்க செல் குலைக்கு, எந்த உறுப்பும் இருககாது. இந்த செல்லுக்குப் பேருதான் கருமூலச் செல் (embryonic stem cell). இப்போ இந்தப் பைக்குள்ளேருந்த அந்தக் குலையில இருக்க செல்களை எடுத்து ஆய்வுக்கூடத்துல வளர்க்க முடியும். அதுலேருந்து உடம்புல இருக்க எந்த உறுப்புக்கான செல்லையும் வளர்க்க முடியும். ஆனா மனிதர்களிடமிருந்து இப்படி யாரும் எடுப்பதில்லை. செயற்கை முறைக் கருத்தரிப்பின்போது மீதிப்படும் கருமூலச் செல்களை சம்பந்தப்பட்ட பெற்றோர்களின் அனுமதியின் பேரிலேயே ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்துறாங்க.

கருவுக்குள்ள இந்த செல் குலைப் பை நிலையைத் தாண்டிட்டா செல்கள் வித விதமா மாறுபட ஆரம்பிச்சுடும். இந்த நிலையிலும் இந்த செல்களை வெளியில் எடுத்து நம் தேவைக்கேற்ப மாறுபட வைக்கலாம். ஆனா இப்போ அவை எத்திற மூலச் செல்லா இல்லாம, பெருந்திற (pluripotent) மூலச் செல்லா இருக்கும். ஏன்னா அதுலேருந்து பெருவாரியான உடம்பு செல்களை உருவாக்கலாம், ஆனால்

எல்லாத்தையும் உருவாக்க முடியாது. ஏன்னா அங்கே மாறுபாடடைதல் (differentiation) ஏற்கெனவே ஒரு சிறிய அளவில் ஆரம்பிச்சுடுது. அதாவது இந்த செல் கூட்டம் இன்னும் கொஞ்ச நாளையில இதயமா மாறப் போகுது, இந்தக் கூட்டம் மூளையா மாறப்போகுது, இந்த மாதிரி. இந்த மாறுபாடுதான் படிப்படியாக கூட்டங் கூட்டமாய்ச் செல்கள் சேர்ந்து எல்லா உடலுறுப்புக்களையும் சரியான முறையில் உருவாக்கக் காரணமா இருக்கு. இந்த நிலைக்கு மேலே கருவை யாரும் செல்களின் கூட்டம்னு நினைக்கிறதுமில்லை, அதைக் கொன்று செல்களை எடுப்பதுமில்லை.

குழந்தை பிறந்த பிறகு நீக்கப்படும் தொப்புள் கொடியில் (placenta) இன்னொரு விதமான மூலச் செல்கள் இருக்கு. இது எத்திற, பெருந்திறச் செல் மாதிரி இருக்காது, ஆனாலும் பல்திறச் செல்லா (multipotent) இருக்கும். இதைச் சேமித்து வைப்பதன் மூலம் பிற்காலத்தில் அந்தக் குழந்தைக்கு மூலச் செல் ஏதேனும் தேவைப்பட்டால் எடுத்துக்கொள்ளலாம். இதற்காகவே தொப்புள் கொடி சேமிப்பு வங்கிகளும் இருக்கின்றன. விரும்புபவர்கள் அதிலே சேமித்துக் கொள்ளலாம். சரி, குழந்தை பிறந்து வளர்ந்ததுக்கப்புறம் மூலச் செல்கள் இருக்காதா? இருக்கும். எங்கேன்னா, எலும்பு மச்சை (bone marrow) பற்கூழ் (tooth pulp) மூளை, ரத்த ஓட்டம், ரத்தக் குழாய்கள், எலும்புத் திசு, தோல், கல்லீரல் மாதிரி இடங்கள்ல. ஆனால் இந்த மாதிரியான முதில் மூலச் செல்களுக்கு (adult stem cells) மாறுபாடடையும் தன்மை, கருமூலச் செல்களின் மாறுபாடடையும் தன்மையைவிடக் குறைவே. ஆனாலும் இதையும் பல்திறச் செல்லாகப் பயன்படுத்திப் பலவிதமான செல்களையும் பெற முயற்சிக்கிறார்கள்.

இந்த செல்களின் மாறுபாட்டைப் பற்றி உங்களுக்கு ஒரு 'சுவை'யான உதாரணம் சொல்லவா? நெல் இருக்கு. அதை என்னவெல்லாம் செய்யலாம், விதைக்கு வச்சுக்கலாம், அவித்துத் தோல் நீக்கி அரிசியாக்கலாம். அரிசியான பின் விதைக்க முடியாது. சரி அரிசியை என்னவெல்லாம் செய்யலாம்? வேக வைத்தால் சோறு. வறுத்தால் பொரி, ஊறவைத்து அரைத்தால் மாவு. மாவிலிருந்து சோறாக்க முடியாது. சரி மாவை என்ன செய்யலாம், பணியாரம், இட்லி மாவிலே இன்னுங் கொஞ்சம் தண்ணீர்விட்டால்? தோசை அல்லது ஆப்பம். இந்த ஆப்ப மாவை எடுத்துச் சோறாக்க முடியுமா? இல்லை. இது மாதிரி மூலச் செல்களிலிருந்து கிளைத்துப் பிரிந்து பெருகுவதுதான் உடலுறுப்புகளை ஆக்கும் செல்கள். ஆதியிலிருக்கும் கருமுட்டை, அதிலிருந்து வரும் குலைச் செல்பை, அப்புறமாய் வரும் பெருந்திற மூலச் செல், பின்னர் கிடைக்கும் பல்திற மூலச் செல், படிப்படியாய் உருவாகும் உறுப்புகளின் செல்கள், அவை வளர்ந்து தோன்றும் உறுப்புகள். இதில் ஏதாவதொரு மூலச் செல்லை எடுத்தால் அதற்குக் கீழுள்ள உறுப்பைச் செய்து கொள்ளலாம் என்பதுதான் மூலச்செல் சிகிச்சையின் முக்கிய அம்சம்.

**மூலச் செல்லை வச்சு என்னவெல்லாம் செய்யலாம்?**


இதயம் துடிக்குது. இரத்தம் பாயுது. இதயம் துடிக்கக் காரணம் அதுல இருக்க செல்கள். அவை கூட்டமாச் சேர்ந்து துடிக்கிறப்போ கிடைக்கிற விசையால தான் இரத்தம் பாயுது. இந்தக் கூட்டத்துல பாதி பேர் வேலை செய்யலைன்னா என்னாகும்? இரத்தம் பாயுறது குறையும். இதை எப்படிச் சரி செய்றது? அந்த இடத்துல நல்லா வேலை செய்யுற புது செல் கூட்டத்தை வச்சுத் துடிக்கச் செஞ்சா சரியாகும். ஆனா என்ன பிரச்சினை? இதய செல்கள் இரட்டிப்படைந்து பெருகாது. போனாப் போனதுதான். அப்படின்னா அந்தச் சீர்கெட்ட இதயத்துக்கு விடிவே இல்லையா? இருக்குங்குது மூலச் செல் சிகிச்சை. எப்படின்னா, மேலே பார்த்தோமில்ல வகை வகையா மூலச் செல்கள், அதுல எதாச்சும் ஒன்னை எடுத்து, அதை ஒரு ஆய்வகத்துல, வேண்டிய சத்தெல்லாம் கொடுத்து வளர்த்தெடுத்து, இதயச் செல்லா மாறுபாடடையச் செய்யலாம். அந்தச் செல்கள் துடிக்கவும் செய்யவும். இதை அப்படியே எடுத்து ஒரு அறுவை சிகிச்சை மூலமா நோயாளியின் பாதிக்கப்பட்ட இதயத்துல வைக்கணும். இப்போ என்ன நடக்கும்? புதுசா வச்ச செல்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தம்மை இதயத்தோடு இணைச்சுக்கிட்டு வேலை செய்ய ஆரம்பிக்கும். இரத்தம் மறுபடியும் சீராய்ப் பாயும், போன உயிர் திரும்பும். இது இதயத்துக்கு மட்டுமில்ல, சில வாரங்களுக்கு முன்னாடி ஆஸ்திரிய நாட்டின் வியன்னாவில் வலிப்பு நோயை எப்படிக் குணப்படுத்துவதுன்னு ஒரு மாநாடு நடந்துச்சாம். அங்க ஒரு ஜெர்மன் விஞ்ஞானி நல்ல மூலச் செல்களை மூளையில் வைத்து வலிப்பைக் குணமாக்கலாம்னு சொல்லிருக்காராம்.



**இப்போதைய மூலச் செல் சிகிச்சை, கொடையாளிகளின் மூலச்செல்களினாலேயே சாத்தியமாகின்றன. இம்முறையில் புதிதாய் உடம்பில் வைக்கப்பட்ட செல்லானது திசு ஒவ்வாமையின் (allergy) காரணமாக நோயாளியின் உடம்பினால் மறுக்கப்பட (rejection) வாய்ப்பிருக்கிறது.**

இதைச் சுண்டெலியில செஞ்சிருக்கார். இன்னும் மனுசனுக்கு வர வருடங்கள் பலவாகலாம்.

ஏற்கெனவே எலும்பு மச்சையிலிருந்து செல்களை எடுத்து வேறு ஆளுக்கு வச்சு, இரத்தப் புற்றுநோய் போன்ற நோய்களை குணப்படுத்த முடியும்னு சொல்லிருக்காங்க. உதாரணமா வெள்ளையணுப் புற்றுநோயை (leukemia) மூலச் செல் சிகிச்சை மூலம் எப்படிக் குணப்படுத்துறாங்கன்னு பார்க்கலாம். இரத்த வெள்ளையணுக்கள் உடம்புக்கு நோய் எதிர்ப்பைத் தரும்னு உங்களுக்குத் தெரியும். இந்த வெள்ளையணுக்கள்




கட்டுப்பாடு இல்லாம வளர்ந்து பெருகினா நோயெதிர்ப்பு வேலையைச் செய்ய முடியாது. மேலும் மத்த செல்களோட வேலைகளையும் கெடுக்கும். இப்போ அந்த நோய் வந்தவரோட எலும்பு மச்சையிலிருந்து செல்களை நீக்குறாங்க. நீக்கிட்டு, பொருத்தமான ஒரு கொடையாளிடமிருந்து எலும்பு மச்சை செல்களை எடுத்து நோயாளிக்கு வைக்கிறாங்க. இப்படி வைக்கும் போது நோயற்ற புதிய வெள்ளையணுக்கள் மச்சையிலிருந்து உருவாகுது. இதன் மூலம் நோயாளி குணமடைகிறார்.

**இன்னும் என்னென்ன வியாதிகளைக் குணப்படுத்த முடியும்?**

இதுக்கு நிறைய வியாதிகளைச் சொல்லலாம். இச்சைச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியாத மூளை நோயாகிய பார்க்கின்சன்ஸ் (parkinsons's) கணையச் செல் பழுதினால் ஏற்படும் இன்சுலின் பற்றாக்குறையினால் வரும் சர்க்கரை வியாதி, பல்வறு காரணங்களால் உண்டாகும் கல்லீரல் நோய், இன்னும் பல வியாதிகளையும் மூலச் செல் சிகிச்சை முறையால் குணப்படுத்துவது சாத்தியமே. இந்த சிகிச்சை முறைகளிலெல்லாம் மேம்பாடு காணவேண்டுமென்றால் மூலச் செல் சிகிச்சை ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படணும்னு விஞ்ஞானிகள் சொல்றாங்க.

**மூலச்செல் ஆராய்ச்சி எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

**ஒவ்வாமை/மறுப்பு**

இப்போதைய மூலச் செல் சிகிச்சை, கொடையாளிகளின் மூலச்செல்களினாலேயே சாத்தியமாகின்றன. இம்முறையில் புதிதாய் உடம்பில் வைக்கப்பட்ட செல்லானது திசு ஒவ்வாமையின் (allergy) காரணமாக நோயாளியின் உடம்பினால் மறுக்கப்பட (rejection) வாய்ப்பிருக்கிறது. எதிர்காலத்தில் நோயாளியின் உடம்பிலிருந்து பெறப்பட்ட மூலச்செல்களிலிருந்தே தேவையான செல்களைப் பெறுவதன் மூலம் இவ்வித மறுப்புகள் நிவர்த்தி செய்யப்படும். இம்முறையில் நோயுற்றவரின் உடலிலிருந்து மூலச் செல் பிரித்தெடுக்கப்பட்டு, அது சோதனைக்கூடத்தில் வேண்டிய செல்லாக வளர்ச்சி மற்றும் மாறுபடுத்தப்படும். இச்செல் நோயாளியின் திசுவைப் போன்றே இருப்பதால் இதில் மறுக்கப்படும் சாத்தியங்கள் குறைவு. சிகிச்சை நகலாக்கம் (therapeutic cloning) மூலமும் கரு மூலச் செல்களை உருவாக்கி அதனை நோயுற்றவருக்கு வழங்க முடியும். இந்த நகலாக்க முறை இனப்பெருக்க நகலாக்கமே (reproductive cloning) போன்றது தான். ஆனால் செயற்கைக் கருத்தரிப்பு முறையில் செல் குலைப் பை நிலையிலேயே செல்கள் பிரித்தெடுக்கப்பட்டு விடுகின்றன. இவ்வகைச் செல்களும் நோயாளியின் செல்லிலிருந்தே தருவிக்கப்படுவதால் மறுக்கப்படும் சாத்தியங்கள் மிகக் குறைவு. மூலச் செல் சிகிச்சையில் இன்னுமொரு முறை சாத்தியப்பட்டால் அதுவே சிறந்தது என்பேன். அது என்னவென்றால், உடம்புக்குள் இருக்கும் மூலச் செல்களைக் குறிப்பிட்ட மாதிரித் தூண்டுவது. தூண்டி நமக்கு வேண்டிய செல்களாக மாற்றமடையச் செய்வது. இது பிரித்தெடுத்தல், வளர்த்தல், மாறுபடுத்தல், நகலாக்கம் போன்ற எண்ணற்ற சிக்கல்களை இல்லாமல் செய்துவிடும். ஆனால் அவ்வளவு சுலபமில்லை. ஒருவேளை நம சித்தர்களின் காயகல்ப முறை இது மாதிரியானதுதானோ என்று ஆச்சரியமாயிருக்கிறது!

உள்ளே வைக்கப்பட்ட செல்கள் எவ்வளவு காலத்திற்கு வேலையைச் செவ்வனே செய்யும்? முதிர்ந்தவரின் மூலச் செல்லிலிருந்து தருவிக்கப்பட்ட மூலச் செல் விரைவிலேயே முதிர்ந்துவிடுமா?

உள்ளே வைக்கப்படும் செல்கள் புற்றுநோய்ச் செல்களாக மாறிவிடும் அபாயம் இருக்கிறதா? கருமூலச் செல்கள் இரட்டிப்படையும் தன்மை கொண்டவை என்பதாலும், கருவிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு ஆய்வகத்தில் வளர்க்கப்பட்டுப் பின்னர் உடலுக்குள் செலுத்துவதால் மரபணுவில் அறியப்படாத சில மாற்றங்கள் ஏற்படுவதற்குச் சாத்தியங்கள் உள்ளன. இவற்றின் மூலம் மூலச் செல்கள் கட்டுப்படாமல் வளர்ந்து புற்று நோயாகவும் மாறிவிடும் அபாயமிருக்கிறது.

இதுபோன்ற அசம்பாவிதங்களைத் தடுப்பதிலேயே மூலச் செல் சிகிச்சையின் வெற்றி அடங்கியிருக்கிறது.

**உலகத்தின் பார்வை**

எந்த அளவுக்கு மூலச் செல் சிகிச்சை ஆராய்ச்சிகள் பிரபலமடையுதோ அதே அளவுக்கு அதுக்கு மறுப்புக்களும் வலுக்குது. மேலே சொன்ன ஆராய்ச்சிச் சிக்கல்கள் ஒரு புறம் மக்களைப் பயமுறுத்துது. இதைக் கூடுமான வரை ஆராய்ச்சிகளின்

மூலம் கண்டறிந்து நிவர்த்திக்க லாம் என்று பார்த்தால் இன்னொரு புறம் மதவாதிகள், அரசாங்கங்கள் பல விதமான எதிர்ப்புக்களைக் காட்டுகிறார்கள். உதாரணமாகத் தற்போதைய அமெரிக்க அரசாங்கம், மதவாதிகளால் உந்தப்பட்டு, மூலச் செல் சிகிச்சைக்கு மறுப்புத் தெரிவித்ததோடு மட்டுமின்றி, அது சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்கான ஆதரவையும் வெகுவாகக் குறைத்துக் கொண்டுவிட்டது. மதவாதிகளின் முக்கியமான கேள்வி, ஒரு உயிரைக் கொன்று இன்னொரு உயிரைக் காப்பாற்றுவதா? விஞ்ஞானிகளின் மறுப்பு என்னவென்றால், நாங்கள் பயன்படுத்துவது மிகவும் ஆரம்பநிலையிலுள்ள செல்களோ அல்லது முதிர் மூலச் செல்களோதான், இனப்பெருக்க நகலாக்கம் எங்களது நோக்கமில்லை, இத்தகைய ஆராய்ச்சிகளை இப்போது அமெரிக்கா மேற்கொள்ளவில்லையென்றால் பிற்காலத்தில் வேறு நாடுகளிலிருந்து இந்தத் தொழில்நுட்பத்தை எதிர்பார்க்க வேண்டியிருக்கும். சமீபத்தில் அல்சைமர் வியாதியால் இறந்து போன முன்னாள் அதிபர் ரீகனின் இறுதிக்கால வாழ்க்கையைக்கூட இம்முறை இருந்திருந்தால் திருத்தியமைத்திருக்கலாம் என்றவாறு பொதுமக்களின் ஆதரவையும் அரசின் செயல்பாடு மாற்றத்தையும் வேண்டுகிறார்கள்.

இதே நேரத்தில் சில வாரங்களுக்கு முன்னர் இங்கிலாந்தில் புதிய மூலச் செல் ஆராய்ச்சி மையம், மூலச்செல் சேகரிப்பு வங்கி போன்றவை துரிதமாய் ஆரம்பிக்கப்படுகின்றன. தென் கொரியா, சிங்கப்பூர் போன்ற ஆசிய நாடுகளிலும் மூலச் செல் சிகிச்சை ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதன் அர்த்தம் இனி வரும் ஆண்டுகளில் மனிதர்களையும் தமக்கு வேண்டிய மாதிரியான குணாதிசயங்களோடு நகலாக்கம் செய்துவிடுவார்கள் என்பதல்ல. ஏனென்றால் இதற்கான கட்டுப்பாடுகளை அரசாங்கங்கள் இறுக்கியபடியேதான் இருக்கின்றன. ஆனாலும் இதற்கு எதிர்காலம் தான் பதில் சொல்ல வேண்டும் என்ற குரல கேட்கிறது.

எப்படியோ, தரமான ஆராய்ச்சிகளின் மூலம் புரிந்து கொள்ளப்பட்டு, அதன் பலனாய் மனிதர்களுக்குக் கிடைக்க இருக்கும் மூலச் செல் சிகிச்சை முறை எண்ணற்ற நோயாளிகளையும் அவர்களைச் சார்ந்தோரையும் சற்றேனும் ஆறுதலடைய வைக்கும் என்பதில் நம்பிக்கையிருக்கிறது. ●


# உங்கள் மோட்கேஜில் நான் அக்கறை கொள்கிறேன்

எனவே ஏனைய விடயங்களை நீங்கள்
அதிக அக்கறையுடன் கவனியுங்கள்



The MORTAGE Centre
We bring Canada's leading lenders to you

**N. Murugadas (Das)**
Mortgage Specialist
416.543.6614
905.608.1218

# சிலிய ஜனாதிபதி அலந்தே



"... நான் மக்களின் ஆணையையும் தொழிலாளிகளின் ஆணையையும் பெற்றவன். அந்த ஆணையை நிறைவேற்றுவதற்காக நான் இறுதிவரைப் போராடுவேன். அதுவே எனது தீர்மானம். நான் சரணடைய மாட்டேன். ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேற மாட்டேன். நாட்டை விட்டுத் தப்பியோட மாட்டேன். நீங்கள் காட்டும் விசுவாசத்துக்கும் ஆதரவுக்கும் நான் நன்றி கூறுகிறேன். ஆனால் உங்களுள் எவரும் அநாவசியமாகப் பலியாகக் கூடாது. உங்களுள் அநேகர் இளவயதினர். உங்களுக்கு மனைவி மக்கள் இருக்கிறார்கள். அவர்களையும் சிலிய நாட்டு மக்களையும் காப்பதே உங்கள் கடன். இது இறுதிச் சமர் அல்ல. எதிர்காலத்தில் எத்தனையோ கட்டங்களில் உங்கள் சேவை நாட்டுக்குத் தேவைப்படும். இங்கிருக்கும் பெண்கள் உடனடியாக மாளிகையை விட்டு வெளியேற வேண்டும். இது வெறும் வேண்டுகோள் அல்ல. இது எனது கட்டளை. குறித்த அலுவல்களில் ஈடுபடாதவர்கள், ஆயுதம் ஏந்தாதவர்கள், ஏந்தத் தெரியாதவர்கள் அனைவரும் உடனடியாக மாளிகையை விட்டு வெளியேற வேண்டும். உங்களுள் சிலர் இங்கு நடந்ததை உலகத்துக்கு அறிவிக்க வேண்டும்..."

மணி வேலுப்பிள்ளை

1973 செப்டெம்பர் 11 காலை 9.30 மணியளவில் லா மொனிடா எனப்படும் சிலிய ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி சல்வடோர் அலந்தே (Salvador Allende 1908-1973) தனது பணியாளர்களையும் மருத்துவர்களையும் மெய்க் காவலர்களையும் பாதுகாப்புப் பிரிவினரையும் விளித்துக் கூறிய வார்த்தைகளே அவை. அப்பொழுது திருமதி அலந்தே மாளிகையில் இருக்கவில்லை (வீட்டில் இருந்தார்). நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த மகள் பீட்றிஸ், அவருடைய சகோதரி, பெறாமகள் (எழுத்தாளர்) இசபெல் உட்பட அங்கிருந்த மாதர்கள் ஒருமனதாக மாளிகையை விட்டு வெளியேற மறுக்கிறார்கள்.

"அப்பா, நாங்கள் போகமாட்டோம், அப்பா." என்கிறாள் மகள் பீட்றிஸ்.

"உங்கள் அம்மாவை நீங்கள் பத்திரமாகப் பார்க்க வேண்டிய அல்லவா?" என்கிறார் தகப்பன்.

"அப்பா, நாங்கள் வெளியே போனால், அவர்கள் எங்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்து உங்களுக்கு நெருக்குதல் கொடுப்பார்கள், அப்பா."

"அப்படி என்றால் அந்தத் துரோகிகள் உங்களைச் சுட்டுத்தள்ளட்டும். சுட்டுத்தள்ளி, கோழைகள் என்ற பட்டத்தையும் தட்டிக் கொள்ளட்டும்" என்று முழங்குகிறார் அலந்தே... பெண்கள் ஒவ்வொருவராக வெளியேறுகிறார்கள். அலந்தே வாயில்வரை சென்று வழியனுப்பி வைக்கிறார்.

நண்பகல் வான்படை மாளிகைமீது குண்டு வீசுகிறது. மாலையில் எதிரிகள் மாளிகைக்குள் புகுந்து தாக்குகிறார்கள். தன்னைப் புடைசூழ்ந்தவர்கள் பலியாவதை விரும்பாத அலந்தே அவர்களைச் சரணடையும்படி பணிக்கிறார். மாலை 4.30 மணியளவில் அலந்தேயின் உயிரற்ற உடல் கண்டுபிடிக்கப்படுகிறது. எதிரியின் கையில் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதற்காக அலந்தே தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொள்கிறார். துப்பாக்கிக் குழலை வாய்க்குள் வைத்துச் சுட்டிருக்கிறார். உச்சந்தலை பிளந்திருக்கிறது. துப்பாக்கி இரு கால்களுக்கும் இடையில் கிடக்கிறது. அது ஓர் இயந்திரக் கைத்துப்பாக்கி. அதில் எனது உற்ற நண்பர் சல்வடோர் அலந்தே அவர்களுக்கு எனது அன்பளிப்பு — பிடல் காஸ்ட்ரோ என்று பொன் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது!



"... உங்களுள் சிலர் இங்கு நடந்ததை உலகத்துக்கு அறிவிக்க வேண்டும்..." என்று அலந்தே பணித்தார் அல்லவா? அப்பொழுது உடனிருந்து குறிப்பெடுத்த அவருடைய மருத்துவர் ஒஸ்கார் சொட்டோ உலகத்துக்குத் தெரிவித்த விபரங்களே இவை (Dr Oscar Soto, The Last Day of Salvador Allende: A Chronicle of the Assault on La Moneda Palace, Santiago de Chile, *Madrid, El Paris/Aguilar,* 1998).

என்றோ ஒரு நாள் அலந்தே ஆட்சி ஏற்பார் என்பதை மோப்பம் பிடித்து வைத்திருந்த சி.ஐ.ஏ. அதனைத் தடுப்பதற்காக 1963ம் ஆண்டிலிருந்தே அரும்பாடுபட்டு வந்துள்ளது. அந்த நல்ல நோக்கத்துக்காக 1964ல் 30 இலட்சம் அமெரிக்க டாலரையும், 1970 முதல் 1973 வரை 80 இலட்சம் டாலரையும், 1972ல் மாத்திரம் 30 இலட்சம் டாலரையும் அது செலவிட்டுள்ளது. அலந்தேயை எதிர்ப்பதையே பிழைப்பாகக் கொண்ட படையணிகள், கட்சிகள், கம்பனிகள், ஊடகங்கள், கும்பல்கள்... அனைத்துக்கும் அந்தப் பணம் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1964ல் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிக்கு 26 இலட்சம் டாலர் வழங்கப்பட்டது. El Mercurio என்ற பத்திரிகைக்கு 1971ல் 7 இலட்சம் டாலரும், 1972ல் 9 இலட்சத்து 65,000 டாலரும் வழங்கப்பட்டது. 1971 முதல் 1973 வரை கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் மொத்தமாக 40 இலட்சம் டாலர் கொடுக்கப்பட்டது. 1972 செப்டெம்பரில் ஒரு முதலாளிமார் சங்கத்துக்கு 24,000 டாலரும் அக்டோபரில் வேறொரு சங்கத்துக்கு 1 இலட்சம் டாலரும் வழங்கப்பட்டது. 1970ல் அமெரிக்க பல்தேசியக் கம்பனியாகிய ஐ.ரி.ரி. முன்னாள் ஜனாதிபதி அலெசாந்திரியின் (Alessandri) தேர்தல் பிரசாரத்துக்கு 3 இலட்சம் டாலர் கொடுத்து உதவியது. ஏனைய கம்பனி ஒவ்வொன்றும் அந்தக் கட்சிக்கு அதேயளவு பணம் கொடுத்துதவியது.

"ஒரு நாட்டு மக்களின் பொறுப்பற்ற போக்கினால் அந்த நாடு பொதுவுடைமை நாடாக மாறுவதை நாங்கள் ஏன் பார்த்துக்கொண்டு நிற்கவேண்டும்?" என்று ஹென்றி கிசிஞ்சர் (Henry Kissinger) வேறு வினா எழுப்பினார். கிசிஞ்சர் அமெரிக்க தேசிய பாதுகாப்பு மதியுரைஞர், அரசியல் கலாநிதி, மேற்குலகின் தலையாய சாணக்கியர், இந்தோ சீனாவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் அமெரிக்க ஆட்சியாளர் புரிந்த போர்க் குற்றங்களுக்குத் தூபமிட்டவர், எனினும் சமாதானத்துக்கான நோபல் பரிசில் சரிபாதி பெற்றவர்! அத்தகைய கீர்த்திவாய்ந்த கிசிஞ்சர் சிலிய மக்களின் பொறுப்பற்ற போக்கினால் வெறுப்புற்றார் என்றால், அது நல்லதுக்கல்ல என்று அடித்துச் சொல்லலாம்!

எத்தனையோ முட்டுக்கட்டைகள் போடப்பட்டும்கூட 1970 செப்டெம்பர் 4ம் திகதி இடம்பெற்ற தேர்தலில் சிலிய சமூகவுடைமைக் கட்சியின் (The Socialist Party of Chile) நிறுவனரும் தலைவருமாகிய அலந்தேயின் கை ஓங்குவதை எவராலும் தடுக்க முடியவில்லை. ஆனால் அவருக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. சமூகவுடைமைவாதிகள், பொதுவுடைமை



வாதிகள், புரட்சிகர இடதுசாரி இயக்கம் உள்ளடங்கிய அலகுடைய கூட்டணிக்கு ஏறத்தாழ 37% வாக்குகளே கிடைத்தன. அவருக்கு 10,76,616 வாக்குகளும், தேசியக் கட்சியின் ஆதரவுடன் சுயேச்சையாகப் போட்டியிட்ட அலெசாந்திரி (Alessandri) என்பவருக்கு 10,36,278 வாக்குகளும், கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தோமிக (Tomic) என்பவருக்கு 8,24,849 வாக்குகளும் கிடைத்தன.

அப்பொழுது சிலியில் அமெரிக்க தூதராக இருந்த எட்வேட் கொறி (Edward Korry) வாசிங்டனுக்கு அனுப்பிய செதி: சிலிய மக்கள் மிகவும் நாகரிமானவர்கள் ஆகிவிட்டார்கள். அலந்தே என்ற அநாகரிகமான ஆளை ஏற்றுப் போற்றும் அளவுக்கு அவர்கள் நாகரிகமானவர்கள் ஆகிவிட்டார்கள்... என்று அவர் தெரிவித்திருக்கிறார் *(1970/09/08)*. அவர் அனுப்பிய அடுத்த சேதியில் கவிதை சொட்டுகிறது: சிலி மீது புதைகுழி நெடி கவிகிறது. இங்கு மக்களாட்சி அழுகி மணக்கிறது... *(1970/09/11)*. தூதர்மூக்கைப் பொத்திக்கொண்டு தீட்டி அனுப்பிய கவிதையைக் கிசிஞ்சர் எட்டி நின்றுதான் வாசித்திருப்பார் போலும்!

அப்புறம் வெள்ளை மாளிகையில் நான்கு நீதிமான்கள் சந்திக்கிறார்கள்; ஜனாதிபதி நிக்சன், கிசிஞ்சர், சட்ட மா அதிபர் ஜோன் மிற்செல் (John Mitchell), சி.ஐ.ஏ. பணிப்பாளர் றிச்சாட் ஹெல்ம்ஸ் (Richard Helms). அந்தச் சந்திப்பில் சி.ஐ.ஏ. பணிப்பாளர் தன் கைப்பட எழுதிய குறிப்பில் இருக்கும் வார்த்தைகள் இவை: பத்திலொரு வாய்ப்பாக இருந்தாலும் பரவாயில்லை... சிலியைக் காப்பாற்ற வேண்டும்... செலவுக்கேற்ற வரவு கிடைக்கும்... கையோடு 1 கோடி டாலர் தரப்படும்... தேவைப்பட்டால் மேலும் தரப்படும்... சிலியின் பொருளாதாரத்தைச் சீரழிக்க வேண்டும்... 48 மணித்தியாலங்களுக்குள் செயலில் குதிக்க வேண்டும்... *(1970/09/15)*.

அடுத்த நாள் சி.ஐ.ஏ. பணிப்பாளர் தென் அமெரிக்காவுக்குரிய தனது ஒற்றர் சிட்டர்களை வரவழைத்து வெள்ளை மாளிகையில் எடுக்கப்பட்ட முடிபுகளைத் தெரிவிக்கிறார் : அலந்தே ஆட்சி ஏற்பதை ஜனாதிபதி ஏற்கப்போவதில்லை. அலந்தேயைத் தடுக்கும்படி அல்லது அகற்றும்படி அவர் எங்களிடம் சொல்லியிருக்கிறார். அதற்காக 1 கோடி டாலரை அவர் ஒதுக்கியிருக்கிறார். தேவைப்பட்டால் மேலும் பணம் கிடைக்கும் என்று அவர் அறிவித்திருக்கிறார். நாங்கள் இந்தக் காரியத்தை எப்படி ஒப்பேற்றப் போகிறோம் என்பதைத் தனக்கு முன்கூட்டியே அறிவிக்கும்படி கிசிஞ்சர் என்னிடம் கேட்டிருக்கிறார். நான் அவரை நாளை மறு தினம் சந்தித்து எங்கள் திட்டத்தை முன் வைக்கப் போகிறேன்... *(1970/09/16)*.

சி.ஐ.ஏ. தலைமை அலுவலகத்திலிருந்து சிலிய தலைநகர் சந்தியாகோவில் இருக்கும் அதன் கிளை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட செதி: அலந்தே ஆட்சி ஏற்றால், அது சதி மூலம் கவிழ்க்கப்பட வேண்டும். இதில் நாங்கள் உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் ஈடுபட வேண்டும். ஆனவரை முயன்று இயன்றவரை நெருக்குதல் கொடுக்க வேண்டும். இரகசியமாகவும் பத்திரமாகவும் செயற்பட வேண்டும். அமெரிக்காதான் பின்னணியில் நின்று செயற்படுகிறது எனபது வெளியே தெரியக்கூடாது. உங்கள் பிரார வேலைகள், நாச வேலைகள், கயிறு திரிப்புகள், ஆள் — தொடர்புகள் அனைத்தையும் மீன்நோக்கி காரியத்தை ஒப்பேற்ற வேண்டும்... *(1970/10/16)*.

சி.ஐ.ஏ. தலைமை அலுவலகத்திலிருந்து அந்தக் கிளை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட இன்னொரு சேதி: துவக்குகளும் குண்டுகளும் வழமையான வழியில் வந்துசேரும். சரக்கு அக்டோபர் 19ம் திகதி காலை வாசிங்டனைவிட்டு வெளியேறும். 20ம் திகதி மாலை அல்லது 21ம் திகதி காலை சந்தியாகோவை வந்தடையும்... *(1970/10/11)*.

சிலியப் பொருளாதாரத்தைத் தமது பிடிக்குள் வைத்திருந்த அமெரிக்க பல்தேசியக் கம்பனிகளாகிய ITT, Anaconda, Kennecott போன்றவை அனைத்தும் அலந்தேக்கு எதிராக அணிதிரண்டன. அவர் ஆட்சி ஏற்பதை விரும்பாத தரப்புகளுக்கு அவை பணத்தை வாரி இறைத்தன. அமெரிக்க ஆட்சியாளர் தமக்குக் கைகொடுப்பர் என்ற துணிச்சல் அவற்றுக்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. அமெரிக்கா சிலிமீது படையெடுக்க வேண்டும் என்று TIME (என்ற அமெரிக்க) வார இதழ் அப்பட்டமாகக் கோரிக்கை விடுத்தது! அலந்தே ஆட்சி ஏற்பதைச் சட்டப்படி தடுக்க முடியாது என்று அவருடைய உள்ளூர் அரசியல் எதிரிகளுக்கு நன்கு தெரியும். அவர்களுக்கு ஒரேயொரு மாற்று வழிதான் தென்பட்டது. அதுதான் படையாட்சி!

அப்பொழுது சேனாதிபதியாக விளங்கிய றெனே சினைடர் (Rene Shneider) சிலிய மக்களாட்சி மரபை ஏற்றுப் போற்றியவர். படையாட்சியை வேண்டியோரின் செவிப்பறை தகரும் வண்ணம் அவர் ஓர் அறிக்கையை விடுத்தார்: ஆயுதப் படையினரால் மாற்றங்களைத் தடுக்க முடியாது. சிலிய மக்களுள் ஒரு முக்கியமான பிரிவினர் தாம் ஈட்டிய வெற்றியைப் பிறர் கவர்ந்துசெல்ல அனுமதிக்கப் போவதில்லை. தாம் ஈட்டிய வெற்றி

தமது வாழ்க்கையை மாற்றியமைக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அரசியலமைப்பையும் சட்டங்களையும் கட்டிக்காப்பதாக அலந்தே எமக்கு உறுதியளித்துள்ளார். அதை அவர் என்னிடம் நேரில் தெரிவித்துள்ளார். நான் அதனை ஏற்றுக்கொண்டுள்ளேன். இன்றைய சூழ்நிலையில் அலந்தே அமைக்கும் ஓர் அரசினாலேயே ஒரு வன்முறைக் கிளர்ச்சி மூள்வதைத் தடுக்க முடியும்...

சிலிய ஆட்சிப் பேரவை கூடி அலந்தேயை முறைப்படி ஜனாதிபதியாக உறுதிப்படுத்துவதற்குச் சற்று முன்னதாக சேனாதிபதி சினைடர் துப்பாக்கித் தாக்குதலுக்கு உள்ளானார். அவருடைய வாகனம் பல வாகனங்களால் முட்டிமோதப்பட்டது. அவரைக் கடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடையவே அந்த வாகனங்களிலிருந்து இருவர் இறங்கினார்கள். ஒருவன் ஒரு சம்மட்டியினால் சேனாதிபதியின் கார்க் கண்ணாடிகளைத் தகர்த்தான். மற்றவன் சேனாதிபதியை மூன்று தடவைகள் சுட்டான். சேனாதிபதியின் உயிர் வைத்தியசாலையில் பிரிந்தது (1970/10/26). தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட துவக்குகளுள் மூன்று சி.ஐ.ஏயினால் கொடுத்துதவப்பட்டவை!

சிலிய ஆட்சிப் பேரவை கூடியபொழுது கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி அலந்தேயை ஆதரித்து வாக்களித்தது — அலெசாந்திரி 35 வாக்குகளைப் பெற, அலந்தே 153 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ஆனார் (1970/10/24). உலக வரலாற்றில் மக்களாட்சி முறைப்படி ஒரு நாட்டின் ஆட்சித் தலைவராக வந்த முதலாவது மார்க்சியவாதி அலந்தே. அவருக்கே கேரள முதல்வர் நம்பூதிரிபாத் மார்க்சிய ஆட்சித் தலைவர். முன்னர் கேரளாவிலும் மேற்கு வங்காளத்திலும், இன்று கிழக்கு ஐரோப்பாவிலும் பொதுவுடைமைக் கட்சிகள் பொதுத் தேர்தல் மூலம் ஆட்சி ஏறுவதையும் இறங்குவதையும் காண்கிறோம்.

1970இல் அலந்தே ஆட்சி ஏற்றதும் அவ்வாறே. ஜனாதிபதி காஸ்ட்ரோ நேரில் சென்று அலந்தேயைச் சந்தித்து, "பொதுவுடைமைவாதிகள் மக்களாட்சி முறைப்படி ஆட்சிக்கு வரமுடியும்" என்பதை ஒப்புக்கொண்டார். பெரிய பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, ஒல்லாந்து தேசங்களில் சமூக உடைமைப் புரட்சி அமைதியான முறையில் இடம்பெறக்கூடும் என்று மார்க்ஸ் குறிப்பிட்டமையும், எங்கெல்ஸ் அந்தப் பட்டியலில் ஜேர்மனியைச் சேர்த்தமையும் கவனிக்கத்தக்கது!


அலந்தே பாமரர்களின் பக்கம் நின்று ஆதரவுடன் தனது சீர்திருத்தங்களை மேற்கொண்டார். வறிய மக்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. பெரிய ஆதனங்கள் துண்டாடப்பட்டு பாமர மக்களுக்கு வழங்கப்பட்டன. செப்பு, நிலக்கரி, உருக்குத் தொழில்துறைகள், வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. கூலிகள் உயர்த்தப்பட்டன. விலைகள் நிலைநிறுத்தப்பட்டன. சலுகை விலையில் பால் விநியோகிக்கப்பட்டது. சிறுவர்களுக்கு இலவசக் கல்வி, மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன. கியூபா, சீனா, வட கொரியா, அல்பேனியா, வியட்நாம் முதலிய நாடுகளுடன் உறவு பூணப்பட்டது... இவைதான் அலந்தே புரிந்த குற்றங்கள்! அமெரிக்க ஆட்சியாளரைப் பொறுத்தவரை அவை மாபெரும் குற்றங்கள்!

ஒரு நாட்டின் ஜனாதிபதியைச் சாகடிப்பதன் மூலம் அந்த நாட்டின் வரலாற்றை நிரந்தரமாகத் திசைதிருப்பிவிட முடியாது என்று அலந்தே குறிப்பிட்டிருக்கிறார். ஜனாதிபதி ஆவதற்கு 6 ஆண்டுகளுக்கு முன்னரே அவர் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார். ஜனாதிபதி பதவியால் தனக்கு உயிராபத்து நேரும் என்பதை அவர் உணர்ந்திருக்கிறார், உணர்த்தியிருக்கிறார். காஸ்ட்ரோகூட அதனை உணர்ந்திருக்கிறார். இயந்திரத் துப்பாக்கியை அன்பளிப்புச்செய்து அதனை உணர்த்தியிருக்கிறார். சோவியத் யூனியனும் அதனை உணர்ந்திருக்கிறது. அமெரிக்க ஆட்சியாளருடன் பிரச்சனைகளைப் பேசித் தீர்க்கும்படி அது அலந்தேயிடம் கேட்டுக்கொண்டது. அலந்தேயின் தேசியமயமாக்கல் கொள்கையினால் அமெரிக்க பல்தேசியக்



கம்பனிகள் மேற்கொண்டு கொள்ளையிலாபம் ஈட்ட முடியவில்லை. அதனால் அவையும் அமெரிக்க அரசும் சிலிமீது சீற்றம் கொண்டன. ஏதோ பேச்சுவார்த்தை நடந்தது உண்மை. சிலியும் அமெரிக்காவும் தமது பிரச்சனையைப் பேசித் தீர்க்க முடியவில்லை. ஆடும் ஓநாயும் தமது பிரச்சனையைப் பேசித்தீர்க்க முடியுமா?

அப்புறம் சிலிக்கு வெளிநாட்டு உதவி கிடைப்பதை அமெரிக்க அரசு தடுத்தது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை சிலிக்கு கடன் வழங்குவதை அது தடுத்து நிறுத்தியது. ஓர் ஆணி தன்னிலும் சிலிக்குள் செல்லக்கூடாது என்றும் சிலியை ஏழ்மையில் உழலச் செய்ய வேண்டும் என்றும் அமெரிக்க தூதர் நெஞ்சுருகிக் கேட்டுக்கொண்டார். இயந்திர உபகரணங்களும் உதிரிப் பாகங்களும் கிடைக்காதபடியால் சிலியின்




சுரங்கங்களும் தொழிற்சாலைகளும் கட்டுமானங்களும் முடங்கிப் போய்விட்டன. பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. விலைவாசி உயர்ந்தது. நாட்டில் நெருக்கடி ஏற்பட்டது. மேற்குடியினரின் உடைமைகளாய் விளங்கிய ஊடகங்கள் நெருக்கடியைப் பெரிதுபடுத்தி மேலும் மோசமாக்கின. நிலைமையைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளை ஆராய்வதற்காக அலந்தே தமது கூட்டணியைக் கூட்டினார். அவருடைய சமூகவுடைமைக் கட்சியும் சிலிய பொதுவுடைமைக் கட்சியும் புரட்சிகர இடதுசாரி இயக்கமும் பங்குபற்றிய அந்தக் கூட்டத்தில் முதலிரு கட்சிகளும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் ஆதரவை வென்றெடுக்கு முகமாக மிதவாதப் போக்கை ஆதரித்தன. மூன்றாவது கட்சி வன்முறைப் புரட்சிக்குத் தாவும் நோக்குடன் தீவிரவாதப் போக்கை வேண்டி நின்றது. ஈற்றில் அவ்விரு போக்குகளையும் ஒருசேரக் கடைப்பிடிக்கலாம் என்று அலந்தே முன்வைத்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. (1972 யூன்).

அரசு கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் ஆதரவை வென்றெடுக்கப்பாடுபட்ட அதேவேளை அதன் அடிமட்ட ஆதரவாளர்கள் காணிகளையும் தொழிற்சாலைகளையும் கைப்பற்றினார்கள். நாடு இரு துருவங்களாகப் பிளவுண்டது. சரக்கு லொறிச் சாரதிகளும் சில்லறை வியாபாரிகளும் தொழில் துறையாளர்களும் (Professionals) வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள். அது அரசுக்கு எதிரான முதலாளிகளின் வேலைநிறுத்தம் என்று வர்ணிக்கப்பட்டது. அரசு அதன் தொழிற் சங்கங்கள், அயல் குழுமங்கள் (Neighbourhood Groups) மூலம் உணவு விநியோகத்தை மேற்கொண்டது. எனினும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. அதனால் அரசு நடுக் குடியினரின் ஆதரவை இழக்க நேர்ந்தது.

எனினும் 1973ல் ஆட்சிப் பேரவைக்கான தேர்தலில் அலந்தேயின் கூட்டணிக்கு 44% வாக்குகள் கிடைத்தன. அரசுக்கு கீழ்க்குடியினரின் ஆதரவு பெருகியதையே இது உணர்த்துகிறது. தேர்தல் மூலம் அரசைக் கவிழ்க்க முடியாது என்பது அதன் எதிரிகளுக்கு உறுதியாகத் தெரிந்தது. ஆகவே அவர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தத்தை மேற்கொண்டார்கள். உணவுத் தட்டுப்பாட்டினாலும் விலையேற்றத்தினாலும் பாதிக்கப்பட்ட காரணத்தினாலோ என்னவோ ஆங்காங்கே தொழிலாளிகள்கூட அரசுக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களுள் செப்புச் சுரங்கத் தொழிலாளிகள் முக்கியமானவர்கள். வலதுசாரிகள் அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அரசைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள். ஆனால் அரசுக்கு விசுவாசமான சேனாதிபதி பிராற்ஸ் (Prats) அந்தச் சதியை முறியடித்தார் (1973.06.19).

எனினும் வலதுசாரிகள் தமது சதி முயற்சியைக் கைவிடவில்லை. அவர்களுடைய ஆதரவுடன யூலை 29ம் திகதி சரக்கு லொறிச் சாரதிகள் இரண்டாவது தடவையாக வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள். அவர்கள் லொறிகளையும் பேருந்துகளையும் புகையிரதங்களையும் எரிபொருள் நிலையங்களையும் எண்ணெய்க் குழாய்களையும் நாசம் செய்தார்கள். இதற்கிடையே ஜனாதிபதி படைத் தலைமையில் செய்த மாற்றங்களால் அதிருப்தியடைந்த சேனாதிபதி பிராற்ஸ் பதவிதுறந்தார். அலந்தே துணைச் சேனாதிபதி பினோசேயை (Pinochet) சேனாதிபதியாக நியமித்தார். மூன்று மாதங்களுக்கு முன்னர்படையினரில் ஒரு பிரிவினர் அரசைக் கவிழ்க்கச் செய்த சதியை முறியடிப்பதற்கு உதவிய தருணத்தில் அரசின் பலவீனத்தையும் படையின் பலத்தையும் நன்கு புரிந்து கொண்டவர் பினோசே. அலந்தேயும் பினோசே

யும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அதன் பெயர் வால்பறைசோ (Valpariso). பினோசே அரசுக்கு விசுவாசமாகச் செயற்படுவார் என்று அலந்தே திடமாக நம்பினார். ஆனால் வால்பறைசோவில் தான் சதி உருவானது. பினோசேதான் சதிபதி!

சதிக்கு உடந்தையாய் இருந்த தரப்புகளின் பட்டியல் மிகவும் நீளமானது: அமெரிக்கா, கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, பாசிசவாதிகள், நிலக்கிழார், தொழிலதிபர்கள், ஊடக உடைமையாளர்கள், வெறிச் சாதிகள், தொழில்துறையாளர்கள், சில்லறை வியாபாரிகள் ... இத்தனை தரப்புகளும் அலந்தேயின் ஆட்சியில் முற்றுமுழுதான சுதந்திரத்தை அனுபவித்தவர்கள். உணவுத் தட்டுப்பாட்டினாலும் விலையேற்றத்தினாலும் பெரிதும் தாக்குண்ட நடுத்தட்டினரும் அரசுக்கு எதிராக அணிதிரளவே செய்தார்கள். உண்மையில் இவர்களின் மொத்த எண்ணிக்கையைவிட அரசை ஆதரித்த அடித்தட்டினரின் எண்ணிக்கை மிகவும் அதிகம். அலந்தேயின் மக்களாட்சிக்கு ஆட்பலம் கிடைத்த அளவுக்குப் படைபலமோ பொருள் வளமோ கிடைக்கவில்லை. படைபலமும் பொருள் வளமும் ஒன்றுசேர்ந்தே ஆட்பலத்தை (மக்களாட்சியை) முறியடித்தன. பினோசேயின் தலைமையில் முப்படை அதிபதிகளும் காவல்துறைப் பணிப்பாளரும் ஒப்பமிட்டு விடுத்த அறிக்கையில் அலந்தே பதவிதுறக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அலந்தே தனது குடும்பத்துடன் நாட்டை விட்டுப் புறப்படுவதற்குத் தனி விமானம் ஒன்றைத் தயாராக வைத்திருப்பதாக அந்தச் சதிகாரர்கள் திரும்பத் திரும்ப அவருக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

சதிகாரர்கள் நால்வரும் வெவ்வேறு இடங்களில் இருந்துகொண்டு ஒரே சமயத்தில் தங்களிடையே வானொலி மூலம் தொடர்புகொண்டார்கள். அவர்களுடைய உரையாடல் ஒற்றுக் கேட்கப்பட்டது. சதிபதி பினோசேயுக்கும் துணைக் கடற்படை அதிபதி கர்வஜாலுக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல் ஸ்பானிஷ் மொழியிலிருந்து ஆங்கிலத்துக்குப் பெயர்க்கப்பட்டுள்ளது. அந்த உரையாடலின் தமிழாக்கம் பின்வருமாறு:

**பினோசே :** அதி உத்தமர் கவச வாகனத்தில் புறப்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன் (அதி உத்தமர் — பினோசேயின் வஞ்சப் புகழ்ச்சி!).

**கர்வஜால் :** இல்லை. அவன் கவச வாகனத்தில் தப்பவில்லை. நான் அவனுடன் தொலைபேசியில் கதைத்தேன். கவச வாகனங்கள் ஏற்கனவே புறப்பட்டுவிட்டன.

**பினோசே :** சரி, சரி. அப்படி என்றால் நாங்கள் அவனை வெளியே போக விடக்கூடாது. வெளியே போனால் கைதுசெய்ய வேண்டும்.

**கர்வஜால் :** நான் (ஜனாதிபதியின்) கடற்படைத் துணைவனுடனும் தொடர்பு கொண்டேன். அலந்தே லா மொனிடாவில் (ஜனாதிபதி மாளிகையில்) இருப்பதை அவன் உறுதிப்படுத்தியிருக்கிறான்.

**பினோசே :** அப்படி என்றால் நாங்கள் இவனை ஒரு கைபார்க்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்கு ஒருத்தன் தயாராக இருக்க வேண்டும். அந்த நாயைக் கொல்வதுதான் புத்தி (நாய் எசமானைக் கொல்ல வேண்டும் என்று சொல்லுகிறது!).

**கர்வஜால் :** சரி. கடற்படைத் துணைவனும் படைத்துறைக் காவலர்களும் (லா மொனிடாவை விட்டு) வெளியேறுவதற்காகத்தான் நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்.

**பினோசே :** நாங்கள் 11 மணிக்கு லா மொனிடாவைத் தாக்க வேண்டும். இந்தக் கிறுக்கன் கிறங்கமாட்டான் (This cock won't surrender).

**கர்வஜால் :** தாக்குதல் ஏற்கெனவே தொடங்கிவிட்டது. நம்மவர்கள் சுற்றிவர நிலைகொண்டு தீவிரமாகத் தாக்குகிறார்கள். சீக்கிரம் பிடித்துவிடுவார்கள்.

**பினோசே :** சரி. விமானம் உடனடியாகப்



புறப்படும்.

**கர்வஜால் :** அவன் விமானத்தில் ஏறிப் புறப்பட மறுத்துவிட்டான்.

**பினோசே :** மறுத்துவிட்டானா?

**கர்வஜால் :** பிரச்சனையைப் பேசித் தீர்க்கலாம் என்கிறான்.

**பினோசே :** நிபந்தனையின்றிச் சரணடைய வேண்டும். பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை.

**கர்வஜால் :** சரி. அதுதான் நல்லது. நிபந்தனையின்றிச் சரணடைய வேண்டும். அவனைக் கைதுசெய்ய வேண்டும். அவனுடைய உயிரைத் தவிர வேறு எதையும் திருப்பிக் கொடுக்கக் கூடாது. அப்படித்தானே?

**பினோசே :** உயிர் ... உடம்பு ... அவனை

உடனடியாக வேறொரு நாட்டிடம் ஒப்படைக்க வேண்டும்.

**கர்வஜால்:** சரி. புரிகிறது. அவனை நாடு கடத்துவது.... அப்படித்தானே?

**பினோசே:** நாடு கடத்துவது என்றுதான் சொல்லுவது. ஆனால் அவனைக் கொண்டு பறக்கும் விமானம் விழுந்து நொறுங்கப் போகிறது.

**கர்வஜால்:** சரி. அப்போ அவன்.... அவன்.... அவன்.... (சிரிப்பு). பினோசே:?



**கர்வஜால்:** கஸ்தாவோ (லெய்), ஒகஸ்தோ (பினோசே), நான் கதைப்பது உங்களுக்கு சரிவரக் கேட்கிறதா? பற்றிசியோ (கர்வஜால்) ஆகிய நான் இதனால் அறியத் தருவது என்னவென்றால், லா மொனிடாவுக்குள் புகுந்த எங்கள் காலாட்படைக் கல்லூரிச் சிப்பாய்கள் தனிப்பட்ட முறையில் என்னிடம் வந்து சேதி தெரிவித்திருக்கிறார்கள் ... அலந்தே தற்கொலை செய்துவிட்டான், அவன் செத்துப்போனான் ... எங்கள் செய்தித் தொடர்பில் குறுக்கீடுகள் ஏற்படலாம். நான் நேரில் போய்ப் பார்த்துவிட்டு ஆங்கிலத்தில் சேதி தெரிவிக்கிறேன். உங்களுக்கு விளங்குகிறதா?

**பினோசே:** விளங்கிக்கொண்டேன்.

**லெய்:** சரிவர விளங்கிக்கொண்டேன்.

**கர்வஜால்:** குடும்பத்தவர்களின் விமானப் பயணம்... அதற்கு அவசரமில்லை... குடும்பத்தை அவசரப்பட்டு வெளியேற்றத் தேவையில்லை என்று நினைக்கிறேன்...

**பினோசே:** இப்போதைக்கு அவனை (அலந்தேயின் உடலை) எங்கேயாவது ஒரு கொட்டிலில் கொண்டுபோய் வீசிவிடு. அப்புறமாக அவனையும் குடும்பத்தையும் விமானத்தில் ஏற்றி அனுப்ப வேண்டியதுதான்.... அவர்கள் அவனை வேறொரு நாட்டில்... கியூபாவில் கொண்டுபோய் அடக்கம் செய்யட்டும்... நாங்கள் அவனை அடக்கம் செய்வதில் பிரச்சனை வரும் இந்தக் கிழக்கன் சாகும்வரை எங்களுக்குப் பிரச்சனை தந்திருக்கிறான்...

மேற்படி சதியாடலின் இறுதியில் பினோசே எரிச்சலடைவதும் சினப்பதும் தெரிகிறது. அலந்தே சரணடைய மறுத்ததுதான் அதற்கான காரணம். மக்களின் ஆணையைப் பெற்ற ஜனாதிபதி சரணடைந்தால் (பதவி துறந்தால்) வரலாறு சதியை ஏற்கக்கூடிய, பினோசேயை மன்னிக்கக்கூடும். அலந்தே சரணடைய மறுத்தபடியால் (உயிர்துறந்தபடியால்) வரலாறு சதியை ஏற்காது போகக்கூடும், பினோசேமீது குற்றம் சுமத்தக்கூடும். அந்த வகையில் பினோசே எரிந்து விழுந்ததில் அர்த்தம் இருக்கிறது. அண்மையில் பிரித்தானியாவிலும் சிலியிலும் பினோசே கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டமை, வரலாறு அவனையோ சதியையோ மன்னிக்கவில்லை என்பதையே புலப்படுத்துகிறது. பினோசே சொன்னது போல அலந்தே சாகும்வரை பிரச்சனை கொடுத்திருக்கிறார். அதாவது பினோசே சாகும்வரை அலந்தே பிரச்சனை கொடுத்திருக்கிறார். நான் சாகப் போகிறேன் என்று சொல்லித்தான் பினோசே விடுதலை பெற்றிருக்கிறார்!

அலந்தே இறப்பதற்கு ஒருசில மாதங்கள் முன்னதாக கவிடன் போக்குவரத்து அமைச்சருடன் உரையாடியபொழுது குறிப்பிட்டிருக்கிறார்: "சிலிய மக்களாட்சியின் எதிரிகள், அவர்கள் அமெரிக்கரோ அல்லது வேறு தரப்பினரோ யாராயினும், என்னைக் கவிழ்த்தால் இந்த நாட்டின் விருத்தி தற்காலிகமாகவே தடைப்படும். சிலிய இளைஞர்கள் நாடு சீரழிக்கப்படுவதை ஒருபொழுதும் அனுமதிக்கப் போவதில்லை. நீங்கள் ஒரு ஜனாதிபதியைத் தீர்த்துக்கட்டலாம். ஆனால் அவர் ஒரு தனி ஆள். நீங்கள் சுதந்திர சிலியைத் தீர்த்துக்கட்ட வேண்டுமாயின், இளைஞர்கள் அனைவரையும் தீர்த்துக்கட்ட நேரும்" (1972). பினோசேயின் ஆட்சியில் 3,000 பேர் கொல்லப்பட்டார்கள்.

சிலிய தேசியக் கவிஞர் பப்லோ நெருடாவுக்கு (Pablo Neruda) இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்தபொழுது அலந்தே அவரைப் பாராட்டி எழுதிய கடிதத்தில் திரும்பத் திரும்ப மனிதநேயத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (1970). மனிதநேயம் மிகுந்த அமரர் அலந்தே மக்கள் அளித்த ஆணையை கடைசிவரை உதறித்தள்ளவில்லை. அதனை அவர் தனது உயிருடன் பிணைத்துக் கொண்டு போயிருக்கிறார். உலக அரசியல் வரலாற்றில் அலந்தே வகிக்கும் பங்கு எத்துணை முக்கியம் என்ற வினாவுக்கு விடையளிக்கத் தலைப்படுவோர் எவரும் அவர் மக்களின் ஆணையைப் பெற்றவர் என்ற உண்மையை உணர்த்தக் கடமைப்பட்டவர்கள்.

*பி.கு: இந்தக் கட்டுரையை எழுதி முடித்த பின்னர் எம்முடன் பணியாற்றும் ஓர் இஸ்பானிய மொழி பெயர்ப்பாளருடன் இதன் உள்ளடக்கம் குறித்து உரையாடியபொழுது, தமது மொழியில் அயந்தே என்பதே சரியான உச்சரிப்பு என்று அவர் தெரிவித்தார்.*

2002/11/16

# T. Jegatheesan

**Barrister, Solicitor & Notary Public (ont)**



**2620 Eglinton Ave. E**
**Suite 201**
**Scarborough**
**ON M1K 2S3**



**Tel. (416) 266-6154 / Fax: (416) 266-4677**

காலம் ● ஆகஸ்ட் 2004

# சோலைக்கிளி கவிதைகள்



## உச்சி விதைப்பு

காற்று ஓடிவந்து
என் தலைமுடிக்குள் விதைக்கிறது
வேளாண்மை
பஞ்சமா
இதன் வயல் நிலத்தை உழவு செய்து
வேறு எவனேனும் உண்கிறானா
கேட்டாலும் சொல்லுதில்லை
முடி விலக்கி
வரம்பு வைக்கிறது
மாமரத்தின் பூ உதிர்த்தி
உச்சியிலும் விதைக்கிறது

தண்ணீர் குடமெடுத்து
என் தலை ஊற்ற வருகிறதா
காற்றுக்கு உதவிசெய்யும் தென்னை

உன்னைத்தான்
நான் சிக்கலுக்குள் மாட்டிவிட்டேன்
மாடு பூட்டி
உழவுசெய்யத் தேவையில்லை
உன் தலைக்குள் கிடந்த பேன்கள்
என் தலைக்குள் கிடக்கிறது
இரவு வந்து
அவை உழவும்

ஒரு பண்பட்ட நிலம் தாண்டி எனது தலை
பார்த்தாயா?
குளிரெடுத்து மீசைவைத்து
முறுக்கிவிட்ட விவசாயி
பயிர் முளைத்த கையோடு
நடக்கின்றான் மண்டை ஓட்டில்

களை பிடுங்கி எறிகிறானா
சில மயிர்கள் முறிகிறதே
நீ வார்த்து
எண்ணெய்வைத்து
சுருட்டிவிட்ட கோபுரத்தில்
ஏறி நின்று நெல் தூற்றி
பதர் விட்டானோ கமக்காரன்
கண்முழுக்கத் தூசு சீ என்ன காற்று

## இரக்க நிலம்

நிலவில்
புற்களோடு பேசிய பிறகு
தூக்கமில்லை
நெடு நேரத்தின்பின் வந்த தூக்கத்திலும்
புற்கள் புற்களாகவே கனவும்

ஒரு நெடிய புல்
அதிகம் உயர்ந்த
நீள மலை
உலகத்தைத் தாங்கி நிற்கின்ற அதிசயமாய்
அது
அல்லது
அதன் கனவு நனவான
வெற்றியின் கோலம்

சராசரியாய் நின்ற பெரிய கரு மரங்கள்
சிறு துரும்பாகி
தூசாகி
புல்லிருந்த பங்கிலும் நாலாகி
அதன் அடியில் கிடந்தன
சரிந்துதான்
சின்ன முட்டையிட்ட
சிணுசிணுக்கும் இலையான்கள்
குந்துகின்ற வெட்கத்தில்
வேரில் குருத்து
மண்புழுக்கள் தலை சாய

காலம்தான்
உன்னதப் பறவை
தான் பறக்கின்ற வேகத்தில் தடுமாற்றும்
புல் நிமிர்ந்து போக
நேழி புழுவார் பிரமித்து
மிரண்டு இறங்க முயற்சித்தும்
முடியாமல் நிலம் விழுந்தார்
ஏந்திய கையோடு நின்றது இரக்க நிலம்
நீ போல
என்றும் நான் நசியாமல்
பொத்தும் உன்னுடைய கரம்கொண்டு

கனவு கலைந்தது வா
நம் வாசல் புற்களை
நிலவு நோண்டாது
என்றிருக்க முடியாது கதவுதிற

# திருமாவளவன் கவிதைகள்

மழை
நிரவித் ததும்பிறது என் மனக்குளம்
நாலு புறமிருந்தும்
வண்டல் வெடிலொடு பாய்கிறது புதுப்புனல்

மட்டம் உயர உயர
உயர்ந்து நிமிர்ந்து மொட்டவிழ்க்கிறது ஆம்பல்

புதுவரவின் பாச்சல்
துள்ளி விழுகிறது விரால் மீன்கள்

நீர் வற்றி வான பார்த்துக்கிடந்த நேற்றைய பொழுதில்
அப்புச் சேறு மேலெழும்ப
கால்கள் புதைத்து சென்ற எருமைகளின்
துர்நாற்றம்
பாசி நந்து புற்றாய் அழியவில்லை

நீலப் பூப்பின் ஓரம்
பாறி விழுந்து கிடக்கின்ற பெருமரக் கொம்பரிலே
காத்துருக்க காத்திருக்கு
நீர்க்காகம்
அடைக்காய் மீன்குஞ்சொன்றை தூக்கிச் செல்வதற்காய்

முன்னொரு காலை இப்படித்தான் இழந்தேன்
ஒரு நீர்காக்கையிடம்
அவளை


●●●

அமைதிப் பொழுது
கொடிய பகல் துப்பிச் சென்ற எச்சமாய்
மண்ணின் மீதும்
மலைகளின் மீதும்
இலையுதிர்த்த மரஞ்செடி கொடிகள் மீதும்
சாயம் படிகிறது

இனி வரும் இரவில் எதுவும் நிகழலாம்
ஆழ்ந்த உறக்கம்
அன்றில்
நடுநிசியில் தூக்கங்கலைந்து பதகளித்தோடல்
வெள்ளி முளைக்கும் வரையில் விழித்திருத்தல்
எல்லாமே சாத்தியம்

இவ்விரண்டுக்குமிடையில்
இஃதோர் இனியமாலை
கசந்த கவடுகளையும் கண்ணீர் கரிப்பையும் புறந்தள்ளி
சுகிப்போம்
இதனுள் அமைதியை
ஊற்றுங்கள் கிண்ணங்களில்
செம்மதுவை

□










# சிரித்திரனும் சுந்தரும்

செங்கை ஆழியான்

1963ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்ச் சஞ்சிகை உலகத்துக்குப் புதுமை சேர்ப்பதாகவும், ஈழத் தமிழகத்திற்குப் பெருமை கூட்டுவதாகவும் சிரித்திரன் சஞ்சிகையின் உதயம் நிகழ்ந்தபோது தமிழுலகம் ஒரு கணம் சிலிர்த்துக்கொண்டது. தமிழுலகிற்குச் சவாரித்தம்பர் கார்ட்டூன் மூலம் தினகரனூடாக ஏற்கெனவே நன்கு அறிமுகமான சி. சிவஞானசுந்தரம் என்ற சுந்தர் அதன் ஆசிரியராக விளங்கியமை குறை ஆயுளோடு மரித்துவிட்ட நல்ல பல சஞ்சிகைகளின் வரலாறு தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதென்று நம்பிக்கையைத் தந்தது. அந்த நம்பிக்கை வீண்போகவில்லை.



சிரித்திரன் தனது இலக்கிய யாத்திரையை எதுவிதமான இடையூறுமின்றி இந்திய அமைதிப்படை 1987இல் ஈழத்து மண்ணில் தன் பாதங்களை வலுவாக அழுத்தும் வரை ஆரோக்கியமாகவும் துணிவோடும் தொடர்ந்தது. இந்திய அமைதிப்படையின் அன்னிய அனுமதியுடன் இந்த மண்ணில் சஞ்சிகையை வெளியிட சுந்தரின் தன்மானம் இடம் தரவில்லை. இந்த 21ஆம் ஆண்டுகளில் மூன்று நான்கு இதழ்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளிவராது போயிற்று. சிரித்திரன் சுந்தர் என்ற ஆளுமை கொண்ட தனி மனிதனின் சஞ்சிகை. அவருடைய மறைவுடன் அச்சஞ்சிகை மறைந்து போனமை தவிர்க்க முடியாத இயல்பு நிலைதான் என்பதை




ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். சிரித்திரன் 32 பக்கங்களில் குறைந்தது 16 பக்கங்களில் சுந்தரின் கைவண்ணப் படைப்புகள் பல்வேறு வடிவங்களில் பல்வேறு புனைபெயர்களில் நிறைந்திருக்கும். சுந்தரின் கார்ட்டூன்களுக்காகவும் அவரது நகைச்சுவைப் பகுதிகளுக்காகவும் விற்பனையாகிய பத்திரிகை சிரித்திரன் என்ற உண்மையை ஈழத் தமிழகத்தில் அனைவரும் தெரிந்திருந்தனர். அதனால் ஆசிரியருக்கு சுகயீனம் ஏற்பட்ட காலங்களில் சஞ்சிகை இதழ் வெளிவரவில்லை அல்லது தாமதப்பட்டது. 1971களில் சிரித்திரன் கொழும்புப் பணிமனையை யாழ்ப்பாணத்திற்கு மாற்றிக் கொண்டபோது மூன்றிதழ்கள் வெளிவராது போயின.


1990களில் இந்திய இராணுவத்தினரின் வெளியேற்றத்துடன் சிரித்திரன் மீண்டும் வெளிவரத் தொடங்கி 1995இன் மாபெரும் இடப்பெயர்வு வரை வெளிவந்தது. எனினும் அக்காலகட்டத்தில் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளிவரவில்லை. காரணங்களில் மிக முக்கியமானது சுந்தரின் வலக்கரம் செயலற்றுப் போனமை. கார்ட்டூன் உலகிற்கு ஏற்பட்ட பெரும் இழப்பாக அமைந்தது. இடக்கரத்தால் அந்த மாமனிதர் தன் எண்ணக் கருக்களுக்கு ஓவிய வடிவம் தர முயன்றார் என்பது சிரித்திரனின் நிறைவு இதழ்களில் காணமுடிந்தது. எவ்வாறாயினும் சிரித்திரனின் முழு ஆயுட்காலமென 28 ஆண்டுகளையே கருதலாம். சிரித்திரனின் அஞ்ஞானவாச காலத்தையும் சேர்க்கில் சிரித்திரனின் அகவை 32ஆக விரியும். எனது கணிப்பீட்டின்படி எல்லாமாக 318 சிரித்திரன் இதழ்கள் வெளிவந்துள்ளன. அவை சஞ்கை உலகில் மட்டுமன்றி கார்ட்டூன் துறையிலும் பெரும் சாதனைகளைப் படைத்துள்ளன.


சிரித்திரன் என்ற சஞ்சிகை சுந்தர் என்ற தனிமனிதன் தனது துணைவி திருமதி கோகிலம் என்ற மாதரசியுடன் இணைந்து நடத்திய சஞ்சிகை. ஆசிரியர், ஓவியர், புரூவ்றீடர், விளம்பரம் சேகரிப்பவர், விநியோகத்தர் முதலான பல்வேறு பணிகளையும் பகுதிகளையும் சுந்தர் தனித்துச் செய்த ஓய்வில்லாத உழைப்பின் விளைவாக ஒவ்வொரு மாதமும் சிரித்திரன் வெளிவந்தது. அந்த மனிதரின் உழைப்பின் பயனாக ஒவ்வொரு மாதமும் எண்ணற்ற வாசகர்கள் சிரித்தனர்! சிந்தித்தனர்.

சிரித்திரன் ஆசிரியர் சுந்தரை நான் முதலாக 1966ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உதவி விரிவுரையாளராக இருந்த காலத்தில் சுதந்திரன் வார இதழின் பணிமனையில் அதன் துணை ஆசிரியராக விளங்கிய சங்கரால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டேன் சுந்தரின் படைப்புகளை ஏற்கனவே சுவைத்து வியந்தவன். சுந்தரை ஆவல் ததும்ப ஏறிட்டேன். தீட்சண்யமும் கலைத்துவமும் நிரம்பிய விழிகள் மூக்குக் கண்ணாடியுள் புதையுண்டு மிளிர்ந்தன. ஏறிட்ட நெற்றி அவரது ஞானவிலாசத்தைச் சுட்டியது. மெலிந்து உயர்ந்த அவரது தோற்றம் பார்ப்போரை அவர்மீது பற்றுக் கொள்ளவைக்கும் பாங்கானது. தான் வரித்த இலட்சியத்திற்காக வகித்த பதவிகளையும் தொழில் வாய்ப்புக்களையும் கைவிட்டு வெறும் திறன், முயற்சி, நம்பிக்கை என்பனவற்றினை மூலதனமாகக் கொண்டு தமிழ் மக்களின் உயர்விற்காகப் புதுமையான வழியில் பணிபுரிய வந்திருக்கும் அவரை முதல் சந்திப்பில் நான் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பது எனக்கு இன்றும் புலனாகின்றது. அவர் எண்ணியிருந்தால் இலங்கையின் மிகப்பெரிய கட்டடக் கலைஞனாக வந்து வாழ்க்கையின் சுகபோகங்களை எல்லாம் சுகித்து வெறும் சிவஞானசுந்தரமாக மரித்திருக்க முடியும். ஆனால் அவர் அவை அனைத்தையும் தட்டிவிட்டு இலட்சியத் தீயாக வேள்வி ஒன்றில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட மேதாவித்தனத்தின் விஸ்வரூபத்தினை நான் கொழும்பில் அவரை முதலில் சந்தித்தபோது உணர்ந்து கொள்ளவில்லை. 1971களில் சிரித்திரன் பணிமனை யாழ்ப்பாணத்திற்கு மாறியபோது, தன் குடும்பத்தாருடன் சுந்தர் நான் வசிக்கும் பிறவுண் வீதிக்கு இடம் பெயர்ந்து குடியேறிய போது அவருக்கும் எனக்குமிடையிலான இலக்கிய உறவு வலுவடைந்தது. அவருடைய ஆற்றலையும் வரையறுக்க முடியாத அறிவுத் திறனையும் புரிந்துகொண்டேன். அவருடைய மேதாவி விஸ்வரூபத்தினைக் கண்டு வியப்படைந்தேன்.

சிரித்திரன் என் படைப்புகளுக்கு நல்ல தளம் அமைத்துக் கொடுத்தது. சுந்தரை நானும் சிரித்திரன் என்னையும் நன்கு பயன்படுத்திக்கொண்








டோம். விவேகி சஞ்சிகையில் முதல் முதலாக வெளிவந்து பின்னர் நூலுருப் பெற்ற "ஆச்சி பயணம் போகிறாள்" என்ற எனது நகைச்சுவைத் தொடர் சிரித்திரனில் மீளவும் பிரசுரமாகியது. அதனைத் தொடர்ந்து "மயானபூமி" (பிரளயம் என்ற எனது நாவல்) "கொத்தியின் காதல்", "கங்கைக்கரையோரம்," "வாழி நீ வழுக்கியாறு" முதலான நாவல்களும் குறுநாவல்களும் சிரித்திரனில் வெளியாகின. வெவ்வேறு புனைபெயர்களில் சிறுகதைகளையும் சிரித்திரனில் எழுதினேன். எனது வாசகப் பரப்பை விரிவாக்கிய பெருமை சிரித்திரனுக்குமுரியது என்பது நினைவிலிருந்து அழியவில்லை. சுந்தரின் மனைவியார் கோகிலம் அவர்களால் தெரிவு செய்யப்படும் இளம் எழுத்தாளர்களின் சிறுகதையை பலகாலம் நான் திருத்திப் புதுப்பித்துக் கொடுத்துள்ளேன் என்ற இலக்கிய உண்மையை இங்கு சொல்லியே ஆக வேண்டும். யாழ்ப்பாணத்திற்குச் சிரித்திரன் வந்த தன் பின்னர் புனைகதைத் துறையில் சிரித்திரன் முக்கிய கவனமும் பங்களிப்பும் செய்தமைக்கு நானும் ராதேயனும் வெவ்வேறு கால கட்டங்களில் ஆலோசனை கூறித் துணை நின்றுள்ளோம் என்பதும் ஒழிக்கக்கூடிய சங்கதியன்று. என்னுடைய நான்கு நூல்கள் சிரித்திரன் பிரசுரம் என்ற முத்திரையைத் தாங்கி வெளிவந்துள்ளன. அலைகடல்தான் ஓயாதோ?, சித்திரை பௌர்ணமி, நடந்தாய் வாழி வழுக்கியாறு, முற்றத்து ஒற்றைப்பனை ஆகிய நூல்களே அவையாம்.

சிரித்திரனை வெறுமனே ஓர் இலக்கிய சஞ்சிகை என்று குறுகிய ஒரு வட்டத்திற்குள் அடக்கிவிட முடியாது. சுந்தரின் அழகு நகைச்சித்திரங்கள், ஆனந்தத் துணுக்குகள், இன்பப் பதில்கள், ஈடில்லாக் கதைகள், உளம் மகிழ்கவிகள் என்பவற்றினைக் கொண்ட தமிழ்க் கார்ட்டூன் சஞ்சிகை என வரையறுத்துக்கொண்டால் அதுவும் சிரித்திரன் பற்றிய மதிப்பீட்டிற்கு முழுமையாகாது. சிரித்திரன் ஓர் அரசியற் சஞ்சிகை, சிரித்திரன் ஒரு சமூகச் சஞ்சிகை, சிரித்திரன் ஒரு பொருளாதாரச் சஞ்சிகை, சிரித்திரன் ஓர் இலக்கியச் சஞ்சிகை, ஆம் சிரித்திரன் அரசியற் சமூகப் பொருளாதார இலக்கியச் சஞ்சிகை.

சுந்தரின் சிரித்திரன் சஞ்சிகையின் அரசியற் சமூகப் பொருளாதார இலக்கிய முக்கியத்துவத்தின் வரலாற்றினை நோக்குவோம்.

1. 1963இலிருந்து 1995 வரையிலான 32 வருட காலகட்டத்தில் 28 ஆண்டுகள் சிரித்திரன் சஞ்சிகை 318 இதழ்களாக வெளிவந்தது. தமிழில் வெளிவந்த ஒரேயொரு கார்ட்டூன் சஞ்சிகை தமிழ் கூறும் நல்லுலகில் இதுவொன்றே என்ற பெருமைக்குரியது.

2. ஆரம்பத்திலிருந்து 1970 ஆவணி மாதம் வரை சிரித்திரனின் பண்டாரநாயக்க வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. 1970 புரட்டாதியிலிருந்து டாம் வீதியிலுள்ள குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. கொழும்பில் அச்சிடப்பட்ட போது சிரித்திரனின் பணிமனை சென்பெனடிக்ஸ் வீதியில் இருந்துள்ளது. 1971 ஏப்ரல் மாதம் வரையில் குமரன் அச்சகமே சிரித்திரனை அச்சிட்டு வழங்கியுள்ளது. 1971 யூன் மாதம் சிரித்திரன் 57, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திற்கு மாறியதும் ஸ்ரீலங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. 1971 நவம்பர் மாதத்திலிருந்து சிரித்திரனுக்குச் சொந்தமான கவின் அச்சகத்தில் அச்சாகத் தொடங்கியது. 1974 ஆரம்பத்தில் பிறவுண் வீதியிலிருந்த பணிமனை நாவலர் வீதிக்கு மாறியது. பின்னர் காங்கேசன் துறையிலுள்ள சொந்த வளவிற்கும் கட்டிடத்திற்கும் மாறியது. இந்திய இராணுவத்தினால் சேதமாக்கப்பட்ட 1987வரை இவ்விடத்திலிருந்தே சிரித்திரன் வெளிவந்துள்ளது. 1990களில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் அவர்களுக்குரிய அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது. 1995 இடப்பெயர்வுடன் சிரித்திரன் சஞ்சிகை தன் பணியினை முடித்துக்கொண்டது. யாழ்ப்பாணத்திலிருந்து சுந்தர் குடும்பம் அவர்களின் பிறந்த வூரான கரவெட்டிக்கு மாறியது. அங்கு தன் சொந்த மண்ணில் 3.3.1996இல் சிரித்திரன் சுந்தர் காலமானார்.

3. சிரித்திரன் சஞ்சிகையில் அரைப்பங்கு விடயங்கள் சுந்தரின் கை வண்ணமாகும். கார்ட்டூன்கள், நகைச்சுவைப் பகுதிகள், நிலைக்கண்ணாடி (ஆசிரிய தலையங்கம்), மகுடி (கேள்வி–பதில்), சிரித்திரன் அகராதி, முன்சிரிப்பு (முதற்பக்க நகைச்சுவைத் துணுக்குகள்), பின்சிரிப்பு, கதைத்தேன் (குட்டிக் கதைகள்) முதலானவை அவர் படைப்புகளாகச் சிறப்புத் தந்தன. சுந்தர், மாயன், பாணன், அதிமதுரம், ஜோக்கிரட்டீஸ், சிவா, சிவாஜி, மகுடி, தேனுகா முதலான பல்வேறு புனைபெயர்களில் அவரது படைப்புகள் இடம்பெற்றன. அவரது புகழ்பெற்ற கார்ட்டூன்களின் பாத்திரங்களான சவாரித் தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான், மெயில்வாகனத்தார், மிஸிஸ் டாமோதரன் என்பவர்களோடு யாழ்ப்பாணத்தின் பல்வேறு மாந்தர்களும் கருத்தோவியங்களாகவும் சமூகத்தின்



வகைமாதிரிப் பிரதிநிதிகளாகவும் தோன்றிச் சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்தனர்.

4. கார்ட்டூன்களுக்கு அப்பால் சிரித்திரனின் முக்கியமான பகுதியாகவும் பலரைக் கவர்ந்த தாகவும் மகுடி என்ற கேள்வி பதில் அமைந்தது. வாசகர்களின் வினாக்களுக்கு சுந்தர் வழங்கிய நகைச்சுவைப் பதில்கள் சாதாரணமானவையல்ல என்பதை மகுடியை வாசித்தவர்கள் உணர்வர். எவரையும் பின்பற்றாத தனித்துவமான சிந்தனைச் சிதறல்கள் அவர் பதில்களில் தொக்கி நின்றன. மகுடியின் பதில்தரும் முறையைப் பின்பற்றிப் பலர் இன்று முயன்று வருகின்றார்கள்.


5. சிரித்திரன் குட்டிக்கதைகளுக்குத் தனித்துவமான பரிமாணம் ஒன்றினைத் தந்துள்ளது. ஆரம்பத்திலிருந்து "மாத்திரைக் கதைகள்" என்ற தலைப்பில் காசி ஆனந்தன் தொடர்ந்து குட்டிக் கதைகள் எழுதி வந்தார். அவரின் இந்திய இடப்பெயர்ச்சி அம்முயற்சிக்குத் தடையாக அவ்விடத்தை "கதைத்தேன்" என்ற தலைப்பில் தேனுகா புனைபெயரில் சுந்தர் நிறைவு செய்துவந்தார். கருத்தாழமிக்க செய்திகளை அவர் குட்டிக்கதைகளாக்கி மாதாமாதம் வழங்கி வந்துள்ளார்.

6. சிரித்திரன் சிறுகதை இலக்கியத்திற்கு அளித்திருக்கின்ற பங்களிப்பு தனித்து ஆராயப்பட வேண்டியது. 1971இன் பின்னர் ஒவ்வொரு சிரித்திரனில் ஈழத்தின் மணியான சிறுகதைகள் வெளிவந்துள்ளன. ஈழத்தின் பிரபலமான எழுத்தாளர்களிலிருந்து சிரித்திரன் மூலம் சிறுகதைத் துறைக்கு வந்த பலரும் சிரித்திரனில் சிறுகதைகள் எழுதியுள்ளனர். என். எஸ். எம். ராமையா, செங்கை ஆழியான், தெளிவத்தை ஜோசப், எஸ். அகத்தியர், கனக செந்தில்நாதன், நெல்லை க. பேரன், து. வைத்திலிங்கம், க. பாலசுந்தரம், சுதாராஜ், கே. ஆர். டேவிட், திக்குவல்லை கமால், அப்பச்சி மகாலிங்கம் முதலான ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைக்குப் பங்களிப்பு செய்தவர்களும், குப்பிளான் ஐ. சண்முகம், இலதல நடராஜன், நெய்தல் நம்பி, மல்லிகை சி. குமார், எஸ். பி. கிருஷ்ணன், யோகேஸ் ஐயாத்துரை, வே. கோபால கிருஷ்ணன், வட கோவை வரதராஜன், எஸ். எச். நஃமத் என்போர் உட்பட நி. மகேஸ்வரன், எஸ். பிரியா, கடலூர் சாந்தன், சரோஜினி தேவி, தெய்வீகன், கீதபொன் கலன், செந்தாரகை, பதுளை ராகுலன், மு. இரத்தினம், ஆ.த. சித்திரவேல், பைரவி, கதிர், ந. சசிகரன், எஸ். கே. விக்னேஸ்வரன், மருதூர் அலிகான், இளவாலை விஜயேந்திரன், நாகபத்மநாதன், பால அசோகன், நா. மகேசன், ரி.எஸ். சிவகுமார், ரூபதர்சினி, எஸ். பி. ஞானப்பிரகாசம், சிவசக்தி, சந்திர போஸ், சசி கிருஷ்ணமூர்த்தி, கே பெனடிக்ற் முதலானோர் குறிப்பிடத்தக்க தரத்தில் சிரித்திரனில் சிறுகதைகள் எழுதியுள்ளனர். ஈழத்தின் பெருமையை உலகறிய வைக்கும் தரமான சிறுகதைத் தொகுதியொன்றினை இவற்றிலிருந்து தேர்ந்தெடுத்துவிட முடியும். மிகச் சிறந்த சிறுகதை கிடைத்தபோது சுந்தர் அதற்கு கதை அமுதம் என்றோ மகுடக் கதை என்றோ முத்திரை பதித்து வெளியிட்டார்.

7. சிரித்திரனில் நாவல், குறுநாவல் ஆகிய துறைகளுக்குப் பெருமை சேர்க்கும் புனைகதைகள் பல வெளிவந்துள்ளன. அ.ந. கந்தசாமியின் நடுநிசிப் பிசாசு, சி.கே. சிவாவின் நடுநிசி, செங்கை ஆழியானின் ஆச்சி பயணம் போகிறாள், மயானபூமி, கொத்தியின் காதல், கங்கைக் கரையோரம், நடந்தாய் வாழி வழுக்கியாறு, கே.ஆர். டேவிட்டின் பாலைவனப் பயணிகள் முதலானவை சிரித்திரனில் வெளிவந்தவை. ஈழத்தின் முதல் இரண்டு நகைச்சுவை நாவல்களான ஆச்சி பயணம் போகிறாள், கொத்தியின் காதல் என்பன சிரித்திரனில் வெளியாகின.


8. சிரித்திரனின் சிறப்பான அம்சமாகக் கருதப்பட்டது சிரிகதைகளாம். சற்குணம் (செங்கை ஆழியான்), திக்கவயல் சி. தர்மகுலசிங்கம், எம்.எஸ். பசுபதி, கா. யோகராசா, க.எஸ். பாலச்சந்திரன், பொ. சண்முகநாதன், க. பரராஜசிங்கம் (துருவன்) முதலானோர் சிரித்திரனில் சிரிகதைகளை எழுதியுள்ளனர். இவர்களில் திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் குறிப்பிடத்தக்கவர். சிரித்திரனோடு தன்னைப் பூரணமாக இணைத்துக்கொண்டவர்.

9. சிரித்திரனில் காலத்திற்குக் காலம் புதுமையான அம்சங்களைச் சுந்தர் அறிமுகப்படுத்தி வந்தார். அப்பகுதிகளுக்கு அவர் இடுகின்ற தலைப்புகள் தனித்துவமானவை. சிரித்திரன் அகராதி, தத்துவ முத்துக்கள், செய்திச்சோடி, பள்ளிப்பகிடி, நகைத்தேன், கதம்பவனம், இலக்கியச் சிமிழ், தேன்பொழுது என அத் தலைப்புக்கள் விரியும்.








இலக்கியச் சிமிழ் என்ற இலக்கியப் பகுதியை அகளங்கன் தொடர்ந்து எழுதி வந்தார். பண்டைத் தமிழ் இலக்கியத்தின் சுவையான பகுதியை அறிமுகப்படுத்தி வைத்தார். சிரித்திரனின் பணியில் தேன் பொழுது குறிப்பிடத் தக்கதென்பேன். ஈழத்தில் இலைமறை காயாக விளங்கிய கலைஞர்களை மாதாமாதம் பேட்டி கண்டு அவர்களின் புகைப்படத்துடன் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். மூத்த கலைஞர்களும் இளங்கலைஞர்களும் இப்பகுதியில் அறிமுகமாயினர். இந்தப் பகுதியைப் பொன். பூலோகசிங்கமும் கனக சுகுமாரும் இணைந்து எழுதி வந்தனர்.

*10.* சிரித்திரனின் ஆண்டு மலர்கள் விசேடமானவை. கருத்தோவியப் பொக்கிசமாக அவை திகழ்ந்தன. *1971*இல் வெளிவந்த எட்டாவது ஆண்டு மலர் மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளது. கனக செந்தில்நாதன், து. வைத்தியலிங்கம், தே. பெனடிக்ற், க. பாலசுந்தரம் ஆகியோரின் மணியான சிறுகதைகள் நான்கு அதில் இடம் பிடித்திருந்தன. க. பரராஜசிங்கம், பொ. சண்முகநாதன், திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் ஆகியோரின் சிறுகதைகள் அம்மலரில் இடம் பிடித்திருந்தன. செங்கை ஆழியானின் நடந்தாய் வாழி வழுக்கியாறு என்ற நடைச்சித்திரம் அந்த ஆண்டு மலரில்தான் வெளிவந்தது. ஆழியான், இம்முறை ஆண்டு மலருக்குப் புதுமையாக நீர் எழுதித் தர வேண்டும் என்ற சுந்தரின் கட்டளையை நான் நிறைவேற்றி வைத்தேன். காணாமற்போன சவாரி மாட்டினைத் தேடி, ஐந்து நாடகக் கலைஞர்களுடன் வழுக்கியாறு உற்பத்தியாகின்ற இடத்திலிருந்து கடலோடு கலக்கும் இடம்வரை நடந்தோம். கதையும் பிறந்தது. வழுக்கியாற்றின் வளமும் தெரிந்தது.

*11.* சிரித்திரனின் அட்டைப் படம் அதன் தனித்துவத்திற்கு எடுத்துக்காட்டு. மாதம் மாதம் ஒரு கருத்தோவியம் அட்டைப் படத்தில் அலங்கரிக்கும். படிப்பவர் உள்ளத்தில் படிந்து சுருக்கென இதயத்தைத் தைப்பது போல அக்கார்ட்டூன் விளங்கும். சிலவேளைகளில் அட்டைப் படக் கார்ட்டூனின் இடத்தினை முக்கியமான சிலரின் படங்கள் இடம்பிடித்திருக்கின்றன. எகிப்திய நாசர் இறந்தபோது அவர் படமும், குத்துவிளக்கு திரைப்படம் ஈழத்தில் தயாரிக்கப்பட்டு வெளிவந்தபோது அதில் நடித்த இரத்தினத்தின் படமும், பேராசிரியர் கைலாசபதியின் மறைவின்போது அவர் படமும் அட்டையை அலங்கரித்துக்கொண்டன. பெரும்பாலும் கார்ட்டூன்களே அட்டையைப் பிடித்திருந்தன. சிரித்திரனின் தனிமுத்திரையாக அது இருந்தது.

இவை சிரித்திரனின் பொது அம்சங்கள், ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி சிரித்திரன் கார்ட்டூன் சஞ்சிகை மட்டுமன்றி அரசியல், சமூக இலக்கிய சஞ்சிகையாக விளங்கியது. "சிரித்திரனில் வெளிவரும் கேலிச்சித்திரங்கள் மிக அற்புதமானவையாக இருக்கின்றன" எனக் கூறும் அந்த வார்த்தைப் பிரயோகத்தினை சுந்தர் எப்போதும் விரும்பவில்லை. கார்ட்டூனைக் கேலிச் சித்திரம் என்பதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றினை ஆங்கிலத்தில் குறிப்பிடுவது போல கார்ட்டூன் என்றோ தமிழில் கூறுவதாயின் கருத்துச் சித்திரங்கள், கருத்தூண் என்றே குறிப்பிட்டார். "கார்ட்டூன் என்பது சிறுமையை நளின நையாண்டியுடன் பூதாகரமாகப் படம் வரைந்து காட்டும் வித்தகம்" என்பது சுந்தரின் வாதம். "கார்ட்டூன் என்னும் கிண்டல் கலை சமுதாயத்திலுள்ள களைகளைக் கிண்டி எடுப்பதற்கேயல்லாது பயிரைக் கிண்டி எடுப்பதற்கல்ல" என அடிக்கடி கூறுவார். அனைத்தும் சமூக மேம்பாட்டிற்காகவென்பது அவர் நம்பிக்கை.

சிரித்திரன் சுந்தர் கார்ட்டூனிஸ்டாக உருவாக்கப்பட்டவரல்லர். அக்கலை பிறப்பிலிருந்தே அவரிடம் உறங்கிக் கிடந்ததென்பேன். அதனை வெளிக்கொணர்ந்த நிகழ்ச்சிகள் சில அவரை நிகரில்லாத கார்ட்டூனிஸ்ட்டாகத் தமிழிற்குத் தந்துள்ளன. மொடல் ஸ்கூல் என்ற நெல்லியடி மகா வித்தியாயத்தில் அவர் தன் ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்னர் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மாணவராகத் திகழ்ந்தார். அவ்வேளை அவருக்குப் பத்து வயது. பத்திரிகைத் துறையில் எழுத்தாளர் கல்கியையும் மாலி என்ற அற்புதமான கார்ட்டூன் ஓவியரையும் சந்திக்க நேர்ந்தமையைத் தன் வாழ்வின் ஒரு திருப்பமாகச் சுந்தர் குறிப்பிடுவார். கூட்டமேடையில்







வைத்திருந்த கரும்பலகையில் அநாயசமாக மாலி வரைந்து தள்ளிய கருத்துச் சித்திரங்கள் அவர்மீதும் அக்கலை மீதும் அவரைப் பிணைத்துவிட்டன. பம்பாய்க்குக் கட்டிடக் கலைத் துறையில் கற்க அனுப்பப்பட்ட சுந்தர் அங்கு கார்ட்டூன்களைப் பம்பாய் ஆங்கிலப் பத்திரிகைகளில் வரைந்தமை தற்செயலான நிகழ்ச்சிகளல்ல. பம்பாயிலிருந்து அவர் கார்ட்டூன் ஓவியராகவே திரும்பி வந்தார். இந்த நாட்டின் அரசியல் அயோக்கியத்தனங்கள், இனவாதங்கள், சமூகத்தில் வேரூன்றிக் கிடந்த அறியாமைகள், மூடநம்பிக்கைகள், தமிழ்ப் பற்றின்மை, அடக்குமுறைகள் என்பன அவருக்கென ஒரு கடமை சமூகத்தின்பால் இருப்பதை உணர்த்தின. ஆரம்பத்தில் பாணன் என்ற பெயரில் சுந்தர் அரசியல் கார்ட்டூன்களை வரைந்தார். அவை பெரிதும் வரவேற்கப்பட்டன. பின்னர் தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் சமூக கார்ட்டூன்களை வரைந்து தன் கருத்து நிலையைத் தெள்ளெனப் புரிய வைத்தார். அவை எவர்களை அடையவேண்டுமோ அவர்களைத் தங்குதடையின்றிச் சென்றடைந்தன. அவருடைய அரசியல் கார்ட்டூன்கள் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் நெஞ்சினைக் கூர்மையான ஊசிகளாகத் தாக்கியிருக்கும். 1983களில் யாழ்ப்பாணத்தில் இராணுவ அராஜகம் கட்டுக்கடங்காது மக்களைச் சுட்டுச் சொத்துக்களை அழித்து, யாழ்ப்பாணத்தில் நூலகத்தையும் தீயிட்டபோது அவற்றினைக் கண்டு அவரால் பொறுக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் நாட்டி வைக்கப்பட்டிருந்த பெரியார்கள் சிலைகள்கூட இந்த இனவெறியர்களின் தாக்குதலுக்குத் தப்பவில்லை. மகாத்மா காந்தியின் சிலையும் தாக்குதலிற்குள்ளானது. உடைக்கப்பட்ட காந்தியின் சிலையின் காலிற்கும் கரத்திற்கும் முதலுதவிக் கட்டிட்டு தருமம் ஒளிந்து நிற்பது போல் மொழியில்லாத கார்ட்டூன் வரைந்தார். ஓராயிரம் வார்த்தைகளால் சொல்லிக் குமுறவேண்டிய சங்கதியை ஒரு படத்தின் மூலம் சுந்தர் சுட்டிக் காட்டினார். இப்படி உதாரணங்கள் ஏராளம் காட்டிவிட முடியும். "இலங்கைக்கு சுதந்திரக்கனி வழங்கப்பட்டிருந்தது. ஆம் பெரும்பான்மை இனத்திற்குச் சுளையும் சிறுபான்மை இனத்திற்குக் குந்துமாக வழங்கப்பட்டிருந்தது" என்று அவர் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். 1971களில் கொழும்பு வாழ்க்கையைத் துறந்து அவர் யாழ்ப்பாணத்திற்குக் குடியேறியமை கூட இவ்வாறான சிந்தனையின் விளைவு. பேரினவாதத்தின் எழுச்சியால் தமிழ் மக்கள் கொழும்பில் அகௌரவப்படுவதை அவர் வெறுத்தார்.

சிரித்திரன் சுந்தரின் சமூகப் பார்வை மிகுந்த அவதானிப்புத் திறன் கொண்டது. சீறிய விடயங்களையும் மிக நுட்பமாக அவர் அவதானித்து கார்ட்டூன்களாக்கினார். இனவாதப் பாதிப்பு, வீடுதேடும் படலம், வாடகை வீட்டில் அழுத்திய படலம், பாடசாலையில் இடம் தேடும் படலம், சமூகச் சின்னத்தனங்கள் அனைத்தும் அவர் கரங்களில் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் கார்ட்டூன்களாகின. சமூகத்தின் சிறுமைகளை நவீன நையாண்டியுடன் சுட்டிக்காட்டினார். அதற்கு அவர் பல பாத்திரங்களைக் கருவியாக்கிக் கொண்டார். யாழ்ப்பாணத்தின் சமூகப் பிரதிநிதிகளாகச் சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மெயில்வாகனத்தார் என்போரும் அவருடன் சேர்ந்தோரும் அமைத்தனர். சுந்தருக்கு மிகுந்த புகழினைத் தேடிக்கொடுத்த சமூகக் கார்ட்டூன் சவாரித்தம்பர் ஆகும்.

பேராசிரியர் க. கைலாசபதி தினகரனின் ஆசிரியராக விளங்கிய காலகட்டத்தில் தினகரனின் தினசரியில் சவாரித்தம்பர் தொடர்ந்து வெளிவந்தது. சுந்தரைக் கைலாசபதியும் தினகரனைச் சுந்தரும் தக்கவாறு பயன்படுத்திக்கொண்டனர். தினகரனின் விற்பனை படிப்படியாக அதிகரித்தமைக்குச் சவாரித்தம்பர் ஒரு காரணம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. இன்றைய இளைஞர்களின் மனநிலையை மைனர் மச்சான் பிரதிபலித்தது. கொழும்புப் பெண்களின் ஆங்கில மோகத்தையும் தமிழ் அறிவின்மையையும் சுட்டிக்காட்ட அவர் தேர்ந்தெடுத்த பாத்திரங்கள் மிஸிஸ் டாமோதரனும் மிஸ்ரர் டாமோதரனுமாவார்கள். இவை வகை மாதிரிப் பாத்திரங்களாகவே அமைந்தன. சமூக மாந்தர்களின் திருந்தவேண்டிய அம்சங்களை சுந்தர் தன் கார்ட்டூன்களில் சுட்டிக்காட்டினார். எவரது மனதையும் நோகச் செய்வதற்கு அவர் தன் கார்ட்டூன்களைப் பயன்படுத்தவில்லை என்பது முக்கியமாக நோக்கத்தக்கது. அவருடைய சமூகம் நோக்கிய கொதிப்பு கார்ட்டூன்களாக மட்டும் வெளிவரவில்லை. ஆங்காங்கு கருத்துக்









களாகவும மசாறகளால பாய்ந்தன. "சிரிக்கத் தெரிந்தவன் மனிதன்" என்றார். கல்விக்குப் பணம் இறைக்கும் மனிதர் கலைக்குக் கிள்ளியும் தெளிப்பதில்லை எனக் கவலைப் பட்டார். "உத்தியோகத்தனை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகவே கல்வி நிலையங்கள் செயல்படுகின்றன. பூரண மனிதனை உருவாக்குவது அவற்றின் இலட்சியமாகவில்லை" என வேதனையோடு எடுத்துரைத்தார். எமது சமுதாயம் பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. சமுதாயத்தைப் பிள்ளைகளின் உணர்வுகளைக் குழி தோண்டிப் புதைக்கப் படும் இடுகாடென்றே கூறவேண்டும்" எனப் பொருமினார். இப்படிப் பலபல கருத்துகளைச் சுந்தர் கூறிச் சென்றுள்ளார். சமூகத்தினை இரக்கத்தோடு அவர் தன் கார்ட்டூன்களாலும் எழுத்தினாலும் சாடினார். சமூகத்தின் போலித்தனங்களையும் சனனததனஙகளையும அவா சிந்தித்துத் திருந்துமாறு தன் படைப்புகளில் கொண்டு வந்துள்ளார்.



சிரித்திரனின் அரசியல்பணி, சமூகப் பணி என்பவற்றுடன் அதன் இலக்கியப் பணியும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சிரித்திரனில் வெளிவந்த **ஆச்சி பயணம்** போகிறாள், மயானபூமி (பிரளயம்), கொத்தியின் காதல், **கங்கைக் கரையோரம்** என்பன நூலுருப்பெற்றிருக்கின்றன. தேன்பொழுது, மகுடி, நடந்தாய் வாழி வழுக்கியாறு, அலைகடல் தான் ஓயாதோ?, சித்திரா பௌர்ணமி, முற்றத்து ஒற்றைப் பனை முதலான நூல்கள் சிரித்திரனின் பிரசுரமாக வெளியிடப் பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சிரித்திரன் சிறுகதைத் துறைக்கு ஆற்றிய பணி முக்கியமானது. ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை உலகிற்கு சிரித்திரன் சிறுகதைகள் ஒரு தொகுதியாக வெளிவரில் புதியதொரு பரிமாணம் நிச்சயம் சேரும். என்.எஸ்.எம். ராமையா (நிலவைப் பிடித்து) கனக செந்தில்நாதன் (பெரிய மீன்), செங்கை ஆழியான் (நிலங்களைத் தேடி), தெளிவத்தை யோசேப் (தீட்டு ரொட்டி), க. பாலசுந்தரம் (மனித தெய்வம்), நெல்லை க. பேரன் (மொட்டை மரம்), து. வைத்திலிங்கம் (ஆலடி வயிரவர்), யோகேஸ் ஐயாத்துரை (பேதம்), இலதலை நடராஜன் (இருள்), மல்லி சி. குமார் (புகுந்த வீடு), மாதவி (நெருப்பில் ஒரு செந்தாமரை), செந்தாமரை (நீ போனால் இன்னொன்று), சுதாராஜ் (தயவுசெய்து கை போடாதீர்கள்), சாந்தன் (மீறல்), திக்குவல்லை கமால் (ஒரு பிழைப்புப் புனிதமாகிறது), சந்திரபோஸ் (நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்), **வடகோவை வரதராஜன்** (நாளை வரும் திருநாள்), **இளவாலை விஜயேந்திரன்** (எங்கள் **வலை**), மருதூர் அலிகான் (சபலங்கள்), பால அசோகன் (வளைகோடுகளும் நேர்கோடுகளும் ஆகியோரது சிரித்திரன் சிறுகதைகள் சிரித்திரனின் சிறுகதைப் பங்களிப்புக்கு ஏற்ற உதாரணங்களாகும். இவை தொகுக்கப்பட்டு தொகுதியாக வெளிவரில் **புனைகதைத் துறைக்குப் புதிய பங்களிப்புகளாக** அமையும். இன்னொரு சங்கதியையும் சிரித்திரன் சுந்தரின் இலக்கியப் பங்களிப்பாகக் கருத முடியும். சிரித்திரனில் அரும்பு என்றொரு சிறுவர் பகுதியைச் சிலகாலம் சிரித்திரனில் நடத்தி வந்தார். அதில் பொச்சம் தீராது போணவிடத்து "கண்மணி" என்றொரு சிறுவர் சஞ்சிகையை ஆரம்பித்தார்கள். மூன்றிதழ்கள் வரை வெளிவந்து தொடர முடியாது நின்றுபோனது.



சிரித்திரன் சுந்தர் தமிழ் சஞ்சிகை உலகிற்கு அளித்த பங்களிப்பு என்றும் நினைவில் வைத்திருக்கப்படும். ஈழத் தமிழுலகின் கார்ட்டூன் உலகிற்கு அவர் என்றும் முடிசூடா மன்னர், அவரிடத்தினை இன்னும் எவரும் நிரப்பவில்லை என்பேன். எவன் தனது இயல்பான வல்லமையை அறிந்து அயராது ஆர்வத்துடன் உழைக்கிறானோ அவனே மேதையாகிறான் என்பது சிரித்திரன் சுந்தரின் வார்த்தைகள். அந்த மணிவாக்கு அவருக்கே மிகவும் பொருத்தமானது. ஏனெனில் எங்களிடையே வாழ்ந்து தனி அடையாளங்களை விட்டு விட்டுச் சென்றிருக்கும் கலா மேதை அவர்.

●



# சிரித்திரன்

## யாழ்ப்பாணச் சமூகத்தின் கோட்டுச் சித்திரக் குறியீடு

### சேரன்

'சிரித்திரன்' இதழை ஒரு அங்கதச் சுவைக்கான இதழாகத்தான் பலரும் அறிந்து வைத்திருக்கின்றனர். ஆனால், நல்ல சிறு கதைகள் கவிதைகளுக்கான ஒரு களமாகவும் சிரித்திரன் அமைந்திருந்தது என்பதை சிரித்திரனூடாக எழுத்துலகுக்கு வந்தவர்களும் சிரித்திரனோடு இலக்கியத் தொடர்பை வைத்திருப்பவர்களும் அறிவர்.

இந்த எழுத்தாளர்களின் பட்டியல் நீண்டது. எனினும் செங்கை ஆழியான், செ. யோகநாதன், சுதாராஜ், திக்குவலை கமால், குப்பிளான் ஐ. சண்முகன், வடகோவை வரதராஜன், இளவாலை விஜயேந்திரன், சசி. கிருஷ்ணமூர்த்தி, தெளிவத்தை ஜோசப், என். எஸ். எம். ராமையா, எஸ். கே. விக்னேஸ்வரன், அகஸ்தியர், கனக. செந்தில்நாதன், காசி ஆனந்தன் போன்றோரைக் குறிப்பிடுவதன் மூலம் வேறுவேறு பார்வைகளும் பின்புலங்களும் உடையவர்கள் சிரித்திரனோடு தொடர்புற்றிருந்தார்கள் என இனம் காட்ட முடியும்.

சிரித்திரன் யாழ்ப்பாண மண்ணில் விளைந்த ஒரு மிகத் தனித்துவமான இதழ். சமூக விமர்சனத்தையும் அரசியல் விமர்சனங்களையும் அங்கதத்துடனும் நகைச்சுவையாகவும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்த சிரித்திரன் ஈழத்து சஞ்சிகை வரலாற்றில் சிறப்பான இடம்பெற்றுள்ளது.

அத்தகைய சிறப்பான இடம், இலக்கிய வரலாற்றாளர்களால் உரிய முறையில் பதிவு செய்யப்படும் என்று நம்புவோம். யாழ்ப்பாணப் பின்புலமே சிரித்திரனின் சிறப்பான அடையாளக் கூறு என்றாலும் அந்த வட்டத்தைத் தாண்டிப் பரந்த அளவில் 'தமிழ் கூறும் நல்லுலகம்' விரிந்துள்ள இடங்களிலெல்லாம் பொருத்தமானதாகவும் இணக்கமானதாகவும் அமைந்த சிந்தனைப் பரிமாணங்களைச் சிரித்திரன் வெளிப்படுத்தியது. சிரித்திரன் சுந்தரின் புகழ்பெற்ற இரட்டையர்களான சவாரித்தம்பர், சின்னக்குட்டி பற்றிய கதை ஒன்றைச் சொல்வது பொருத்தமாக இருக்கும்.

சின்னக்குட்டி ஒரு பெரும் 'குடி'மகன். அவருடைய குடிப் பழக்கத்தால் ஈரல் கருகி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை தினகரன் நாளேடு பிரசுரித்திருந்தது. அதைப் பார்த்த ஆயிரக்கணக்கான வாசகர்கள் செய்தித்தாள் அலுவலகத்துக்குச் சின்னக்குட்டியின் நலன் கேட்டு கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டார்கள். இவர்களில் பெரும்பாலனோர் முஸ்லிம் வாசகர்களே என்று சுந்தர் தன்னுடைய "கார்ட்டூன் ஓவிய உலகில் நான்" என்ற நூலில் சொல்கிறார். யாழ்ப்பாண வாழ்வும், 'யாழ்ப்பாணத்தான்' பாத்திரமும் பரிசீலனைக்கும், பரிசோதனைக்கும், விமர்சனத்துக்கும் உரிய ஒரு மூலப்பொருளாகவே சிரித்திரன் சுந்தரால் பயன்படுத்தப்பட்டது என்று கூறுவது தான் பொருத்தமாக இருக்கும்.

தமிழ்த் தேசியவாதத்தில் யாழ்ப்பாண மையவாதம் அல்லது குடாநாட்டு மனோபாவம் என்பது ஆதிக்கம் பெற்ற ஒன்றாக இருந்து வருகிறது என்றும் தமிழ்த்தேசிய வாதத்தின் மோசமான சில முகங்களுக்கு இந்த யாழ்ப்பாண மைய

**தட்டுப்பாடு காலச் சித்திரங்கள்**



அரிசித் தட்டுப்பாடு கால ஆசீர்வாதம்



வாதமும் ஒரு காரணம் என்ற கூர்மையான விமர்சனங்களும் துவக்க காலங்களில் இருந்தே முன்வைக்கப்பட்டு வந்தன. அவை மிகுந்த நியாயப்பாடு உடையவை. யாழ்ப்பாணத்தின் சமூக அமைப்பியல், சாதியம், வர்க்கக் கட்டமைப்பில் நடுத்தர வர்க்கத்தின் மேலாட்சி போன்ற பல காரணங்களினடியாக யாழ்ப்பாணச் சமூகத்தின் இயல்புகளை மதிப்பிட முடியும்.

யாழ்ப்பாணியம், யாழ்ப்பாணத்தான் போன்ற கருத்தமைவுகள் குடா நாட்டு மக்களின் பொதுவான அல்லது பொதுமைப்பாடெய்திய இயல்புகளைச் சுட்டிக் காட்டும் படிவார்ப்புகளாக (Stereotypes) அமைபவை. இவை சரியா பிழையா என்ற விவாதங்களுக்குள் ஒரு சமூக விஞ்ஞானி சிக்கிக்கொள்ளமாட்டார். ஏனெனில், படிவார்ப்புக்கள் – அவை சாதகமாக இருந்தாலும் சரி, பாதகமாக இருந்தாலும் சரி – பிழையானவைதான். எனினும் இத்தகைய படிவார்ப்புக்களை மக்கள் இதய பூர்வமாக நம்பி விடுகின்றபோதுதான் அவை சமூகவியல், அரசியல் பிரச்சனைகளுக்கு வித்திடுகின்ற ஒன்றாக மாறிவிடுகின்றன. ஒவ்வொரு சமூகமும் மற்றைய சமூகங்களைப் பற்றி இத்தகைய படிவார்ப்புகளை உருவாக்கி வைத்திருக்கின்றது. எடுத்துக்காட்டாக, கனடாவில் தமிழர்கள் சீன மக்களை 'சப்பட்டை' என்றும் கறுப்பின மக்களை 'கறுவல்' அல்லது 'காப்பிலி' என்றும் படிவார்ப்புச் செய்து வைத்திருக்கின்றார்கள். இதை அவர்கள் 'இழிவு சிறப்பான' ஒரு அடையாளமாகப் பார்க்கின்றார்கள்.

தமிழர்கள் பற்றிய ஒரு படிவார்ப்பைச் சுந்தர் தருகின்றார். தமிழ் மக்களுக்கு ஓவிய உணர்வும் நிறங்கள் பற்றிய நுண்உணர்வும் இல்லை என்பது அவர் கருத்து. "பம்பாயில் கண்களுக்கு இதம் பேசாத நிறங்களை 'Madrasi colour' என்பார்கள். இலங்கையில் சிங்களவர்கள் 'தெமலு பாட்ட' (தமிழர்களின் நிறம்) என்பார்கள். இந்த நயமான நிற உணர்வு இல்லா நிலை கண்டு வருந்தினேன்" என்று சுந்தர் எழுதுகிறார். எம்மைப் பற்றிய சுயவிமசர்சனங்களுக்கு ஒரு கருவியாக எம்மைப் பற்றி மற்றைய சமூகங்கள் வைத்திருக்கிற மோசமான படிவார்ப்புகளைப் பயன்படுத்தலாம் என்பதுதான் சுந்தரின் கருத்துக்கு மூலம் எனலாம்.

இதே போல், வெள்ளையர்கள் பற்றிய உயர்வு சிறப்பான படிவார்ப்புகளை காலனி ஆதிக்க காலத்திலிருந்து நாம் உருவாக்கி நம்பி வந்திருக்கின்றோம். ஆனால் மற்றைய சமூகங்கள் எம்மைப்பற்றி உருவகித்து வைத்திருக்கும் படிவார்ப்புக்களைக் கேட்டால் நாங்கள் பொங்கி எழத் தயங்குவதில்லை. 'பயங்கரவாதிகள்', 'வன்முறை மிகுந்தவர்கள்' என்ற படிவார்ப்பே ஈழத்தமிழரைப் பற்றிப் பல சமூகங்களில் நிலவுகின்றது. இத்தகைய படிவார்ப்புகளில் ஒரு சமூகத்தைப் பற்றிய நல்ல கூறுகளை மிகைப்படுத்திச் சொல்கிற படிவார்ப்புக்களும் அடங்கும். படிவார்ப்புக்களை உருவாக்குவதிலும் பொதுப் புத்தி மட்டத்தில் ஊறச்செய்வதிலும் ஊடகங்களுக்குப் பெரும் பங்கு உள்ளது.

சிரித்திரன் இதழ் வெளியிட்டு வந்த கருத்துப் படங்கள், சிரித்திரனின் நிறுவனரும், ஆசிரியரும், ஓவியருமான சுந்தரின் அங்கதச் சுவை மிகுந்த சித்திரங்களும் பாத்திர வார்ப்புகளும் (மெயில் வாகனம், மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடிரன்,










சவாரித்தம்பர்) யாழ்ப்பாணம் பற்றிய ஒரு படிவார்ப்பின் பல் வேறு முகங்களையும் துல்லிய மாகக் காட்டின. யாழ்ப்பாணச் சமூகத்துக்குள், எவ்வகையிலும் பிரிக்க முடியாதபடி குருதியும், தசையுமாய் இரண்டறக் கலந்து நின்ற போதும் ஒரு மேன்மை மிக்க கலைஞனுக்குரிய முறை யில் அந்தச் சமூகத்திலிருந்து விலகி நின்றும் ஓடும் புளியம் பழமும் போல ஒட்டா நின்றும் யாழ்ப்பாணச் சமூகத்தைக் கூரிய விமர்சனங்களால் துளைத் தெடுத்த சிறப்பு சுந்தருக்கு உரியது. அந்தச் சமூகத்தின் முத்திரைக் குணாம்சங்களாகக் காலம் காலமாகப் போற்றப் பட்டு வந்த பொறுமை, சிக்க னம், விடாமுயற்சி, உழைப்பு, கல்வி, எளிமை போன்ற கூறு களை உரிய முறையில் சுந்தர் தனது சித்திரங்களூடாக அடை யாளம் காட்டினார். கூடவே, இந்த நல்ல கூறுகளின் மறுபக்கங் களான, போலித்தனம், பகட்டு, சுயநலம், அதிகாரத்துக்கு வாலைக் குழைத்துக் கொண்டு அடி பணிந்து போகிற இயல்பு, விசுவாசம், இரண்டக வாழ்வு போன்றவற்றையும் யாழ்ப் பாண வாழ்விலிருந்து அவர் சித்திரங் களாக்கத் தவறவில்லை. சிரித் திரன் சுந்தரின் சித்திரங்களை யும் அவருடைய கேள்வி – பதில் களையும் இன்னொரு தளத்துக்கு உயர்த்துவது இத்தகைய சமூக விமர்சனங்களும் அது அழகுற ஆழமாக வெளிப்படுத்தப்பட்ட மையும்தான். தம்மைப் பார்த் துச் சிரிக்கவும் தன்னுடைய சொந்தப் பலவீனங்கள், இயலா மையைப் பார்த்து எள்ளி நகை யாடவும் தெரியாத அல்லது எள்ளி நகையாட மறுக்கின்ற எந்தச் சமூகமும் கலாபூர்வமான தாகவும் உள்ளொளி சுடர்விடும் சமூகமாகவும் இருப்பது கடின மானதாகும். சிரித்திரனுக்குப் பிற்பாடு இத்தகையதொரு ஆரோக்கியமான நிலை ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் பெரிதும் குறைபாடுற்ற ஒரு நிலையிலேயே உள்ளது என்பது ஒரு வருத்தம் தரும் நிலையாகும்.

இதற்கான முக்கியமான கார ணம், ஈழ அரசியலில் விடுதலை இயக்கங்களின் எழுச்சியும் அத னோடு கூடவே எழுந்த ஆயுத அரசியலும், தமிழ்ச் சமூகம் மெல்ல மெல்ல ராணுவ மயப் பட்டமையும்தான். சிரிப்பையும், அங்கதத்தையும், விமர்சனத்தை யும் ஒடுக்கி விடுவதற்கு வாய்ப் பான சூழல் அது. எனினும் வாய்மொழியாகவும், குட்டிக் கதைகளாகவும், நகைச்சுவைத் துணுக்குகளாகவும் அங்கதம் சார்ந்த அரசியல் விமர்சனமும், சமூக விமர்சனமும் இருக்கத் தான் செய்கிறது.

சிரித்திரன் சுந்தர் என்னுடைய பதின்மூன்றாவது வயதில் எனக்கு அறிமுகமானார். அவர் எனக்கு அறிமுகமான காலங் களில் எங்களது கையெழுத்து இலக்கிய இதழான 'ஞாயிறு' வெளிவரத் துவங்கியிருந்தது. அதனுடைய மூன்றாவதும் நான் காவதும் இதழ்களைப் பார்த்து விட்டு அதிலிருந்து என்னுடைய கவிதைகள் ஒன்றிரண்டை சிரித் திரனில் வெளியிட்டார். அந்தக் காலத்து என்னுடைய ஓவியங் களையும் சித்திரங்களையும் பார்த்த பிற்பாடு ஓவியத்தையும் நான் தொழில்முறையாகப் பயில வேண்டும் என்று அடிக்கடி வலி யுறுத்துவார். 'லாவகமான, எளி மையான, துரிதமான கைவீச்சு' எனக்கு இருப்பதாக அவர் குறிப் பிட்ட நினைவு எனக்கு உள்ளது. எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத் துறை மாணவனாகச் சேர்ந்து கொண்டுவிட்ட பிற் பாடு நான் ஓவியனாக வரவேண்டும் என்ற கற்பனையை அவர் விட்டுவிட்டார். எங் களுடைய விஞ்ஞான பீடமும் அதன் விரி வுரை அறைகளும் அவ ரது அச்சகத்திற்கு அண் மையிலேயே இருந்தன. எனவே பல்கலைக் கழகக் காலங்களில் அவரை அடிக்கடி சந்திப்பது வழமையான நிகழ்வாக இருந்தது.




என்னுடைய துவக்க காலக் கவிதைகளில் ஒன்றான 'தேர்' சிரித்திர னில்தான் வெளியா யிற்று. சிறுவயதுச் சிறு வரிப் புதுக் கவிதை காலகட்டத்தில் வெளி யான என்னுடைய முத லாவது கவிதை அது. ஞாயிறு கையெழுத்து இதழில் இருந்து சுந்தர் அதனை எடுத்து வெளி யிட்டிருந்தாலும் அப் போது அவருக்குப் பல வழிகளிலும் உதவியாய் இருந்த ராதேயன் (இப் போது யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில்





# எங்கள் பப்பா வற்றாத அன்பின் ஊற்று

திருமதி கோகிலம் சிவஞான சுந்தரம்

பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் சிவஞானசுந்தரம். சுந்தர் – அவரே தமக்கிட்டு வழங்கி, தமிழ் மக்கள் அனைவருக்கும் பழக்கமான புனைபெயர். ஆனால் எனக்கும் என் மக்களுக்கும் அவர் 'பப்பா'. பப்பா எமக்கும் என்றும் இடையறாது சுரந்த அன்பின் ஊற்று.

### உடனாகி ஒன்றானோம்

1955ஆம் ஆண்டு எமது திருமணம் நிகழ்ந்தது. எனக்கு வயது 18. பப்பா சாதாரண அரசாங்க உத்தியோகத்தர். கட்டடக் கலைஞராக அவர் வரவேண்டும் என்று அவரின் தந்தை – என் மாமா – அவரை பம்பாய்க்குப் பயிற்சிபெற அனுப்பி வைத்தார். சித்திரக் கலையிலே இயல்பாகவே ஆர்வமும் திறமையும் கொண்ட அவரைக் கருத்துச் சித்திரத் துறை (cartoon) கவர்ந்தது. கட்டடக் கலைஞராய் உருவாக வேண்டியவர், கருத்துச் சித்திரக் கலைஞராய் தாயகம் திரும்பினார்.



குடும்பத்தின் மூத்த மகனாகிய பப்பாவுக்குத் தம்பி ஒருவர், ஐந்து தங்கைமார். அனைவரும் பட்டதாரிகள். பப்பா, "என் தம்பி தங்கைகள் பட்டதாரிகள். நானோ ஊதாரி" என்று விளையாட்டாகச் சொல்வார். இப்படிக் கூறுகையில் அவர் குரலில் வேதனை கடுகளவும் இராது. ஊதாரி என்ற சொல்லிற்கும் உண்மைப்பொருள் இருக்காது.

'பப்பா'வுக்குத் தமது திறமையில் முழுமையான நம்பிக்கையும் தற்றுணிவும் வேண்டிய அளவு இருந்தன. எங்கள் மூத்த மகளின் கணவர் கட்டடக் கலை நிபுணராய் அமைந்ததில் பப்பாவுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் இருந்தபோதிலும், தாம் வரித்துக்கொண்ட துறை பற்றி அவர் என்றும் குறைப்பட்டுக் கொண்டதில்லை. மாறாக மன நிறைவே கண்டார்.

"வாழ்க்கையில் 'என்னாலும் முடியும்' என்று இருக்கக்கூடாது. ஒரு துறையைத் தேர்ந்தெடுத்தால், அந்தத் துறையில் அரிய சாதனைகள் புரியவேண்டும்" என்று பிள்ளைகளுக்கு அடிக்கடி புத்திமதி சொல்வார். சொன்னது போலவே தமது தெரிவுத்துறையிலே பல







பணிபுரிகிறார்) கவிதையின் தலைப்பை 'ஆற்றல்' என்று மாற்றியிருந்தார். அது குறித்து ஒரு சிறு விவாதமும் நடந்த நினைவு எனக்கு இருக்கிறது. அதற்குப் பிறகு என்னுடைய பல கவிதைகள் சிரித்திரனில் வெளியாகியுள்ளன. அவற்றுள் எவையும் எனது கவிதைத் தொகுப்புகளில் இடம் பெறவில்லை. எனினும் சுவடுகள் என்ற பெயரில் சிரித்திரனில் வெளியான கவிதை ஒரு சிறு மாற்றங்களோடு 'தொடரும் இருப்பு' எனும் பெயரில் 'நீ இப்பொழுது இறங்கும் ஆறு' கவிதைத் தொகுதியில் முதலாவது கவிதையாக இடம் பெற்றுள்ளது.

கவிதை, சிறுகதை, சித்திரம், ஆசிரியம் (editing) போன்ற துறைகளில் ஆற்றல் மிக்கவரான ராதேயன் மற்றும் திக்கவயல் தர்மகுல சிங்கம், செங்கை ஆழியான் போன்றவர்களும் வேறு பல ஆர்வலர்களும் ரசிகர்களும் சுந்தருக்கு எப்போதும் பக்க பலமாக நின்றவர்கள். எப்போது போனாலும் சுந்தரது வீட்டில் அல்லது அச்சகத்தில் யாராவது இலக்கிய நண்பரைச் சந்திக்க முடியும். சிறுவனாக இருந்த போதும் அளவெட்டியில் இருந்து யாழ்நகரம் வந்தால் சிரித்திரன் சுந்தரையும் கே. டானியலையும் சந்தித்து விட்டுச் செல்வது என்பது எனக்கு ஒரு சடங்காகவே மாறியிருந்தது. சிறுவன் என்றும் பாராது மணிக்கணக்காக பேசுவது, பகிர்ந்துகொள்வது என்பது ஒரு சில எழுத்தாளர்களிடம் மட்டுமே நான் இனங்கண்ட இயல்பு. என்னுடைய அறிவுலக, அழகுலக வளர்ச்சியில் இத்தகைய நட்பும் ஆதரவும் பெருமளவுக்குப் பங்காற்றியிருக்கின்றன. கருத்துப் படங்கள், புகைப் படம், ஓவியம் போன்ற துறைகளில் ஈடுபாடும், ரசனையும் ஓரளவுக்காவது புத்திசாதுரியமான பரிச்சயமும் ஏற்பட்டிருப்பதற்கு சிரித்திரன் சுந்தருடனான துவக்ககால நட்புத்தான் ஒரு மூல விசையாகும்.



Mr டா : நான் இலெக்ஷன் கொன்டெஸ்ட் பண்ணி, டமிழ் பாஷா சம அந்தஸ்துக்கு பயிற் பண்ண போறன்.

Mrs டா : ஐயோ தெய்யனே... யூ டோ நோ யுவர் இங்லிஷ் அது நல்ல இங்லிஷ் அறிவுள்ளலங்க தான் டமிழுக்காகப் பயிற் பண்றது.

சிரித்திரனைப் பொறுத்தவரை, சுந்தரின் மறைவுக்குப் பிற்பாடு அல்லது சுந்தருக்குப் பிற்பாடு சிரித்திரனை, சிரித்திரனாக எவருமே கொண்டுவந்திருக்க முடியாது. சிரித்திரனுடைய மிகப் பெரும் பலமும் ஒரேயொரு பலவீனமும் அதுதான்.

சிறு சஞ்சிகைகள், இதழ்கள் அதனுடைய நிறுவன ஆசிரியரின் முழு ஆளுமையையுமே முற்றாக உள்வாங்கிப் பிரதிபலிப்பதாக அமைந்துவிடும். அவற்றை வேறு படிமத்துக்கு மாற்ற முடியாது. சிரித்திரனும் சுந்தரும் அந்தவகையான பிரிபடா வடிவ/படிம முழுமையைக் கொண்ட உறவின் உன்னதமான குறியீடு. அந்தக் குறியீடு சிரித்திரனின் குறியீடு மட்டுமன்று, பல தளங்களிலும் யாழ்ப்பாணச் சமூகத்தின் கோட்டுச் சித்திரக் குறியீடாகவும் அது அமைகிறது. ●



சாதனைகள் புரிந்தார். பிள்ளைகளையும் "நீங்கள் இந்தத் துறையைத் தான் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று கட்டாயப்படுத்தியதில்லை. இவ்வகையில் அவர்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கினார்.

### இராமன் இருக்கும் இடம்தான் அயோத்தி

பப்பாவுக்குச் சுதந்திரமான சிந்தனை இருந்தது போலவே எவருக்கும் கட்டுப்படாத சுதந்திர மனப்போக்கும் அடைந்து கிடந்தது. 1960ஆம் ஆண்டு எங்கள் மூத்த மகள் பிறந்திருந்த வேளை தமது மேலதிகாரியுடன் ஏற்பட்ட மனத்தாங்கல் பப்பாவை அவர் பார்த்து வந்த உத்தியோகத்தை உதறியெறிய வைத்தது. எங்கள் இருவரது குடும்பங்களிலும் இருந்து அவரின் விலகலை யொட்டி எதிர்ப்புக் கிளம்பியது. மீண்டும் சென்று வேலையை ஏற்குமாறு வற்புறுத்தினார்கள். பப்பா மசிய வில்லை. மலைபோல் நின்றார்.

பின்பு, 'சினிமாஸ்' நிறுவனத்தில் அதன் உரிமையாளர் குணரத்தினம் அவர்களிடம் வேலைக்குச் சேர்ந்தார். 'Litho Art' என்ற துறையில் பயிற்சி பெறச் சென்னை வாஹினி ஸ்டுடியோ சென்றார். பயிற்சி முடிந்து ஆறு மாதங்களுக்குப் பின் 'சினிமாஸ்' இல் சேவையாற்றினார். அங்கும் மேற்பார்வையாளரோடு மோதல். பயன்? அங்கிருந்தும் வெளியேற்றம்!

"இனி எக்காலத்திலும் ஒருவரின் கீழ் வேலை பார்ப்பதில்லை" என்ற முடிவோடு தாம் ஈடுபாடு கொண்டிருந்த பத்திரிகைத்துறையில் இறங்க முடிவு செய்தார். இதற்கென கொழும்பு செல்லத் தீர்மானித்தபொழுது என் பெற்றோர் "பொறுப்புணர்ச்சியற்ற அவரோடு போக வேண்டாம்" என்று என்னைத் தடுத்தனர்.

கஷ்டங்கள் எவையும் அறியாது வளர்ந்த பெண்ணாகிய நான் பெற்றோரின் தடையைப் பொருட்படுத்தவில்லை. இராமன் இருக்கும் இடந்தான் சீதைக்கு அயோத்தி என்று முடிவெடுத்தேன். அவ்வாறே பப்பாவுடன் கொழும்பு சென்றேன்.

### சவாரித்தம்பர், மைனர் மச்சான், சித்திரகானம்

கொழும்பு சென்ற சில காலத்திலேயே பப்பாவின் திறமை, குன்றில் வைத்த விளக்காகச் சுடர்விடலாயிற்று. சவாரித்தம்பர், மைனர் மச்சான் முதலிய கருத்துச் சித்திரங்கள் தினகரன், வீரகேசரி, மித்திரன் பத்திரிகைகள் வாயிலாக வாசகர்களின் உள்ளங்களிலே இடம்பிடிக்கத் தொடங்கின. சிரிப்போடு சிந்தனையையும் தூண்டி விடலாயின. அந்நாளில் தினகரன் பிரதம ஆசிரியராயிருந்த (பின்னாட் பேராசிரியர்) க. கைலாசபதி அவர்களும் 'பப்பா'வைத் தமது பத்திரிகைக்கும் பயன்படுத்தி தினகரனின் வளர்ச்சிக்கு வித்திட்டார். அவர் அளித்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பப்பா தமது இறுதிக்காலம் வரை நன்றியோடு நினைவுகூரத் தவறியதில்லை (சித்திரகானம் தினகரனில் தொடர்ந்து வெளியானது.)

பப்பாவின் புகழ்கதிர்கள் வெளியே பரவப் பரவ வீட்டிலோ பல கஷ்டங்களும் இருளாகப் படிந்தன. எனினும் இந்தக் கஷ்டங்கள் கவலைகளிலே அவர் தோயாதிருக்க நானே அவற்றைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. பப்பாவின் குழந்தைச் சுபாவமும் மாசுமருவற்ற அன்பும் எனக்குத் தந்த பலத்தைக்கொண்டு அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டேன். கருத்துச் சித்திரம் மூலம் கிடைத்த வருமானத்தில் வாழ்க்கையைச் சிக்கனமாக நடத்துவது எப்படி என்ற பயிற்சி எனக்குக் கிடைத்தது.

கருத்துச் சித்திரத் துறையிலே தமக்குக் கிடைத்த வரவேற்பு 'பப்பா'வைத் தாமே தனித்துச் சஞ்சிகை ஒன்றினைத் தொடங்கும் எண்ணமாக உள்ளத்தில் வித்தாகி முளைவிடத் தொடங்கியது. சிறுவயதிலேயே இலக்கிய சஞ்சிகைகளை வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் உடைய நான் அவருக்குப் பூரண ஒத்துழைப்பினை வழங்கத் தயாரானேன்.

### 'சிரித்திரன்' உதிக்கிறான்

1963இல் முதலாவது 'சிரித்திரன்' உதித்து சிந்தனைக் (நகைச்சுவை) கதிர்களை வீசத் தொடங்கினான். அவனுடைய உதயம் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. உற்சாகம் கொண்டோம். ஆனால் உற்சாகம் பணமாகக் காய்த்துக் கனியவில்லை. அச்சுச் செலவும், இதர செலவுகளும் சுமைகளாக ஏறத் தொடங்கின. அச்சக உரிமையாளர், பப்பாவிடம் கடன் பணம் பற்றி நாசூக்காகக் கேட்கும் நாள் பப்பாவிற்கு சஞ்சலம் நிறைந்த நாளாய் மாறிவிடும். வீட்டுக்கு வந்து சாப்பிடுகையில் யோசனையில் ஆழ்ந்து உண்ணவே மறந்துவிடுவார். அவரின் கவலையைப் போக்க நான் யாழ்தேவியில் யாழ்ப்பாணம் வருவேன். என் நகைகளை விற்றுக்கொண்டு உத்தர தேவியில் கொழும்பு திரும்பிப் பணத்தை அவரிடம் கொடுப்பேன். கடனைக் கட்டிவிட்டு வந்து அவர் முகம் மலர்ந்திருக்கும். அந்தக் காட்சியிலே நகைகளை விற்ற கவலை என்னை விட்டுக் காற்றாக ஓடி மறையும். இது ஒரு தடவையல்ல; பல தடவைகள் இடம்பெற்றது.

அவருக்கு எந்த இடர்களும் வராது காத்துவந்த என் மீதும் சில வேளைகளிலே கவலை மேகங்கள் கவிவதுண்டு. அவற்றைக் காண அவர் சகிக்க மாட்டார். அவ்வேளைகளில் அவரின் நகைச்சுவைப் பேச்சுக்களாகிய



அருமருந்து என் கவலைப் பிணியைப் போக்கிவிடும். இவ்வாறு எங்கள் இல்வாழ்க்கை மகிழ்ச்சியும் கலகலப்புமே அதிகம் அதிகமாக இடம்பெற்ற இலட்சிய வாழ்வாகவே இருந்து வந்தது.

### 'சிரித்திரனின்' யாழ்ப்பாண விஜயம்

1971இல் இனங்களுக்கிடையே சுமூகமற்ற சூழ்நிலைகள் உருவானபொழுது, யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து 'சிரித்திர'னைத் தொடர்வது என்று முடிவெடுத்தார். கொழும்பிலே சிரித்திரனுக்குப் பெருகி வந்த ஆதரவும், உற்சாகமும் மிக அதிகம். பப்பாவின் நண்பர்களும் இரசிகர்களும், "யாழ்ப்பாணத்தில் பத்திரிகை தொடங்குவது தற்கொலைக்குச் சமம். போக வேண்டாம்" என்று பல காரணங்கள் கூறித் தடுத்தனர்.

பப்பாவோ தமது தீர்மானத்தில் உறுதியாயிருந்தார். முன் வைத்த காலைப் பின் வைக்கும் வழக்கம் அவருக்கு என்றுமே இருந்ததில்லை.

யாழ்ப்பாணத்துக்கு 1971இல் சிரித்திரன் விஜயம் செய்தான். அவனது விஜயத்தின் ஆரம்ப காலத்தில் ராதேயன், செங்கை ஆழியான் ஆகிய எழுத்துலக நண்பர்கள் உறுதுணை புரிந்தார்கள். விற்பனைத்துறையில் தம்பித்துரை ஐயா அவர்களது மகன் துரைராஜா பூபாலசிங்கம் போன்ற பலர் கைகொடுத்து உதவினர். தொடக்கக் காலத்திலிருந்து விளம்பரம் வழங்கியும் வேறுபல வழிகளிலும் உதவி புரிந்த வர்த்தகப் பெருமக்கள் 'சிரித்திரன்' வளர்ச்சியில் ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இக்காலப் பகுதியில் என் பெற்றோரின் உதவி கொண்டு அச்சு யந்திரம் ஒன்று வாங்கி 'கவின்' அச்சகமென்று பெயரிட்டு, அங்கிருந்து சிரித்திரனை வெளியிட்டு வந்தோம். வாடகை வீடுகளிலிருந்து கொண்டு அச்சகத்திற்கு அலைவது சிரமமாயிருக்கையில் எங்களின் மகன் கைகொடுத்துதவினான். காங்கேசன்துறை வீதியில் சொந்தமாக வீடு வாய்த்தது. சிரித்திரன் அலுவலகமும் அமைந்தது. 'செய் தொழிலே தெய்வம், சிரிப்பே சீவியம்' என்னும் பப்பாவின் தாரகமந்திரத்துடன் 'சிரித்திரன்' வெற்றிகரமாகப் பவனி வரலானான்.

### கனவுகள் சிதைந்தன

'அமைதி காப்போம்' என்று பீற்றியவண்ணம் 1987இல் யாழ்ப்பாணம் வந்த இந்திய அமைதிப் படையின் அடாவடித்தனங்களால் எங்களின் இலட்சியத்தை ஈடேற்றிய வெகுமதியான சொத்துக்கள், அச்சக உபகரணங்கள் அனைத்துக்கும் மேலாக, பப்பா கண்ணைப்போல் காத்துவந்த அவரின் கலைச் சேமிப்புகள் யாவும் சூறையாடப்பட்டன. எம்மலுவலகம், வீடு சின்னாபின்னமாய்ச் சிதைக்கப்பட்டது. இவ்வழிவுகளால் நான் பெரிதும் பாதிப்புற்ற வேளையில், பொன்னையோ பொருளையோ ஒரு பொருட்டாக என்றும் மதித்தறியாத அவர் மன உறுதியிலிருந்து சிறிதும் தளரவில்லை. எல்லாவற்றையும் இலகுவாகவே எடுத்துக்கொண்டார். மனம் குழம்பியிருந்த என்னையும் பிள்ளைகளையும் தமது நகைச்சுவைக் கதைகள் மூலம் தேறவைத்தார்.

அக்காலத்தில், பத்திரிகை வெளியிட இந்திய அமைதிப்படையின் அனுமதி பெற வேண்டியிருந்தது. "எனது மண்ணிலே பத்திரிகை வெளியிட அந்நியனிடம் நான் அனுமதி பெற வேண்டுமா?" என்று சீறிய பப்பா, 1990வரை இந்தியப் படை வெளியேறும் வரை 'சிரித்திரன்' வெளியீட்டைத் தொடரவில்லை. தான் தம்முடைய உயிரிலும் மேலாய் நேசித்த 'சிரித்திர'னை வெளியிடாதது அவருக்கு எவ்வளவு கவலையை அளித்தது என்பதை அன்று என்னால் உணர முடிந்தது.

### சோதனை மேல் சோதனை

இந்த வேளை பாரிச வாத நோயும் அவர்மீது தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியது. வலது காலும் வலது கையும் இயக்கமற்றுப் போயின. எனினும் அவர் முற்றாக மனம்





சோர்ந்துவிடவில்லை. கணக்கற்ற கருத்துச் சித்திரங்களைப் படைத்து தமிழ் மக்களின் சிந்தனைக்கும் நகைச்சுவைக்கும் விருந்தளித்த அவரது கையைச் செயலற்றுப் போக வைத்த கடவுளால் அவரின் மன உறுதியைச் செயலற்றுப் போக வைக்க முடியவில்லை.

இடது கையிலே பேனா ஏந்தி அரிச்சுவடியிலிருந்து ஆரம்பித்தார். அவரின் விடா முயற்சியும் ஆர்வமும் என்னை அயர வைத்தன. உள்ளுக்குள் வியப்படைந்தேன். ஆனால் வெளியிலோ "உங்களால் முடியும்" என்று ஊக்கமளித்தேன். எல்லோரது ஒத்துழைப்பும் உயர்ந்த இலட்சிய வெறியும் அவரின் கருத்துச் சித்திரங்களுக்கும் எழுத்துக்களுக்கும் உயிர் கொடுத்தன, உருவமளித்தன.

### தலைவர் பிரபாகரனின் ஊக்குவிப்பும் உதவிகளும்

இக்காலக் கட்டத்தில் இவரின் உள்ளத்தை உணர்ந்த தலைவர் பிரபாகரன் அவர்கள் மீண்டும் சிரித்திரனை வெளியிட இவரை ஊக்கியதோடு அனைத்து உதவிகளையும் புரிந்தார். சிரித்திரன் மீண்டும் உலாப்போந்தான்.

### ஈழம் கடந்த புகழ்

பப்பாவின் பிறந்தகம் கரவெட்டி. எனது தாயகமும் கரவெட்டிதான். 'தீர்க்கதரிசியை அவன் பிறந்த நாடு கௌரவிப்பதில்லை' என்ற பழ(மு) மொழியைப் பொய்யாக்கிய கரவெட்டி மக்கள் அவரைக் கௌரவிக்க முன்வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். நெல்லியடி –கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சிதம்பரப்பிள்ளை, டாக்டர் சுகுமார் ஆகியோரின் உதவியுடன் பப்பாவின் கருத்துச் சித்திரங்களிலிருந்து தொகுத்து 'சிரித்திரன் சித்திரக் கொத்து' வெளியிடப்பட்டது. வெளியிடும் விழாவாக எடுக்கப்பட்டு, புகழ் பாராட்டைக் கண்டு பதைபதைத்து ஓடும் 'சுந்தர்' அவர்களையும் நன்றியால் கனியவைத்தது.

சிரித்திரனின் பணிகளிலேயே ஒன்று ஈழத்துக் கலைஞர்களை மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதாகும். பப்பாவின் வேண்டுகோளினை ஏற்று சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம், டாக்டர் சுகுமார் ஆகியோர் கலைஞர்களைச் செவ்வி கண்டு எழுதிய கட்டுரைகள் 'தேன்பொழுது' என்ற தொடரில் சிரித்திரனில் வெளியாகிப் பின்பு நூல் வடிவம் எடுத்தன. " 'தேன்பொழுது' போன்ற செவ்விகள் மூலம் கலைஞர் களைப் பாராட்டும் கட்டுரைகள் இந்தியாவிலும் வெளியானதில்லை. உங்கள் சேவை பெரிதும் பாராட்டத்தக்கது" என்று உலகப் புகழ்பெற்ற சித்தார் வாத்திய மேதை ரவிசங்கர் சிரித்திரன் ஆசிரியருக்குக் கடிதம் எழுதினார். பப்பா இசைக் கலையில் மிகுந்த இரசனையும் ஈடுபாடும் கொண்டவராதலால் ரவிசங்கரின் கடிதம் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

'இதயம் பேசுகிறது' சஞ்சிகை தமிழ்நாட்டில் இருந்து வெளிவருவது அதன் ஆசிரியர் மணியன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபொழுது எங்கள் வீட்டிற்கும் வந்தார். "தமிழ்கூறும் நல்லுலகில் நகைச்சுவைக்கென்று தனித்ததொரு சஞ்சிகை உங்களாலேயே வெளியிடப்படுகிறது. அதுவும் வெற்றிகரமாக நடத்துகிறீர்கள்" என்று மனந் திறந்து பாராட்டினார். சிரித்திரன் நகைச்சுவைத் துணுக்குகளைத் தமது 'இதயம் பேசுகிறது' சஞ்சிகையில் கிரமமாக வெளியிட்டும் பப்பாவைக் கௌரவித்தார்.

1991இல் இலங்கை சாகித்திய மண்டலம் பப்பாவின் சிரித்திரன் நகைச்சுவைக் கொத்திற்கு பரிசில் வழங்கியபோது, அதனை ஏற்காது பரிசிற் காசோலையை மண்டலத்திற்கே திருப்பி அனுப்பிவிட்டார். "இச்செய்கை மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?" என்று சோழமன்னனின் முகத்திற்கு முன்னே சினந்துரைத்த கவிச்சக்கரவர்த்தி கம்பனின் செயலை நினைவூட்டுகின்றது.

இவை யாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோலத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் தாமெடுத்த முத்தமிழ் விழாவில் பப்பாவுக்கு "மாமனிதர்" விருதளித்து மகிழ்ந்தனர்.

### பப்பாவும் அன்ரன் பாலசிங்கமும்

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர், கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பப்பாவின் நீடித்த கால நெருங்கிய நண்பர். பப்பா பாரிசவாத நோயினால் பீடிக்கப்பட்டதறிந்து, உடனடியாக அவரைப் பார்க்க வந்த அவர் பப்பாவுடன் உரையாடிபோது கூறியவை இவை: "அண்ணை, பாரிசவாதம் உங்கள் மூளையைப் பாதித்திருக்குமே என்று பயந்து கொண்டுதான் வந்தேன். ஆனால் உங்கள் மூளை முன்னரி

**MRS டாமோடிரன்**



Mrs. டா : டார்லிங். டமில்ஸிற்கு ஏன் இந்த ஓசி வாங்கும் பழக்கம்.

Mr. டா : அது எங்க டமில் கலாச்சாரம். புதுவருஷத்திற்கு நல்ல நேரம் பார்த்து கைவிசேஷம் வாங்குவது தெரியாதா?

Mrs. டா : ஓ... ஐ சி



லும் கூர்மையடைந்திருக்கிறது" சிரித்திரனின் ஆரம்ப காலந் தொட்டுக் கட்டுரைகள் எழுதி யும் பிறவகையிலும் அன்ரன் பாலசிங்கம் செய்த உதவிகள் பல.

**நீங்கள்தான் மகுடி செய்ய வேண்டும்**

சிரித்திரனில் வெளியான கருத் துச் சித்திரங்கள் போலவே இரசிகர்களைக் கவர்ந்த மற் றொரு பகுதி பப்பா 'மகுடியார்' என்ற புனைபெயரில் ஒளித்துக் கொண்டு தமக்கு வந்த வினாக் களுக்கு வழங்கிய பதில்களாகும். வினாவியவரும், வாசகரும் மகுடியிற் கட்டுண்ட நாகங் களாய் மகிழ்ச்சியுடன் ஆட வைத்த பதில்கள் அவை. ஆரம் பத்தில் 'மகுடியார் பதில்'களை வேறு யாரைக் கொண்டாவது எழுதுவிக்கப் போகிறேன் என்று பப்பா அன்ரன் பாலசிங்கத்துக் குக் கூறியபொழுது "அண்ணை மகுடிசெய்ய வேறு ஒருவராலும் முடியாது. நீங்கள்தான் அதைச் செய்ய வேண்டும்" என்றார். அடிக்கடி தமது மனைவியுடன் எங்கள் இல்லம் வந்து சுகம் விசாரிப்பதோடு பப்பாவுடன் சிரித்துச் சிரித்து உரையாடி அன்ரன் பாலசிங்கம் எங்கள் வீட்டையே கலகலக்க வைப்பார்.

**உடல் ஓய்கிறது, ஆனால் உள்ளம்**

"நாங்கள் இறந்த பின்னும் எங் களைப் பற்றி மக்கள் பேசவைக்க வேண்டும். பிறந்தோம், இறந் தோம் என்று இருக்கக்கூடாது" என்று அடிக்கடி சொல்லிவந்த எங்கள் பப்பா, தமது மறைவுக்கு முதல் நாளும் பேனாவும் தாளும் பெற்று எழுத முனைந் தார். கூடவில்லை. என்னை அழைத்துத் தாம் சொல்வதை எழுதுமாறு வேண்டினார். அதுவும் கூடவில்லை.

மறுநாள் அவரின் மூச்சு நின்றுவிட்டது. "வானத்தமான வன் வந்தான்காண் வந்ததுபோல் போனான் காண்" என்று புலம் பும் இவ்வேளையிலும் அவர் உயிரெனப் போற்றிவந்த அவரின் கலைச் சேமிப்புக்களை நாங்கள் யாழ்ப்பாணத் திலிருந்து ஏதுமிலிகளாய் வந்த நாளிலே எங் களால் எடுத்து வரக் கூடவில்லையே என்ற ஏக்கந்தான் நெஞ்செல் லாம் நிறைந்து நிற்கின் றது. அவையெல்லாம் நூல்வடிவு பெற்று மக்க ளிடையே பரவவேண் டும் என்று 'பப்பா' கண்டு வந்தது கனவா கப் போய்விடுமா என் பதுதான் இன்று என் னைப் பாதிக்கும் பெரும் கவலை.

நிறை வாழ்வு வாழ்ந்து குடும்பத்திற் கும் நிறைவளித்து தாம் வாழ்ந்த சமூகத்திற்கும் சிந்தனை விருந்தளித்த சுந்தர் – எங்கள் பப்பா – இன்று எங்களிடையே இல்லை.

"பப்பா எங்களிடம் மீண்டும் வருவீர்களா?"




---


### சுந்தரின் 'கதைத்தேன்'

**பரிசில்**

அன்று பாலனின் பிறந்தநாள், ஏழையாகையால் அவன் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடவில்லை. அன்று மாலை அவனது பணக்கார நண்பன் சுகுமார் வந்து அவன் கைகளில் ஒரு பார்சலைக் கொடுத்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துவிட்டுப் போனான். பாலன் பார்சலைப் பிரித்துப் பார்த்தபோது அதற்குள் விலை உயர்ந்த ஓர் அழகான பர்சு ஒன்று இருந்தது. அது ஒரு வெற்று மணிப்பேர்ஸ்.

---

# மனிதருள் ஒரு மாமனிதர்





## ராதேயன்

சுந்தர் – இந்த நான்கெழுத்து மந்திரச் சொல் கடந்த நான்கு தசாப்தங்களாகத் தமிழ் மக்களைச் சிரிப்பின் ஊடாக மானிட மேன்மை குறித்துச் சிந்திக்க வைத்த சொல்.

'செய்தொழில் தெய்வம்' 'சிரிப்பே சீரியம்' என்ற சீரிய தத்துவத்தின் அடிப்படையில் தானும் வாழ்ந்து மற்றவர் களையும் வாழ வழிகாட்ட சிந்தித்த மாமனிதனை அடை யாளம் காட்டும் சொல்.

தான் அமரராகிவிட்டாலும் அழியா சிரஞ்சீவித்துவம் பெற்றுவிட்ட அற்புதமான பாத்திரங்களைப் படைத்து நம் கண்முன்னே உயிர்த்துவம் மிக்க மண்ணின் மக்களால் உலவவிடப்பட்ட மகத்தான சிருஷ்டியாளனைப் பிரதி நிதித்துவப்படும் சொல்.

தூரிகை ஏந்தி, சமூகப் புரட்சிகர சிந்தனைகளைக் கருத்தோவியம் ஆக்கி, மானிட விடியலுக்காகத் தன் வாழ்வை லட்சியபூர்வமாக அர்ப்பணித்த சித்திர வித்தக ரின் பெயரைக் குறிக்கும் சொல்.





அவர் வித்தியாசமான மனிதர். அவரைக் காணும் போதெல்லாம், பேசும்போதெல் லாம் மனிதனின் வித்தியாச மான பரிமாணங்களை உணர முடியும்.

அது அவருக்கே உரியதான தனித்துவக் குணாம்சம்.

ஒரு சமயம் சாதாரண அப்பாவி மனிதனாக, இன் னொரு சமயம் சமூக நோக்கு டன், சிறுமைகண்டு பொங்கும் சீரிய மனிதனாக, பிறிதோர் சமயம் மகத்தான ஓவியக் கலைஞராக, கருத்துச் சித்திர விற்பன்னராக, வேறொரு சமயம் மாபெரும் தத்துவஞானியாக. இவ்வாறு வெவ்வேறு விஸ்வரூப தரிசனம் கொடுப்பது, அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமே புரிந்த அற்புத விடயம்.

சொற்ப திறமைகளை வைத்துக்கொண்டே 'கெப்பர்' காட்டி, உயர்வு மனப்பான்மை உந்துதலில் உலகத்தைத் தூசாக்கி விலாசம் பேசும் கலை ஞர்களிடையே, படைப்பாளிகளி டையே அவர் ஒரு அமைதி யான, அழுத்தமான, அர்த்தம் மிக்க, உயிர்த்துவமான, கலைத்து வம் மிக்க, தழும்பாத 'நிறை குட'க் கலைஞர்.

அவர் சிந்திக்கச் சிந்திக்க மக்கள் சிரித்தனர். விலாவொ டிய மனம்விட்டு, கலகலப்பாகக் கவலை மறந்து சிரித்தனர். அவர் சிரிக்க வைக்கச் சிரிக்க வைக்க



மக்கள் அந்தச் சிரிப்பின் பின்னால் இணைந்திருந்த சிந்தனைகளின் உறுத்தலில் புருவம் உயர்த்தினர், வியந்தனர்.

சிரிப்பை உள்ளடக்கிய சிந்தனைகளும் சிந்தனையைக் கிளறிவிடும் சிரிப்பும் என அவர் தன் பேனாவினாலும் தூரிகையினாலும் காட்டிய 'ரசவாத' விந்தைகள் தமிழீழ இலக்கிய வரலாற்றில் புதிய சில பரிமாண எல்லைகளைச் சுட்டி நின்றன.

மண்ணின் மைந்தர்களாக, இந்த மண்ணின் ஆத்ம துடிப்பின் பிரதிபிம்பங்களாக, அவரால் உருவாக்கப்பட்ட பாத்திரப் படைப்புக்களின் ஜீவதத்துவ அர்த்தம் அலாதியான அற்புத தத்துவங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

சில கோடுகள், நெளிவுவளைவுகள், கிறுக்கல்கள், மேலும் சில கோடுகள் ... இவைகள் மட்டுமே ... அவரின் தூரிகையின் அமானுஷ்ய அசைவுகளில், சவாரித்தம்பர், சின்னக்குட்டி, கிட்டிணர், பாறிமாமி, மெயில் வாகனத்தார், மகுடியார், திரு. திருமதி டமோடிறான், சீனித்தாத்தா, சுட்டிபாபு, வளாவள சியாமளா, ஸ்ரீமான், செல்லக்கிளி, மைனர் மச்சான், வேலரும் மயிலரும் என ... மானிட நேயமும், சமூக நோக்கும் கொண்ட கதாபாத்திரங்கள் நம்மிடையே ரத்தமும் சதையும் கொண்ட ஜீவத்துடிப்பு மிக்க சக மனிதர்களாக எம்மிடையே உலாவரத் தொடங்கினார்.

சுந்தரைப் படைத்தவனையே பிரமிக்க வைத்த சுந்தரின் சுந்தரப் படைப்புக்கள் அவர்கள் ...

அவர் மண்ணையும் மக்களையும் நேசித்த மாமனிதர், அதனால்தான் அவரின் படைப்புக்களிலும் மண்வாசனை வீசியது, மனித நேயம் மிளிர்ந்தது.

மனிதன் சிரிக்கத் தெரிந்த மிருகம். சுந்தருக்கு முன்னோடியான ஒரு சர்வதேசக் கலைஞன் கூறிய வார்த்தைகள் இவை.

மனிதப் படைப்பின் மகோன்னதமே மனம்விட்டுச் சிரிப்பதில் தான் அடங்கியுள்ளது. சிரிக்கும் போதுதான் அவன் மனிதன் என்ற அடையாளத்தை ஸ்தீரணப்படுத்துகின்றான். சிந்திக்கும்போதுதான் அவன் மனிதனாய் வாழ முற்படுகின்றான்.

ஆகவேதான் சராசரி வெறும் மனிதனாக அல்லாமல் சகமனிதர்களையும் தான் சார்ந்த முழுச் சமூகத்தையுமே சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து 'மானிட முழுமையை' அனைவரும் அடைய வேண்டும் என்ற இலட்சியத்தை வாழ்வின் நிரந்தர குறிக்கோளாக்கி சிரித்திரன் என்ற சொல்லை வெறும் ஒரு பத்திரிகையின் பெயராக மட்டும் அல்லாது முழு மானிடத்தையுமே விளித்தெழ வைக்கும் ஒரு அறைகூவல் சொல்லாகவே பிரகடனப்படுத்தியவர். பண்டிதர் வீரகத்தி ஐயா சொல்வார்.

"சிரித்திரன் என்பது அகராதியில் சேர்க்கப்பட வேண்டிய ஆழமான அர்த்தம் கொண்ட புதிய தமிழ்ச் சொல் என்று."

அடுத்தவனைத் துயரப்படுத்தி அதில் மகிழ்ச்சி காண்பதே இயல்பாகி வரும் இன்றைய பெரும்பான்மை மானிட சமூகத்தின் நய வஞ்சகச் சிந்தனைகளிடையே வேறு விதமாக சிந்தித்தவர் சுந்தர். அதனால்தான் அவரது உலகம் புதிய உலகமாக வாழ்வின் வசீகரங்களையெல்லாம் அதற்கே உரிய அழுத்தமான அர்த்தபுஷ்டியுடன் நேசிக்க மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கும் உலகமாக இருந்தது.

சிரித்திரன் ஒரு புன்னகை சாம்ராச்சியம். அந்த ராச்சியத்திற்குட்பட்ட மனிதர்கள் சிரிப்புக்களை சுமந்த வண்ணம் சிந்திக்கும் விசித்திர அனுபவத்திற்குட்பட்டார்கள் என்பது நிஜமான நிஜம்.

நீலிக் கண்ணீரையும் போலிப்புன்னகையையும் மானிடத்தில் அவமான அடையாளங்களாக அவர் கருதினார். அதனால்தான் அவரின் படைப்புகள் சத்திய வார்ப்புகளாக உருவெடுத்தன.

அவரது படைப்புக்களோடு ஒன்றிணைந்தவர்களுக்கே சுந்தர் என்ற மாமனிதரின் ஆத்மாவின் துடிப்புப் புரியும்.

ஒவ்வொரு குண சித்திர சிருஷ்டியையும்







அவர் முழுமையான ஆத்மார்த்த விசுவாசத் துடனேயே படைத்தார். அதனால்தான் அந்தப் பாத்திரங்கள் அனைத்தி லும் அவரது ஆழ்மன உணர்வுகளின் ராகங் களும் ஆத்மாவின் பல் வேறு பரிமாணங்களும் துல்லியமாகப் பிரதி பலித்தன.

தன் சிரஞ்சீவித் தன்மை மிக்க சிருஷ்டி களின் ஊடாக என்றும் வாழப்போகும் அமரக் கலைஞன் அவர்.

அவர் எழுத்தாளர் களை உருவாக்கிய எழுத்தாளர்,

கவிஞர்களை உருவாக் கிய கவிஞர்,

ஓவியர்களை உருவாக் கிய ஓவியர்,

பத்திரிகையாளர்களை உருவாக்கிய பத்திரிகை யாளர்.

எல்லாவற்றிலும் ஒரு முழுமையைத் தேடிய ஒரு முழுமையான மனிதர்.

இந்த மண் அவரைப் பலவகையிலும் சோதித்தபோதும் அவர் சாதித்தவைகள் ஏரா ளம். தனக்குச் சாதகம் இல்லாத சகல திறமை களையும் மூர்க்கத்தன மாக நிராகரித்து, முளையிலேயே கருக வைத்து, ரசித்து திருப்தி அடையும் தமிழ் பத்தி ரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களையே அதிகமாகக் கொண்ட நம் கலையிலக்கிய உலகினின்றும் தம்மையே வேறு படுத்தி விலகிக்கொண்டவர் சுந்தர்.

அவரே நம்மை எல்லாம் பிரமிக்க வைத்த மாபெரும் கலைஞர். ஆனால் அவரோ திறமை எங்கெங்கு காணினும் அதனை உடன் தட்டிக்கொடுத் துப் பாராட்டி, ஆக்கபூர்வமான யோசனை கூறி, மேலும் மெரு கேற்றி முன்னேற வைக்கும் உயர்ந்த பண்பு கொண்ட உன்ன தமான ரசிகர் என்பது அவரை அறிந்தவர்கள் அனைவரும் அறிந்த விடயம்.

மேடைகளை அவர் நிராகரித்தார். அதற்குக் காரணம் கேட்டபோது "முன்னால் இருக் கும் மனிதர்களின் சுயசிந்தனை களை நிராகரித்து எனது கருத்தைத் திணிக்க முயலும் மனோபாவம் என்னிடம் இல்லை" என்றார்.

திறமைகளைத் தேடித் தானே செல்வார். அப்போதெல்லாம் கூறுவார், "கலைத்துவம் எங்கிருந் தாலும் அது மதிக்கப்பட வேண் டும். இல்லையேல் நம் கலாச் சாரத்தை நாமே அழித்தவர் களாகிவிடுவோம்."

முழுமையே எதிலும் கொணர முயல்வது அவரது இயல்பு. அது ஒரு கருத்தோ வியம் ஆனாலும் சரி, சிறிய துணுக்கு ஆனாலும் சரி அதில் தனக்கு பூரண திருப்தி வரும் வரை மீண்டும் வடிவம் கொடுப் பார். மற்றவர்களையும் அப்ப டியே செய்யவும் தூண்டுவார்.

"எனக்குத் திருப்தி இல்லாத முழுமையற்ற ஒன்றை மற்றவர் களிடம் படிக்கவோ பார்க்கவோ ரசிக்கவோ கொடுப்பது என்னை நானே அவமதிப்பதுடன் மற்ற வர்களையும் முட்டாள் ஆக்கும் செயல்" என்பார்.

இளந்தலைமுறையினரை உற்சாகப்படுத்துவதில் புதுமையை ஏற்படுத்திக்கொள் வதில் அவருக்கு நிகர் அவர் தான். வறட்டுத்தனமான காழ்ப் புணர்வு விமர்சனங்களை அவர் நிராகரித்தார். விமர்சகர்களை அவர் வேடிக்கையாக "படத் துக்கு பிரேம் போடும் கலை ஞர்கள்" என்பார். அவர்களால் ஒரு படத்தை நினைத்தால் அழகுபடுத்தவும் முடியும், அலங் கோலமாக்கவும் முடியும். ஒவ் வொரு படமும் அதற்கேயுரிய தனித்துவ குணாம்சங்களைக் கொண்டவை என்பதை அவர் கள் புரிந்துகொள்வது குறைவு என்பார்.

தான் ஒரு கருத்தோவிய விற்பன்னர் என்ற கர்வம் அவரி டம் கடுகளவேனும் கிடையாது. தனது படைப்புகள் அனைத்தை யும் தன் துணைவியார் முதல், சின்னம் சிறியவளாக இருந்த கடைசி மகள் சிறீவாணிவரை அனைவரிடமும் காட்டிக் கருத் துக் கேட்பார். அதற்கு மதிப்பும் அளிப்பார். அதுவே அவரது வெற்றியின் ரகசியம் என்பது பலருக்குப் புரியாத விடயமே.

"சாதாரண மக்களின் கருத் துக்களை உன்னிப்பாகக் கவனிக் காவிட்டால் மக்கள் கலையிலக் கியம் என பேசுவதிலும் எழுது வதிலும் அர்த்தம் இருக்காது. கணப்பொழுதில் உதவிக்கு







வந்து பின் தூக்கி வீசப்படும் தீக்குச்சிதான் இந்த விளக்கிற்கு நிரந்தர வெளிச்சத்தைக் கொடுக்க உதவியுள்ளது என்பதைப் பெரும்பாலானோர் அசட்டை செய்வதில்லை. இதுதான் இன்றைய பிரதான மக்களின் பலவீனம்" என்பார்.

இப்படி ஏராளம்...

சுந்தரக் கருத்துக்கள் நினைக்க நினைக்க பிரமிக்க வைக்கும்.

அவரைச் சவாரித்தம்பராகவும் மெயில்வாகனத்தார் ஆகவும் பார்த்து ஒரு அயலவர் போல் அணுகி பேசி மகிழ்பவர்கள் இன்னோர் சமயத்தில் அவரே மகுடியார் என உணரும் போது காட்டும் மரியாதையும் பயபக்தியும் அவரின் இரு வேறு பரிமாண முனைப்புகளைத் துல்லியமாக்கும்.

இன்னோர் கட்டத்தில் அவர்தான் கிட்டிணரும், மைனர் மச்சானும் ஸ்ரீமான் செல்லக்கிளியும், Mr.&Mrs. டாமோடிரனும் என அறிய வரும்போது நம்ப முடியாத வியப்பை ஏற்படுத்தும்.

மனிதரின் பல்வேறு பரிமாணங்களையும் உள்வாங்கிக் கொண்டு புதிய பரிமாணங்களைத் தன் படைப்புக்களின் ஊடாக வெளிப்படுத்தியவர் அவர்.

அவர் எல்லோரையும் நேசித்தார் – மதித்தார். அவரையும் எல்லோரும் நேசித்தார்கள் – மதித்தார்கள்.

அவர் தன்னை ஒரு அசாதாரண மனிதனாக நினைத்ததே கிடையாது.

சாதாரண – மனிதநேயம் கொண்ட மனிதனாக, சிறந்த கலாரசிகனாக, மண்ணை நேசிக்கும் மாமனிதனாகத் தன்னை வளர்த்துக்கொண்டார்.

கொள்கையளவில் அவர் ஓர் இடதுசாரி. ஆனாலும் தன்னை ஒரு 'பாதசாரி' என சாமானியனாக நினைத்துப் பெருமைப் படுவார்.

தமிழீழ விடுதலைப் போரில் தழும்பா நிலையை இறுதிவரை கடைப்பிடித்து, அதில் உணர்வு பூர்வமாக உறுதியாக இருந்து, தூரிகை ஏந்திய போராளி அவர். எழுதுகோல் ஏந்திய ஏந்தல் அவர். அதனால்தான் தமிழீழத் தலைவரால் 'மாமனிதர்' என கௌரவிக்கப்படும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றார்.

ஒரு புறம் நேரில் விடுதலையுணர்வை வாயால் மட்டும் பேசி, நடித்து பின் கதவு வழியாக சிங்கள அரசின் விருதுகளுக்குக் கைநீட்டி, அந்த கௌரவத்தைப் பெருமிதமாகப் பிதற்றித் திரியும் கலை – இலக்கிய வேடதாரிகள் மத்தியில் "குண்டின் நிழலில் பரிசா?" எனக் கேட்டு சிங்கள அரசின் விருதைப் பகிரங்கமாக நிராகரித்த நேர்மை வரலாற்றின் அழுத்தமான ஒரு அம்சம்!

அவர் மாமனிதர்தான்!

மகுடியாரிடம் "உமது மதம் எது? தெய்வம் எது?" எனக் கேட்ட கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில் கூறினார்,

"மானுடம் எனது மதம். மனித அன்பும், மனித சக்தியும் என் தெய்வம் என்று."

ஆம். அவர் வார்த்தைகள் நாவால் உரைத்தவை அல்ல. அது அவரது ஆத்மாவின் குரல்.

ஆமாம். எதையும் ஆத்மார்த்தமாக அந்தரங்க சுத்தியோடு நேசிப்பவன் அழிவதேயில்லை.

சுந்தரும் அப்படித்தான். மண்ணை நேசித்தார், மக்களை நேசித்தார்.

அவரது படைப்பிலக்கிய நேர்மை அவரது சிரஞ்சீவித்துவம் மிக்க பாத்திரங்களாக என்றென்றும் உயிர்ப்புடன்...

தம்மைப் படைத்தவனை இழந்து தவிக்கும் அவர்களுக்கு யாரால் ஆறுதல் கூற முடியும். ஆனால் அவர்களுக்கு அழிவேயில்லையெனில் அவர்களுள் அவரும் என்றென்றும் மாறாத சுந்தரச் சிரிப்புடன் உலா வருவார் என்பது சத்தியம்.

காலன் வெறும் மனிதனை காலமாக்கி விடலாம். ஆனால் காலத்தை வென்று நிற்கும் எங்கள் சுந்தரக் கலைஞனை என்னதான் செய்ய முடியும்?



# சிந்தனை ஆற்றல்மிகு சிரித்திரன் ஆசிரியர்

அகளங்கன்

புன்னகை தவழும் முகம், சிந்தனையில் ஆழத்தைக் காட்டும் அகன்ற நெற்றி, எதையும் கூர்ந்து கவனிக்கும் கண்கள், வார்த்தையின் பெறுமதியை உணர்ந்து ஒவ்வொன்றாக வெளிப்படுத்தும் உரையாடல், உள்ளத்தைப் போலவே உயர்ந்த தோற்றம், இவரா இத்தகைய கருத்துச் சொல்லும் கற்பனை வளமும் சீர்திருத்த நோக்கமும் கொண்ட சிரிப்பலைகளை நெஞ்சக் கரைதனில் மோதவிடும் நகைச்சுவைக் கடல் என்று பார்த்தவர்கள் ஆச்சரியப்படும் ஒரு மாமனிதரைப் பற்றித்தான் இங்கு குறிப்பிடுகிறேன், அவர் வேறு யாருமல்லர்

சிரித்திரன் ஆசிரியர் அமரர் சி. சிவஞானசுந்தரம்தான் இந்த மாமனிதர்.

1979ஆம் ஆண்டு நான் அவரோடு அறிமுகமாகிய நாளில் இருந்து 90ஆம் ஆண்டு பிற்பகுதி வரை அவரோடு நெருங்கிப் பழகியவன். அவரது சிரித்திரன் சஞ்சிகையில் வளர்த்தெடுக்கப்பட்டவன் என்ற வகையில் எனக்கு அவரோடும், அவரது குடும்பத்தினரோடும் நெருங்கிய பழக்கம் உண்டு. என் தந்தையைப் போலவே அவரின் அன்பு கொண்டு அக்குடும்பத்தில் ஒருவனாகிப் பழகிய எனக்கு – நினைத்துப் பார்க்க கவலையும் மகிழ்ச்சியும் போட்டி போடுகின்றன.

உண்மையில் மக்கள் சஞ்சிகை என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தது சிரித்திரன் என்றால் அது மிகையில்லை.


புகைரதத்தினுள் பத்திரிகைகளை, சஞ்சிகைகளை விற்கின்ற ஒருவன் ஒரு மூலையில் இருந்து சிரித்திரன் வாசிப்பதைப் பார்த்த சிரித்திரன் ஐயா மனம் மகிழ்ந்து போய் தனது சஞ்சிகையின் நோக்கம் நிறைவேறுகிறது என ஒரு தடவை எனக்குக் கூறியுள்ளார்.

பாமரர்களுக்கும் தனது சஞ்சிகை பலனளிக்க வேண்டும் என்பது அவர் அடிக்கடி கூறும் கருத்து. அதேபோல பின்தங்கிய கிராமங்களுக்கும் தனது சஞ்சிகை செல்ல வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தார் அவர். 1979 முற்பகுதி என நினைக்கிறேன், அப்போது நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவன். இப்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளராக இருக்கும் கலாநிதி சி. சிவலிங்கராஜா என் நல்ல நண்பர். அவரோடு சேர்ந்து காங்கேசன் துறை வீதியிலிருந்த சிரித்திரன் காரியாலயம் சென்றேன்.

ஓர் சிறிய இடம், சிறிய அச்சு இயந்திரம் உள்ள அலுவலகம், இரு பணியாட்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தச் சிறிய வித்தில் இருந்துதான் இந்தப் பெரிய ஆலமரம் உருவாகிறதா?

நான் ஒரு கணித – புள்ளி விவர மாணவன். இருப்பினும் என் ஈடுபாடுகள் முழுவதும் தமிழ் இலக்கியத் துறையில்தான் இருந்தன. என்னைப் பற்றிச் சொல்லி சிவலிங்கராஜா அறிமுகப்படுத்தியதும் என்னை நன்றாக உற்றுப்பார்த்த சிரித்திரன் ஐயா "தமிழ் இலக்கியத்தில்









நகைச்சுவை இருக்கிறதா?" எனக் கேட்டார் "நான், நிறையவே இருக்கிறது" என்று சொன்னேன்.

தான் சில பண்டிதர்களிடம் "இலக்கியத்தில் நகைச்சுவை" என்ற தலைப்பில் கட்டுரை எழுதித் தரும்படி கேட்டதாகவும் "இலக்கியத்தில் எங்கே நகைச்சுவை இருக்கிறது" என யாரும் எழுதித் தராமல் விட்டதாகவும் சொன்னார்.

அவரின் வேண்டுகோளுக் கிணங்க "இலக்கியத்தில் நகைச்சுவை" என்ற தலைப்பில் சே.நா. தர்மராசா என்ற என் சொந்தப் பெயரில் எழுதினேன். அத்துடன் பழந்தமிழ் இலக்கிய காட்சிகளை சம காலத்தோடு ஒப்பிட்டு நான் எழுதிய பல்வேறு கட்டுரைகள் "இலக்கியச்சிமிழ்" என்ற பகுதியில் அகளங்கன் எனும் புனைபெயரில் வெளியிட்டு வந்தார்.

சிரித்திரன் குடும்பத்தில் நானும் ஒருவனாகி ஐயா, அம்மா என அழைத்துப் பழகி அவர்கள் வீட்டில் உணவுண்டு, சிலவேளைகளில் அங்கேயே தங்கி இரவிரவாக உரையாடி – நினைத்துப் பார்க்க கவலையும் மகிழ்ச்சியும் போட்டி போடுகின்றன.

வவுனியாவில் இருந்து சிரித்திரன் ஐயாவைக் கண்டு கதைப்பதற்காகவே அடிக்கடி யாழ்ப்பாணம் செல்வேன். ஐயாவைப் பற்றி என்ன சொல்வது, எப்படிச் சொல்வது, சொல்ல முடியுமா, சொல்லில் முடியுமா, சிந்தனைச் சிற்பியாக விளங்கிய அவரின் சிந்தனையில் ஊற்றெடுத்துப் பிரவகித்த சிரிப்பு கலந்த முகத்தைப் பருகாதவர் யாருண்டு? சிரித்திரன் ஐயா அவர்கள் சிந்தனைக் கோவை ஒன்றை 'கதைத்தேன்' என்ற பெயரிலே நூலாக்கம் செய்ய முயன்றுகொண்டிருந்தார். அதில் இருந்து இரு விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

** ஒரு வீட்டில் வீட்டுத் தலைவர் இறந்துபோய் 31ஆம் அந்தியஷ்டி செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கு வந்த உறவினர்கள் எல்லோரும் மூக்கு முட்டச் சாப்பிட்டுவிட்டு கை கழுவும் இடத்திற்குச் சென்றார்கள். அங்கே ஒரு நாய் எலும்பும் தோலுமாகக் கிடக்கின்றது. பக்கத்தில் கிடந்த ஓர் தடியை எடுத்து அந்த நாயை அடித்துக் கலைக்க முயல்கிறார் உறவில் ஒருவர்.*

*பந்தி வைத்துக்கொண்டிருந்த மகன் ஓடி வந்து அந்த நாயை அடிக்க வேண்டாம் அது எங்கள் அப்பா வளர்த்த நாய். அவர் இறந்த நாளில் இருந்து ஒன்றுமே சாப்பிடாமல் உருக்குலைந்து போய் கிடக்கிறது என சோகமாகச் சொல்லுகிறான்.*

இந்தச் சிந்தனையின் ஆழத்தை உணர்ந்துகொள்ளும்படி வியாக்கியானம் செய்யாமல் உங்களிடமே விட்டுவிடுகிறேன்.

** அடுத்த விடயம் ஒரு நூலகத்திற்குப் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட படித்தவர் கூட்டம் படையெடுத்துச் செல்கின்றது. நடுத்தெருவில் பூனை ஒன்று செத்து இரண்டு நாட்களாகத் துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கின்றது. கற்றவர்கள் எல்லோரும் மூக்கைப் பிடித்துக் கொண்டு முகத்தைச் சுழித்தபடி மறுபக்கம் திரும்பிக்கொண்டு வேகமாக நூலகத்திற்கு வாசிப்பதெற்கெனச் செல்கிறார்கள். படிப்பறிவற்ற பாமரன் ஒருவன் அவ்வழியில் வருகிறான். அவன் முகம் சுழிக்காது அந்தப் பூனையை நடு பாதையிலிருந்து அகற்றிப் புதைத்துவிட்டு அமைதியாகச் செல்கிறான்.*

அவன் நூலகம் செல்லவும் இல்லை, அவன் கற்க வேண்டியது எதுவும் நூலகத்திலும் இல்லை. இக்கருத்தின் ஆழத்தையும் உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகின்றேன்.

எனது இலக்கியத் தேடல் நூலின் பின் பக்கத்தை அவரின் 'எழுத்துக்களால்' அலங்கரிக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டேன். மிக அருமையாக சுருக்கமாக எழுதித் தந்தார். அவரது இலக்கியப் பார்வையின் நுட்பத்தையும் ஆழத்தையும் அதிலிருந்து கண்டுகொண்டேன்.

உடலின் கதை சொல்வதல்ல கலை. உள்ளத்தின் கதை சொல்வதே உயர்ந்த கலை. திரௌபதியின் துகில் உரியப்பட்டது உள்ளத்தின் கதை 'சொல்வதற்கே' எனத்


தொடங்கி அருமையாக அவர் எழுதி இருந்தார்.

**காலக்கண்ணாடி ...**

சிரித்திரன் ஐயா அவர்கள் அடிக்கடி குறிப்பிடும் ஓர் கருத்துப்படம் நேபாள மன்னர் மகேந்திரா ஒரு தடவை இலங்கைக்கு வந்தபொழுது வேட்டைக்குச் சென்று ஓர் மானைக் கொன்று விட்டார்.

இலங்கை பிக்குகள் மான் கொல்லப்பட்டதைக் கண்டித்து ஒன்றுகூடி எதிர்ப்புக் காட்டினார். இதற்கு ஆசிரியர் ஒரு கருத்துப் படத்தை அற்புதமாக அமைத்திருந்தார்.

செத்துக் கிடக்கும் மானைச் சுற்றி புத்த பிக்குகள் அழுதுகொண்டிருக்கிறார்கள். பக்கத்திலே ஏராளமான தமிழர்களின் பிணங்கள் குவிக்கப்பட்டுக் கிடக்கின்றன.



**மகுடி ...**

அவரது மகுடி கேள்வி – பதில்கள் மிகவும் விசித்திரமானது. அதில் நகைச்சுவையுடன், காலத்தால் அழியாத கருத்துகளும் கலந்திருக்கும். சிரித்திரன் இதழ்கள், கலைஞர் கருணாநிதிக்கு ஒழுங்காக அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

கலைஞர் முதல்வராக இருந்த காலங்களிலும் இல்லாத காலங்களிலும் சிரித்திரனை வாசித்து, பாராட்டுக் கடிதங்களையும் அனுப்பி உள்ளார். மகுடி கேள்வி – பகுதி கலைஞர் விரும்பிப் படிக்கும் பகுதி என்பதை அவரின் கடிதங்கள் மூலம் கண்டுகொண்டேன்.

தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசனிடம் அவரின் தாயார் குறிப்பிட்டுப் பாராட்டிய ஒரு கேள்வி – பதில்

கேள்வி : தூங்கிய தமிழனைத் தட்டி எழுப்பியது யார்?

பதில் : அனுராதபுரத்தில் ஏறிய சக சிங்கள பிரயாணி

**கருத்தோவியங்கள்**

எத்தனையோ வகையான கருத்தோவியங்களை அவர் தமிழ் உலகுக்கு அள்ளி வழங்கியுள்ளார். சின்னக்குட்டி, சவாரித்தம்பர், மெயில்வாகனத்தார், ஒய்யப்பங்கங்காணி, மைனர் மச்சான், Mr.&Mrs. டாமோடிரன் எனப் பல்வகைப் பாத்திரங்களை உருவாக்கி சமகாலத்திற்கேற்ப கருத்துகளை, நகைச்சுவைகளை நயம்பட படைத்த அற்புத படைப்பாளி அவர்.

நல்ல எழுத்தாளன் யார் என்பதற்கு அவர் அடிக்கடி சொல்லிக்கொள்வது "சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பவர் நல்ல எழுத்தாளன் என்பார்." என்னிடம் அவர் அடிக்கடி கூறும் அறிவுரை, "அகளங்கன், தனது தாயும் மனைவியும் மகளும் ஒன்றாக இருந்து வாசிக்கக்கூடிய இலக்கியம் படைப்பவன்தான் நல்ல எழுத்தாளன். நீரும் அப்படியே எழுதும்" என்பார்.

ஐயாவைப் பற்றிய நினைவுகள் நினைக்க நினைக்க திரௌபதியின் துகிலாய் நீண்டு பெருகுபவை. சில நினைவுகளை மட்டும் இங்கே பகிர்ந்துள்ளேன்.

ஓர் அறிஞரோடு, சிந்தனாவாதியோடு, மாபெரும் கலைஞரோடு, மாமனிதரோடு சமகாலத்தில் வாழ்ந்து உரையாடி, உறவாடும் பேறு கிடைத்தது நான் செய்த புண்ணியமே.

நான் எழுத்தாளனாக உலாவரக் காரணம் சிரித்திரன் ஐயாவேதான். என் நூல்கள் யாவற்றிலும் நான் அவரை நினைவுகூறத் தவறுவதில்லை.

சிரித்திரன் சுந்தர் ஓர் காவியம். பாதத்தைத் தரையில் பதித்த தேவன். அவர் புகழ் என்றும் வாழும்.

# Suvaiyakam

**Take out & Catering**

உணவுச் சேவைக்கு

**சுவையகம்**



**3&4 – 2950 Birchmount Rd**
**Scarborough**
**ON**
**M1W 3G5**

**Tel. (416) 491-8241**
**Cell: (416) 716-0543**

**We Specialize in Sri Lankan and Indian Foods**

● கனடாவில் வெங்கட்சாமிநாதன் ●

# நீங்கள் மாக்சிய விரோதியாமே?

**கார்கோடன்**

'*சண்டைக்கார மனிதர்*' கனடா வருகின்றார் என்றதும் பரபரப்பு தொற்றிக்கொண்டது.

"பெரிய இலக்கிய 'தாதாக்களையே' கிழி கிழி என்று கிழித்துத் தொங்கப்போட்டவர் வெங்கட் சாமிநாதன். அவர் கனடாவுக்கு வருகின்றாரா?... என்னவோ உங்கள் கெட்டகாலம் போல ... நாம என்ன செய்வது. ஏதோ பாத்து ..." தமிழ் நாட்டில் இருந்து ஒரு நண்பர் துக்கம் விசாரித்து ஒரு சொட்டுக் கண்ணீரும் விட்டார்.

வெங்கட்டின் வருகையை நிறுத்த முடியுமா என்று மனம் சதித்திட்டம் போட்டது.

"இதென்ன பிரமாதம். புது டெல்கியைக் கொளுத் தும் வெய்யிலில், கனடா தூதரகத்திற்கு முன்னால் விசாவுக்காகக் காத்துக் கிடக்கின்ற மக்கள் கூட்டத்தைக் கடந்து வெங்கட்சாமிநாதனால் வரவே முடியாது." என் ஆப்த நண்பன் அடித்துக் கூறி என்னை ஆறுதல் படுத்தினான்.

நள்ளிரவில் யாராவது நண்பிகளின் கடிதம் வந்திருக்கும் என்று இரகசிய மாக இன்டர்நெட்டைத் திறந்தேன். "வெங்கட்சாமிநாதன் நாளை ரொறன்டோ விமான நிலையத்திற்கு வருகின்றார். அங்கு வந்து சேரவும்" காலம் செல்வத்தின் மின்னஞ்சல் கிடந்தது.

"விசா இல்லாமல் வெங்கட் சாமி நாதனால் கனடா வரமுடியாது." செல்வத்துக்கு அவசரம் அவசரமாக ஒரு குறிப்பு அனுப்பினேன்.

"ஆறுமாத விசாவுடன் வருகின்றார்." பதிலுக்கு மின்னஞ்சல் வந்தது.

இனி ஒன்றும் செய்ய முடியாது. 'சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பது' என்ற வீரமான முடிவு எடுத்தேன்.

தவிர்க்கவே முடியாது என்கின்ற நேரங்களில் வீரம் வந்து விடுகிறது பாருங்கள்.

வெங்கட்டைப் பார்த்தால் சண்டைக்கார மனிதர் போலத் தெரியவில்லையே? சண்டை நடக்கின்ற இடங்களில் இருந்து துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று பறந்துவிடக் கூடிய சராசரி மனிதராகத் தெரிந்தார்.

விமான நிலையத்தில் இருந்தே குழந்தையைப் போலத் தொற்றிக் கொண்டுவிட்டார். இளைஞனைப் போல உற்சாகமாய் இருந்தார். வார்த்தைகளில் குறும்பும், கலகலப்பும்.

**இப்போதும் இலக்கியத்தில் வறட்சிதான். அது இன்னம் பல இடங்களுக்கு இப்போ பரவி இருக்கின்றது**

"விசா விடயம் எப்படி சாத்தியமாயிற்று." சுரண்டிக் கேட்டேன்.

"புது டெல்லி போய் விசாவுக்குக் காத்துக் கிடந்த சனங்களின் தொகையைப் பார்த்த பிறகு கனடாவுக்கு இல்லை, இந்தக் கனடா தூதரக வாசல் 'கேட்'டை கூட என்னால் தொடமுடியாது என்று உணர்ந்துகொண்டேன்."

"பிறகு எப்படி இந்த விபரீதம் நடந்தது"

"கேட்டில் காவலுக்கு நின்ற காவல்காரன் பரிதாபப்பட்டான்."

'தனக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த இந்த மனிதருக்கு, யூன் 10ஆம் திகதி ரொறன்டோ கனடாப் பல்கலைக் கழகத்தில் விருது கொடுக்கின் றார்கள்' என்று அறிந்து அந்தக் காவல்காரன் நிரம்ப உணர்ச்சிவசப் பட்டுப் போனான்.

ஒரு சராசரி இந்தியனுக்குக் கிடைக்கின்ற கௌரவம் — இந்த விசா சங்கதியால் நின்று போய்விடக் கூடாது என்று நினைத்தானா?

அல்லது நாற்பது ஆண்டுகளாக இவருக்குத் தமிழ் நாட்டில் 'ஒரு பல்லி முட்டை' கூட யாரும் வாங்கிக் கொடுத்ததில்லை. பாவம் இவர் என்று நினைத்தானா?

சரியாகச் சொல்லமுடியாது. வாசலில் இருந்தபடியே தூதர அதிகாரி களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வெங்கட்டுக்கு விசா வாங்கிக் கொடுத்துவிட்டான்.



"அடப் பாவி"

"முழுத் தமிழ் இலக்கியமே வறட்சியானது என்று 1960 களில் கூறி யிருந்தீர்கள். 44 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போ என்ன நினைக்கின்றீர் கள்" என்று ஒரு கேள்வியை விட்டெறிந்தேன்

"இப்போதும் இலக்கியத்தில் வறட்சிதான். அது இன்னம் பல இடங்களுக்கு இப்போ பரவி இருக்கின்றது."

ரொறன்டோவில் அவரைச் சந்திக்க நிறையப் பேர் வந்தார்கள்.

"நான் ஒரு பேச்சாளன் அல்ல. என்னுடைய கருத்துக்கள் எல்லாம் சரியானது என்றும் இல்லை. கருத்துகளை நாம் சேர்ந்தே உரையாடி விவாதிக்கலாம்." என்று வெங்கட் கூறியதை யாருமே காது கொடுத்துக் கேட்டதாக இல்லை. அது என்னவோ பழக்கப்பட்ட விடயமாகப் பல இடங்களில் இருப்பதும் இல்லை.

தேவதூதன் வந்துவிட்டான் பாணியில்,

"கைலாசபதி பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?"

"பெண்ணியத்தைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?"

என்கின்ற மாதிரியான மொட்டையான கேள்விகள் முன்வைக்கப் பட்டதே தவிர யாரும் வெங்கட்சாமிநாதனிடம் தம்முடைய கருத்தை முன்வைத்து விவாதத்திற்கு அழைக்க முடியாமல் இருந்தனர். இது நமது துரதிர்ஸ்டம்.

தன்னுடைய கருத்துச் சொல்லுகின்றபோதெல்லாம் மனிதர் வார்த்தை களுக்கு வெடி மருந்து தடவி எடுத்து வருகின்றார். தயவு தாட்சணியம் கிடையாது. ஆனால் தன்னுடைய கருத்தைத் திணிக்க முற்படவில்லை. "இது என்னுடைய கருத்து.. அவ்வளவுதான்" என்று கூறிப் போகின்றார்.

"நீங்கள் மாக்சிய விரோதியாமே?"

ஒரு சந்தர்ப்பத்தில், வெகு நாட்களாக அடக்கிவைத்திருந்த கேள்வியை அடக்க முடியாமல் இடை நடுவில் போட்டு உடைத்தேன். திடீரென அமைதி. எல்லாரும் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

"நான் மாக்சிய விரோதியே கிடையாது. மாக்சிசத்தை நாம் மறுக்க முடியுமா? நான் எதிர்ப்பது அந்தப் பெயரைச் சொல்லி ஏமாற்றும் கட்சிக்காரர்களை."

உலகத்தின் ஒரு மூலையான கனடாவில் ஏற்றி வைக்கப்பட்டு சிறு மெழுகுத்திரி வெளிச்சமாக எரிந்துகொண்டிருந்த இலக்கிய பிரக்ஞைக்கு வெங்கட் சாமிநாதன் என்ன செய்து விட்டுப்போயுள்ளார் என்பது வருங்காலம் மட்டும் பதில் சொல்லக் கூடிய கேள்வி. □

**உலகத்தின் ஒரு மூலையான கனடாவில் ஏற்றி வைக்கப்பட்டு சிறு மெழுகுதிரி வெச்சமாக எரிந்து கொண்டிருந்த இலக்கிய பிரக்ஞைக்கு வெங்கட் சாமிநாதன் என்ன செய்துவிட்டுப் போயுள்ளார் என்பது வருங்காலம் மட்டும் பதில் சொல்லக் கூடிய கேள்வி**

கட்டுரை

# தொடங்கும் ஒரு உரையாடல்

வெங்கட்சாமிநாதன்

கனடாவில் புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் எனக்கு அளித்த இயல் விருது என்னை டோரண்டோவிற்கு இட்டுச்சென்றது. இந்த விருதும் சரி, கனடா பயணமும் சரி, எனக்குப் பல ஆச்சரியங்களையும் மகிழ்ச்சிகளையும் தந்தது. பல புதிய செய்திகளையும் தந்தது. பல புதிய உறவுகளையும் தந்தது. அந்த ஆச்சரியங்களையும் மகிழ்ச்சிகளையும் உறவுகளையும் தந்த புதிய செய்திகளையும் பகிர்ந்துகொள்ளுவதன் மூலம் உறவுகளையும் தொடரும் பாங்கிலேயே, எனக்குத் தோன்றுவனவற்றை உரத்து எனக்குள் சொல்லிக்கொள்ளும் பாவனையில் இங்கு பதிவு செய்யலாம் என்று எண்ணுகிறேன்.

தமிழர்கள் புலம்பெயர்வது பல நூற்றாண்டுகளாகவே தொடர்ந்தும் விட்டு விட்டும் நிகழ்ந்து வருகின்ற வரலாறுதான். ஆனால் அதற்கான காரணங்கள், தன் மொழியைத் தன் பண்பாட்டு இன அடையாளங்களைக் காத்துக்கொள்ள அல்ல. உயிர் பிழைக்கவும் அல்ல. ஏழ்மையும் தொடர்ந்த வறட்சியும்தான் காரணங்களாக இருந்துள்ளன. பாலை நிலம் என ஒன்று இல்லாமலிருக்கலாம், ஆனால் பாலைத்திணை என ஒன்று இலக்கியம் பேசுவதாலேயே பஞ்சமும் வரட்சியும் என்றும் தொடக்க காலத்திலிருந்தே மக்களைப் புலம்பெயரச் செய்து வந்துள்ளது. கரும்பு தேயிலைத்தோட்டங்களைத் தேடி, வயிற்றுப்பாட்டிற்குத்தான் என்றாலும், நூற்றாண்டுகள் பல கூட்டம் கூட்டமாகச் சென்ற காரணத்தாலோ என்னவோ, அவர்களும் ஏதோ ஒரு வகையில் தம் வேர்களின் நினைவுகளைத் தக்கவைத்துக் கொண்டுதான் உள்ளார்கள். அவர்கள் ஆளுமையில் சேர்ந்தவற்றையெல்லாம் தம் அடையாளங்களாகக் கண்டு, அவற்றை இழக்காமல் இருக்க முயன்றுள்ளார்கள். அவர்கள் ஆளுமை, மதம், சடங்குகள், பேசும் மொழி, உணவு, கோவில், போன்றவற்றையே அறிந்தது. அவர்கள் கங்காணிகளால் மந்தை மந்தையாக ஏற்றுமதி செய்யப்பட்ட கூலிகள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அல்லர். போகும் இடங்களில் எல்லாம் பூசிக்க கோவில் எழுப்பியவர்கள், முருகனுக்குக் காவடி எடுப்பவர்கள். மாரியம்மன் விழா கொண்டாடுபவர்கள். இவையெல்லாம்தான் அவர்கள இன, மொழி அடையாளங்கள்.

வி.எஸ்.சீனிவாஸ சாஸ்திரியார் ஒரு முறை தென்னாப்பிரிக்கா சென்றிருந்தபோது, அங்குள்ள தமிழர்கள் அவரது தோற்றத்தையும்,



சாஸ்திரியார் என்ற பெயரையும் அறிந்த மாத்திரத்தில் அவரை, "நீங்கள் வேதங்கள் சாஸ்திரங்களில் விற்பன்னராக இருக்க வேண்டும். நீங்கள் இங்கு வருகை தந்துள்ளது எங்களுக்குக் கிடைக்கற்கரிய பேறு. நீங்கள் தான் இன்றைய விழாவை சாஸ்திரங்களில் உள்ள முறைப்படி நடத்திக்கொடுக்க வேண்டும்" என்று அவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். அவர் தனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது என்றும், சாஸ்திரி என்பது குடும்பத்தில் வழமுறையாக வரும் பெயரென்றும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தும், தான் அருகதையின்றி இதையெல்லாம் செய்வது பாபச்செயல் என்றும் என்ன சொல்லியும் அவர்கள் கேட்பதாக இல்லை. அவர் மறுப்பை ஒரு மஹானுக்கே உரிய அளவு கடந்த தன்னடக்கம் என்றும் அவர்கள் எண்ணி, அவர்கள் பிடிவாதத்தை விடுவதாயில்லை. கடைசியில் அவர்கள் அன்புக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டவராகி, அந்த இக்கட்டிலிருந்து தப்ப, அவரும் ஏதோ முணுமுணுத்து பாவனை செய்ய, அவர்களும் அந்த விசித்திர வேத மந்திர உச்சாடனத்தைக் கேட்டு மெய்மறந்த பரவசத்தில் ஆழ்ந்திருந்தார்கள் என்றும், தான் அந்த அப்பாவி மக்களுக்குச் செய்த இந்த மோசடிக்கு, என்ன ப்ராயச்சித்தம் செய்து இந்த பாபத்திற்கு விமோசனம் தேட வேண்டுமோ என்று பரிதவித்ததாகவும் சாஸ்திரியார் எழுதுகிறார். அவரது பாப உணர்வு அவருக்கு. ஆனால் அந்த தென்னாப்பிரிக்க தமிழர்களுக்கோ, ஒரு வேதோத்தமர் மந்திர உச்சாடனம் கேட்கக் கிடைத்த சௌபாக்கியம் நிறைந்த தினமாக அது இருந்திருக்கும். இன்னமும், தம் அடையாளங்களைப் புதுப்பித்துக் கொண்ட தினமாகவும் இருந்திருக்கும். இது நடந்தது 1930களில் எப்போதோவாக இருக்கும்.

எனக்குத் தெரிய வந்த சமீபத்திய சம்பவம் ஒன்றையும் சொல்ல வேண்டும். அதுவும் சுவாரஸ்யமானது. எனது நண்பர், தில்லிப் பல்கலைக் கழகத்தில் கன்னடம் போதிக்கும் பேராசிரியராக இருக்கும் சத்யா, எண்பதுகளில் எப்போதோ, அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றில் பணியாற்றச் சென்றிருந்தார். அப்போது, ஏதோ கள ஆய்வுக்கோ எதெற்கோ, கயானா சென்றவர், பல நூற்றாண்டுகள் முன்பு கரும்புத்தோட்டத்தில் கூலிகளாக வேலைக்குச் சென்ற தமிழர்களின் இன்றைய தலைமுறையினரைச் சந்தித்திருக்கிறார். அவர்கள் பெயர்களிலும் பேச்சிலும் தமிழின் நிழல் தட்டுவதைத்தான் அவரால் இன்று பார்க்க முடிகிறது. அவ்வளவுக்கு மாற்றமடைந்துள்ளதாகக் கூறினார் அவர். அவர்கள் நடத்தும் பூசம் திருவிழாவுக்கோ அல்லது வேறு எதற்கோ அவரையும் அழைத்திருந்தனர். அது பற்றி அவர் பின்னர் தில்லிப் பல்கலைக்கழகத்தில் ஓர் . உரையாற்றினார். 20 வருடங்களுக்கு மேலாயிற்று. நான் விவரங்களுக்குப் போக முடியாது. அவர்கள் தைப்பூச விழா என்று சொல்லிக் கொண்டாலும் எதையோ அவர்கள் தம் நினைவில் பதிந்தவற்றைத்தான் தைப்பூச விழாச் சடங்குகள் என நினைத்து எதை எதையோ மிக கர்ம சிரத்தையோடும் பக்தி உணர்வோடும் செய்தது, ஆச்சரியமாகவும் வேடிக்கையாகவும் இருந்தாலும், மன நெகிழ்வு தருவதாக இருந்ததாகச் சொன்னார். அவர்களில் யாரும் பல நூற்றாண்டுக்காலமாகத் தமிழ் நாடு சென்றவர்கள் இல்லை. ஏதோ ஒரு காலத்தில் அவர்களின் முன்னோர்கள் தமிழ் நாட்டிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்று மட்டுமே பெரியவர்கள் சொல்லிக் கேட்டு அறிந்தவர்கள். ஒரு தலைமுறை மற்றொரு தலைமுறைக்கு மாறும் நினைவுகள் உருமாறி விடுகின்றன். இருப்பினும் அவர்கள் தமிழர்கள் என்ற நினைவில் வாழ்பவர்கள். தமிழ் நாட்டுடன் தைப்பூசத்துடன் உறவு கொண்டவர்கள்.

தைப்பூசம் செய்யும் காரியத்தை, இன்றைய தலைமுறையினருக்கு, புலம் பெயர்ந்தவர்களின் கனடாவில் பிறந்து வளரும் இளம் தமிழருக்கு, தமிழ்த் தொலைக்காட்சிகளும் தமிழ் சினிமாவும் செய்வதாக எனக்குத் தோன்றுகிறது.இது ஒன்றும் அவ்வளவு பெருமைப்படக்கூடியதோ, மகிழ்ச்சி தரக்கூடியதோ அல்ல. இருப்பினும், புலம் பெயர்ந்த தலைமுறையினர், சுய உரிமையும் சுய அடையாளங்களும் மறுக்கப்பட்ட போராட்டத்தில் வீடும் நாடும் இழந்து எங்கெங்கெல்லாமோ அலையாடப்பட்டு, கடைசியில் எங்கோ ஓர் இடத்தில் நிலை கொண்டுள்ளனர். அவர்களில் கவிஞர்கள் உண்டு. நாடகக் கலைஞர்கள் உண்டு. புனைகதையாளர்கள் உண்டு. அவர்கள் வாழ்வது மட்டுமல்லாமல், அவர்கள் பெற்ற எழுத்துத்திறனும் வாழவேண்டும். அவர்கள் மொழி வாழ வேண்டும். அவர்கள் தம் அடையாளங்களைக் காண்பது, காக்க புலம் பெயர்ந்தது இவ்வடையாளங்களின் வாழ்வுக்காகவே. இந்த வித்தியாசம் தான் இவர்களையும், இவர்களுக்கு முன்னால் கடந்த 30–40 வருடங்களாக தம் மண் விட்டேகிய டாக்டர் பொறியியலாளர்கள் பேராசிரியர் தமிழர்களையும் வேறுபடுத்திக்காட்டும். ஒரு டாக்டர் 1950களிலோ என்னவோ தென்னாப்பிரிக்கா சென்றார். வைத்தியக் கல்வி பெற, தம் பத்திரிகைக்கு கதைகள் எழுதினால் உதவுவதாக எஸ்.எஸ். வாசன் சொன்னார். உதவி பெற்று வைத்தியக் கல்வி பெற்று பணிபுரிய ஆப்பிரிக்கா சென்றவர் தொடர்ந்து எழுதினார். அவர் எழுத்தில் ஆப்பிரிக்காவும் இல்லை. தமிழ் அடையாளங்களும் இருந்ததில்லை. லஷ்மி என்ற அந்தத் தமிழ் எழுத்தாளரின் இலக்கியத்துடனான உறவு வேறு குணத்ததாக இருந்தது. அவரது எழுத்துக்காக அல்லாமல், சுய முயற்சியால் தன் வாழ்வைச் சீர் செய்துகொண்ட அவர் பாராட்டுக்குரியவர்.

**ஈழத்து எழுத்துக்களைப் பற்றி ஏன் தமிழ் நாட்டில் அக்கறை இருப்பதில்லை என்று என்னிடம் கேள்வி கேட்கப்பட்டது. 'தமிழ் நாட்டினரின் அங்கீகாரம் தேவையா என்ன?' என்றுகூட ஒரு நியாயமான ஆவேசக் குரல் கூட்டத்தில் எழுந்தது.**

ஆனால் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கு, தாம் தக்க வைத்துக்கொள்ள விரும்பிய அடையாளங்கள் சரித்திர நிகழ்வுகளால், போர்ாட்டங்களால் ஒட்டுமொத்த சமுதாயத்துக்குமென தீர்மானமானவை. இந்தச் சமுதாயத்தினிடையே, ஒரு திருமாவளவனையும், முத்துலிங்கத்தையும், எஸ்.பொன்னுத்துரையையும், சேரனையும் காணும்போது, வரலாற்றின் நிர்ப்பந்தங்களை, அவர்களும் தம் சமுதாயம் முழுமையுடன் பகிர்ந்துகொள்ளும்போது, அவர்கள் கவிஞர்களாக, எழுத்தாளர்களாகவே வாழும் வகையினை, வரலாற்றின் கதியிலேயே, காணத்தொடங்குகிறார்கள். வழிமுறைகளும் தோன்றத் தொடங்குகின்றன.

வரலாற்றின் ப்ரவாஹத்தில், இச்சந்தர்ப்பத்தில் வந்தடைந்த கணினியும் இணையமும் புலம் பெயர்ந்தோரின் எழுத்தின் விகாசத்திற்கும் ஒரு முனைப்படுத்தலுக்கும் உதவுவதாக நிகழ்ந்தது, இது சந்தர்ப்பங்களும் அதிர்ஷ்டமும் இணைந்த தோழமை என்று சொல்ல வேண்டும். இச்சந்தர்ப்பவச சூழலுக்கு, ஈழத்தமிழரோடு வரலாற்றின்

**தமிழநாட்டில தமிழககவிதை இப்போது தேக்கமுற்றுவிட்டதாகவும், புதுக்கவிதையில் புதிய வெளிப்பாடுகளும் பாதைகளும் ஈழத்தமிழர்களிடமிருந்தே பிறந்துள்ளதாகவும் ஈழத்தமிழர்கள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். அதற்கான சூழல் அவர்கள் வாழ்வனுபவத்தில் உண்டு என்பது உண்மை.**

நிர்ப்பந்தங்களைப் பகிர்ந்துகொள்ளாத தமிழ் நாட்டினரான, காஞ்சனா தாமோதரன், கோகுல கண்ணன், நா.கண்ணன் போன்றோர் கடன் பட்டார் என்று சொல்ல வேண்டும்.

ஒரு வித்தியாசமான உந்தலில், தனிமனிதர்களாக, தம் தகுதிக்கேற்ற வேலைகளும், வசதிகளும், பணமும், தம் திறமைக்கேற்ற அங்கீகாரமும் தேடிச் சென்றவர்கள், ஒரு சமுதாயமாகப் பெருகும்போது, தம் அடையாளங்களை, கோவில் நிர்மாணங்களில், சங்கீத, நடன நிகழ்வுகளில், பண்டிகைகளில், பட்டுப்புடவைகளில், அப்பளம் பருப்புப்பொடிகளில், ஊறுகாய்களில், பஜனைகளில் காண்பார்கள். இதைத்தான், அடையாளங்கள், ஆளுமைகளின் குணங்களில் காணுவதாகச் சொன்னேன். இவையும்தான் அடையாளங்கள். இவர்கள் பல நடன, சங்கீத கலைஞர்களுக்கு வாழ்வளிப்பார்கள். அக்கலைகளை வளர்த்தெடுப்பார்கள். சிறப்பிப்பார்கள். அவர்கள் ஆளுமையில் உள்ள சிறந்தவற்றின் வெளிப்பாடுகள். பண்பாட்டின் வெளிப்பாடுகள்.

ஆனால் இலக்கிய வெளிப்பாடு, புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் சமுதாயத்தின் ஒட்டுமொத்த ஆளுமையாக வெளிப்படுகிறது. அந்த ஆளுமையில் தமிழ் மொழியும் தம் இனத்தைப்பற்றிய அக்கறைகளும் பிரதான்யம் பெற்று வரலாற்றின் நெருக்கடிகளால் ஓர் அழுத்தமான, ஆவேசம் நிறைந்த வெளிப்பாடாகிறது.

பிறந்த இடத்தின் நெருக்கடிகளும், புலம் பெயர்ந்த இடத்தின் வாழும் சிக்கல்களும், அதற்கே உரிய தனித்த குணங்களோடு வெளிப்படும்போது அது தமிழ் இலக்கியத்திற்கு, இது காறும் இல்லாத ஓர் வளமான, தாக்கம் மிகுந்த, பரிமாண செழுமையைத் தருகிறது.

எங்கு யாரால் எழுதப்பட்டால் என்ன, இவை ஒரு கால் கட்டத்திய தமிழனின் வாழ்க்கை அனுபவங்கள். அவனது இழப்புகள், எதிர்பார்ப்புகள் நிறைந்தது. இவை புலம் பெயர்ந்தோர்க்கு மாத்திரமே சித்தித்த அனுபவங்கள். அவன் சென்றவிடமெல்லாம் விட்டுச்சென்ற பதிவுகள். சென்றவிடமெல்லாம் என்றால் அது உலகமெங்கும் அவன் அலையாடப்பட்டதன் பதிவுகள்.

இவையெல்லாம் தமிழுக்கு தமிழ் இலக்கியத்துக்கு வந்துள்ள சேர்க்கை என்பதால் அது சென்னையில், கோவில்பட்டியில், பங்களூரில் உள்ள தமிழர்களுக்கும் சொந்தம். அவர்கள் அவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்கும் மேலாக அவற்றையும் தம் இலக்கிய ப்ரவாஹத்தில் வந்து சேரும் உப நதிகளாகக் கொள்ள வேண்டும். அத்தோடு, எது, எப்போது, எதன் உப நதியாகிறது என்பது அவ்வக்கால கட்ட வெள்ளப்பெருக்கையும் அதன் குணத்தையும் பொருத்தது.

சமீபத்தில் டோரண்டோவில் நிகழ்ந்த சந்திப்பில், ஈழத்து எழுத்துக்களைப் பற்றி ஏன் தமிழ் நாட்டில் அக்கறை இருப்பதில்லை என்று என்னிடம் கேள்வி கேட்கப்பட்டது. 'தமிழ் நாட்டினரின் அங்கீகாரம் தேவையா என்ன?' என்றுகூட ஒரு நியாயமான ஆவேசக் குரல் கூட்டத்தில் எழுந்தது. அக்கேள்வி எழுப்பிய சிரிப்பலையே அக்கேள்வியின் நியாயத்தை சாட்சிப்படுத்தியது. ஒரு காலகட்டத்தில் சென்னையின் பிரபல வாரப் பத்திரிகைகளில் தம் எழுத்துக்களைக் காண்பதில் ஈழத்து எழுத்தாளர் பலர் பெருமைகொண்டார்கள் எனத் தெரிகிறது. இம்மாதிரி கேள்விகள் தொடர்கின்றன, காலம் காலமாக. பிரபல பத்திரிகைகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறே, தமக்குத் தெரியாத மொழியில், பொதுமைப்படுத்தப்பட்ட ஓர் தமிழில், தம் அனுபவத்திற்கு அன்னியமானவற்றை எழுதினார்கள். அதில் அங்கீகார ஆசைகள் தெரிந்தன. அவற்றின் சுவடுகள் இன்று காணக் கிடைக்காது. தமிழ் நாட்டு பிரபல பத்திரிகைகள் இலங்கை செல்வது அந்நாளில் தம் விற்பனை ஏஜண்டுகளைக் காண, தம் விற்பனையைப் பெருக்க. ஈழத்து எழுத்தாளர்கள் எப்படி எழுதினால் ஏற்கப்படுவார்கள் என்று சொல்ல.

இம்மயக்கத்திலிருந்து தெளிவு பெற்று விழிப்படைந்தது, நா.பார்த்தசாரதியும் பகீரதனும் இலங்கை சென்று அவர்கள் தமிழ் நாட்டுக்கு 20

வருடங்கள் பின் தங்கியவர்கள் என்று சென்றவிட மெல்லாம் பறையறிவித்தபோது. அதன்பிற்கு தான் வேறு ரக பத்திரிகைகளை ஈழத்து எழுத்தார்கள் சரஸ்வதி, எழுத்து போன்ற பத்திரிகைகளைக் கண்டார்கள். இதைத்தான் நான் தமிழ் நாட்டினரின் அகங்காரம் (arrogance) என்றேன். இல்லை, அறியாமை (ignorance) என்று சொல்லுங்கள் என்று சாது மனம் படைத்த நலலவர் சிலர் சொன்னார்கள். எபபடி எழுதவேண்டும் என்று விற்பனை ஏஜண்டுகளைக் காணச்சென்றவர்கள் இலக்கணம் படிபபிப்பதும், 20 வருடம் பின்தங்கியவர்கள் நீங்கள் என்று 60களில் பார்த்தசாரதியும் பகிரதனும் பறை கொட்டியதும் சரியாக அகங்காரம் (arrogance) என்று தானே சொல்ல வேண்டும். இதில் அறியாமை உண்டுதான். ஆனால் அறியாமை அறியாக்குணம் (arrogance) தானே.

ஆனால் இநத மிதமிதப்பு இரண்டு பக்கங்களிலும் இருப்பதைப் பார்க்க முடியும். அதில் தாரதம்யம் இராது. தன்னைக் கொஞ்சம் பெரியவனாகக் காட்டிக்கொள்ளும் ஆசைகளும் இருக்கும். தமிழ் நாட்டில் தமிழ்க்கவிதை இப்போது தேக்க முற்றுவிட்டதாகவும், புதுக்கவிதையில் புதிய வெளிப்பாடுகளும் பாதைகளும் ஈழத்தமிழர்களிடமிருந்தே பிறந்துள்ளதாகவும் ஈழத்தமிழர்கள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். அதற்கான சூழல் அவர்கள் வாழ்வனுபவத்தில் உண்டு என்பது உண்மை. நானே, சற்றுமுன் இதையே சொல்லியிருக்கிறேன். வாழ்வின், வரலாற்றின் நெருக்கடிகளில் பெரும் குரல்கள் எழும். அதன் வீச்சும் ஆழமும் அமைதியில் சொகுஸாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களிடம் பிறக்காது என்பதும் உண்மைதான். அத்தகைய தாக்கமும் வாழும் வேதனையின் வெளிப்பாடுகளிலும் ஈழத்தமிழ் கவிதைகளில் ஒரு புதிய அத்தியாயத்தையும், திருப்பத்தையும் நிகழ்த்தியுள்ளதும் உண்மை தான். இவை தமிழுக்கு வந்துள்ள எதிர்பாரா சேர்க்கை. தமிழுக்கு எல்லா வண்ணங்களும் வேண்டும். வரலாறும் பதிவு பெற வேண்டும்.



அதே சமயம், ஈழத்தமிழ் எழுத்தாளர்க்கு வேண்டாத ஆசைகள், வேண்டாத அங்கீகாரங்களில பெருமை கொள்ளும் போக்கும் எனக்குச் சில சமயங்களில் வேடிக்கையாகத் தோன்றும். எங்கள் ஊரில் சாலை இளந்திரையன் என்று ஒருவர் இருந்தார். தில்லிப் பல்கலைக் கழகத்தில தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். பேராசிரிய பதவி, தில்லிப் பல்கலை விலாசம், தன்னைப் பிரபலப்படுத்திக்கொள்ள அவர் உழைப்பும் இன்ன பிறவும், நிறைய கவிதைத் தொகுப்புகள் வெளியிட இருந்த வாய்ப்புகள், ஒவ்வொரு வேனிற்கால விடுமுறையிலும் அவர் மேற்கொண்ட சொற்பொழிவு சுற்றுப்பயணங்கள் – (இவரது துணைவியார் "நான் ஏன் பாரதியையும் பாரதிதாசனையும் படிக்கவேண்டும்? என் அருகிலேயே என் நேரமும் அவர்களை மிஞ்சிய ஒரு கவிஞர் இருக்கும்போது?" என்று சாலை உடன் அமர்ந்திருக்கும் மேடையிலேயே கூறியதை நான் கேட்டிருக்கிறேன்) – சாலை இளந்திரையனாருக்குத் தன்னையும் தன் கவிதை ஆற்றலையும் பற்றி ஒரு ஊதிய பிம்பத்தைக் கொடுத்திருந்தது. இப்போது சாலை இளந்திரையன் அவர்கள் இல்லை. அவரது மறைவுக்குப் பிறகு, அவர் சார்ந்திருந்த அரசியல் உலகிலும் சரி, பண்டித உலகிலும் சரி, அவர் சாராத இலக்கிய உலகிலும் சரி, அவர் மறைந்த சுவடுகூட தெரியாது போயிற்று. எஸ். பொன்னுத்துரையின் சுயஅபிமானத்திலும் மொழி ஆற்றலிலும் எனக்கு நல்ல மதிப்பு உண்டு. ஆனால் அவர் கவித்வ உணர்வோ, இலக்கிய உணர்வோ கிஞ்சித்தும் இல்லாத, அரசியல் மனோபாவம் கொண்ட சாலை இளந்திரையனாரின் புகழாரங்களில் மயங்கியது எனக்கு நெருடலாக இருந்தது. "என்னய்யா, சாலை போன்ற ஒரு மனிதரின் பேச்சில் மயங்குகிறீர்களே? உங்களைப் பற்றி எழுதுபவரின் தகுதியைப் பார்க்கமாட்டீர்களா, இந்த ஆளுக்குச் சுரணையே கிடையாதே?" என்று கேட்டதற்கு, "எங்களைப் பற்றி வேறு யார் கவனிக்கிறார்கள்!" என்றார். அவரைப் பற்றிய கருத்துரைகளைத் தொகுத்து வந்துள்ள புத்தகத்தில் தராதரம் இல்லாமல் யார் அவரைப் புகழ்ந்து எழுதியிருந்தாலும் எல்லாவற்றையும் பெருக்கிக் கூடையில் கொட்டிக்கொண்டுள்ளார். அந்தக் கூடையில் என்னதும் கொட்டப்பட்டுள்ளது. அந்தக் கூடையில், அவர் அழைத்து கௌரவித்த விமர்சனத் தென்றல், தி.க. சிவசங்கரனாரிடமிருந்து எதும் புகழுரைகள் இல்லை. ஏன் விட்டுப்போயிற்றோ? தெரியவில்லை. இது எஸ்.பொ போன்ற ஒரு இலக்கிய வியக்தி செய்யக்கூடிய காரியம் அல்ல. கைலாசபதி சிவத்தம்பிகளின் இவ்வளவு நீண்ட கால இருட்டடிப்புக்களை மீறி வந்தவர் சாலை

யைத் தன் வழிகாட்டி என்று சொல்லலாமா? கொண்டாடலாமா? இது நடந்துள்ளது.

இந்த மனப்பான்மையின் தொடர்ச்சிதானோ, தொடர்ந்து கேட்கப்படும், "எங்களைப் பற்றி ஏன் தமிழ்நாட்டில் கவனம் கொள்வதில்லை" என்ற கேள்வியும், என்றுகூட எனக்குத் தோன்றுவதுண்டு. ஆனால் பரஸ்பர பரிமாறல் இல்லை என்பதும் ஒரு தலைப்பட்ச உதாசீனம் உண்டு என்பதையும் பார்க்கத்தான் செய்கிறோம். இடைப்பட்ட பாக் ஜலசந்தி அப்படி ஒன்றும் கடக்கப்பட முடியாத தூரமோ இடையூறோ இல்லை தான். மீனவர்கள் கடக்கத்தான் செய்கிறார்கள். தினந்தோறும். கைது செய்யப்படுகிறார்கள். கள்ளத்தோணிகளும்தான் கடந்து செல்கின்றன். ஆனால் இங்கே தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்கு அவ்வளவாக அக்கறை கிடையாது ஈழத்தில் என்ன எழுதப்படுகிறது என்று. ஈழத்தமிழர்களுக்காகக் கண்ணீர் உகுக்கும், சவால் விடும், அறைகூவும் அரசியல்வாதிகளுக்கு அப்படி ஒன்றும் அக்கறை கிடையாது என்பது சொல்லப்படாது புரிந்துகொள்ளப்படும் உண்மை.

**இவரது துணைவியார் "நான் ஏன் பாரதியையும் பாரதிதாசனையும் படிக்க வேண்டும்? என் அருகிலேயே என் நேரமும் அவர்களை மிஞ்சிய ஒரு கவிஞர் இருக்கும்போது?" என்று சாலை உடன் அமர்ந்திருக்கும் மேடையிலேயே கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.**

அரசியல்வாதிகளின் வாய்ச்சவுடால்களைக் கேட்டு எழும் கேலிச்சிரிப்புகள் ஈழப்போராளிகள் மத்தியில் மனதுக்குள் அடக்கப்படும் என்பதும் தெரியும். எழுத்திலும் சில இடங்களில் தவறி வெளிப்பட்டுள்ளன. அரசியல் தலைவர்களுக்குத்தான் இது தெரியாது.

ஈழத்தமிழர், புலம்பெயர்ந்தவர்களும் சரி, தமிழ் நாட்டின் எழுத்துக்களை பெரும்பாலும் முடிந்த வரை தொடர்ந்து வந்துள்ளார்கள். இதை நிருபிக்க, டோரண்டோ புத்தகக் கடைகளில் அணிவகுக்கும் பாலகுமாரன்களையும், வைரமுத்துக்களையும், பார்த்தே தெரிந்துகொள்ளலாம். இது ஒரு உண்மையின் ஒரு கோடி என்றால், அதன் எதிர் கோடியில், தமிழ்நாட்டிலேயே கூட தென்படாத என் எழுத்துக்களையும் மிகுந்த கரிசனத்தோடு படிப்பவர்கள், அதன் தரத்தையும் தமக்குள் தீர்மானித்துக்கொள்பவர்களும் 6000 மைல்களுக்கு அப்பால் உள்ள டோரண்டோவில் இருக்கிறார்கள் என்பதும் அந்த உண்மையின் மறுகோடி. இதற்குச் சமானமாக ஈழத்தமிழர்களின் எழுத்துக்களை அந்த அக்கறையோடு, ஈடுபாடோடு படிப்பவர்கள் உண்டா எனில் ஓரிருவருக்கு மேல் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இன்று, காலச்சுவடு, உயிர்மை போன்ற பத்திரிகைகள் தமிழ்நாட்டு எழுத்துக்களைப் புலம் பெயர்ந்த ஈழத்தமிழருக்கு எடுத்துச் செல்லும் அளவுக்கு, ஈழத்தமிழர் எழுத்துக்கள் தமிழ்நாட்டில் கிடைக்கின்றனவா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அச்சில் இல்லாத, யாரும், பல்கலைக் கழகங்கள் கூட கவனம் கொள்ளாத யாழ் நூல் கனடா வாழும், ஒரு எஞ்சினீயர், தமிழ் அன்பர், எஸ்டேட் எஜென்சி வேலை பார்ப்பவர் வெளியிட்டுள்ளார்.

6000 மைல்களுக்கு அப்பால் (ஒரு வேளை இது இன்னும்கூட இருக்குமோ!) அயல்நாட்டில் வாழும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கு ஒரு சுந்தர ராமசாமியையும், வெங்கட் சாமிநாதனையும் (எப்படித்தான் இவங்களைத் தேர்ந்தெடுத்தானுவளோ!) கௌரவிக்க வேண்டியவர்களாக காண முடிகிறதோ அது போல தமிழ்நாட்டில் யாரும் (அரசு நிறுவனங்களை விட்டுவிடலாம். அவர்களுக்கு இருக்கும் தேசீய எல்லை வேலிகள் தனியார் நிறுவனங்களுக்கு இல்லை) அப்படி தம் பார்வையை, தமிழ் எல்லை தாண்டி நீட்டித்ததுண்டா என்றால், அந்த சிந்தனையே அவர்களுக்கு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இங்குள்ளவர்களே அவர்களுக்குத் தென்படுவதில்லை. காலைச் சுரண்டுகிறவர்கள், முதுகைச் சொறிகிறவர்களுக்கே இன்னும் கொடுத்துத் தீர்ந்தபாடில்லை. இந்த அவலம் போகட்டும். கௌரவம், பரிசு போன்றவற்றிற்குப் போக வேண்டாம். தமிழில் எழுதப்படுபவை, தன் மொழிக்கு வளம் சேர்த்துள்ளவை என்ற மொழி அபிமானமும், இலக்கிய உணர்வும் செயல்படலாமே. இதில் யார் எதில் பின் தங்கியவர்கள் என்ற பேச்சு வேண்டாம். ஒரு பரிச்சயம், சக கலைஞர் என்ற தோழமை உணர்வு செயல்படலாமே. இதில் கொடுக்கல் வாங்கல் பேரம் இல்லாது, கட்சி பேசாது, அரசியல் பேசாது, இயக்கச் சார்பு இல்லாது, ஒரு பகிர்வு, ஒரு பரிச்சயம் செய்துகொள்ளலாமே.

யாரும் எல்லாவற்றையும் படித்து இருக்க முடியாது. தெரிந்துகொண்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட சாத்தியம் எக்காலத்திலும், எந்த நாட்டிலும், எவருக்கும் இருந்ததில்லை. எல்லோரும் எல்லாவற்றையும் பற்றி எழுதிவிட முடியாது. இதை ஏன் படிக்கவில்லை, அதை எழுதினாயே இதை ஏன் எழுதவில்லை என்று யாரையும் கேட்டுவிட முடியாது. தெரிந்துகொள்வதும் படிப்பதும், எழுதுவதும், எப்போதும் யாருக்கும் எல்லைக் கோட்டுக்குள் தான் சாத்தியம். கிடைப்பதைவிட படிப்பது குறைவாகத்தான் இருக்கும். படிப்பதை எல்லாம் பற்றி எழுதிவிட முடியாது. இவையெல்லாம் தர்க்கத்திற்கு அடங்காதவை. 1961லேயே வ.அ.ராசரத்தினத்தைப் பற்றி எழுதினாயே, அ. முத்துலிங்கத்தைப் பற்றி ஒரு வரி எழுதத் தோன்றவில்லையா என்று கேட்டால், அது வாய்ப்புகளைப் பொறுத்த விஷயம். கனடாவில்

இருக்கும் செழியனின் நாடகங்களைப் படித்து இருக்கிறேன். ஆனால் ஒருவர் குறிப்பிடும் ஜே.பி. சாணக்கியாவின் பரிசு பெற்ற கதையைப் படிக்கவில்லை என்றால், இதுவும் தர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பங்களைப் பொறுத்த, அவ்வப்போதைய மன நிலைகளைப் பொறுத்த விஷயம்.

எனக்கு டோரண்டோவில் பல புதிய அறிமுகங்கள் கிடைத்தன. சிலருடைய ஆத்மார்த்த மான சிநேகபாவம் என்னை மிகவும் மன நெகிழ்ச்சிக்கு ஆளாக்கியது. எங்கோ தூரத்தில் இருந்துகொண்டு, அன்றாட வாழ்வின் நெருக்கடி களுக்கிடையேயும் நிகழும் பல புதிய முயற்சி களைக் காண எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. சேரனின் கவிதைக்கு சுதந்திரமான நடன ரூபம் கொடுத்திருந்த வீடியோ கருள் எனக்குப் போட்டுக்காட்டப்பட்டது. ஒரு புது முயற்சியாக அது என்னை மிகவும் கவர்ந்தது. இன்னும் பல கவிஞர்களின் கவிதைகள், வ.ஐ. செயபாலன், சேரன் ஆகியோரின் இசைப்படுத்தப்பட்ட ஒலிப் பேழைகளைக் கேட்டேன். இவையெல்லாம் டோரண்டோவில் நடக்கின்றன. உலகத்தமிழ் இணையத்தில் நான் எழுதுவதைத் தொடர்ந்து படித்து வரும் ஜீவன், தன் டிஜிட்டல் ஓவியங் களையும், அவற்றின் பின்னிருந்த உத்வேகங்களை யும், சம்பவங்களையும் பற்றிச் சொன்னார். காலம் இதழில் அட்டையில் வெளியான அவரது சித்திரம் அவரது முழு ஆளுமைக்கு நியாயம் செய்யவில்லை என்று எனக்குத் தோன்றியது. எங்கெங்கெல்லாமோ உள்ள சிருஷ்டி மனங்கள் எவ்வாறெல்லாமோ தம்மை வெளிப்படுத்திக் கொள்ள முயன்றுகொண்டிருக்கின்றன. அயல் மண்ணில், அயல் கலாச்சாரச் சூழலில், அங்கிருந்த நாட்களில் செல்வம் அருளானந்தம் தம்மை ஒரு கவிஞராக சொல்லிக்கொள்ளவே இல்லை. ஆனால் அவரது குறிப்பிடத்தக்க தொகுப்பு ஒன்று வெளிவந்துள்ளது என்பது, இங்கு திரும்பிய பிறகுதான் தெரிய வந்தது. ஏதோ ஒரு பத்திரிகையில் தற்செயலாகப் படித்து அறிந்து கொண்டேன். திருமாவளவனின் கவிதை வாழ்வு, அன்றாட ஜீவாதார அல்லல்களுக்கிடையேதான் ஜீவித்திருக்கிறது . இரவு பூராவும் யந்திரங்களுடன். திகைப்பாக இருந்தது. எத்தகைய இடர்ப்பாட்டி லும், மனம் சஞ்சலம்டையாது, அமைதியாக மந்திர ஸ்தாயியில் விளம்பகாலத்தில் வருடிச் செல்லும் இசை அலைகளைப் போல, மிதந்து வரும் வீணை நாதம் போல, ஒரு மெலிய புன்னகையில் தன் கேலி மறைத்து நம்முடன் உறவாடும் முத்துலிங்கத்தின் விஸ்தார உலகத்தின் க்ளாஸிக்கல் க்ராண்டியா (classical grandeur), இதை ஒரு சிகரமாக நாம் கண்டிருக்கிறோமா? எத்தனையோ கதைக்காரர்களிடையே அவரும் ஒருவர். அவ்வளவே. இவை எல்லாம் என் ஆச்சரியங்கள்.

டோரண்டோ வாழும் ஈழத்தமிழர்களோடான உரையாடல்களில் நம்மில் ஒரு சிலரே அவர் களின் கவனத்திற்கு வந்துள்ளதாக எனக்குத் தோன்றிற்று. எந்த சல்லடை இப்படி சலித்துக் கொடுத்துள்ளது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை, யூமா வாசுகி, சோ. தருமன், பெருமாள் முருகன், இமையம் போன்றோர் என்னைக் கவர்ந்த அளவு அவர்களைக் கவர வில்லையோ என்னவோ. ஈழத்தவர்களிடையே



கூட, மிகக் குறைவாகவே எழுதியுள்ள குந்தவை பற்றிக்கூட நான் எண்ணும் அளவுக்கு அவர்கள் எண்ணவில்லையோ என்னவோ, அதுவும் சாத்தியம்தான்.

எது எப்படி இருந்தாலும், அங்கீகாரம் என்றல்ல, முடிசூட்டுவது என்றல்ல. என் பார்வைக்குப் பட்டவை பற்றியெல்லாம் தொடர்ந்து பேசலாம் என்று எனக்குத் தோன்று கிறது. எனக்குத் தெரிந்த அளவில், என்னைப் பாதித்த அளவில், இங்குள்ளவை பற்றி அங்கும், அங்குள்ளவை பற்றி இங்குமான ஒரு பரிமாற்றம், ஜன்னல் திறப்பு என என் ஆச்சரியங்களையும் மகிழ்ச்சிகளையும் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

●

தொடர்

**வானத்தைப் பிளந்த கதை - 1**

# அம்மா என்னைத் தேடாதே!

செழியன்

கோடை வெய்யில் யாழ்ப்பாணத்தைக் கொளுத்தி எரித்துக்கொண்டிருந்தது. அந்த நாள் நான் வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டேன்.

ஓடிப்போய்விட்டேன் என்றதும் வேலி, மதில், மதவு, கதவு வாய்க்கால் பாய்ந்து ஓடிப்போனேன் என்று நினைத்துவிடாதீர்கள். அல்லது அப்பாவின் முரட்டுத்தனமான அடியை இடது கையால் தடுத்து நிறுத்திவிட்டு கல்லுப்போடாத செம்மண் வீதியில் விழுந்து, எழும்பி ஓடிப்போனேன் என்றும் கற்பனை செய்யாதீர்கள். சைக்கிளில் ஏறி வெகு நிதானமாகவே ஓடிப்போய்விட்டேன்.

ஏற்கனவே திட்டமிட்டபடியே வெகு கச்சிதமாக இந்த ஓடிப்போதல் நடந்தது. இந்தத் திட்டம் திடீரென்று போட்ட திட்டம் ஒன்றும் கிடையாது. இது சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்பே அங்குலம் அங்குலமாகத் திட்டமிடப்பட்ட வரலாற்று முக்கியத்துவமான நிகழ்சி.



இதை யாருமே தடுத்து நிறுத்தவில்லை. தடுத்து நிறுத்துவதற்கு யாருமே வீட்டில் இருக்கவில்லை. இருந்திருந்தாலும் தடுத்திருக்க முடியாது. ஆனால் வழி அனுப்புவதற்கு ஒரு உயிர் இருந்தது.

அது எங்கள் வீட்டு நாய். எங்கள் வீட்டில் இருந்த எல்லா உயிர்களின் மீதும் எந்த வேறுபாடும் இல்லாமல் அன்பு செலுத்திய ஒரு ஜீவன் இது. என்னில் அதற்கு ஒரு விசேட அன்பு இருந்திருக்கலாம் என்றும் இப்போது தோன்றுகின்றது.

'நாய்களின் கண்களுக்கு எருமை வாகனத்தில் வந்திறங்கும் யமராசனைத் தெரியுமாம்' என்று ஆச்சி அடிக்கடி சொல்லுவாள். அதே போல நாயின் உள்ளத்துக்கும் இவன் வீட்டைவிட்டு ஓடிப்போகின்றான் என்ற உள்ளுணர்வு ஏற்பட்டதோ என்னவோ? வாசலையும் தாண்டி தெருமுனை வரை சைக்கிளின் பின்னால் ஓடி வந்து நின்று அழுதது. அதன் கண்களில் இருந்து எனது உருவம் மறையும்வரை அங்கேயே நின்றுகொண்டிருந்தது.

1981ம் ஆண்டு இது நடந்தது. உங்களுடைய வரலாற்றுக்கு இது முக்கியத்துவமானதாக இல்லாமல் போகலாம். ஆனால் சமயத்தில உங்களுடைய வரலாற்றுக்கு இது பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தி இருக்க முடியும். அப்படி இருப்பதற்குரிய எல்லா சாத்தியமும் இந்த ஓடிப்போதலுக்கு உண்டு.

'ஓடிப்போதல்' என்ற சொல்லுக்கும் யாழ்ப்பாணத்து மரபுக்கும் ஒரே ஒரு அர்த்தம் தான் அந்தக் காலத்தில் இருந்தது. 'யாரையோ ஒரு பெண்ணை இழுத்துக்கொண்டு ஓடிப்போய் விட்டான்' என்பது தான் அதன் அர்த்தம்.

அப்படி நடந்திருந்தால் எவ்வளவோ சௌகரியமாக இருந்திருக்கும். உங்களுக்கும், எனக்கும் மட்டுமல்ல அதிகாரத்தில் இருந்த, இன்னமும் இருக்கின்ற பலருக்கும் மிகவும் சௌகரியமாக இருந்திருக்கும்.

எல்லாருடைய துரதிஸ்டமும், அச்சமயம் என்னோடு ஓடி வர எந்த ஒரு இளம் பெண்ணும் தயாராக இல்லை (இப்போதும்தான்). அதனால் நான் தனியாகவே ஓடிப்போனேன்.

எவ்வளவு தூரம் ஓடிப்போயிருப்பேன்.?

ஒரு ஐம்பது மைல் தூரம் இருக்கும்.

அடப்பாவி இவ்வளவுதானா? இதற்குப் போய் இவ்வளவு நீள, அகலமாக அலட்டிக்கொள்வதா?

நாம எவ்வளவு தூரம ஓடிப்போகின்றோம என்பது முக்கியமில்லை. ஏன் ஓடிப்போகின்றோம எனபதுதான் முக்கியம.

நீங்கள் ஐம்பது மைல் ஓடிப்போயிருந்தால வவுனியா வரை போயிருப்பீர்கள். நான் ஒடிய நோக்கத்தில் ஐம்பது மைல் தொலைவில் வந்ததோ இராமேஸ்வரம் அது இந்தியா என்ற இன்னொரு நாட்டில் இருக்கிறது என்று விபரமாக இனிச் சொல்லவேண்டியதில்லை.

ஓடி என்று போய்விட்டால் அதற்கும் பிறகு அடுத்தடுத்து எத்தனையோ விடயங்கள் நடக்கும். ஓடிப்போன சிலருக்குப் பிறகு என்ன நடந்தது என்றும் தெரியாமலே போயிருக்கின்றது. அப்படி இருந்து விடக்கூடாது என்பதற்காகச் சிலர் கடிதம் எழுதுவார்கள். இது அவர்களின் கடைசியும முதலுமான கடிதமாய் இருக்கும். கடிதத்தில் கோபம் இருக்கும். சில சமயம் கண்ணீர் இருக்கும். இன்னும் சில கடிதங்களில் பக்கத்து வீட்டுககார னுக்குக் கொடுத்த கோடாலியை அல்லது மண் வெட்டியை மறக்காமல் வாங்கி விடவும் என்றும் இருக்கும்.

சிலர் அப்பாவுக்குக் கடிதம் எழுதுவார்கள். சிலர் அம்மாவுக்கு எழுதுவார்கள். மனைவிக்குக் கடிதம எழுதியவர்களும உண்டு.


என்னைப் பொறுத்தவரை மனைவியோ கிடை யாது. இந்த ஓடிப்போதலை அப்பா தாங்கிக்கொள் வார். மிக மிகச் சரியாகச் சொல்வதானால் இந்த ஓடிப்போவதற்குரிய அத்திவாரத்தை, அவரை அறியாமல் போட்டவரே அப்பாதான். எனவே நான் அம்மாவுக்குக் கடிதம் எழுதினேன்.

கோடம்பாக்கம் இங்கிருந்து ஒரு கல் எறியும் தூரம். துணை நடிகைகளின் வாசல் தளங்களோ கண் எறிகின்ற தூரம். அங்கிருந்து இந்தக் கடிதம் எழுதினேன்

சென்னை, சூளமேடு

அம்மா என்னைத் தேடாதே!<br>
கடலோரம் வீசும் கடல்காற்றின் இரைச்சல் கேட்கிறது<br>
காற்று அறைந்து சேதி சொல்கிறது<br>
நான் போகின்றேன் அம்மா!<br>
எங்கள் நிலங்களில் நின்றும் எதிரி அறை கூவுகிறான்<br>
கும்பிட்டு, தலைசாய்த்து, மண்டியிட்டு<br>
எதிரியின் கைகளை முத்தமிட.<br>
என்ன கோழையா உன் மகன்?<br>
அயர்லாந்தைப் பார்த்தாயா?

பொபிசானின் வழி வந்த தோழன் ஒருவன் அயர்லாந்துச் சிறையில் சாகும்வரை உண்ணா விரதம் இருக்கின்றான்.



கேள்விப்பட்டாயா!

மரணத்தின் வாசற் கதவுக்கே அவன் வந்து விட்டான்.

சோர்ந்து மரணப்படுக்கையில் கிடந்தவனின் மன உறுதியைக் குலைப்பதற்காக அதிகார வர்க்கத் தினர் சதி செய்தனர்.

பசியால் துடித்துக்கொண்டிருந்த அவன் முன்னால் மூக்கைத் துளைத்துக்கொண்டு வாசனை வீசுகின்ற விதம் விதமான உணவுப் பண்டங்களையெல்லாம் வரிசையாகச் சிறை நிர்வாகம் பரப்பி வைக்கிறது.

அதற்கும் அசைந்து கொடுக்காமல் தன் கொள்கைக்கான அகிம்சைப் போராட்டத்தில சாவதற்குத் துணிந்து நிற்கின்றான் அவன்.

இன்னம் சில நாட்கள்தான் இருந்தன அவனது மரணத்திற்கு. திடீரென ஏனோ அவன் மனதில் சிறு சஞ்சலம். அதைப் பயன்படுத்தி அவனுடைய உண்ணாவிரதப் போராட்டத்தை முறியடிக்க முனைகிறது சிறை நிர்வாகம். அந்தப் போராளி யின் தாயை அவன் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது சிறை நிர்வாகம்.

பெற்ற தாயல்லவா? வயிறு பற்றி எரிய ஓடோடி வருகிறாள்.

சாவின் வாசல் கதவு வரை வந்து நின்ற தன் மகனைப் பார்த்துக் கண்ணீர் விட்டு அழுகிறாள்.



கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தன் மகனிடம் கூறுகிறாள்.

"மகனே! மனதைத் தளரவிடாதே."

"பொபிசான்சை எண்ணிப்பார்த்தாயா?"

"உனது கொள்கைகளுக்காக, உனக்கும் முன்னாள் இறந்துபோன உன் தோழர்களை எண்ணிப் பார்த்தாயா? அவர்களுடைய தியாகங்களைச் சற்று நினைத்துப் பார்த்தாயா? மக்களுக்காக இறப்பது என்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் அல்ல."

"என் வயிற்றில் பிறந்த வீரனே, நீ செத்துப் போய்விடு!"

"என் இதயத்திலேயே இருக்கின்ற என் மகனே! என்னுடையதும், உன்னுடையதுமான மக்களுக்காக நீ இறந்து போய்விடு."

"அதுதான் நமது மக்களுக்காகக் கடைசியாக நீ செய்யக்கூடியது."

"உன் மரணத்தை எண்ணி, பெற்ற என் வயிறு பற்றி எரிகின்றதடா மகனே! ஆனால் உன் கடமையை நீ செய்தே ஆகவேண்டும். அதுதான் உன் தாய்க்கும், உன் நாட்டுக்கும் நீ செய்கின்ற கடமையாய் இருக்கும்."

அழுகின்றாள் அந்தத் தாய். "செத்துப்போய் விடடா மகனே!" என்று அழுகின்றாள் அந்தத் தாய்.

சிறை நிர்வாகம் அதிர்ந்துபோகிறது.

சோர்ந்து போய் இருந்தவன் உற்சாகத்துடன எழுதுகிறான். தளர்ந்திருந்த மனதில உறுதி பிறக்கிறது. மன உறுதியுடன் தனது உண்ணாவிரப் போராட்டத்தைத் தொடர்கிறான். சில தினங்களில் உண்ணாவிரதப் போராட்டத்தில் அவனுடைய உயிர் பிரிகிறது.

அம்மா!

மறுபடியும் நாம் சந்திக்கின்றோமோ? இல்லையோ?

அயர்லாந்தில் இருக்கக் கூடிய இந்த வீரத் தாயைப் போன்று நீயும் இருப்பாய் என்று என்று நான் நம்புகின்றேன்.

அன்புடன்
மகன்

(தொடரும்)


uyirmmai image & impression

நீங்கள் ஒரு பத்திரிகை நடத்த விரும்புபவராக இருக்கலாம்.

நீங்கள் சொந்தமாக ஒரு புத்தகம் வெளியிட விரும்புபவராக இருக்கலாம்.

நீங்கள் உங்கள் புத்தகத்திற்கு ஒரு சிறந்த அட்டைப் படத்தை வடிவமைக்க விரும்பலாம்



**உங்களுடைய பதிப்பு சார்ந்த தேவைகளை நிறைவேற்ற முன்வருகிறோம்.**

**பதிப்புத் துறையில் நீண்ட அனுபவமுள்ள தொழில்நுட்பக் கலைஞர்களும் தமிழின் முக்கியமான ஓவிய, புகைப்பட கலைஞர்களும் எங்களுடன் இணைந்து இந்தச் சேவையை அளிக்க முன்வருகிறார்கள்.**

**uyirmmai image & impression**
11/29 Subramaniam Street
Abiramapuram, Chennai - 600 018
India
e-mail : uyirmmai@yahoo.co.in
Ph: 91-44-24993448
Mobile : 9884242767

# Flexnet

*Computer consultants*

**Technical Support for Your Home and Business Needs**

**Networking, Hardware Installation**
**Software troubleshooting, System Administration**
**Unix & Windows**

**Adrian Gonera**
**Dharshan Mahalingam**

**(416) 471-1162**
**http://flexnet.info.tm**
**flexnetinfo@rogers.com**

---

# தமிழர் மத்தியில்


## 16வது வருட வெளியீடு

**தயாராகின்றது**

**உங்கள் விளம்பரங்கள் இடம்பெற அழையுங்கள்**

## 416- 321-1354




# 'ஃபரனைட் 9/11'

## என் அனுபவம்

மதி கந்தசாமி

சில நாட்களுக்கு முன்பு 'ஃபரனைட் 9/11' பார்க்கலாம் என்று போயிருந்தேன். எனக்காக ஓர் ஆச்சரியம் காத்துக்கொண்டிருந்தது. என்ன தெரியுமா? இரவு 7.00 மணிக் காட்சிக்கு, இருநூறு பேர் பார்க்கக்கூடிய திரையரங்கில் 12 இடங்களே காலியாக இருந்தன. அதற்கடுத்த காட்சி கொஞ்சம் பரவாயில்லை. 15 இடங்கள் மிச்சமிருந்தன. இதுவரை எனக்கு இந்தமாதிரி ஆனதேயில்லை; அதுவும் இந்தியாவுக்கு வெளியே. சில வருடங்களுக்கு முன்பு வந்து 'ஹரிபொட்டர்' முதலாவது படத்திற்குச் சிறுவர்கள் ஆரவாரமாக வரிசைகளில் நின்றது ஞாபகம் இருக்கிறது. ஆனால், அது 'ஹரிபொட்டர்.' 'ஃபரனைட் 9/11' ஏறக்குறைய இரண்டு மணி நேரம் ஓடக்கூடியது என்றாலும் திரைப்படம் அல்ல. இது விவரணப்படம். வரலாற்றில் இரண்டாவது முறையாக கான் திரைப்பட விழாவில் Palm d'Or வாங்கி, ஏறக்குறைய 20 நிமிடங்கள் அவையோரின் கரகோஷம் பெற்றது. இதற்கு முன்னர் விருது பெற்ற விவரணப்படம் 1956இல் வெளியாகிய Monde du silence, Le (The Silent World).

'ஃபரனைட் 9/11'இல் அப்படி என்னதான் விசேஷம் இருந்தது?

ஏற்கெனவே செய்தி நிறுவனங்களிடமும், பொதுவிலும் கிடைக்கக்கூடிய விஷயங்களை வைத்து எடுத்திருக்கும் இப்படத்தில் 2000ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க அதிபர் தேர்தல், ஒசாமா பின்-லாடன் குடும்பத்தினருடன் அமெரிக்க அதிபர் குடும்பம்/நண்பர்களுக்கு எழுபதுகளில் இருந்து இருக்கும் உறவு, அதிபராகப் பதவியேற்றாலும் வெள்ளை மாளிகையில் தங்காத – நாட்டு நலனைக் கவனிக்காத – அதிபர், 9/11 விபத்து நடந்த பிறகு அதில் ஈராக்கைச் சம்பந்தப்படுத்தும் முயற்சி, ஈராக்கிற்கு இராணுவத்தை அனுப்புவது, ஆரம்பத்தில் உற்சாகமாக இருந்த இராணுவத்தினரும் அவர்களின் குடும்பத்தினரும் படிப்படியாகச் சோர்வடைவது, பிள்ளைகளைப் பலிகொடுத்த இராணுவத்தினரின் குடும்பத்தினரின் சோகம், அவர்களைவிட அதிக அளவு துக்கத்திலும் கோபத்திலும் இருக்கும் ஈராக்கிய மக்கள், ஏழை எளியவர்களாகப் பார்த்து ஆசை காட்டி முப்படைகளுக்கு ஆட்சேர்க்கும் அமெரிக்க முப்படையினர், அதேநேரத்தில் அமெரிக்க செனட்டர்களில் ஒரேயொருவரின் பிள்ளை மட்டும் இராணுவத்தில இருப்பதை மக்களுக்குத் தெரிவிப்பது என்று பல விஷயங்களை மக்களுக்குத் காட்டியிருக்கிறார் நெறியாளர் மைக்கேல் மூர்.

அத்தோடு, அமெரிக்காவில் 9/11க்குப் பிறகு 'பேர்ட்ரியோடிக் அக்ட்' என்ற பெயரில் சாதாரண பிரஜைகளின் உரிமைகளைப் பறித்தல், இராணுவத்தினத்தினர், ரோந்துப்படையினரின் சேவை நாட்டுக்குத் தேவை என்று சொல்லிக்கொண்டே அவர்களின் சம்பளத்தைக் குறைத்தல், அதனால் வோஷிங்டன் மாகாணத்தில், மேற்குக் கடற்கரையோரம் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு ஒரேயொரு ரோந்துப்படை வீரர் என்று இருக்கும் நிலை. அதுவும் முழுநேர வேலை கிடையாது. ஒதுக்கப்பட்ட நிதியும் சமீபத்தில் இன்னும் குறைக்கப்பட்டுவிட்டதாம். 'பேட்ரியோடிக் அக்டின்' இன்னுமொரு பலி வயதானதொரு வெள்ளை அமெரிக்கர். புஷ்ஷும் அவரது அரசும் போர் தொடுப்பதற்கான முக்கிய காரணம், அவர்கள் முதலீடு செய்திருக்கும் இராணுவத் தளவாட கம்பனிகள் பணம் சம்பாதிப்பதற்காகவே என்று அவர் உடற்பயிற்சி நிலையத்தில் சொல்ல, அதைத் தெரிந்துகொண்டு அவரைக் காவல்துறையினர் கைது செய்து விசாரித்து எச்சரிக்கை செய்து விடுவித்திருக்கின்றனர். ஜனநாயக அரசுமுறையின் காவலன் என்று சொல்லும் அமெரிக்காவில்

நடந்தது இது என்பதை நம்ப முடிகிறதா?

மேலே சொன்ன விஷயங்களையெல்லாம் ஒவ்வொன்றாக நீங்கள் 'ஃபாரன்ஹீட் 9/11' விவரணப் படத்தில் பார்க்கலாம். அப்படத்தில் குறிப்பிடப்படும் விஷயங்களுக்கான ஆதாரங்களை http://www.michaelmoore.com/warroom/f911notes/ என்ற இணையத்தளத்தில் Factual Back-Up For Fahrenheit 9/11 என்ற தலைப்பின்கீழ் கொடுத்திருக்கிறார்.

இவ்விவரணப் படத்தில், எனக்குப் பிடித்த பகுதிகளைக் கொஞ்சம் விரிவாகப் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்.

2000ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் இருந்து தொடங்குகிறது. ஜெப் புஷ் ஆளுநராக இருக்கும் ஃப்ளோரிடா மாநிலத்தில் நடந்த குளறுபடிகளைக் காட்டுகிறது. அம்மாநிலச் சிறுபான்மையினருக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது. அவர்கள் சும்மா இருக்கவில்லை. அமெரிக்க செனட்டில் அது குறித்து முறையிடுகிறார்கள். சிறுபான்மையினத்தவரின் பிரதிநிதிகள் செனட்டில் வந்து தம்மைப் பற்றிய விவரங்களைச் சொல்லி, எவ்வாறு சிறுபான்மையினத்தவர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது என்று அவர்களெல்லோரும் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கும் புகார் மனுவையும் காட்டிப் பேசிக்கொண்டிருக்கும் போதே செனட்டர்கள் யாரேனும் கையெழுத்திட்டிருக்கிறார்களா என்று அவைத்தலைவரும் அப்போதைய அமெரிக்க உதவி ஜனாதிபதியுமான ஆல் கோர் கேட்கிறார். ஆனால், ஒரு செனட்டரும் அவர்களின் புகாரில் கையெழுத்திட முன்வரவில்லை. குடியரசுக்கட்சி செனட்டர்கள் உட்பட. அமெரிக்க செனட்டில் ஒரு விஷயம் விவாதிக்கப்பட வேண்டுமானால், செனட்டர்கள் கையெழுத்திட்டிருக்க வேண்டும். ஆரம்பத்தில் ஓரிரு பிரதிநிகளை முழுமையாகப் பேசவிட்ட அவைத்தலைவர், பிறகு வந்தவர்களையெல்லாம் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே இடைமறித்து பேச்சை முடித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார். வலுக்கட்டாயமாக அவர்களின் பேச்சுகள் இடையிலேயே நிறுத்தப்படுகின்றன. கூடவே எவ்வாறு அதிபர் தேர்தலின்போது என்ன நடந்தது என்றும் காட்டுகிறார்கள். கூடவே Fox செய்தி நிறுவனம் கடைசி நிமிடத்தில், புஷ் வெல்லப்போகிறார் என்று சொல்கிறது. ஏனைய செய்தி நிறுவனங்களும் கொஞ்சம் கொஞ்சமாக, புஷ் வெல்லப் போகிறார் என்று சொல்கிறார்கள். Fox இல் தேர்தல் செய்திகள் சம்பந்தமான தீர்மானத்தை எடுப்பது வேறு யாருமல்ல; John Ellis என்னும் புஷ்ஷின் உறவினர்தான்.

ஒருவழியாக அதிபராகிய புஷ், பதவியேற்றுப் பேரணியில் வலம் வருகையில் ஆர்ப்பாட்டக்காரர்களால் தடுத்து நிறுத்தப்படுகிறார். நிலைமை ஒன்றும் சீரடையவில்லை. அடுத்த எட்டு மாதங்களும் புஷ் விடுமுறையில் இருந்தார். தொலைக்காட்சி நிருபரொருவர், டெக்ஸாஸில் இருக்கும் புஷ்ஷின் பண்ணையில் சந்தித்து, எப்போதுதான் வெள்ளை மாளிகைக்குச் செல்வீர்கள் என்று கேட்க, திக்கித்திணறிய புஷ் 'அங்கே இருந்தால் என்ன, இங்கே இருந்தால் என்ன? அதுதான் தொலைபேசி, தொலைநகல் வசதிகள் இருக்கின்றனவே' என்கிறார்!

செப்டம்பர் 11ஆம் தேதி புஷ் ஃப்ளோரிடாவில் இருக்கும் ஓர் ஆரம்பப் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தவர், முதலாவது விமானம் தாக்கியதை அறிந்த பின்னரும் பள்ளிக்குச் சென்றிருக்கிறார். அங்கே மாணவர்களுடன் அமர்ந்து புத்தகம் வாசிக்கக் கேட்டுக்கொண்டிருந்தவரிடம், இரண்டாவது விமானம் மோதிய செய்தியைக் கூறிய பிறகு ஏறக்குறைய ஏழு நிமிடங்கள் என்ன செய்வது என்றறியாமல் தடுமாறியது வகுப்பாசிரியையின் கமெராவில் பதியப்பட்டிருக்கிறது.

இதுபோக, ஓகஸ்ட் மாதம் அதிகாரிகள் புஷ்ஷைச் சந்தித்து அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த இருப்பதாக வந்திருந்த தகவல்களைக் கூற முயன்றதைப் பார்க்க முடிந்தது. ஆனால் அதிபரோ எதையும் கேட்கவில்லை. அதிகாரிகள் யாரையும் சந்தித்துப் பேசவில்லை. பல வருடங்களுக்கு முன் பின் லாடனுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் வழங்கியதையும், தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் 1997ஆம் ஆண்டு டெக்ஸாஸ் வந்து Unocal என்ற நிறுவனத்திடம் டர்க்மெனிஸ்தானில் இருந்து அப்கானிஸ்தான் வழியாக பாகிஸ்தானுக்கு எண்ணெய் கொண்டு போகும் குழாய்களை அமைப்பது பற்றிப் பேசியதையும் பார்க்க முடிந்தது. Unocal தலிபான் அமைப்பினரோடு ஒப்பந்தம் செய்த அன்றே, கஸ்பியன் கடலில் குழாய் அமைக்கும் ஒப்பந்தம் செய்துகொண்ட நிறுவனம் Halliburton. அதன் உரிமையாளர் இப்போதைய அமெரிக்கத் துணை ஜனாதிபதி.



தாக்குதல் நடந்த உடனேயே விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டது. புஷ்ஷின் தந்தையின் விமானம்கூட பறக்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால், தாக்குதல் நடந்த சில தினங்களுக்குள் வெள்ளை மாளிகையின் அனுமதியோடு பின் லாடனின் உறவினரும் இன்னும் சில சவுதி நாட்டவரும் அமெரிக்காவிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

பின் லாடனின் உறவினருக்கும் சவுதி நாட்டவருக்கும் வெள்ளை மாளிகைக்கும் அப்படி என்னதான் தொடர்பு? அதையும் படத்தில் பார்க்க முடிகிறது. புஷ்ஷோடு இராணுவப் பயிற்சி பெற்ற ஜேம்ஸ் பாத், பின் லாடன் குடும்பத்தினரின் அமெரிக்க மானேஜர்; அவர்கள், பணத்தை எங்கேயெல்லாம் முதலீடு செய்யலாம் என்று சொல்பவர். புஷ் எழுபதுகளில் ஆரம்பித்த ஆர்பஸ்டோ என்ற நிறுவனத்தில் ஜேம்ஸ் பாத் வழியாக ஷஃபிக் பின் லாடன் பணம் முதலீடு செய்திருந்திருக்கிறார். சில வருடங்களுக்குப் பிறகு புஷ் சேர்ந்த இன்னுமொரு நிறுவனம் Carlyle Group. புஷ் குடும்பத்தினர் நிறைய முதலீடு செய்த இந்த Carlyle நிறுவனத்தின் முக்கிய தொழில் இராணுவத் தளபாடங்கள். 1994 ஆம் ஆண்டு பின் லாடன் குடும்பத்தினரும் இந்த நிறுவனத்தில் முதலீடு செய்தனர். இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட அன்று Carlyle நிறுவனக் கூட்டமொன்று நடந்ததும், அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் முந்நாளைய அமெரிக்க அதிபர் George H.W. Bush, ஷஃபிக் பின் லாடனும் முக்கியமானவர்கள். செப்டம்பர் 11ஆம் தேதிக்குப் பிறகு பின் லாடன் குடும்பத்தினர் Carlyle கம்பனியில் இருந்து விலக நேர்ந்தது. டிசம்பர் 2001இல் Carlyle கம்பனி ஒரே நாளில் 237 மில்லியன் டாலர் லாபமீட்டினார்கள்.

அமெரிக்க அதிபருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் இராணுவத் தளவவாடம் தயார் செய்யும் நிறுவனத்திற்கும் சவுதி நாட்டவருக்கும் – குறிப்பாக பின் லாடன் குடும்பத்தினருக்கும் இருக்கும் தொடர்பைக் காட்டிய பிறகு அமெரிக்காவில் சவுதி நாட்டவருக்கு இருக்கும் செல்வாக்கைக் காட்டுகிறது. 9/11இல் என்ன நடந்தது என்று கண்டுபிடிக்க ஒரு விசாரணைக் குழுவினை ஏற்படுத்த முதலில் மறுத்த வெள்ளை மாளிகை, பிறகு அந்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் 28 பக்கங்களைத் தணிக்கை செய்தது. அமெரிக்காவில் 860 பில்லியன் டாலர்களை சவுதி நாட்டவர் முதலீடு செய்திருக்கிறார்களாம். இது அமெரிக்காவின் மொத்தச் சந்தையில் 6 – 7 சதவிகிதம். இதுபோக அமெரிக்க வங்கிகளில் ஏராளமான பணத்தையும் வைத்திருக்கிறார்களாம்.

இதுபோக 2001 மார்ச் மாதம் தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் நடத்தினார்கள். எதற்காகத் தெரியுமா? அவர்களைப் பற்றிய கருத்துகளை அமெரிக்கரும் உலக மக்களும் மாற்றிக்கொள்வதற்காகவாம்! இப்போதைய ஆப்கானிஸ்தான் அதிபர் கர்சாய் முன்பு Unocal நிறுவனத்தில் வேலை செய்தவர் என்ற துணுக்கும் கிடைக்கிறது.

'ஃபரனைட் 9/11' விவரணப்படத்தில் மேலே சொன்ன எல்லாவற்றையும் தெட்டத்தெளிவாக வைத்திருக்கிறார் மைக்கேல் மூர். இப்போதைய சூழ்நிலைகளில் வேண்டுமென்றே மக்களிடையே குழப்பத்தையும் பயத்தையும் உண்டுபண்ணி, ஈராக் அமெரிக்காவை முற்றுகையிட இருக்கிறது என்று சப்பைக்கட்டு கட்டி, அமெரிக்க மக்களைத் தேவையில்லாமல் பலிகடா ஆக்கிக்கொண்டிருக்கிறது இப்போதைய அரசு. இதுபோன்றதொரு விவரணப் படம் இதுவரை வந்ததில்லை. இப்படம், வரும் நவம்பரில் வரவிருக்கும் தேர்தலில் மாறுதலை உருவாக்கும் என்று சொல்கிறார்கள்.

அமெரிக்க ஊடகங்கள் சில நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்தால் அது உண்மை என்றே கருத இடமுண்டு. கடந்த மாதம் வெளிவந்த 'ஃபரனைட் 9/11' பற்றி விமர்சனம் கூறுகையில், சில செய்தி நிறுவனங்கள் மைக்கேல் மூரைப்பற்றிய தனிப்பட்ட தாக்குதல்களையும் வைத்தன. மைக்கேல் மூரை discredit செய்வதன்மூலம் அவரிலும் அவருடைய 'ஃபரனைட் 9/11' படத்திலும் நம்பிக்கை இழக்க வைக்கச் செய்யும் முயற்சியே இது. ஆனால், அம் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்பதையே குறைந்த தியேட்டர்களில் திரையிடப்பட்டிருந்தாலும் மில்லியன் கணக்கில் வசூல் வந்துகொண்டிருப்பது காட்டுகிறது. மார்ச் 2003இல் ஈராக் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா, போரில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரின் சம்பளத்தைக் குறைக்க முயன்றது, ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்கான சலுகைகளைக் குறைக்க முனைந்தது என்றும் நிறைய விஷயங்களைப் பார்க்க முடிகிறது. ஏழ்மையான இடங்களுக்குச் சென்று பல வேறு சலுகைகளைக் கொடுப்பதாக ஆசைகாட்டி இராணுவத்தில் சேர்ப்பதை மைக்கேல் மூரின் சொந்த ஊரான Flint, Michiganஇல் காண முடிகிறது. போரின் தொடக்கத்தில் மிகவும் சந்தோஷத்துடன் இருந்த ஒரு தாயார், எப்படி அவர் மகன் இறந்ததும் குமுறுகிறார். ஈராக்கில் இராணுவ ராங்குகள் மற்றும் விமானத்தில் இருந்து போர் புரியும் இராணுவத்தினரின் ஆரம்பகால உற்சாகம் படிப்படியாகக் குறைவதும், சேதமுற்ற ஈராக்கிய குடியிருப்புகள், படுகாயமுற்ற சிறுவர் சிறுமியர், வீதியோரங்களில் கிடக்கும் பொதுமக்களின் சடலங்கள் என்று வெகுநாட்கள் மனதில் நிற்கும் காட்சிகள்.


குடும்பத்தினரை இழந்த ஈராக்கியப் பெண்ணொருவர் அழுதுகொண்டே ஆவேசமாக அமெரிக்காவையும் அதன் மக்களையும் சபிப்பது கண்டு சில அமெரிக்கராவது மனமுருகி இருப்பார்கள், இருக்கிறார்கள் என்பதையே, இவ்விவரணப் படம் வெளியாகி நான்கு வாரங்களாகியும் நான்காம் இடத்தில் நிற்பது காட்டுகிறது. அதுவும் 'ஸ்பைடர் மான்' திரைப்படம் வெளியாகும் வரை Box Officeல் முதலிடத்தில் நின்றது. சில திரையரங்குகளிலேயே திரையிடப்பட்டாலும் இப்படம் இதுவரை ஏறக்குறைய 94 மில்லியன் டொலர் சம்பாதித்திருக்கிறது. இது அமெரிக்காவில் மட்டும்! ஏனைய நாடுகளில் எவ்வளவு சம்பாதித்திருக்கிறது,

எத்தனை பேர் பார்த்திருக்கிறார்கள் போன்ற புள்ளிவிபரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

இச்செய்திப்படம் திரையரங்குகளை வந்தடைவதற்குப் பட்ட பாடும் கொஞ்ச நஞ்சமல்ல. இப்படத்தை முதலில் தயாரிக்க ஒப்புக்கொண்ட நிறுவனம் டிஸ்னி. ஃப்ளோரிடாவில் டிஸ்னி லாண்ட் மற்றும் நிறைய துணை நிறுவனங்களைக் கொண்ட டிஸ்னி முதலில், இப்படத்தை விநியோகிக்க முடியாதென்று சொல்லிவிட்டது. பிறகு டிஸ்னியின் ஒரு அங்கமான, ஆனால் தனித்தியங்கும் Miramaxன் சொந்தக்காரர்கள் Weinstein சகோதரர்கள் தம் சொந்த செலவில் திரையிட்டிருக்கின்றனர்.

'ஃபரனைட் 9/11' இயக்குநர் மைக்கேல் மூர், போன வருடம் Bowling For Columbine என்ற இன்னுமொரு விவரணப்படத்திற்கு ஒஸ்கார் விருது பெற்ற இவர், ஒஸ்கார் விழா மேடையிலேயே ஈராக் போருக்கெதிராகக் குரல் கொடுத்தவர். Bowling For Columbineஐத் தவிர 1989இல் Roger and Me என்ற விருது பெற்ற விவரணப்படம் எடுத்தவர். Roger and Me இல் மைக்கேல் மூரின் சொந்த ஊரான Flint, Michigan இல் இருந்த 'ஜெனரல் மோட்டர்ஸ்'இன் வாகனத் தொழிற்சாலை மூடப்பட்டு ஏறக்குறைய 30,000 பேர் வேலை இழந்தது பற்றி ஜி.எம். C.E.O. Roger Smithஉடன் நேர்காணல் செய்ய முயன்றதையே படமாக எடுத்திருந்திருந்தார். இடையில் சில விவரணப்படங்களையும் தொலைக் காட்சிக்கென பிரத்தியேகமான படங்களையும் இயக்கி இருக்கிறார். இதுபோக Stupid White Men: ...And Other Sorry Excuses for the State of the Nation!, Dude, Where's My Country?, Downsize This! Random Threats from an Unarmed American ஆகிய நூல்களையும் எழுதி இருக்கிறார்.

மற்றப் படங்களில் செய்யும் சேஷ்டைகளைக் குறைத்திருக்கிறார் மைக்கேல் மூர். அவருடைய சொந்த ஊரான Flint, Michiganஐச் சேர்ந்த ஓர் இராணுவ வீரனின் தாயாரைப் பேட்டி எடுக்கும் போது முழுக்க முழுக்க அந்தப் பெண்ணையே பேசவிட்டு, தான் ஓரிரு வசனங்கள் மட்டுமே பேசி, அந்தப் பேட்டியை இந்த விவரணப்படத்தில் மிக முக்கியமானதாக ஆக்கியிருக்கிறார். சமுதாயத்தில் முன்னேற வேண்டுமானால், இராணுவத்தில் சேருங்கள் என்று பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்த அந்தத் தாய், ஆரம்பத்தில் மகன் ஈராக்கிற்குச் சென்றிருப்பதையும், மகன் முன்னம் இராணுவத்தில் இருந்ததையும் பெருமையுடன் சொல்கிறார். அவருடைய வீட்டில் அமெரிக்கக் கொடி பறக்கவிடப்படாத நாளே கிடையாது. அதுவும் கொடி நிலத்தில் படாமல் தான் கவனமாக இருப்பதைப் பெருமையாகச் சொல்லும் போது அவரையும் அவரைப் போன்றவர்களின் நாட்டுப்பற்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. சில மாதங்களுக்குப் பிறகு அத்தாயார், மகனைப் பறிகொடுத்து அவன் போர்க்களத்தில் இருந்து அனுப்பிய கடைசிக் கடிதத்தையும் கண்ணீரோடு படிக்கும்போது கலங்காதவரும் கிடையாது.



உண்மையைச் சொல்லப்போனால், மைக்கேல் மூர் அந்தத் தாயார் சம்பந்தப்பட்ட பகுதியை இத்தனை லாவகமாகக் கையாளுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

எடிட் செய்யப்பட்ட விதம் இவ்விவரணப் படத்திற்கு மேலும் வலுச் சேர்க்கிறது. மிகக் குறைவான நேரமே அவர் திரையில் தோன்றி, மற்ற நேரங்களிலெல்லாம் குரல் மட்டும் கேட்குமாறு பார்த்துக்கொண்டது நல்ல உத்தி. காட்சிகளுக்குத் தக்கபடி பாடல்களும் இசையும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சிலசமயங்களில் சிறிது ரசனைக்குறைவாக இருந்தாலும், படத்தின் கருத்துகளை ஒத்துக்கொள்பவர்கள் ரசிக்கவே செய்கிறார்கள்.

ஈராக்கிற்குச் சென்ற இராணுவத்தினரில் அமெரிக்க செனட்டர்களில் ஒருவரின் மகன் மட்டுமே இருப்பதை அறிந்துகொண்ட மைக்கேல் மூர், முப்படைகளில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவங்களை அமெரிக்க செனட்டர்களிடம் கொடுக்கும் காட்சி எல்லோரையும் சிரிக்க வைக்கும். அதிலும் செனட்டர்கள், மைக்கேல் மூர் வருகிறார் என்பதைப் பார்த்தவுடனேயே ஓடி ஒளிகிறார்கள். மூர் சொல்வதைக் கேட்ட ஒரு அமெரிக்க செனட்டர் மைக்கேல் மூருக்கு என்ன வாயிற்று என்று ஒரு பார்வை பார்க்கிறாரே அதற்கு மட்டுமே பொன்னால் பொழியலாம்.

பின்வரும் வரிகளோடு இவ்விவரணப்படம் முடிகிறது.

George W. Bush: There's an old saying in Tennessee... well, it's an old saying in Texas, I believe also in Tenneessee. "Fool me once..."

[pauses]

George W. Bush: "... shame on you".

[pauses]

George W. Bush: "Fool me..."

[pauses once again]

George W. Bush: ."I won't get fooled again."

Michael Moore: For once, we agreed.



# நான் பாடகன் ஆனது

அ. முத்துலிங்கம்

என் பள்ளிப் பருவத்தில் பல பாடசாலைகளில், பல வகுப்புகளில், பல ஆசிரியர்களிடம் படித்திருக்கிறேன். பல மாணவர்களை பரிச்சயம் செய்துகொண்டு பல வாங்குகளைத் தேய்த்திருக்கிறேன். பலவகைப்பட்ட வண்ண மைகளில் தோய்த்து தோய்த்து தொட்டெழுதும் பேனாவினால் ஊறும் தாள் கொப்பிகளை நிரப்பியிருக்கிறேன். ஊறாமல் தேங்கி நிற்கும் எழுத்துக்களை ஒற்றுத்தாள்களில் ஒற்றி எடுத்திருக்கிறேன். ஆனால் ஒரு கிளாஸை மட்டும் என்னால் மறக்க முடியாது. அதற்குப் பல காரணங்கள். சில மகிழ்வானவை; சில துக்கமானவை. அதைப்பற்றித்தான் இப்போது சொல்லப் போகிறேன்.

நாளையிலிருந்து புது வகுப்புக்குப் போகவேண்டும் என்று அம்மா சொன்னபோதே எனக்கு வயிற்றில் நடுக்கம் பிடித்தது. புது வகுப்பு என்றால் புது டீச்சர். பக்கத்து வீட்டு ஜெயராசசிங்கம் மேசை பிடிக்கப் போய்விட்டான். இந்த மேலதிக தகவலையும் அம்மாவே சொன்னார். திங்கள் புது வகுப்பு தொடங்குவதால் ஞாயிறு மாலையே இந்த வேலையை நாங்கள் செய்தாகவேண்டும்.

அந்த ஞாயிறு என்னுடன் சேர்ந்து இன்னும் சில பொடியன்களும் 'மேசை பிடிக்க' வந்திருந்தார்கள். மேசைகள் என்ன மாடுகள் போல ஓடுகின்றனவா? நல்ல மேசையைப் பிடிப்பதுதான் நோக்கம். நான் ஒரு மேசையைத் தெரிவு செய்தேன். மைப் போத்தல் வைப்பதற்கு விளிம்பிலே வெட்டி வைத்த வட்டமான துவாரம் உடையாமல் இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்தேன். கடுதாசி மடித்து வைத்துச் சமன் செய்யும் அவசியம் இல்லாமல் நாலு கால்களும் ஒரே உயரத்தில் இருக்கின்றனவா என்று அளவு பார்த்தேன். 'கமலா' என்றோ 'புவனேஸ்வரி' என்றோ எழுதியிருந்ததை கை தேயும்வரை அழி அழியென்று அழித்துக் கழுவி, முதலாம் வரிசையில் நாலாவது இடத்தில் மேசையை நிறுத்தி, சாட்சி வைத்து உறுதி செய்தேன்.

சுகிர்தம் டீச்சர்தான் எங்கள் வகுப்பு ஆசிரியை. எங்களுக்குச் சரித்திரப் பாடம் எடுத்தவர். எங்கள் வகுப்பு தரையிலிருந்து உயரத்தில் இருந்தது. படிகள் இல்லை. சுகிர்தம் டீச்சர் ஒரு மான் குட்டிபோல துள்ளிக்கொண்டு பாய்ந்து ஏறுவார்; இறங்குவார். அவருக்கு அரைத்தாவணிக்கு தகுதியான முகம். ஆனாலும் பூப்போடாத, கோடு போடாத பிளேன் பருத்திச் சேலையை உடுத்தி வருவார். அது அவர் உடம்பைச் சுற்றி இருக்க, ஒவ்வொரு மடிப்பும் அது அதற்கு விதித்த இடத்தில் அசையாமல் பள்ளி விடுமட்டும் காத்திருக்கும். இது எப்படி என்று எங்களுக்கு விநோதமாகப் படும். எங்களில் பலர் அவர் சாரியை உடம்பில் உடுத்திவிட்டு இஸ்திரி பண்ணுகிறார் என்பதை பலமாக நம்பினோம்.

இவர் வகுப்பில் தண்டிப்பதே இல்லை. குளப்படி மிஞ்சினால் அடிமட்டத்தை எடுத்துக் கூர்ப் பக்கத்தால் சிறு தட்டுத் தட்டுவார். அப்படித் தட்டிவிட்டு அவர் முகத்தில் தோன்றும் வேதனையைப் பார்த்தால் அவர் மனதை இப்படிக் காயப்படுத்திவிட்டோமே என்ற வருத்தம்தான் எங்களுக்கு ஏற்படும்.

சுப்பிரமணியம் மாஸ்டர்தான் எங்களுக்குப் பூமிசாஸ்திரம் எடுத்தவர். எவ்வளவுதான் உண்மையை நீட்டினாலும் இவருடைய உயரம் 5 அடி 3 அங்குலத்தைத் தாண்டாது. 20 வயதானதும் இவர் உயரமாக வளர்வதை நிறுத்திவிட்டார்; ஆனால் அகலமாக வளர்வதை நிறுத்தவில்லை. வயது கூடக்கூட அகலமும் கூடியது. நான் பள்ளிக்கூடத்தை விடும் வரைக்கும் அவர் வகுப்பு வாசல்களுக்குள்ளால் வரும்படியான சைஸால்தான் இருந்தார்.

முதல் நாள் வகுப்பில் 'பிள்ளைகளே' என்று ஆரம்பித்து பூமிசாஸ்திர பாடத்துக்கு நாங்கள் என்ன என்ன வாங்கவேண்டும் என்று ஒரு பட்டியல் தந்தார். ஒரு சிறு ராஜகுமாரனாக இருந்தால் ஒழிய அவர் சொன்ன அவ்வளவு சாமான்களையும் வாங்கும் வசதி பெற்றவர் அந்தக் கிராமத்தில் ஒருவர்கூட இல்லை. அவர் சொன்ன பொருள்களில் ஒன்று 160 பக்க சிவப்பு மட்டை மொனிட்டர்ஸ் கொப்பி. இதை எப்படியும் வாங்கிவிடவேண்டும் என்று நான் பிடிவாதமாக நின்றேன். என் அண்ணனும், அக்காவும் எதிரிகளாக மாறி அம்மாவின் மனதைக் குழப்பப் பார்த்தார்கள். நான் கெஞ்சிக்கூத்தாடி எப்படியோ கொப்பியை வாங்கிவிட்டேன்.

முதல் நாள் அவர் சொன்ன வசனத்தைக் கொப்பியின் முதல் பக்கத்தில், முதல் லைனில் எழுதினேன். 'உலகத்திலேயே மிகப் பெரியது சைபீரிய' சமவெளிப் பிரதேசம்.' அதற்கு பிறகு அடுத்த வரி நிரப்பப்படவில்லை; அடுத்த பக்கமும் நிரப்பப்படவில்லை. வருடம் முழுக்க அந்தக் கொப்பி அப்படியே புல் பூண்டு ஒன்றும் முளைக்காத சைபீரிய பெருவெளி போல ஓவென்றுபோய் கிடந்தது.

எனக்குப் பக்கத்தில் இருந்து சோதனை எழுதினவன் ராஜகோபால். சுகிர்தம் டீச்சர் சரித்திரத்தில் பத்துக் கேள்விகளில் ஒன்று வலகம்பாகு என்று சொல்லியிருந்ததால் இவன் எல்லாக் கேள்விகளுக்கும்

'வலகம்பாகு' 'வலகம்பாகு' என்று ஒரே விடையை எழுதி பத்து மார்க் சம்பாதித்துவிட்டான். இவன் பிற்காலத்தில் படித்து பெரிய டொக்டராக வந்தான். எல்லா வியாதிகளுக்கும் ஒரே இஞ்செக்ஷன் போட்டிருப்பானோ தெரியாது.

ஆனால் அம்பிகைபாகன் இன்னும் நுட்பம் கூடியவன். இனி இல்லையென்ற புத்திசாலி. எந்தக் கட்டுரையையும் நீட்டிவிடுவான். பராக்கிரமபாகு 33 வருடம் ஆட்சிப் புரிந்தான் என்று நேராக எழுதமாட்டான். 'பராக்கிரமபாகு பாண்டியனை தோற்கடித்தான். பத்து வருடங்கள் ஆட்சி செய்தான். பொல நறுவையை ராசதானியாக்கினான். இன்னும் பத்து வருடங்கள் ஆண்டான். புத்தருடைய தந்தத்தை திருப்பிக் கொண்டு வந்தான். மேலும் 13 வருடம் ஆட்சி நடத்தினான். தன் மகன் விஜயபாகுவுக்குப் பட்டம் சூட்டினான்.' இப்படி எழுதுவான். சுகிர்த டீச்சரின் தயாள குணத்தி னால் அவனுக்கு எப்படியோ முழு மார்க் கிடைத்துவிடும்.

அப்பொழுது எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு ரூல் இருந்தது. பள்ளிக்கூடம் விட்டதும் ஒவ்வொரு வகுப்பும் அவரவர் வகுப்பில் தேவாரம் பாடிய பிறகே வீட்டுக்குப் போகவேண்டும். இது கண்டிப்பான சட்டம்.

இந்த தேவாரம் பாடுவதற்கு எங்கள் வகுப்பில் மூன்று தகுதியானவர்கள் இருந்தோம். சபாரத்தினம், குணவதி, நான். ஞானசம்பந்தர் பாண்டிய நாட்டுக்குப் புறப்பட்டபோது எல்லோரும் அவரை எச்சரித்தார்கள். சமண நாடு ஆபத்தானது, போகவேண்டாம் என்றார்கள். சம்பந்தர் 'எனக்கு என்ன பயம்' என்று பாடிய பதிகம்தான் 'வேயுறு தோளி பங்கன்.' சம்பந்தர் பாடியது சரி. ஆனால் சபாரத்தினம் பாடத் தொடங்கியபோது மொத்த வகுப்புமே பயத்தில் நடுங்கும். அதில் 'அ' வரும் இடத்தில் 'ஆ ஆ ஆ' என்று ஆலாபனை செய்தும், 'ஏ' வரும் இடத்தில் 'ஏ ஏ ஏ' என்று நீட்டியும் சும்மா கிடந்த பாட்டை பத்து நிமிடத்துக்கு இழுத்துவிடுவான்.

இவன் பிற்காலத்தில் தேவாரம் பாடுவதை நிறுத்திவிட்டு உதைப் பந்தாட்டத்தில் பிரபல்யம் அடைந்தவன். அவனுடைய லட்சியம் எல்லாம் எவ்வளவு பலம் உண்டோ அவ்வளவையும் பிரயோகித்துப் பந்தை உயரத்துக்கு அடிப்பது. அது சூரியனிடம் போகவேண்டும்; குறைந்த பட்சம் அதை மறைக்க வேண்டும். பார்வையாளர்கள் எல்லாம் கழுத்தை முறித்து இரண்டு நிமிடம் மேலே பார்க்கவேண்டும். எதிர் சைட்டில் கவிழ்த்து வைத்த ப வடிவத்தில் ஒரு கோல் போஸ்ட் இருப்பதோ, அதற்குள் பந்தை அடித்தால் ஒரு கோல் கிடைக்கும் என்பதோ, கோல்களை எண்ணியே வெற்றி நிச்சயிக்கப்படுகிறது என்பதோ அவனுக்கு பொருட்டில்லை. பந்து காலில் பட்டால் அது உயரத்துக்கு எழும்பவேண்டும் என்பதே முக்கியம்.

குணவதி குணமானவள். திருநீறு பூசி அதற்குமேல் சந்தனப்பொட்டு வைத்து அதற்குமேல் ஒரு துளி குங்குமம் வைத்துக் கொண்டு வருவாள். பாவாடை பின்பக்கத்தை இழுத்து இழுத்துக் குதிக்காலை மறைத்தபடியே இருப்பாள். ஏதோ அதில்தான் உயிர் நிலையம் இருக்கு என்றமாதிரி. லம்போதரா வரைக்கும் சங்கீதம் கற்றிருந்தாள். இவள் தெரிவு செய்யும் பாடல் 'ஆய கலைகள்' என்று தொடங்கும். சரியான ராகத்தில், சரியான தாளத்தில் பாடுவேன் என்று அடம் பிடிப்பாள். இது பெரிய குற்றம் என்று சொல்லமுடியாது. ஆனால் குற்றம் என்னவென்றால் ஒவ்வொரு வரியையும் இரண்டு தரம் அல்லது மூன்று தரம் பாடுவது தான். இப்படி அவள் லயித்துப் பாடி முடிக்கும்போது மற்ற வகுப்பு மாணவர்கள் எல்லாம் வீடுபோய்ச் சேர்ந்துவிடுவார்கள்.

என்னுடையது 'பாலும் தெளிதேனும்' என்று தொடங்கும். எனக்காகவே அவ்வையார் பாடி வைத்ததுபோல நாலே நாலு மணியான வரிகள். கொக்குவில் ஸ்டேசனில் நிற்காமல் போகும் எக்ஸ்பிரஸ் ரயில்வண்டிபோல ஸ்பீட் எடுத்துப் பாடுவேன். முழுப்பாடலையும் பத்து செக்கண்டுகளுக்குள் பாடி முடித்துவிடுவேன். கடைசி அடியில் 'சங்கத் தமிழ் மூன்றும்' என்ற இடம் வரும்போது வகுப்பில் மூன்று பேர்தான் மிச்சம் இருப்போம். நான், குணவதி, சுகிர்தம் டீச்சர்.

இந்தக் காரணத்தினால் வகுப்பில் எனக்கு நல்ல புகழ் இருந்தது. கடைசி மணி அடித்தவுடன் எங்கே குணவதியோ, சபாரத்தினமோ பாடத் தொடங்கி விடுவார்கள் என்று கிளாஸ் அஞ்சும். கடைசி மணி அடிக்கச் சில நிமிடங்கள் இருக்கும்போதே பொடியன்கள் பின்னுக்கு இருந்து என் உட்காரும் பகுதியில் கிள்ளத் தொடங்குவார்கள். நான் கரும்பலகையை பார்த்தபடி நெளிவேன். மணி அடித்து அந்த ரீங்காரம் அடங்குவதற்கிடையில் என் பாடல் முடிந்துவிடும்.

இன்றுவரை பிடிபடாத ஒரு மர்மமாக இருப்பது சுகிர்தம் டீச்சர் என்னை ஒரு பாட்டுக்காரனாக எப்படித் தெரிவு செய்தார் என்பது. என்னுடைய குரல் வளம் அந்தக் காலத்து டீ.ஆர். மகாலிங்கத்தின் குரலுக்குச் சவாலாக எதிர்காலத்தில் வரும் என்ற நம்பிக்கையில் இருக்கலாம். அல்லது கிரமமாக வகுப்பில் தேவாரம் பாடியதற்காக இருக்கலாம். அல்லது எவ்வளவு ஸ்பீடில் பாடினாலும் சங்கீதத்தின் ஒரு நுனி அந்தப் பாடலில் தென்பட்டதால் இருக்கலாம்.



அந்த வருடம் கொழும்பு, கண்டி, மாத்தளை என்று பிரதானமான நகரங்களில் எல்லாம் நாடகம் போடவேண்டும் என்று எங்கள் பள்ளிக்கூடம் முடிவெடுத்தது. இதில் வரும் லாபம் கட்டிட நிதிக்கு பயன்படும். அந்த நாடகத்தில் இடம் பெற்ற பிரதான மான பாடகர்களில் நானும் ஒருவன்.

கொழும்புக்கு நாடகக்குழுவோடு போவதென்பது நினைத்துக்கூட பார்க்க முடியாத பெரிய விஷயம். 'பாலும் தெளிதேனும்' பாடிச் சேர்த்துவைத்த என் புகழ் என் வகுப்பர்களிடம் சரிந்து பொறாமையாக உருவெடுத்தது. அதை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் நாடகக் குழுவில் போவதற்கு இருந்த ஒரு நிபந்தனை என்னை தடுமாறவைத்தது. கறுப்புச் சப்பாத்து அணியவேண்டும் என்று சொல்லிவிட்டார் கள். என்னிடம் இருந்தது முன்பக்கம் கொஞ்சம் நிமிர்ந்த பிரவுன் சப்பாத்து. புதுச் சப்பாத்து என்றால் பக்கத்து வீட்டை கொள்ளை அடிக்கவேண்டும் என்று அம்மா சொல்லிவிட்டார். பிரவுன் சப்பாத் துக்கு கறுப்பு பொலிஷ் பூசி அதைக் கறுப்பாக்கினேன். லேசை பெருக்கல் குறிபோல மாறி மாறிப் பின்னிக் கட்டினேன். ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. இன்று தான் முதல் முதலாக ஒப்புக்கொள்கிறேன்.

கொழும்பிலே நாடகங்கள் எல்லாம் குறைவின்றி அரங்கேறின. ஒவ்வொரு நாடகத்துக்கும் டிக்கட்டுகள் விற்றுத் தீர்த்தன. அதிலே 'சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே' என்று உச்சத்தில் எடுத்து பிறகு சடா ரென்று கீழே போய் 'ஆடுவோமே' என்று பாடி அசத்திய என் சாதனை பெரும் பங்கு வகித்தது. இந்தக் கொழும்புப் பயணத்தில் நாலு மறக்கமுடியாத சம்பவங்கள் நடந்தன; அதிலே ஒன்று இங்கே சொல்லமுடியாதது.

முதல் முதலாக கழிவறையைப் பார்த்தேன். காலைக்கடன் முடித்துவிட்டு மேலே தொங்கும் சங்கிலியை எட்டி இழுத்தால் தண்ணீர் எங்கிருந்தோ குபுகுபுவென்று பெரும் ஓசை எழுப்பி வந்து அடித்துக் கொண்டு போனது. நான் திகைத்துப் போய் வந்த காரியத்தை மறந்து சுவரோடு நின்றேன். வெளியே வந்து ஒருவரிடம் இந்தத் தண்ணீர் எங்கே போகிறது என்று கேட்டால் 'இந்து சமுத்திரம்' என்று சொன் னார். எங்களுக்கு பூமிசாஸ்திரம் படிப்பித்த சுப்பிர மணியம் மாஸ்டர் இது பற்றி ஒன்றுமே சொல்லித் தரவில்லை. அவர் சைபீரியா சமவெளியைப்பற்றியே பேசினார். அதுவும் ஒரு வரி. இந்து சமுத்திரத்தின் இந்தப் பெரிய வேலையை நான் அன்று அறிந்து கொண்டேன். இந்து சமுத்திரத்துடன் எனக்கான உறவு இப்படித்தான் ஆரம்பித்தது.

நாடக ஒத்திக்கையின் போது சபாபதி மாஸ்டர் என்னைப் போட்டு உருட்டி எடுத்துவிடுவார். இவருக் கும் எனக்கும் ஒரு தொடர்பும் இல்லை. பெரிய கிளாசுக்கு படிப்பித்தவர். இவர் தலையில் ஒரு பகுதி முடி முளைப்பதை நிறுத்திவிட்டது. சைக் கிளைப் பிடித்து பத்தடி தூரம் ஓடிய பிறகு ஏறுவார். சில நேரங்களில் அவர் ஏறுமுன்னரே அவர் போக வேண்டிய இடம் வந்துவிடும். என்னை இல்லாமல் செய்வதற்கு தீர்மானித்தவர்போல திருப்பித் திருப்பி பாடச் சொல்லுவார். மற்றவர் கண்களுக்குப் பிடி படாத நுணுக்கமான பிழைகள் இவர் கண்களில் படும். சுகிர்தம் டீச்சர் வந்து காப்பாற்றுவார். அவ ருடன் பேசும்போதுமட்டும் அடிக்கடி சிரிப்பார். சிரிப்பு நின்றபிறகும் தொண்டைக்குள் இருந்து களுக் களுக் என்று சத்தம் அவருக்கு வரும்.

குதியால் தரையைக் குத்திக்கொண்டு பின் பாகத்தை குலுக்கி, பலவித நெளிவுகளை உடலில் காட்டியபடி, அந்தப் பெண் தோன்றுவாள். கையிலே ஏந்திய மாலை இருக்கும். அப்படியே கொண்டுவந்து என் கழுத்தில் சூட்டுவாள். அவள் பாடிய பாட்டு 'மகான், காந்தி மகான்.' அது நான்தான். ஒத்திக்கை யின்போது சிலையாக நான் நடிக்கவேண்டும். சிலையாவது கொஞ்சம் அசைந்திருக்கும். ஓட்டுக்குள் அடங்கிய ஆமைபோல நான் அசையாமல் இருப்பேன். நாடகம் நடந்த அன்று எப்படியோ ஒரு காந்தி சிலையைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்ததால் நான் தப்பினேன்.


புதிய கட்டிடத்துக்கு போதிய பணம் சம்பாதித்துக் கொண்டு நாங்கள் திரும்பினோம். புழுதித்தரை சிமெந்தாக மாறியது. ஓலைக்கூரை ஓட்டுக்கூரை ஆகியது. பெரிய அட்டைப் பெட்டிகளில் அடைத்து வைத்த விஞ்ஞானக் கருவிகள் எல்லாம் சோதனைக் கூடத்தில் அடுக்கப்பட்டன. இந்தப் புதிய மஞ்சள் கட்டிடத்தின் ஒரு சுவரிலோ, ஒரு செங்கல்லிலோ, ஒரு தூணிலோ என் பாட்டுச் சாதனைக்கான் அத்தாட்சி இன்றுவரை ஒளிந்திருக்கும்.

நான் கொழும்பிலிருந்து திரும்பி வந்தபோது செலவுக்கு கொண்டுபோன காசில் 25 சதம் மிச்சம் இருந்தது. பதினைந்து சதத்துக்கு ஐயாவுக்கு ஒரு சீப்புப் பழுக்க ஆரம்பித்த ஆனை வாழைப்பழம் வாங்கினேன். இது எங்கள் கிராமத்தில் கிடைக்காது. ஐயா விருப்பமாக வைத்து, வைத்துச் சாப்பிடுவார். அவருக்கு அதைச் சாப்பிட்டு ஜீரணிப்பதில் சங்கடம் இருந்தால் நான் உதவி செய்யலாம்.

மிகவும் யோசித்து, ஆலோசனைகள் கேட்டு, அம்மாவுக்குப் பத்து சதத்திற்கு கொழும்பு வெற்றிலை வாங்கினேன். இந்த வெற்றிலை நாட்டு வெற்றிலை யைப்போல கடும்பச்சையில், முரடாக இருக்காது. சுண்ணாம்பு வெள்ளையாக, சத்தமே போடாமல் கிழியும். நரம்புகூட கிள்ளத் தேவையில்லை. அப்படி மெத்தென்று இருக்கும்.

அந்த வெற்றிலைக் கட்டை அம்மா தண்ணீர் தெளித்து, தெளித்து பாதுகாத்து ஒரு வாரகாலம் சாப்பிட்டுத் தீர்த்தார். வீட்டுக்கு வருபவர்களிடமும், வராமல் ரோட்டால் போனவர்களிடமும் 'என்ரை பிள்ளை கொழும்பில் இருந்து கொண்டு வந்தது' என்று கைகளால் அளவைக் காட்டியபடி சொன்னார். நாள் போகப் போக இந்த அளவு கூடிக்கொண்டே வந்தது. ஒரு நாள் பருந்து பறப்பதுபோல கைகளை அப்படி விரித்துக் காட்டினார்.

சுற்றுப் பயணம் முடிந்து திரும்பிய ஒரு மாதத்தில் வருடச் சோதனை நடந்தது. அடுத்த வகுப்புக்கு புரமோஷன் கிடைத்தபோது அம்மா இல்லை. இறந்து போனார். விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம் தொடங் கும் நாள் வந்தது. எங்கள் புது வகுப்புக்கு சுகிர்தம் டீச்சர் இல்லை என்று சொன்னார்கள். ஞாயிற்றுக் கிழமை பின்னேரம் வழக்கம்போல மேசை பிடிக்க எல்லோரும் போனார்கள். நான் போகவில்லை. ●



# கண்ணாடி சொல்லும் கதைகள்

மதுரபாரதி


இப்போதெல்லாம் பெருநகரங்களில் இருக்கும் வானுயர மகாவணிகக் கட்டிடங்களின் முன்புறம் முழுக்கக் கண்ணாடியால் மினுங்குமாறு கட்டப்படுகிறது. ஆனால் அவை ஒருவழிப் பார்வை கொண்டவையாய் உள்ளன.

வெளியே இருப்பவருக்கு உள்ளிருப்பது தெரியாது. உள்ளே மெல்லிய வெள்ளீயப் படலம் கொண்ட மிதவைக் கண்ணாடி (Float glass) வகையைச் சேர்ந்தவை அவை. ஆனால் அவ்வாறில்லாமல் நிறமற்ற கண்ணாடியாலேயே அறை கட்டியிருந்ததைத் தமிழ்க் காவியமான மணிமேகலை விவரிக்கிறது. மாதவியின் மகளான மணிமேகலை, புத்தமதத்தை மேற்கொண்டு, துறவறம் பூண்டு, தன் தோழி சுதமதியோடு உவவனம் என்ற மலர்வனத்துக்குச் செல்கிறாள். அவள் மீது மிகவும் காதல் கொண்டிருக்கிறான் உதயகுமாரன். இவன் கரிகாற் சோழனின் வழிவந்த அரசகுமாரன். வழியிலே எட்டிகுமாரன் என்பவன் மூலம் மணிமேகலை உவவனம் போயிருக்கிறாள் என்பதை அறிந்து, அங்கே போய் அவளை "தேரில் ஏற்றிக் கொண்டு வருவேன்" என்று சொல்லிப் போகிறான்.

அவன் தேரொலி கேட்டதுமே அவளைச் சுதமதி பளிக்கறை என்னும் கண்ணாடி அறையில் வைத்துத் தாழிட்டுவிடுகிறாள். அந்தப் பளிக்கறை எப்படிப் பட்டது தெரியுமா?

விளிப்பறை போகாது மெய்புறத் திடூஉம்
பளிக்கறை மண்டபம் உண்டு அதனுள்

*(மலர்வனம் புக்க காதை: 63—64)*



விளிப்பறை போகாது – அழைத்தால் அது அறைக்கு வெளியே கேட்காது, மெய் புறத்து இடூஉம் – உருவத்தை வெளியே காட்டும் பளிக் கறை – பளிங்கு அறை, கண்ணாடி அறை

"அந்தக் கண்ணாடியறைக்கு வெளியே இருந்து பார்ப்பவர்க்கு உருவம் தெரியும், ஆனால் ஒலி வெளியே கேளாது."

எனவே இந்தப் பளிக்கறை வெறும் கவிஞனின் கற்பனையல்ல. மிகத் துல்லியமாகக் கண்ணாடி யறையின் தன்மை சொல்லப்படுகிறது.

உதயகுமாரன் வந்து தேடுகிறான். பளிக்கறைக் குள் பேரழகோடு பவழத்தால் செய்த பதுமை ஒன்று இருப்பதுபோல அவனுக்குத் தெரிகிறது. பிறகு மணி மேகலைதான் அது என்று உணரு கிறான். அவனுக்கு அவசரம். ஒன்றுபோலக் கண்ணாடித் தகடாக இருக்கும் அந்தச் சுவற்றில் அவனால் தாழ்ப்பாள் எங்கே இருக்கிறது என்று கூடக் கண்டுபிடிக்கமுடியவில்லை. கையால் தடவிப் பார்க்கிறான். பயனில்லை.

காவி அங்கண்ணி ஆகுதல் தெளிந்து
தாழொளி மண்டபம் தன் கையிற் தடைஇச்
சூழ்வோன்

*(மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை: 8—10)*

குவளைமலர் போல அழகிய கண்களை உடைய மணிமேகலைதான் அது என்பதைத் தெரிந்து கொண்டு உதயகுமாரன் தன் கையாலே தடவி மண்டபத்தின் தாழ்ப்பாளைத் தேடுகிறான். கண்டு பிடிக்க முடியவில்லை. அவனால் தாழ்ப்பாளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் என்ன பொருள்?

தாழ்ப்பாளையும் கண்ணாடிப் பொருளாலே செய்திருக்கிறார்கள் என்பதுதானே! இதேபோல சித்திரகூட மலைமீது அமைந்த ஒரு பளிக் கறை யைப் பற்றி கம்பராமாயணம் சொல்கிறது. இராமன், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் சித்திரக்கூட மலையின் அழகை இரசித்தவாறு செல்லுகையில் இராமன் இவ்வாறு சொல்கிறான்:

அளிக்கும் நாயகன் மாயை புக்கு அடங்கினன் எனினும்
களிப்பு இல் இந்தியத்து யோகியைக் கரக்கிலன் அதுபோல்
ஒளித்து நின்றுளர் ஆயினும் உருத் தெரிகின்ற
பளிக்கு அறைச் சில பரிமுக மாக்களைப் பாராய்

*(அயோத்தியா காண்டம்: சித்திரகூடப் படலம்: பாடல் 11)*

"இறைவன் மாயைக்குள்ளே தன்னை ஒளித்து வைத்துக்கொண்டிருந்தாலும், புலன்களால் வரும் சுகங்களை ஒதுக்கிய ஞானியருக்கு அவன் தன்னை ஒளித்துக்கொள்வதில்லை. அதுபோலத் தம்மை ஒளித்துக்கொள்ள முயன்றும், வெளியே உருத் தெரிகின்ற பளிக்கறைக்குள் இருக்கும் கின்னரர் களைப் பார்" என்று இராமன் சொல்கிறான். கின்னரர் என்பவர் குதிரைத் தலையும் மனித உடலும் கொண்டவர். (ஆங்கிலத்தில் centaur என்று Harry Potter and the Sorcerer's Stone அழைப்பதன் தலை கீழ் இணைப்பு. பார்த்திருந்தால் அதில் குதிரை உடலும் தலைப்பகுதியில் இடுப்பிலிருந்து தொடங் கும் மனிதனுமான உருவத்தைப் பார்த்திருக்க லாம்.)

இக்காலத்தில் நாம் பளிங்கு அறை என்றால் சலவைக்கல்லால் கட்டிய அறை என்று புரிந்து கொள்கிறோம். சலவைக்கல் என்பது சுண்ணாம்புக் கல்லின் வேறொரு பவுதீக வடிவம். நாம் தூய வெள்ளைக் கற்களையே சலவைக்கல் என்றாலும், பிற தனிமங்களின் கலப்பால் வெவ்வேறு நிறமும், கோலங்களும் படிந்த சலவைக்கற்களும் உண்டு. சலவைக்கல்லால் ஆனதொரு சிம்மாசனம் 'பாண்டுகம்பளம்' என்ற பெயரில் இந்திரனிடத்து இருந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. 'பாண்டு' என்றால் வெண்மை. பாண்டவர்களின் தந்தைக்கு வெண்குஷ்டம் இருந்தது என்பதாலேயே அவன் பெயர் வந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் சலவைக்கல்லுக்கு ஒளி ஊடு ருவும் தன்மை கிடையாது. எனவே இந்தக் கட்டு ரையில் காணும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பளிங்கு என்ற சொல்லுக்கு சலவைக்கல் என்று பொருள் வராது.

ஆனால் முன்னரே நாம் பார்த்தது போல, பளிங்கு என்பது கண்ணாடி. அதிலும் ஒரு மாளிகை கட்டுமளவுக்குத் தடிமனும் உறுதியும் வாய்ந்த கண்ணாடிகளை இந்தியாவில் செய்தனர் என்பது வியப்பான செய்தி. கண்ணாடியின் வரலாற்றைப் பார்த்தால், கிறிஸ்து பிறப்பதற்கு 5000 ஆண்டுகளுக்குமுன் தழைத்த மீசோபொடாமியா (Mesopotamia) – இதை மெசபடோமியா என்று உச்சரிப்பது . தவறு) நாகரிகத்தில் கண்ணாடிப் பொருட்கள் காணப்பட்டனவாம். எகிப்து நாட் டில் கி. மு. 3500இல் புழங்கிய பளிங்குச் சாமான் கள் கிடைத்துள்ளன. ஆனால் கண்ணாடியின் வரலாற்றில் இந்தியாவின் பெயர் இல்லை. ஏன் என்பது சிந்தனைக்குரியது. இப்போதிருக்கும் பதின்ம எண் வரிசை இந்தியாவில் தோன்றியதாக இருக்க, அதை 'அராபிய எண்கள்' என்று உலகம்

சொல்லிவருவதைப் போன்றது.

சரி, வெறும் கண்ணாடி மாளிகைகள்தாம் இந்தியாவில் கட்டினார்களா? இல்லை வேறு பொருள்களும் செய்யப்பட்டனவா? கம்பராமாய ணம் மது அருந்துவதற்கான கண்ணாடிக் கிண் ணத்தைக் குறிப்பிடுகிறது. இரண்டு வகைக் கிண்ணங்கள் பேசப்படுகின்றன:

பளிக்கு வள்ளத்து வாக்கும் பசு நறுந் தேறல்
மாந்தி

(மிதிலைக்காட்சிப் படலம்: பாடல்—14)

படிகக் கண்ணாடி வட்டிலில் வார்த்த
மணமுள்ள, பசுங்கள்ளை அருந்தி
கள் மணி வள்ளத்துள்ளே களிக்கும் தன்
முகத்தை நோக்கி
விண் மதி மதுவின் ஆசை வீழ்ந்தது என்று
ஒருத்தி உன்னி

(உண்டாட்டுப் படலம்: பாடல் —17)

மணி வட்டிலில் இருக்கும் கள்ளில் காணும் தன் போதையேறிய முகத்தைப் பார்த்து, வானத்தில் இருந்த நிலா மது அருந்தும் ஆசையால் வட்டிலுக் குள் விழுந்ததோ என்று எண்ணி...

வள்ளம் என்பது உண்ண அல்லது பருகப் பயன்படும் கிண்ணம் அல்லது வட்டில். முதல் பாடல் வரியில் வரும் பளிக்கு வள்ளம் புரிகிறது. அது என்ன மணி வள்ளம்? சாதாரணமாக, மணி என்பது நவமணிகளையும், முத்தையும் குறிக்கும். இதே படலத்தில் கம்பன் மதுவருந்தத் தங்கக் கிண் ணங்களைப் பயன்படுத்தி யதாகவும் சொல்கிறான். மணிகளைப் பதிப்பதானால் அதிலேதான் பதிக்க வேண்டும். அதைத் தவிர மீண்டும், மீண்டும் பல பாடல்களில் மணி வள்ளம் என்கிறானே. மணி என்பதற்குப் படிகம் (crystal) என்றும் பொருள் உண்டு. நாம் சென்னைப் பல்கலைக்கழகப் பேரக ராதியைப் பார்த்தால் பளிக்கறை என்பதற்கு (crystal Palace என்ற பொருளைப் பார்க்க லாம். இப்போதும் உயர்தரக் கண்ணாடியால் செய்யப்பட்ட கெட்டியான கண்ணாடிக் கோப்பை முதலியவற்றைக் 'கிரிஸ்டல்' (படிகக் கண்ணாடி) என்றே வழங்குவதை அறிந்திருக்கலாம். இவை சாதாரணக் கண்ணாடியால் செய்யப்பட்ட பாண்டங்களைவிட விலை உயர்ந்தவை.

இதை நான் சொல்வதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. கம்பன் இராமாயணத்தை எழு திய காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்று பெரும் பாலும் சொல்கின்றனர். சிறுபான்மையினர் கி.பி. 8ஆம் நூற்றாண்டு என்கின்றனர். ஆனால் படிகக் கண்ணாடி (crystal glass) முதன்முதலில் தயாரிக்கப் பட்டது 1765இல் என்று சரித்திரம் சொல்கிறது.

அப்படியானால் இந்தியா இதனை முதலி லேயே அறிந்து, பயன்படுத்தியது என்பதைப் பிற நாட்டு வரலாற்றறிஞர் அறியவில்லை என்றுதானே பொருள்? கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியா வுக்கு வந்த பிளினி என்ற கிரேக்க அறிஞர் இந்தி யாவில் படிகக் கண்ணாடி இருந்ததாகச் சொல் வதைப் பின்னால் பார்க்கப் போகிறோம். நான் முன்னரே கூறிய கி.மு. 5000இல் கண்ணாடியால் அம்புநுனிகள், கத்திகள் ஆகியவையும் செய்யப் பட்டதாக வரலாறு சொல்கிறது. எரிமலைக் குழம்பு உறைவதால் ஒருவகைக் கருப்பான கண்ணாடி இயற்கையிலேயே கிடைக்கும். இதை 'obsidian' (ஆப்சிடியன்) என்பார்கள். இந்தக் கண் ணாடியாலேயே ஆதி காலக் கருவிகள் செய்யப் பட்டனவாம். ஆனால், அவ்வாறல்லாது நல்ல படிகக் கண்ணாடியாலே செய்த நுகத்தடி பொருத் திய தங்க ஏரினால் வேள்விக்கான நிலத்தைத் திருத்தும்போதே சிவதனுசோடு, சீதாப்பிராட்டி யாரை உள்ளே வைத்த பேழை கிடைத்ததாக இராமாயணம் சொல்கிறது.

இரும்பு அனைய கரு நெடுங்கோட்டு இணை
ஏற்றின்பணை
ஏற்றபெரும் பியலில் பளிக்கு நுகம் பிணைத்து


(கார்முகப் படலம்: பாடல்—16)

பெரிய கருப்பான இரும்புபோன்ற கொம்புகளை உடைய காளைச் சோடியின் புடைத்த பெரும் கழுத்தில் பளிங்கினாலான நுகத்தடியைப் பிணைத்து . . .

அயோவா மாநிலப் பல்கலைக் கழகம் வலை யில் பதிப்பித்திருக்கும் கண்ணாடியின் வரலாற் றின்படி கி.மு. 12000த்திலேயே நீர்க்குடுவைகள், குப்பிகள் மற்றும் ஜாடிகளிலிருந்து நீர் ஒழுகாதிருக் கும் பொருட்டுச் சீனாக் களிமண் பூச்சுப் போன்ற தொரு கண்ணாடிப் படலத்தைப் பூசினர் என்று தெரியவருகிறது. இத்துடன் ஒப்பிடத்தக்க ஒன்றைக் கம்பராமாயணத்தில் பார்த்தபோது எனக்கு வியப்புத் தாங்கவில்லை.

அயோத்தி மாநகரத்தைச் சுற்றி ஒரு மதிற்சுவர் இருந்தது. அதற்கு வெளியே செயற்கையாக அமைத்த அகழி ஒன்று இருந்தது. அகழியின் வெளிப்புறச் சுவர் வெள்ளியாலே அமைக்கப்பட்டி ருந்தது. உள்புறம் முழுவதும் முதலில் தங்கத் தகட்டினால் பாவப்பட்டிருந்தது. தகட்டின்மேல் முன் சொன்னதுபோலப் படிகக் கண்ணாடிப் பூச்சு ஒன்று தரப்பட்டிருந்தது.

விளிம்பு சுற்றும் முற்றுவித்து வெள்ளிகட்டி
உள்ளுறப்
பளிங்கு பொன்தலத்து அகட்டு அடுத்துறப்
படுத்தலின்



தளிந்த கல்தலத்தொடு அச்சலத்தினை
தனித்துற
தெளிந்து உணர்த்துகிற்றும் என்றல் தேவ்ராலும்
ஆவதே

*(நகரப்படலம்: பாடல்—20)*

இப்படி அமைத்ததாலே இரண்டு பயன்கள். ஒன்றைக் கம்பனே சொல்கிறான். இந்த அகழி கற்பாறைகளால் ஆன கோட்டையின் அருகே இருக்கிறது. கோட்டைக்கும் அகழிக்கும் இடைப் பட்ட பகுதியிலும் கருங்கல் தளம் உள்ளது. மேலே சொன்னதுபோல் அமைத்த அகழி ஒரு செம்மை யாகப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே செயல் படும். எனவே கோட்டையின் கற்கள் அதில் தெரி யும். அப்போது தூரத்திலிருந்து வருகின்ற எதிரிப் படையினருக்கு அகழிநீர் தெரியாது. கருங்கல் தளத்தின் தொடர்ச்சியாகவே தோன்றும். "தளிந்த கல் தலத்தொடு அச்சலத்தினைத் தனித்துறத் தெளிந்து உணர்த்துகிற்றும் என்றல் தேவராலும் ஆவதே" என்கிறான் கம்பன்.

*அகழிநீரையும், கருங்கல் தரையையும்* **இனம் கண்டு** *பிரித்துச் சொல்லத் தேவராலும் முடியாதாம்!*

அடுத்த பயன் கம்பன் சொல்லாதது. அகழி செயற்கையானது. அதற்கு நீரை நிரப்பியாக வேண் டும். அவ்வாறு நிரப்பிய நீர் இரண்டு வழி களிலே வீணாகும். ஒன்று, பூமி இழுத்துக்கொள்ளும். இரண் டாவது, சூரிய ஒளியில் ஆவியாகிப் போகும். முன்பே நீர்க்குடுவை, குப்பி ஆகியவற்றுக்குச் சொன்னதுபோல் இந்த வலுவான கண்ணாடிப் பூச்சு நீர் ஒழுகிப்போக முடியாது தடுக்கும். மேலும் அகழியே ஒரு கண்ணாடி போலப் பளபளப்புடன் இருப்பதால், சூரிய ஒளி பெரும்பாலும் பிரதிபலிக் கப்பட்டு, நீர் வெம்மையாவதையும் குறைக்கும். அப்போது ஆவியாதல் மட்டுப்படும்.

"பளிங்குச் சொரிவு அன்ன பாய் சுனை", அதாவது கண்ணாடியை உருக்கி ஊற்றியது போலச் சுனை யின் நீர் பாய்ந்து வருகிறது, என்று பத்துப்பாட்டில் ஒன்றான கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு சொல் கிறது. இதுவும் சங்ககாலத்து நூல் என்பதைப் பார்க்க வேண்டும்.

ஆகவே இதுவரையில் நமது பழநூல்க்ள் எல்லாமே பளிங்கு அல்லது பளிக்கு என் பதை படிகக் கண்ணாடி (crystal glass) என்றே கொண்டி ருப்பதைக் கண்டோம். அது எங்குமே முகம்பார்க் கும் கண்ணாடி (mirror) என்ற பொருளில் பயன் படுத்தப்படவில்லை. அதே சங்க காலத்தவரான திருவள்ளுவரும் இச்சொல்லை நாம் கண்ட பொரு ளிலேயே தான் பார்த்திருக்க வேண்டும் ஈன்று நினைக்கும்போது, நமக்குப் பெரிதும் பழக்கமான

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

*(குறள் — 706)*

என்ற குறளுக்கு ஒரு புதிய, தெளிவான, துல்லிய மான பொருள் விளங்குகிறது. நாம் பளிங்கு என்ற தும் முகம்பார்க்கும் கண்ணாடி அல்லது சலவைக் கல் என்றே தற்போது புரிந்துகொள்கிறோம். அதா வது "ஒரு பளபளப்பான சலவைக்கல்லில் அல்லது கண்ணாடியில் அதனருகே இருப்பது பிரதிபலிக் கிறது. அதேபோல ஒருவன் மனத்தில் கோபம் வருமெனின் அதை முகம் பிரதிபலிக்கும்" – இவ் வாறே நாம் புரிந்துகொள்கிறோம்.

இதிலே நாம் பொதுவாக இரண்டு தவறுகள் செய்கிறோம். ஒன்று 'பளிங்கு' என்பதைப் புரிந்து கொள்வதில். இதைத் தவறாகப் புரிந்துகொண்ட தால் வரும் தவறு 'காட்டும்' என்பதற்குப் 'பிரதி பலிக்கும்' என்று கொண்ட பொருள் நாம் இது வரையில் விவரித்தபடி பளிங்கு என்ற சொல்லை ஒளி ஊடுருவும் படிகக் கண்ணாடித் தகடு என்ற பொருளில்தான் நமது பழைய இலக்கியங்கள் பயன்படுத்தி இருக்கின்றன.

அடுத்து நாம் செய்யும் தவறு, **'கடுத்தது'** என்று சொல்லுக்குக் 'கோபம் கொண்டது' என்று பொருள் கொள்ளுதல். ஏன், ஒருவேளை அவன் மகிழ்ந் தாலோ அல்லது அஞ்சினாலோ அதை முகம் காட்டாதா? 'கடுப்பு' என்பதற்கு 'மிகுதல்' என்றும் பொருளுண்டு. ஆகவே, அவன் மனதில் அதிகமாய் ஏற்பட்ட உணர்வு எதுவோ அதுதான் 'கடுத்தது'. வள்ளுவனின் மனத்தைக் காண்பதில் மிக வல்லவ ரான பரிமேலழகர் சொல்லும் பொருள் இவ்வாறு: "தன்னை அடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்குபோல, ஒருவன் நெஞ் சத்து மிக்கதனை அவன் முகம் தானே கொண்டு காட்டும்." இவ் விளக்கத்தில் பரிமேலழகர் செய் தது ஒரே ஒரு தவறுதான் – 'பளிங்கு' என்பதற்குப் படிகம் என்று மட்டுமே பொருள் கண்டது. படிகம் தட்டையானதல்ல, ஒரு மணிபோன்ற வடிவம் கொண்டது. அதனருகில் ஒரு சிவப்பான பூ இருந் தால் படிகத்தில் சிவப்பு நிறம் தெரியும். ஆனால் அதன் வழியே பூவின் வடிவம் தெளிவாகத் தெரியாது.

ஆனால், நம்முடைய பளிங்கிலோ மணிமேகலை யில் சொன்னாற்போல "விளிப்பறை போகாது மெய்புறத் திடூஉம்", அதாவது ஒலிதான் வெளியே கேட்காது, உருவம் தெரியும். எனவே பரிமேலழக ரும் வள்ளுவனின் மனம் காணவில்லை. 'அடுத்தது' என்பதற்கு 'பளிங்கின் மறுபுறத்திலிருப்பது' என்று பொருள். 'காட்டும்' என்றால் மறுபுற மிருந்த மணி மேகலையை உதய குமாரன் பார்த்ததுபோல் முழு மையாகக் காட்டும் என்றுதான் பொருளே தவிர, 'அதன் நிறத்தை மட்டும் காட்டும்' என்று பொருள் அல்ல. "பளிக்குத் தகட்டின் அப்புறம் இருப்பது இப் புறம் தெரியும். அதேபோல, உள்ளத்தின் உள்ளே மிகுவது முகத் தின் வழியே வெளியே தெரியும்" என்பதுதான் இக்குறளின் சரியான பொருள்.

இக்கட்டுரையில் நான் கொடுத்திருக்கும் பளிங்கு பற்றிய இலக்கியக் குறிப்புகள் இதுவரை யில் யாராலும் ஆய்ந்து சொல்லப்பட்டவையல்ல. கிரேக்க நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த பிளைனி என்பவர் (கி.பி. 23—79) "இந்தியாவில் பார்ப்பதுபோல உலகில் வேறெங்கும் கண்ணாடி யைப் பார்க்கமுடியாது; ஏனென்றால் படிகத்தை உடைத்துச் செய்யப்படுவது இது" என்று சொல்லி யிருக்கிறார். இதைச் சொல்லும் ஆலன் மக்பார் லேன் என்பவர் "இந்தியாவில் பழமையான கண் ணாடிப் பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை"

என்று சொல்லியிருக்கிறார். குறிப்பாக "கண்ணாடி யின் பிறப்பிடமான மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு அருகில் இருந்தும்கூட இந்தியாவில் கண்ணாடித் தொழில்நுட்பம் செழிக்கவில்லை. கிறித்துவுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கண்ணாடி செய்யத் தெரிந்த இந்தியர் கண்ணாடியில் வளை யலும், மணிகளும் மட்டுமே செய்தனர்" என் கிறார்.

அரிக்கமேடு ஒரு காலத்தில் கண்ணாடி மணி கள் செய்வதில் முன்னோடியாக இருந்தது என்று சுவேவா லுச்சியோலா (Sveva Lucciola) என்னும் அம்மையார் கூறுகிறார். கி.மு. 400 முதல் கி.பி. 1600 வரை சுமார் இரண்டாயிரம் ஆண்டு காலம் கண்ணாடி மணிவகைகளைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்வதில் முன்னோடியாக அரிக்கமேடு இருந் ததை அவர் மிக வியப்போடு குறிப்பிடுகிறார். இதுவும் பெருமைப்படத் தக்கதே. ஆனால் நாம் அத்தோடு நிற்கவில்லை என்பதே என் வாதம்.

தமிழ் இலக்கியங்கள் கூறும் சான்றுகளின் படி கண்ணாடியினாலே மாளிகைகள், மாடங்கள், அகழியின் உட்புறத் தளங்கள் என்று பலவகை யிலும் செய்யும் அளவுக்கு இந்தியர் முன்னேறி யிருந்தார்கள் என்பதைக் காட்டினேன்.

அவர்கள் விவரிக்கும் பாங்கிலிருந்தே இவை வெறும் கவிஞர்களின் அதீதக் கற்பனையல்ல என்று புரிந்து கொள்ளவேண்டும். அதிலும் பளிங்கில் இத்தகை யன செய்யலாம் என்பதை இந்திய நாடு இத்தனைப் பழங்காலத்தில் அறிந்திருந்தது என்பதையும் கண் ணாடியைப் பற்றிப் பேசும் பிறநாட்டினர் யாரும் சொல்லவில்லை. இதைப் படிக்கும் எவரேனும் இந்த இலக்கியச் சான்றுகளோடு, நமது அறிவியல் மேன்மையை உலக அரங்கில் நிறுவ முடியுமென் றால் நான் மிக மகிழ்வேன். ●


# உயிர்மை

**மாத இதழ்**

**ஆசிரியர் : மனுஷ்ய புத்திரன்**

**கலை, இலக்கியம், கலாச்சாரம், சமூகவியல் துறைகளில் ஆழமான படைப்புகளையும் பார்வைகளையும் உள்ளடக்கி உயிர்மை மாத இதழ் வெளிவந்துகொண்டிருக்கிறது. தமிழக சர்வதேச தமிழ்ப் படைப்பாளிகளின் தீவிரமான ஆக்கங்களை வெளிக்கொணரும் முதன்மையான சர்வதேச தமிழிதழ்களில் ஒன்றாக வெளிவரும் உயிர்மை, பல்வேறு குரல்களின் மையமாக திகழ்கிறது.**

**ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், பிரேம்-ரமேஷ், சுகுமாரன், தியடோர் பாஸ்கரன், சுஜாதா, சாரு நிவேதிதா, யமுனா ராஜேந்திரன் ஆகியோரின் தொடர் பங்களிப்புகளுடன் தமிழின் அனேக முதன்மையான மற்றும் இளம் படைப்பாளிகளின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகிறது.**

**சந்தா விபரம்**

**இந்தியாவுக்கு**

| | ரூ. |
|---|---|
| தனி இதழ் | 15 |
| ஆண்டுச் சந்தா | 180 |
| இரண்டாண்டுச் சந்தா | 300 |
| ஆயுள் சந்தா | 2000 |

**வெளிநாடுகளுக்கு**


| | $ |
|---|---|
| ஆண்டுச் சந்தா | 20 |
| இரண்டாண்டுச் சந்தா | 35 |
| ஆயுள் சந்தா | 100 |

முகவரி

**Uyirmmai**
11/29 Subramaniam Street
Abiramapuram, Chennai - 600 018
India
Tele/fax: 91-44-24993448
Mobile: 9840271561
e-mail: uyirmmai@yahoo.co.in

# கனடிய தமிழ் இளையோர் பிரச்சினைகள் : புரிந்ததும் புரியாததும்

சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன்




இன்றுள்ள உலகச் சூழ்நிலையில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகங்கள், அரசுகள் உட்பட எல்லா வழிகளிலும் முக்கியமாக எதிர்கொள்ளப்படுவது இளையோர்களின் பிரச்சினையாகும். சரியான காரணங்களே எவராலும் கூறமுடியாத தன்மையிலும், இதற்குத் தீர்வுகளை வழங்க முடியாத நிலையிலும் பல அறிஞர்களும் குழம்பிப் போயிருக்க இளையோர் உலகமொன்று தன்பாட்டில் இயங்கிக்கொண்டிருக்கிறது. "இளையோர்கள் பற்றி முதியோர்கள் விளங்கிக்கொள்ளாததுதான் இளைஞர்கள் பிரச்சினை" என்ற ஒரு தத்துவ விசாரணையும் உண்டு. பதிம வயதினர்கள் (Teen Ages) எனப்படுகின்ற வகையில் இவர்கள் உண்மையில் மிகவும் குறைந்த வயதினர்கள் எனினும் பாலியல் வல்லுறவு முதல் போதைப் பொருள் பாவனை வரையில் தமது அன்றாட நிகழ்வாகியுள்ள சூழ்நிலையில் இவர்களின் உலகு உள்ளது. தொலைக்காட்சிகள், கணினித் தொடர்பு முறைகள், வலையாக்கம், செல்லிடத் தொலைபேசிகள் அனைத்தும் இந்த இளையோர்களைக் குழப்பமான சூழ்நிலைக்குக் கொண்டுசெல்லுகின்ற நிலையில் இதற்கு எமது தமிழ் இளையோர்களும் விதிவிலக்காகிவிட முடிவதில்லை. கனடாவில் மட்டும் 3.7 மில்லியன் இளையோர்கள் உளச்சோர்வு, பதட்டம், மனஅழுத்தம் என்பவற்றிற்கு உட்பட்டுள்ளனர் என்று அறியப்பட்டுள்ளது.

எமக்குப் புரிந்தவகையில் உளவியல்காரர்கள் மட்டுமன்றி சமூக, பொருளாதாரக் காரணிகளையும் இணைத்து இதற்கு விளக்கம் கூற முடிகின்றது. பெற்றோர்கள் பார்வையில் அல்லது முதியோர்கள் பார்வையில் 'இளையோர்கள் சரியான நெறிகளில் வாழ்பவர்கள் அல்லர்' என்ற கருத்து முதனிலை பெறுகின்றது. இதற்குள் அவர்கள் வன்முறையாளர்கள், தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள், கட்டுப்பாடற்ற சுதந்திரவாதிகள், பின்புல போராட்ட ஆதரவாளர்கள் என்ற துணைக்காரணிகள் உள்ளன. வன்முறைகளை ஆதரிப்பவர்கள் என்ற வகையில் தமது உணர்வுகளை, மனவிகாரங்களை, பிரச்சினைக்கான தீர்வுகளை சமுதாயத்திற்கு ஒவ்வாத முறையில் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். அதாவது, சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படாது, அடுத்தவர் உரிமையினை மீறும் வகையில் எல்லாவற்றிற்கும் மேலாக மனித சுதந்திரத்தை மதிக்காத வகையில் வெளிப்படுத்துகின்ற தன்மைகளைக் கூறலாம். ஆக்ரோஷமான சிந்தனைகள், வாய்த் தர்க்கங்கள், கை கலப்புகள், கொலைகள் வகையில் இவை செல்லலாம். பாலியல் வன்முறை, ஆட்கடத்தல்கூட இதற்குள் அடங்குவன. கனடாவில் உள்ள பல்வேறு குழுக்களில் (Gangs) தமிழ்ப்பிரிவும் அடங்கும். இவர்கள் கோஷ்டி மோதல்கள் பலவற்றில் ஈடுபட்டு வந்துள்ளமையால் தமிழர்கள் வன்முறையாளர்கள், துவக்கு கலாசாரம் உள்ளவர்கள் என்று ஊடகங்கள் கூறுகின்றன. ஆயுதபாணிகளாக வீதிவலம் வருதல், வாகனத் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுதல் போன்றவற்றில் பலர் முன்னின்றனர். பாடசாலை மாணவர்களும் இதில் ஈடுபட்டுள்ளமை மிகவும் சிந்திக்கப்பட வேண்டியதொன்று.

1983 முதல் கனடிய மண்ணில் வாழ்வு பெற்ற தமிழ் இளைஞர்கள் நமது அதிஉச்ச நலனாக இவ்வகையான வன்முறைகளைக் கைகளில் எடுத்த வேளையில்தான் இவ்வரசு விழித்துக்கொண்டது. பொலிஸ் திணைக்களங்கள் தீவிரமாகச் சிந்திக்கத் தலைப்பட்டன. சமூக சேவை நிலையங்கள் ஆய்வுகளை மேற்கொண்டன. வினாக்கொத்துகள், புள்ளிவிபரங்கள் திரட்டப்பட்டும் அதற்காகப் பல ஆலோசனைகள் வழங்கப்பட்டும் சரியான பலன்களைப் பெறமுடியாத சூழ்நிலை இருந்துள்ளது. இதனால் இதுபற்றி கவலைகொள்ள எவரும் தயாராக இருக்கவில்லை. தனியான புலனாய்வுத் துறை தமிழர்களுக்கென்று உருவாகியதும் தொடர் கைதுகள் இடம்பெற்றன. எனினும், பொதுவான எனது இளையோர் சிக்கல்கள் பல தீர்க்கப்படவில்லை.

முதியோர்கள் பார்வையில் எமது தமிழ் இளையோர்கள் தாழ்வு மனப்பான்மையுடன் வாழ்கின்றனர் என்ற கருத்து நிலவுகிறது. இது உண்மையில் ஒரு உளவியல் பிரச்சினையாகும். நிறம், மதம், மொழி, நடை உடை பாவனை போன்ற விடயங்களில் சில வேளைகளில் ஏற்படும் புறக்கணிப்புகள் இத்தகைய சூழ்நிலைக்குக் கொண்டு செல்லலாம். இனவாதம் தலைதூக்கி நின்ற சூழ்நிலையில் சில சந்தர்ப்பங்களில் பழிவாங்கும் நோக்கில் எமது இளையோர்கள் இருந்துள்ளனர். பொதுவாக இளையோர்கள் எதற்கும் துணிந்து செயல்படுபவர்கள், கல்வியில் பாதிப்புற்று இரண்டு வேலைக்குச் செல்லும் சூழ்நிலையில் பல இளையோர்கள் சமூக நெருக்குதல்களுக்கு உட்பட்டுள்ளனர். வெளியே சொல்ல முடியாத மனவிரக்தியுடன் பழிவாங்கும் உணர்வு இவர்களிடையே குடிகொண்டுள்ளது. மனக்கிளர்ச்சியைக் கொண்டிருந்த இவர்கள் எவ்வித பொழுதுபோக்கற்றவர்களுமாக வாழ்ந்து படுகின்றனர்.

இளையோர்கள் பிரச்சினைகளுக்கு ஆய்வாளர்கள் கூறும் காரணம் புதிய சூழலும் கட்டுப்பாடற்ற சுதந்திரமுமே ஆகும். இங்குள்ள வாழ்க்கை தமிழக வாழ்க்கை முறையைவிட முற்றிலும் வேறுபட்டதொன்று. எமது இளையோர்கள் இரண்டு கலாச்சார உலகில் சிக்கியுள்ளனர். மேலைத்தேச நாடொன்றில் கீழைத்தேய பண்பாட்டினை இணைத்து ஒரு புதிய நாகரிக சூழ்நிலையை உருவாக்கியுள்ளனர். உணவு உண்பது, உடை உடுப்பது, திருமணம் புரிவது அனைத்திலுமே பிரச்சினைகள் உள்ளன. காரணமற்ற பயம், தெளிவற்ற சிந்தனை, எதிர்கால பயம் இந்த நிலைக்கு இவர்களை இட்டுச் சென்றுள்ளது. எல்லா விடயத்திலும் மீறுதல்கள் இவர்களது கொள்கையாகிறது. வீதி ஒழுங்கு, வங்கி நடைமுறைகள், காப்புறுதி திட்டங்கள் அனைத்திலும் மற்றவர்கள் போல் வாழ விருப்பம் இல்லை. அனைத்திலும் வித்தியாசமான போக்கு மட்டுமன்றி முழுமையான சுதந்திரத்தினை அனுபவிப்பதில் ஒரு தனி சுகம் உள்ளவர்கள். எவரும் தட்டிக் கேட்க முடியாது என்ற ஒரு எண்ணம் இவர்களிடம் குடிகொண்டுள்ளது. பெரியவர்கள் அல்லது ஆசிரியர்களின் கண்டிப்புகூட இவர்களுக்குப் பிடிப்பதில்லை. அத்துடன் இங்குள்ள சட்டமும் பல சலுகைகளை வழங்கியுள்ள சூழ்நிலையில் நெறிதவறிப் போகின்ற



இளையோர்களை எப்படி இனம் கண்டுகொள்வது என்பதே சிக்கலாக உள்ளது.

தமிழ் இளையோர்களின் பிரச்சினைகளுக்கு இன்னொரு காரணம் அவர்கள் சேர்ந்துள்ள நண்பர்களின் சேர்க்கையே என்கின்றனர் ஆசிரியர்கள். இன்று எதற்கும் குழுவாகச் செயல்படும் தன்மை இளையோர்க்கு உண்டு. இவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டால் தனி உலகம் அமைந்துவிடுகின்றது. திட்டம் தீட்டுதல், எதனையும் தீர்மானித்தல் என்பவற்றினை அவர்கள் செய்கிறார்கள். உணவு உண்ணச் செல்வது முதல் அனைத்திலும் நண்பர்கள் இணைந்துகொள்கின்றனர், இவர்களை எவராலும் கட்டுப்படுத்த முடிவதில்லை. போக்குவரத்து, பொதுஇடங்கள், சினிமா தியேட்டர்கள், கலை நிகழ்வு மண்டபங்களில் இவர்களின் செயல்களே தனிரகம். பொதுவாக, புலம்பெயர்ந்துள்ள இளையோர்கள் எது குற்றம் (Crime) என்பதனைத் தெரியாமல் செய்கிறார்கள் என்ற சட்டவாதிகளின் வாதத்தினையும் இணைத்துப் பார்க்க முடிகிறது. சட்டம் என்று உள்ளதா என்ற சூழ்நிலையில் பலர் இயங்குவது, அறியாமையாலா அல்லது வேண்டுமென்றா என்று புரியாமல் உள்ளது. சமூக நியமங்கள் (social norms) என்பதனை மீறிய பல இளம் குற்றவாளிகள் பல சட்டவாக்கத்திற்கு காரணமாகியுள்ளனர்.

உளவியலாளர் பார்வையில் இளையோர்களின் உளச்சீர்குலைவு (psychological disorder) இதற்கெல்லாம் காரணமெனப்படுகிறது. இயல்பூக்கமும் மிகைச்செயற்பாடும் இளைஞர்களைப் பாதிக்கின்றன. மிதமான பாலூக்கம், தன்னெடுப்பூக்கம், மனமுறிவு, நிறைவேறா ஆசைகள், கிளர்ச்சி உணர்வுகள் என்பன இவர்களைச் சீர்குலைக்கின்றன. இதனால்தான் பாடசாலைக்கு மாணவர்கள் ஆயுதங்களுடன் வருகின்றனர். கத்தி, வாள், பேஸ் பால் மட்டை என்பன பாவிக்கப்படுகின்றன. பல்வேறு சாகசச் செய்கைகள் இவர்களது கலையாகிறது. நாட்டில் நடைபெறும் யுத்த சூழ்நிலையில் வெளியேறியவர்களின் மனநிலை இப்படி சீர்குலைந்துள்ளதா என்ற வினாவும் எழுகின்றது. பல ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழ்





இளையோர்களின் குற்றங்கள் இதனுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியதொன்று. ஆரோக்கியமான புத்திபூர்வமான தமிழ் இளையோர்கள் பலருக்கும் சவாலாக அமைந்துள்ள இப்பிரச்சினைகள் இன்று குறைந்துவருகின்றன என்ற மதிப்பீடும் உள்ளது. பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்லூரிகளிலும் தமிழ் மாணவர்களின் தொகை கூடிவருகின்றது. தமிழ்க்கலாச்சார மன்றங்கள், சமூக ரீதியான ஆலோசனை சங்கங்கள், விளையாட்டு நிகழ்வுகள், உடற்பயிற்சி நிலையங்கள், ஆன்மீக மன்றங்கள், தற்காப்புக் கலைக்கூடங்கள் என்பன இவர்களின் மனநிலையில் பல மாற்றங்களைச் செய்துள்ளன. குறிப்பாக 'கனடிய தமிழ் இளைஞர் முன்னேற்ற நிறுவனம்' (CANTYO) பல ஆய்வுகளையும் கருத்தரங்குகளையும் நிகழ்த்தி வருகின்றது. தமிழ்ச்சங்கங்கள் பல பங்களிப்புகளைச் செய்துள்ளன. அனைத்தும் புதிய தலைமுறையின் நன்மை கருதியே செய்யப்பட்டு வருகின்றன. ஒருவழியில் இளையோர்களுக்கு ஆலோசனையும் மறுவழியில் பெற்றோர்களுக்கு அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

இன்றுள்ள இளைஞர்களிடம் இதுபற்றிய வினாக்களை வினவும்போது வரும் பதில்கள் விசித்திரமானவை. பெற்றோர் எம்மை நம்புவதில்லை, விளங்கிக்கொள்வதில்லை, கருத்துப் பரிமாற்றம் செய்வதில்லை, கதைப்பதும் குறைவு, குறைகூறுவது அதிகம் என்கின்றனர். இடைவெளி அதிகமாகி வருகின்றது. இவர்கள் கருத்துப்படி தாங்கள் தவறில்லாதவர்கள் (Infalliable) குறைகாண முடியாதவர்கள் (Invulnerable) வெல்ல முடியாதவர்கள் (Invincible) என்று நம்புகின்றனர். இதுபற்றி நாம் புரிந்துகொள்ளாததுதான் எமது பிரச்சினை என்று எண்ணத் தோன்றுகின்றது. பொதுவாக இளையோர் பற்றி ஆய்வு செய்தவர்கள் வெளியேயிருந்து பார்த்தவர்கள் மாத்திரமே. உள்ளே நுழைந்து உளவியல், வரலாறு, பொருளாதாரக் கூறுகளையும் சமூகவியலையும் இணைத்துப் பார்க்க அவர்கள் தவறிவிட்டனர். இதனால் பல சிக்கல்கள் தீர்க்கப்படாமல் உள்ளன. ●

எண்ணம்போல் மனை அமைய...



"தூணி லழகியதாய் - நான்மாடங்கள்
துய்ய நிறத்தினவாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஒரு மாளிகை..."



**Ranjan Fancis Xavir**

ROYAL LEPAGE

Connect Reality

INDEPENDENTLY OWNED AND OPERATED BROKER

**Direct: 416 - 816 1220, Bus: 416 - 284 5555, Fax: 416 - 284 5727**

மென்மையான நட்பு



CTBC

கனேடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
CANADIAN TAMIL BROADCASTING CORPORATION

86 Laird Drive Toronto Ont. M4G 3V1 Tel: 416 - 429 2822 Fax: 416 - 429 5899 www.ctbc.com